
# காற்றில் கலந்தவளே...





இன்பா அலோசியஸ்


காற்றில்
கலந்தவளே...
இன்பா அலோசியஸ்

Pustaka
Digital Media

http://www.pustaka.co.in

# காற்றில் கலந்தவளே...

# Kaatril Kalanthavale...

Author:

## இன்பா அலோசியஸ்

## Infaa Alocious

For more books

http://www.pustaka.co.in/home/author/infaa-alocious-novels

**Digital/Electronic Copyright © by Pustaka Digital Media Pvt. Ltd.**

**All other copyright © by Author.**

பொருளடக்கம்

[பகுதி - 1.](#)

பகுதி - 1.

பகுதி - 2.

பகுதி - 3.

பகுதி - 4.

பகுதி - 5.

பகுதி - 6.

பகுதி - 7.

பகுதி - 8.

பகுதி - 9.

பகுதி - 10.

பகுதி - 11.

பகுதி - 12.

பகுதி - 13.

பகுதி - 14.

பகுதி - 15.

பகுதி - 16.

பகுதி - 17.

பகுதி - 18.

பகுதி - 19.

பகுதி - 20.

பகுதி - 21.

பகுதி - 22.

# பகுதி - 1.

ரயிலின் ஓட்டத்தை ரசித்தவாறு, ரயிலின் பின்னால் கடக்கும் கான்கிரீட் கட்டடங்களை சுவாரசியமாக பார்த்துக் கொண்டிருந்தான் இளமாறன். ஏசி கம்பார்ட்மென்ட் என்றாலும், ஜன்னல் திரையை விலக்கிவிட்டு, சிறு ரசனையாக ஏறிட்டான்.

வாழ்க்கையில் சின்ன விஷயமாக என்றாலும் ரசித்து செய்வது அவனுக்கு நிரம்ப பிடிக்கும். எதையும் கடமைக்கு என செய்யவே மாட்டான். அரைமணி நேரம் ஒருவருக்காக காத்திருக்க நேர்ந்தாலும், அந்த இடத்தில் கூட, தன்னைச் சுற்றி இருக்கும் விஷயத்தை கவனிப்பான்.

சாப்பிடும் வேளையில் கூட, உணவை ரசித்து உண்பவன் அவன். இந்த ரயில் பயணம் ஒன்றும் அவனுக்கு புதிதில்லை. ஆனாலும், அதென்னவோ ஆயிரம் முறை ரயிலில் பயணித்தாலும், புதிதாக அந்த பயணத்தை அனுபவிப்பதுபோல் ரசித்து அனுபவிப்பான்.

உடன் பயணிக்கும் மனிதர்கள், அவர்களது பேச்சு, அவர்களது செயல்பாடு என பாராமல் பார்த்திருப்பான். எதிரில் இருப்பவர்களிடம் மெல்லிய புன்னகையில் தன்னை அறிமுகம் செய்து கொள்வான். அவர்கள் தன்னிடம் பேச விரும்பவில்லை என்றால், தொல்லை செய்யாமல் ஒதுங்கிக் கொள்வான்.

நாகர்கோவிலில் இருந்து சென்னைக்கு கிட்டத்தட்ட பன்னிரண்டு மணிநேர பயணம். அரை நாள் பயணத்தை, வாயை மூடிக்கொண்டு கடப்பது அவனுக்கு பெரும் சிரமம்.

இதற்கு முன்னர் பெங்களூருவில் வேலை. அவனது கம்பெனி அவர்களது கிளையை சென்னையில் துவங்கவே, அங்கே அனுபவம் வாய்ந்த ஒருவன் வேண்டும் என சொன்னபொழுது, தானாகவே விரும்பி சென்னைக்கு வந்துவிட்டான்.

அதென்னவோ பெங்களூருவில் இரண்டு வருடம் இருந்த பிறகும், அங்கே பேசும் கன்னடம் அவனுக்கு சுத்தமாக வரவில்லை. அவனது ஆங்கில அறிவு அலுவலகத்துக்குள் உதவியது என்றாலும், அன்றாட காய்கறி வாங்குவது முதல், மளிகை வாங்குவது வரைக்கும் அடித்தட்டு மக்களிடம் பேச அவனுக்கு அந்த அறிவு உதவவில்லை.

அங்கே இருக்கும் சூப்பர் மார்க்கெட்டுகள் அவனது தேவையை எளிதாக நிறைவேற்றும் என்றாலும், விவசாய குடும்பத்தில் பிறந்த அவனுக்கு, அங்கே செல்வதில் பெரிதாக விருப்பம் இருந்ததில்லை.

“தம்பி, என் ஸ்டேஷன் வரப் போகுது..” அவன் அருகில் இருந்த பெரியவர் அவன் தோளை லேசாக தட்டி, அவன் ரசனையை சற்று கலைத்தார்.

“ஹாங்.., போயிட்டு வாங்க..” அவர், அவன் காலுக்கு அடியில் இருந்த தன் பெட்டியை எடுக்க முயன்று கொண்டிருக்க, அவரைத் தடுத்தவன், தானே அதை எடுத்துக் கொடுத்தான்.

“நான் வர்றேன் தம்பி. தாம்பரம் பக்கம் வந்தால், கண்டிப்பா வீட்டுக்கு வாங்க” அவர் அழைப்பு விடுக்க, வேகமாக தலை அசைத்தான்.

“வந்தால் வர்றேன் சார்..” உரைத்தவன், அவரது பெட்டியை வாசல் வரைக்கும் எடுத்துச் சென்று கொடுத்துவிட்டே தன் இடத்தில் வந்து அமர்ந்தான்.

அவன் கூபேயில் இருந்த ஆட்கள் அனைவரும் இறங்கியிருக்க, அவன் மட்டுமே எஞ்சி இருந்தான். தன் அலைபேசியை எடுத்து நேரம் பார்க்க, அதுவோ, காலை பத்து முப்பது எனக் காட்டியது.

‘ஹம்.., ட்ரெயின் இன்னைக்கு அரைமணிநேரம் லேட்..’ எண்ணியவன், தன் நண்பன் முபாரக்குக்கு அழைத்தான். அந்த பக்கம் ரிங் போகவே, ‘இவன் எழுந்திருப்பானா?

என்னை கூப்பிட வர்றேன்னு வேற சொன்னான், வருவானா?’ இளமாறனுக்கு ஏனோ நம்பிக்கையே இல்லை.

அன்று ஞாயிற்றுக்கிழமை, காலை உணவைக் கூட தவிர்த்துவிட்டு, உறக்கம் ஒன்றே பிரதானம் என தூங்கிக் கொண்டிருப்பான் என்பது அவனுக்குத் தெரியும். ஆனாலும், ஆயிரத்தில் ஒன்றாக அழைப்பை ஏற்றுவிட மாட்டானா?’ எண்ணியவன் அழைப்பை தொடர்ந்தான்.

அழைப்பு ஒலி முழுதாக நின்ற பிறகும், அவன் எடுக்காமல் போகவே, ‘இவனை நம்பி வந்தால் இப்படித்தான். அதுவும் ஞாயிற்றுக்கிழமை போய் அவனை வரச் சொல்லுவேனா..?’ தன் தலையிலேயே அடித்துக் கொண்டவன், அலைபேசியை கட் செய்து பேக்கெட்டில் போட்டுக் கொண்டான்.

‘ஸ்டேஷன் வர இன்னும் அரைமணி நேரமாவது ஆகும்..’ இருக்கையில் சாய்வாக அமர்ந்து, காலை எதிர் இருக்கையில் நீட்டிக் கொண்டான்.

அதே நேரம், அவன் அலைபேசி இசைக்கவே, ‘இவன் எழுந்துட்டானா என்ன?’ ஆச்சரியப்பட்டுபோய் அலைபேசியை எடுத்துப் பார்க்க, அதுவோ, அவனது வேறு நண்பன் சுமன் அழைக்கிறான் என ஒளிர்ந்தது.

முகத்தில் தானாகவே ஒரு புன்னகை ஒட்டிக்கொள்ள, “சுமன், உனக்கு நூறு ஆயிசு. இப்போதான் உனக்கு கால் பண்ணவா வேண்டாமான்னு யோசிச்சுட்டே இருந்தேன், நீயே கால் பண்ணிட்ட..” உற்சாகமாக குரல் கொடுத்தான்.

“ட்ரெயின் ரீச் ஆகிடுச்சா மச்சான்? இறங்கிட்டியா?” அவன் குரலில் ஒரு பரபரப்பு இருந்தது.

“இல்லடா.., ட்ரெயின் அரைமணிநேரம் லேட்.., நானே உனக்கு போன் போடவா, வேண்டாமான்னு யோசிச்சுட்டு இருந்தேன்” அவன் உரைக்க,

“நம்புற மாதிரி இல்லையே.., நம்ம முபாரக் உன் போனை எடுத்திருக்க மாட்டான். உடனே சலிச்சுபோய் உக்காந்திருக்க அப்படித்தானே” அவன் கேட்க, வாய்விட்டே சிரித்தான்.

“சுமன், அவன் இப்போவாவது மாறியிருப்பான்னு நினைச்சேன். ம்ஹூம், அவன் மாறவே மாட்டான். ஒண்ணும் பிரச்சனை இல்லை. நானே ஏதாவது கால் டேக்சி பிடிச்சு போய்க்கறேன். சென்னை என்ன எனக்கு புதுசா?

“நாலு வருஷம், சென்னையை நாம சுத்தாத இடம் பாக்கி கிடையாது பிறகு என்ன கவலை விடு..” இளமாறன் சொல்ல, அதை ஆமோதித்தான் சுமன்.

“கீ உன்கிட்டே இருக்கு தானே. வீட்டை பாத்தியே உனக்கு வசதியா இருக்கா? அங்கே இருக்கும் திங்க்ஸ் எல்லாம் யூஸ் பண்ணிக்கோ. எந்த தயக்கமும் வேண்டாம்” அவன் சொல்ல,

“முதலிலேயே தங்கச்சிகிட்டே இருந்து கீ வாங்கி, வீட்டை கிளீன் பண்ணிட்டுதான் வந்தேன். அதான் ஏற்கனவே சொல்லிட்டியே, நான் யூஸ் பண்ணிக்கறேன். இப்போதானே அங்கே விடிந்திருக்கும், காபி குடிச்சியா?”.

“எல்லாம் ஆச்சு. முபாரக்குக்கு நானும் போன் பண்ணேன், அவன் எடுக்கலை என்ற உடனேதான் உனக்குப் போட்டேன். நீ வீட்டுக்கு போய் செட்டில் ஆகிட்டு எனக்கு கால் பண்ணு.

“அரசியை வந்து உன்னை பாக்கச் சொல்றேன். இன்னைக்கே வந்திருப்பா.., பொண்ணுக்கு கொஞ்சம் உடம்பு சரியில்லை, அதான் வர முடியலை. தப்பா நினைக்காதேடா..” அவன் குரலில் சிறு சங்கடம் எட்டிப் பார்த்தது.

“சுமன், நான் வர்றதுக்கு எதுக்கு தங்கச்சியை தொல்லை பண்ற? அவ வரலன்னா கூட பரவாயில்லை. நான் என்ன சின்ன பிள்ளையா, போன உடனே சப்போட்டுக்கு ஆள் தேட.

நீ இதுவரை செய்த உதவியே போதும். இனிமேல் நான் பாத்துக்கறேன்..” அலைபேசியை வைத்து விட்டான்.

இளமாறன், சுமன், முபாரக் மூவரும் ஒன்றாக இஞ்சினியரிங் காலேஜில் படித்தவர்கள். சுமனின் தாய் கேன்சர் பேஷன்ட் என்பதால், தான் இறக்கும் முன்னர் அவனது திருமணத்தை பார்த்தே ஆகவேண்டும் எனச் சொல்ல, கல்லூரி முடிந்த அந்த வருடமே திருமணம் செய்து கொண்டான்.

அவனுக்கு இப்பொழுது ஐந்து வயதில் ஒரு பெண் குழந்தை உள்ளது. அவன் முதலில் சென்னையில் தான் இருந்தான். சென்ற வருடம்தான், அவனுக்கு வெளிநாட்டில் வேலை கிடைக்கவே, அவன் அங்கே சென்றுவிட, அவனது மனைவி, குழந்தை இருவரும் அவளது அப்பா வீட்டில் இருந்தார்கள்.

முபாரக்கின் வீடும் சென்னை தான். அவனது அப்பா சிறிய அளவில் நகைக்கடை வைத்திருக்க, இன்ஜினியரிங்கில் பதினைந்து அரியர் வைத்திருக்கும் அவன், தந்தையின் கடையை இப்பொழுது பார்த்துக் கொள்கிறான்.

சுமனின் வீடு பூட்டியே கிடக்க, இளமாறன் சென்னைக்கு வருகிறான் எனத் தெரிந்தவுடன், தன் வீட்டில் அவனை வந்து தங்கச் சொல்லிவிட்டான். அவனது வீட்டில் தங்கி வேலைக்குச் செல்லத்தான் இளமாறன் வருகிறான்.

இளமாறன் தான் ஏதாவது மேன்ஷனில் ரூம் பார்த்துக் கொள்கிறேன் எனச் சொன்னதை சுமன் கேட்கவே இல்லை. சும்மா பூட்டிக் கிடக்கும் வீட்டை, அவன் பயன்படுத்தி பாதுகாத்தால் தனக்கு சந்தோசம் எனச் சொல்லவே, மறுக்க வழியின்றி, அதுவும் மாதம் பிறந்தால் வாடகை தருவேன் என்ற நிபந்தனையோடுதான் சம்மதித்தான்.

ட்ரெயின் ஸ்டேஷனில் நிற்கவே, தன் ட்ராலியை சீட்டுக்கு அடியில் இருந்து எடுத்தவன், வெளியே வர, மே மாத கத்திரி வெயிலின் தாக்கம், சட்டென அவன் முகத்தில் அறைந்தது.

‘ஹப்பா.., என்ன வெயில்..’ ஒரு நொடி கண்ணை சுருக்கியவன், தன் பேக்கட்டில் இருந்த குளிர் கண்ணாடியை எடுத்து அணிந்து கொண்டான். சென்னையைப் பற்றி தெரிந்திருந்ததால், முன்னெச்சரிக்கையாகவே வந்திருந்தான்.

அவன் ஸ்டேஷனை விட்டு வெளியே வந்து, சாலையில் பயணித்த ஒரு ஆட்டோவை கை காட்டி அழைத்தவன், விலாசம் சொல்லிவிட்டு ஏறி அமர்ந்தான். அடுத்த ஒருமணிநேர பயணத்தில் சுமனின் வீட்டின் முன்னால் ஆட்டோ நிற்கவே, அதற்கான பணத்தை கொடுத்துவிட்டு, பெட்டியை இழுத்துக் கொண்டு, காம்பவுண்டை தாண்டி உள்ளே சென்றான்.

கையில் இருந்த கீயால் வீட்டை திறந்தவன், கதவை அகலமாகத் திறக்க, அவன் கண்கள் பெரும் வியப்புக்கு போனது.

அந்த ஷாப்பிங் மாலை நூறாவது முறையாக சுற்றி வந்துவிட்டாள் விஸ்மையா. எதிலும் மனம் லயிக்கவில்லை. அந்த மாலில் இருக்கும் அனைவரும் சந்தோஷமாக இருக்க, அவள் மட்டும் சந்தோஷமாக இல்லை.

வீட்டுக்குள் இருந்து போர் அடிக்கிறது என்பதால்தான் வெளியே வந்தாள். அங்கேயும் பெரிதாக எந்த மாற்றமும் இருக்கவில்லை. ஒரு வேளை தோழிகளோடு வந்திருந்தால் எப்படியோ.., அவளுக்குத்தான் தோழிகளே இல்லையே, பிறகு எப்படி அவர்களோடு வருவாள்?

அங்கே இருந்த தியேட்டரில் சென்று படம் பார்க்க, பாதி படத்துக்கு மேல் அவளால் பார்க்க முடியவில்லை. நகைச்சுவை என்ற பெயரில், நாயகனும் அவன் தோழனும் கடித்துக் கொண்டிருக்க, பாதிபேர் எழுந்து சென்றே விட்டார்கள்.

அவளாலும் அங்கே இருக்க முடியவில்லை. மெதுவாக எழுந்தவள் வெளியே வந்து, அங்கே இருந்த

புட்கோர்ட்டுக்குள் நுழைந்தாள். எதையும் சாப்பிடும் மனநிலையில் அவள் இருக்கவில்லை. வீட்டுக்குச் சென்றாலும் தனிமையில் இருக்க வேண்டும் என்பதால், பிடிவாதமாக வெளியே சுற்றிக் கொண்டிருந்தாள்.

அங்கே சில மணி நேரங்களை வேடிக்கை பார்ப்பதில் கடத்த, அவள் அமர்ந்திருந்ததை யாரும் கண்டுகொள்ளவே இல்லை. அது அவளுக்கு வசதியாகவும் போயிற்று.

அடுத்ததாக பிரபலமான ஜவுளிக்கடைக்குள் நுழைந்தவள், அங்கே இருந்த ஆறு தளங்களிலும் அரைமணிநேரம் செலவழிக்க, மொத்தமாக மூன்றுமணி நேரங்களுக்குப் பிறகுதான் அங்கே இருந்து வெளியே வந்தாள்.

ஆனாலும் எதையும் அவள் வாங்கிக் கொள்ளவில்லை. அவள் உடைகளை பார்த்தாள் என்பதை விட, அங்கே துணி வாங்கிக் கொண்டிருக்கும் ஆட்களை அதிகம் கவனித்தாள் என்பதே உண்மை.

அவர்கள் பேச்சு, நடை, உடை, அவர்கள் உடை தெரிவு செய்யும் விதம், என ஒவ்வொன்றாக கவனித்துக் கொண்டிருந்ததில் நேரம் போனதே தெரியவில்லை. இறுதியாக அவள் குழந்தைகள் செக்ஷனுக்குள் நுழைய, அவள் நுழையும்பொழுதே அவளை வரவேற்றாள் ஒரு குட்டி தேவதை.

தாயின் கைகளில் இருந்து இறங்கிய குழந்தை, வேகமாக ஓட, கிட்டதட்ட விஸ்மையாவின்மேல் மோதப்போய், இறுதி நிமிடம் சுதாரித்து ஓடினாள்.

“பொம்மு.., ஓடாதே..” அதன் தாய் குரல் கொடுத்ததை, அந்த குட்டி தேவதை கண்டுகொள்ளவே இல்லை.

அதன் பிறகு, அதன் தாய் குழந்தையை பார்த்துக் கொண்டாளோ என்னவோ, அந்த குட்டி தேவதையை நிழல்போல் தொடர்ந்தாள்.

“ஹேய்.., உன் பேர் என்ன..?” அந்த தேவதைக்கு எதிரில் அமர்ந்து அவள் கேட்க, அதுவோ மலங்க விழித்துக் கொண்டிருந்தது.

ஒற்றை விரலை வாய்க்குள் வைத்து குதப்பி.., அதன் வாயில் இருந்து எச்சில் ஒழுக, அந்த இரு அரிசி பல் சிரிப்பில், விஸ்மையாவை கொள்ளை கொண்டாள்.

“ஓ.., உனக்கு இன்னும் பேச்சு வரலையா?” நடை பழகிய குழந்தை எப்படி பேசும்?

“பொம்மு.., விரலை வாய்க்குள் வைக்காதே..” அதன் தாய், விஸ்மையாவை கண்டுகொள்ளாமல், குழந்தையை கைகளில் ஏந்தி, தன் கைக்குட்டையால் அவள் கரத்தையும் வாயையும் துடைக்க, “த்..,த்..” நாவை வெளியே நீட்டி, குழந்தை சத்தம் எழுப்ப, அவள் வாயில் இருந்த எச்சிலை, தாயின் முகத்தில் அபிஷேகம் செய்தாள்.

“ஏய் குட்டிக் கழுத.., இப்படி செய்யாதேன்னு எத்தனை முறை சொல்றது” அதன் தாய், போலியாக குழந்தையின் கன்னத்தில் அடிக்க, “ஈ.ஈ..” அந்த இரு பல்லை இளித்துக் காட்டி, தாய்க்கு ஒழுங்கு காட்டியது.

“இப்படி சிரிச்சே மயக்கு..” அதன் கன்னத்தில் முத்தமிட்டாள் அதன் தாய்.

அதன் சேட்டையில் மயங்கிய விஸ்மையா வாய்விட்டே சிரிக்க, அங்கே இருந்த அமைதியில் அவள் சத்தம் மட்டும் ஓங்கி ஒலிக்க, பட்டென வாயை மூடிக் கொண்டாள்.

சுற்றிலும் தன் பார்வையைத் திருப்ப, நல்ல வேளையாக யாரும் அவளை கவனிக்கவில்லை. அந்த குழந்தை மட்டும் அவளைப் பார்த்து புன்னகைக்க, அப்படியே சந்தோஷத்தில் திக்குமுக்காடிப் போனாள்.

“வா.., வா..” குழந்தையின் தாய்க்கு பின்னால் நின்று அவள் கையை நீட்டி, விரல் அசைத்து அழைக்க, வேகமாக தன்

தாயின் கரத்தில் இருந்து இறங்கி, அவளை நோக்கி ஓடி வந்தாள்.

“அழகு குட்டி.., அப்படியே புசு புசுன்னு டெட்டி பியர் மாதிரி இருக்கீங்க. உங்க கன்னத்தை கடிச்சு சாப்பிடணும் போல இருக்கு..” குழந்தையின் கன்னம் பற்றி கொஞ்சி மகிழ விரும்ப, அதற்குள்ளாக குழந்தையின் தாய், அவளை வந்து தூக்கிப் போனாள்.

குழந்தையை அதன் தாய் வைத்திருந்தாலும், சிறு இடைவெளி விட்டு, அந்த குழந்தையின் பின்னாலேயே சுற்றிக் கொண்டிருந்தாள். அதன் தாய் ஷாப்பிங் முடித்து, வீட்டுக்குச் செல்ல, அவர்களோடு தானும் இணைந்து கொண்டாள்.

ஒரு வழியாக அவர்கள் வீடு சென்று சேரும் வரைக்குமே அவர்களோடு இருந்தவள், அவர்கள் சென்ற பிறகுதான் தன் வீட்டுக்கே வந்தாள். காலை முதல், இரவு வரை நடையாய் நடந்த பிறகும், களைப்பு என்பதை சிறிதும் அவள் உணரவில்லை.

வீட்டில் செய்வதற்கு எந்த வேலையும் இல்லை என்பதால், படுக்கையறைக்குப் போனவள், உடை கூட மாற்றாமல் அப்படியே படுக்கையில் விழுந்தாள்.

விழிகளை மூடி உறங்க முயன்றால், உறக்கம் வருவேனா என அவளுக்கு கண்ணாமூச்சி காட்டியது. கூடவே, மனமோ, ‘நான் யார்..? இங்கே என்ன பண்றேன்? இது யாரோட வீடு..?’ எப்பொழுதும் எழும் வினா அப்பொழுதும் எழுந்து அவளை ஆட்டிப் படைக்க, அதற்கு பதில் சொல்வார் யாரும் இருக்கவில்லை.

***

# பகுதி - 2.

காலையில் கண் விழித்த விஸ்மையா, படுக்கையில் இருந்து எழுந்து அமர்ந்து, ‘இன்னைக்கு எங்கே போகலாம்..?’ தன் தாடையில் கை வைத்து யோசித்தாள்.

‘இன்னைக்கு ஞாயிற்றுக்கிழமை, ஈசிஆர் பக்கம் போனால் நல்லா இருக்கும்’ தனக்குள் சொல்லிக் கொண்டாள். அவள் தனக்குள் யோசித்து, முடிவெடுத்துக் கொண்டிருக்க, யாரோ கேட்டை திறக்கும் ஓசை கேட்கவே, வேகமாக ஜன்னல் அருகே வந்து பார்த்தாள்.

இளமாறன் கேட்டை திறந்து வந்து கொண்டிருக்க, அவனை புரியாமல் பார்த்தாள். ‘இது யார்..? கையில் பெட்டியோடு வர்றதை பார்த்தால்..’ சிந்தித்தவள், அவன் தோற்றத்தை ஆராய்ந்தாள். ‘நிச்சயம் ஆறடி இருப்பான். ஆணழகன் தான். கையில் என்ன இவ்வளவு பெரிய பெட்டி. இங்கேயே தங்க வர்றானா? இது இவனோட வீடா?’ யோசித்தவள் அவனையே பார்த்திருந்தாள்.

அவன் வீட்டின் கதவைத் திறக்கவே, அவ்வளவு நேரமாக ஹாலில் நின்று கொண்டிருந்தவள், வேகமாக அறைக்குள் சென்று மறைந்தாள்.

வீட்டை திறந்த இளமாறன், ஒரு நொடி அப்படியே நின்றுவிட்டான். ‘இந்த வீட்டை கிளீன் பண்ணிட்டு போய் ரெண்டு வாரம் இருக்காது? இன்னும் அப்படியே இருக்கு.., அதோட.., இதென்ன வாசனை..?’ அவன் நாசியில் மல்லிகைப் பூவின் வாசனை தாக்க, திகைத்து போனான்.

‘மல்லிப்பூ வாசனை..’ புதிதாக மலர்ந்த மல்லிகையின் மணம்.., மிகவும் சுகந்தமாக, ப்ரெஷ்ஷாக இருக்கும் பூவின் வாசனை. ஒரு நொடி ஆழ்ந்து சுவாசித்தான்.

‘பூட்டி இருக்கும் வீட்டில் எப்படி மல்லிகைப்பூவின் வாசனை?’ எண்ணியவன், வாசல் கதவை பூட்டிவிட்டு, ஹாலில் இருந்த

ஜன்னல்களை திறந்து விட்டான்.

வெயிலின் தாக்கத்தையும் மீறி, அருகே இருந்த மரங்களின் உதவியால், சிறு குளுமையும், இதமும் அவனை தீண்டியது. ஜன்னல் வழியாக பார்வையை செலுத்தியவன், ‘இங்கே ஏதாவது மல்லிச்செடி இருக்கா என்ன?’ பார்வையால் துழாவினான்.

அவன் பார்த்த வரைக்கும் அப்படி எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. உடனே எதையும் ஆராய மனமற்று அங்கிருந்து அகன்றான்.

‘சரி.., இதை பிறகு ஆராயலாம்..’ எண்ணியவன் அலுப்பு தீர, ஒரு குளியல் போட விரும்பினான்.

ட்ராலியை இழுத்துச் சென்று பெட்டின் மீது வைத்தவன், அதைத் திறந்து, டவ்வல், சோப், ப்ரெஷ்.., என எடுத்துக் கொண்டு, குளியல் அறைக்குச் சென்றான். அலுப்பு தீர ஒரு குளியல் போட, அவன் அறைக்குள் வரவே, அங்கே இருந்த பீரோவுக்குப் பின்னால் சென்று ஒளிந்திருந்தாள் விஸ்மையா.

‘ஹையோ.., இவன் இங்கேயா தங்கப் போறான்?’ நகம் கடித்தாள்.

அந்த வீட்டில் இரண்டு படுக்கை அறைகள் இருந்தாலும், ஒரு அறையில், சுமனின் தேவையற்ற பொருட்கள் அனைத்தும் அடங்கியிருக்க, அங்கே சென்று தங்க முடியாத சூழல்.

சில நொடிகள் நகம் கடித்தவள், என்ன நினைத்தாளோ.., நடந்து வந்து படுக்கையில் அமர்ந்து கொண்டாள்.

குளியல் அறையில் ஏதோ ஒரு பாடலை முனகியவாறு குளித்துக் கொண்டிருந்த இளமாறன், குளித்து முடித்து, இடையில் கட்டிய டவ்வலோடு வெளியே வர, படுக்கையில் அமர்ந்திருந்த அவளைப் பார்த்து திகைத்துப் போனான்.

“ஏய்.., யார் நீ..? இங்கே என்ன பண்ற..?” கேட்டவன், தன் வெற்று தேகத்தை, அங்கே அவன் கழட்டி போட்டிருந்த சட்டையை எடுத்து மறைத்தான்.

அவளோ.., அவன் தன்னைப் பார்த்துவிட்டதில் திகைத்தவள், அவன் கேள்விகளைத் தொடுக்கும் முன்பே அலறியிருந்தாள். “ஆ.., ஆ..” அலறியவள் அறைக்கு வெளியே ஓட, திக்கென அதிர்ந்தான்.

‘அலற வேண்டிய நான் பேசாமல் இருக்கேன். இவ எதுக்கு அலறிட்டு ஓடுறா?’ எண்ணியவன்,

அவளுக்குப் பின்னாலேயே வெளியே செல்லும் வேகம் இருந்தாலும், முதலில் உடை மாற்றுவது மட்டுமே முக்கியமாகத் தோன்ற, வேகமாக உடை மாற்றினான்.

உடை மாற்றிய வேகத்தில் வெளியே வந்து பார்க்க, அவள் இருக்கும் அறிகுறியே இருக்கவில்லை. “ஹல்லோ.., இந்தா பொண்ணே..” குரல் கொடுத்து அழைக்க, அவளைக் காணவே இல்லை.

‘வெளியே போயிட்டாளா..?’ ஹால் கதவைப் பார்க்க, அதுவோ, அவன் பூட்டிய வாறே அப்படியே இருக்கக் கண்டான்.

“ஒரு வேளை நான் கனவு கண்டேனா என்ன?” வாய்விட்டே கேட்டுக் கொண்டான்.

‘இல்லையே.., அந்த இளம் ஊதா நிற சுடிதார்.., விரித்த தலைமுடி, மருண்ட விழிகள், வில்லாய் வளைந்த புருவம்..’ எண்ணிக்கொண்டே போனவன், ‘ஹையோ, ஒரு நொடியில் அவளை இவ்வளவா கவனித்தோம்?’ வியந்தான்.

எப்பொழுதும் எதையும் அசால்ட்டாக கவனிக்கும் வழக்கம் அவனுக்கு இல்லை என்பதால், நொடியில் அவளை முழுதாக கவனித்திருந்தான்.

“ஹலோ.., உன்னைத்தான்.., இருக்கியா..?” தன்னைக் கண்டு பயந்து, எங்காவது ஒளிந்திருக்கிறாளோ, என எண்ணியவன், ஹால், அறை, கிச்சன் என வேகமாக சென்று வந்தான்.

அவள் இருக்கும் சுவடே இருக்கவில்லை. ஒரு நொடி அப்படியே நின்றுவிட்டான். அவன் பார்வை எதேச்சையாக ஜன்னல் பக்கம் செல்ல, ஜன்னல் கர்ட்டனுக்கு பின்னால் அவள் ஒளிந்திருப்பது தெரிய,

‘இவ என்ன சின்னக் குழந்தைங்க மாதிரி, முகத்தை மூடிகிட்டா அவளை கண்டு புடிக்க மாட்டோம்னு நினைத்தாளோ..’ எண்ணுகையிலேயே இதழோரம் புன்னகை விரிந்தது.

அதை அடக்கியவன், “நான் உன்னை பாத்துட்டேன். ஒழுங்கா வெளியே வா.., நான் வந்தேன்னா என்ன செய்வேன்னே தெரியாது..” அவளை நெருங்கி, குரல் உயர்த்தி அழைத்தான்.

அவன் தன்னை கண்டுகொண்டான் என்பது புரிய, கர்ட்டனை லேசாக விலக்கியவள், பிறைமுகம் காட்ட, ஒரு நொடி அவள் அழகில் அசந்துவிட்டான் என்றே சொல்லலாம்.

இமைகளை படபடவென கொட்டி, ‘என்னை ஏதாவது செய்து விடுவாயா?’ என அவள் பார்வை அவனிடம் கேட்க, சட்டென தன் பார்வையை திருப்பிக் கொண்டான்.

அவளது விழிகள் அவனை அப்படியே சுருட்டிக்கொண்டு போவதுபோல் இருந்தது. ‘ஹப்பா.., என்ன கண்ணுடா சாமி..’ ரசனையாக எண்ணியவன், அப்பொழுதுதான் பூட்டிய வீட்டுக்குள் அவள் எப்படி வந்தாள் என்பதையே யோசித்தான்.

“நீ முதல்ல இங்கே வா..” அவளை அழைக்க, தவறு செய்த குழந்தையாக அவன் முன்னால் வந்து நின்றாள்.

தயங்கி, தயங்கி வெளியே வந்தவள், “நா..நா..ன் உங்க கண்ணுக்கு தெரியறேனா?” ஒரு மாதிரி ஆசையும், அதிர்ச்சியும் கலந்து அவள் வினவ, அவளை சின்னதாக முறைத்தான்.

“என்ன நக்கலா..?” பட்டென கேட்டவன், அதை விடுத்து,

“யார் நீ..?” அவன் கேட்க, இதழ் பிதுக்கி, ‘தெரியலை..’ என்பதுபோல் உரைக்க, திகைத்தான்.

‘என்ன இது..? இந்த பய சுமன், இங்கே இப்படி ஒருத்தி இருக்கான்னு சொல்லவே இல்லையே. அவன..’ மனதுக்குள் பல்லைக் கடித்தான்.

தன் அலைபேசி எங்கே என தேடி எடுத்தவன், முதல் வேலையாக அவனுக்கு அழைத்தான். தன் அலுவலகத்துக்கு கிளம்பிக் கொண்டிருந்த சுமன், தன் அலைபேசி இசைக்கவே, “சொல்லுடா மச்சான். வீட்டுக்கு போயிட்டியா..?” அவன் கேட்க,

அப்படியே பொரிந்துவிட்டான். “ஏண்டா என்கிட்டே சொல்லவே இல்லை? இங்கே ஒரு பொண்ணு இருக்கான்னு சொல்லியிருந்தால், நான் இங்கே வர ஒத்துகிட்டே இருக்க மாட்டேன். என்னைப் பற்றி நீ என்ன நினைச்சுட்டு இருக்க? நம்ம நாடு இன்னும் வெளிநாடு அளவுக்கு முன்னேறலை. இந்த விஷயம் வெளியே தெரிந்தால் என்னைப்பற்றி என்ன நினைப்பாங்க?

“என்னை விடு.., அந்த பொண்ணு.., உனக்கு மண்டையில் கொஞ்சமாவது மூளை இருக்கா?” அவன் பட்டாசாய் பொரிய, அந்த பக்கம் சுமன் குழம்பிப் போனான்.

அவன் சொன்னதில் இருந்து ஏதோ ஒரு பொண்ணைப் பற்றி பேசுகிறான் என்பது மட்டும் புரிய, “எந்த பொண்ணுடா..?” புரியாமல் கேட்டான்.

“ம்.., நொந்த பொண்ணு.., என்ன விளையாடுறியா? அதான்.., உன் வீட்டில் இருக்காளே அந்த பொண்ணு..” கடுப்பாக உரைத்தான்.

“என் வீட்டில் பொண்ணா..? டேய் மச்சான்.., உண்மையை சொல்லு..” அவன் மேலே எதையோ சொல்லப் போக,

“நாயே.., நாயே.., உன் கண்டுபிடிப்பில் சாணியடிக்க, து.., என்னை என்ன முபாரக்ன்னு நினைச்சியா?” நிஜமான கோபம் அவன் வார்த்தையில் தெரிய அப்படியே அடங்கிப் போனான்.

“ஏண்டா அரசி அங்கே வந்திருக்காளா என்ன? அவளையா சொல்ற..? அவளை உனக்கு அடையாளம் தெரியலையா?” ஒரு வேளை அவன் தன் மனைவியைப் பார்த்துவிட்டு பேசுகிறானோ என இருந்தது.

“டேய்.., ப்ரண்டுன்னு கூட பாக்க மாட்டேன். நல்லா என் வாயில் வந்துடும். தங்கச்சியை எனக்குத் தெரியாதாடா? இது வேற பொண்ணுடா. உன் வீட்டில் புதுசா இருக்காளே அவ..” அவனுக்கு புரிய வைத்துவிடும் வேகம் அவனிடம்.

“மச்சான்.., தூக்கத்தில் உளற்றியா..? என் வீட்டில் ஏதுடா பொண்ணு? என் பொண்ணுக்கு கூட அஞ்சு வயசுதான் ஆகுது.., அவ அம்மா வராமல் அவ தனியா வர மாட்டா..” அவன் தன்போக்கில் சொல்ல, படு எரிச்சலானான்.

“நான் உன்கிட்டே கேட்டால், நீ என்கிட்டே கேக்கறியா? இதில் உன் பொண்ணு.., எரும.., நான் இப்போவே இங்கே இருந்து கிளம்பறேன். என்னால் இங்கே இருக்க முடியாது” கோபமாக அலைபேசியை வைக்க முயன்றான்.

“மச்சான்.., டேய்.., நீ எதையோ பாத்துட்டு பேசுறான்னு நினைக்கறேன். மறுபடியும் நல்லா பார்..” அவன் சொல்ல, ஏக கடுப்பானான்.

“நான் இனிமேல் வீட்டுக்குள்ளேயே போறதா இல்லை. நான் இப்படியே கிளம்பறேன்” அவன் அங்கே இருந்து கிளம்புவதிலேயே குறியாக இருந்தான்.

“ஹையோ.., என்னை கொலையா கொல்றானே. நீ அங்கேயே இரு. நான் முபாரக்கை வரச் சொல்றேன். நீ வீட்டுக்குள்ளேயே போக வேண்டாம் சரியா. அவன் வந்து பாத்துட்டு சொல்லட்டும்..”.

“நான் கொல்றனா..? நீ செஞ்சு வச்சிருக்க வேலைக்கு, என் கிட்டே இருந்திருந்த.., நல்லா நாலு மிதி வாங்கியிருப்ப. கல்யாணமானவன்னு கூட பாக்க மாட்டேன்..” உண்மையான கோபம் அவனிடம்.

“நீ இருடா.., நான் முபாரக்கை வரச் சொல்றேன்..” அலைபேசியை வைத்தவன், முபாரக்கை அழைத்தான்.

அடுத்த அரைமணி நேரத்தில், தன் பல்சர் பைக்கை ஓட்டிக் கொண்டு, அரக்க பரக்க ஓடி வந்தான் முபாரக். “மச்சான்.., எப்படிடா இருக்க..?” ஓடி வந்து நண்பனை அணைத்துக் கொண்டான்.

“நாயே செம கடுப்பில் இருக்கேன்.., அப்படியே போய்டு..” மர நிழலில் போட்டிருந்த சிமெண்ட் பெஞ்சில் அமர்ந்து கொண்டான்.

“ஸ்டேஷனுக்கு வரலைன்னு கோபமா..? மொபைலை சைலன்ட்ல போட்டிருந்தேன்டா.., நீ கூப்பிட்டது கேக்கவே இல்லை. மன்னிச்சுடுடா, அதான் இப்போ வந்துட்டேனே..” அவன் கோபத்தை கண்டுகொள்ளாமல் அவன் அருகில் அமர்ந்தான்.

“ம்ச்.., அதுக்கு என்ன கோபம் வேண்டிக் கிடக்கு? உன்னைபத்தி எனக்குத் தெரியாதா? நீ வந்திருந்தால்தான் நான் மயக்கம் போட்டு விழுந்திருப்பேன். இது வேற.., சுமன் உனக்கு பேசினானா?” பார்வையை வீட்டின் பக்கம் செலுத்தியவன் கேட்டான்.

“சொன்னாண்டா.., ஏதோ பொண்ணு உள்ளே இருக்குன்னு சொன்னியாமே, ஆள் எப்படி இருக்கா..?” கண்ணடித்து கேட்க, அவனை கொலைவெறியில் முறைத்தான்.

“நான் என்ன அவளை பொண்ணா பாக்க வந்திருக்கேன்? பொண்ணு எப்படின்னு கேக்கற? இருக்குற டென்ஷன் புரியாமல் இவன் வேற, போய் பாருடா..” இளமாறன் நிஜமாகவே கோபத்தில் இருப்பது புரிய, அவன் அருகில் இருந்து எழுந்து கொண்டான்.

“ஒண்ணும் டென்ஷன் இல்ல மச்சான். நான் போய் பாத்துட்டு வர்றேன். வந்து என்ன செய்யலாம்னு யோசிப்போம்” வீட்டை நோக்கி நடந்தான்.

“நீயும் வர்றியா..?” இரண்டடி வைத்தவன் அவனிடம் கேட்க, அவன் பார்த்த பார்வையில், பேசாமல் உள்ளே நடந்தான்.

‘இவனுக்கெல்லாம் பொண்ணு சிக்குது.., நமக்கு ஒண்ணு சிக்க மாட்டேங்குதே’ அவன் கவலை அவனுக்கு.

வீட்டுக்குள் சென்றவன், முதலில் ஹால் முழுக்க தேடியவிட்டு, ஹாலில் இருந்த குளியலறை, பிறகு கிச்சன், படுக்கையறை, அங்கே இருந்த குளியலறை, என தேடிவிட்டு, பூட்டி வைத்திருந்த ஜாமான்கள் போட்டிருந்த அறையையும் ஒரு முறை திறந்து பார்த்தான்.

எங்கேயும் யாரும் இல்லாமல் போகவே, குழம்பிப் போனான். “என்னவோ பொண்ணு இருக்குன்னு சொன்னான். பாத்தா யாரையுமே காணோம்..?” வாய்விட்டே புலம்பியவன், குழப்பமாக வெளியேறினான்.

அவன் வரவே, “என்னடா பாத்தியா..? என்ன சொன்னா..?” அவனிடம் கேட்க,

“அங்கே எந்த பொண்ணும் இல்லடா..?” அவன் சொல்ல, எரிச்சலானான்.

“நீ வர்றன்னு தெரிஞ்சு எங்கேயாவது ஒளிஞ்சிருப்பா.., போய் நல்லா தேடு” போகவில்லை என்றால், உன்னை இங்கேயே அடிப்பேன் என அவன் நிற்க, மீண்டுமாக வீட்டுக்குள் திரும்பினான்.

மீண்டும் ஒரு முறை வீடு முழுக்க அலசியவன், தோல்வியை தழுவி வெளியேறினான். “நான் நல்லா பாத்துட்டேன்டா.., அங்கே யாருமே இல்லை” அவன் அடித்துச் சொல்ல, இப்பொழுது இளமாறன் திகைத்தான்.

“என்னது இல்லையா..? நீ வா..” வீட்டுக்குள் நுழைந்தவன், ஹால், கிச்சன், பாத்ரூம் என தேடிவிட்டு, படுக்கையறைக்கு வந்தவன், அங்கேயும் அவள் இல்லாமல் போகவே, “இங்கேதான் இருந்தாடா.., ஊதா கலர் சுடிதார்..” உரைத்தவன், பட்டென கட்டிலுக்கு அடியில் பார்த்தான்.

அங்கே பதுங்கி படுத்திருந்தாள் விஸ்மையா. “நீ இங்கேதான் இருக்கியா? ஒரு நிமிஷத்தில் என்னையே குழப்பிட்டல்ல.., வா வெளியே..” அவன் அழைக்க, அவள் மறுப்பாக தலை அசைத்தாள்.

அவளது மருண்ட விழிகள் அவன் மனதை சற்று பிசைந்தாலும், அவள் நலன் கருதியே அவளிடம் சற்று கடுமை காட்டினான்.

“வான்னு சொல்றேன்ல்ல.., முதல்ல நீ வெளியே வா..” இன்னும் சற்று குரல் உயர்த்தினான்.

அவன் இவ்வளவு தூரம் கடுமையாக அழைக்கவே, அவன் அருகில் நின்ற முபாரக், கட்டிலுக்கு அடியில் குனிந்து பார்த்தான். பார்த்தவன் திகைத்தான்.

“யார்ட்ட மச்சான் பேசுற..?” இளமாறனிடம் கேட்க,

“இவகிட்டே தாண்டா..” கட்டிலுக்கு அடியில் சுட்டிக் காட்டவே, திருதிருத்தான். அங்கே அவனுக்குத் தெரிந்தது வெறும் வெற்றிடமே.

“அங்க யாருமே இல்லையேடா..” அவன் பரிதாபமாக உரைத்தான்.

கோபமாகச் சொன்னால், இளமாறன் இருக்கும் வேகத்துக்கு தன் கன்னம் பழுத்துவிடும் என்பது புரிய, தன்மையாகவே கேட்டான்.

“உன் கண்ணு என்ன நொள்ளையா.., இம்மாம் பெரிய உருவம் உனக்குத் தெரியலையா? ஏய்.., நீ முதல்ல வெளியே வா. டேய், இவ சரிப்பட மாட்டா. நீ உள்ளே போய் அவளை இழுத்து வெளியே போடு..” நண்பனிடம் சாடியவன், அவள் வெளியே வரும் வழியைக் காணோம் என்பதால் அவனை ஏவினான்.

கண்ணுக்கே தெரியாத பெண்ணை அவன் எப்படி இழுத்து வெளியே போடுவதாம்? திருதிருத்தவன், உள்ளே போகவில்லை என்றால் அதற்கும் கொலைவெறியாவான் என்பது புரிய, உள்ளே செல்ல முடிவெடுத்தான்.

“சரி விலகு..” அவன் சொல்லவே, எங்கே முபாரக் உள்ளே வந்துவிடுவானோ என அஞ்சியவள், தானே வெளியே வர முடிவெடுத்தாள்.

“இல்ல.., நான் வெளியே வர்றேன்..” அவள் திருவாய் மலர, “அப்படி வா வழிக்கு” அவன் எழுந்து நின்றான்.

அவள் பேசியது முபாரக்குக்கு கேட்காத காரணத்தால், அவன் உள்ளே செல்ல தயார் ஆனான். அதைப் பார்த்தவன், “டேய் நீ எங்க போற..?” அவனைத் தடுத்தான்.

“நீதான மச்சான் உள்ளே போய் அவளை இழுத்து வெளியே போடச் சொன்ன. அதை செய்யத்தான் உள்ளே போறேன்..” சட்டையை மடித்து விட்டுக் கொண்டான்.

“கண்ணுதான் நோள்ளனா.., காதும் டமாரம் ஆயிடுச்சா? அதான் அவ வெளியே வர்றேன்னு சொல்லிட்டாளே. நீ

எங்க போற?” அவன் காலைப் பிடித்து இழுத்து வெளியே வீச, பரிதாபமாக விழித்தான்.

‘இல்லாத ஒருத்திக்காக என்னை தூக்கிப் போட்டு மிதிக்கறானே’ மனதுக்குள் வெதும்பியவன், இடுப்பை பிடித்துக் கொண்டு எழுந்து நின்றான்.

“வா.., வா.., நீ வா..” இளமாறன் கட்டிலுக்கு அடியில் பார்த்து அழைக்க,

“மச்சான்.., சொல்றேன்னு தப்பா நினைக்காதே. இங்க யாருமே இல்லடா” முபாரக், தயங்கி, தயங்கி உரைக்க, அதிர்ந்து போனான்.

***

# பகுதி - 3.

விஸ்மையாவை வெளியே கொண்டுவரும் முயற்சியில் ஈடுபட்டிருந்த இளமாறன், முபாரக் சொன்னதைக் கேட்டு அதிர்ந்துதான் போனான். நிச்சயம் அவன் விளையாட்டுக்கு சொல்வான் என நினைக்கவில்லை. அவன் கொஞ்சம் விளையாட்டு பையன்தான். ஆனால், இக்கட்டான சூழலிலும் விளையாடுவான் எனத் தோன்றவில்லை.

அதை மறைத்தவன், “முபாரக், உன் கண்ணு முன்னாடி நிக்கறாளே, இவளைத் தெரியலை?” தன் அருகில் நின்று, சுடிதார் துப்பட்டாவின் நுனியை விரலில் சுற்றிக் கொண்டு, பதைத்துபோய் நின்றிருந்த அவளை சுட்டிக் காட்டினான்.

அவன் காட்டிய இடத்தில் இருந்த வெறுமையை பார்வையால் துழாவிய முபாரக், “என் உம்மா சத்தியமா தெரியலடா..? உனக்கும் தெரியாது” அவன் சொல்ல, அவனை கொலை வெறியில் முறைத்தான்.

“உனக்கு தெரியலைன்னு சொல்லு, அதென்ன எனக்கும் தெரியாது. என்னடா, நீயும், சுமனும் சேர்ந்து பிளான் பண்றீங்களா? உன்கிட்டே அவன் சொல்லி அனுப்பினானா? அங்கே யார் இருந்தாலும், தெரியலைன்னு சொல்லுன்னு.., ம்..” அவனை முறைத்தான்.

“மச்சான்.., நீ இவ்வளவு சொல்லும்போது, நாங்க இப்படி செய்வோமா? சத்தியமா இங்கே யாரும் இல்லடா..” அழாத குறையாக கெஞ்சினான்.

“அப்போ நான் பொய் சொல்றேனா? என் பக்கத்தில் தாண்டா நிக்கறா. திருட்டு முழி முழிக்கறா பார். ஏய்.., ஏதாவது பேசு. இப்படி மரம் மாதிரி நிக்கற?” அவளிடம் கத்தினான்.

அவனது கத்தலில் விழித்தவள், “நான் என்ன பேச..?” அவனிடம் கேட்க,

“ம்கும்.., அதையும் என்கிட்டேயே கேள். நீ இங்கே இல்லவே இல்லன்னு சாதிக்கறான். இங்கேதான் இருக்கேன்னு சொன்னால், உன் வாயில் இருக்க முத்து விழுந்துடுமா?” எகிறினான்.

“நீங்க சொல்லியே நம்பலை, நான் சொன்னா நம்பிடுவாரா?” அவள் அப்பாவியாக கேட்க, அவளை முறைத்தான்.

“ம்.., இதெல்லாம் நல்லா வக்கணையா கேள். அவன்கிட்டே பேச சொன்னா மட்டும், என்ன பேசட்டும்..? அப்படியே பம்முறது..” இருவரும் வழக்காட, நடுவில் விழித்துக் கொண்டு நின்றிருந்தான் முபாரக்.

“மாப்ள.., நீ நல்லாத்தானே இருக்க. வர்ற வழியில் மண்டையில் ஏதும் அடிகிடி..” முபாரக் இடைபுக, அவன் பக்கம் திரும்பினான்.

“நாங்க ரெண்டுபேரும் இவ்வளவு பேசுறோம்.., இப்படி கேட்டால்..?” அவனை முறைத்தான்.

“ரெண்டு பேரா.., நீ மட்டும் சிங்கிள் பெர்பாமென்ஸ் தான் கொடுத்துட்டு இருக்கடா. நான்.., நீ என்னவோ புரியாத பாஷை பேசுற மாதிரி முழிக்கறேன்” அவன் சொல்ல, தன் தலையிலேயே அடித்துக் கொண்டான்.

விஸ்மையா அவன் சொன்ன பாவனையில் களுக்கென சிரிக்க, இப்பொழுது அவளை முறைத்தான்.

“சிரிக்காத.., அப்படியே வச்சு அப்பிடுவேன்..” அவன் கை ஓங்கினான்.

அவனை வேகமாக தடுத்தான் முபாரக். அவன் அப்படிச் செய்யவே, “இப்போ மட்டும் பாஞ்சு தடுக்கற..?” நக்கலாக

வினவினான்.

“இல்லடா.., யாரையோ அடிக்கப் போறேன்னு.., நீ விழுந்து வாராமல் இருக்கணுமேன்னு ஒரு அக்கறை தான்..” அவன் உரைக்க, அவனது ஓங்கிய கரம் முபாரக்கின் கரத்தில் இறங்கியது.

அடி வாங்கிய அவன் அசால்ட்டாக இருக்க, விஸ்மையா அதிர்ந்து துள்ளி விலகினாள்.

“உன் அக்கறையில் தீய வைக்க. இவளை யாருன்னு விசாரிச்சு வெளியே அனுப்ப சொன்னால், உன் அக்கறையை என்கிட்டே காட்டுறியா?”.

“சரி.., சரி.., விசாரிப்போம். நீ முதல்ல வெளியே வா..” அவனை கை பிடித்து அழைத்து வந்தவன், ஹாலில் இருந்த சோபாவில் அவனை அமர்த்தினான்.

“நீ இரு, நான் உனக்கு குடிக்க தண்ணி எடுத்துட்டு வர்றேன்” கிச்சனுக்குச் சென்றான். அவனுக்கு இடது பக்கம் இருந்த சோபாவில் அமர்ந்தாள் விஸ்மையா.

அவள் தன் நகத்தை கடிக்க, அதைப் பார்த்தவன், “நகத்தைக் கடிக்காதே, இதென்ன கெட்ட பழக்கம்..” திடுமென உரைக்க, பட்டென விரலை விலக்கிக் கொண்டவள், அவனையே பார்த்திருந்தாள்.

“யார்கிட்டேடா பேசிட்டு இருக்க..?” கேட்டவன், அவன் கையில் செம்பை திணித்தவாறே கேட்க,

“வேற யார் கிட்டே.., எல்லாம் இவகிட்டேதான்” அருகில் இருந்த சோபாவை சுட்டிக் காட்ட, நண்பனை நம்பாத பார்வை பார்த்தான்.

“எங்கே.., இங்கேயா..?” ஒரு மாதிரி கேட்டவன், அந்த இருக்கையில் அமரப் போனான்.

“டேய்.., என்ன பண்ணப் போற..? அவ இருக்காடா..” நீர் நிறைந்த சொம்பை தவற விட்டவன், கிட்டத்தட்ட அலறினான்.

“எங்கே.., இங்கேயா.., இதிலேயா..? இருடா.., அவளா நானான்னு பாத்திடுறேன்..” உரைத்தவன், பட்டென அந்த இருக்கையில் அமர, அவன் உடலை ஊடுருவி வெளியேறினாள் விஸ்மையா.

ஒரு நிமிடம் அப்படியே உறைந்து போனான் இளமாறன். அப்படியே வாய் பிளந்து, நின்ற இடத்தில் அவன் உறைய, அவனை கண்டுகொள்ளாமல், “என்னவோ அவ இருக்கா.., இருக்கான்னு சொன்னியே.., இப்போ என்ன சொல்ற? நான் உக்காந்துட்டேன். எங்கே அவ?

“ஒரு வேளை அவ மடியில் நான் உக்காந்து இருக்கேனா? எனக்கு அப்படித் தெரியலையே.., நான் சோபாவில்தான் உக்காந்து இருக்கேன். பாருடா.., நல்லா பார்.., இங்கே யாரும் இல்லை, புரியுதா?

“நான் பேசிட்டே இருக்கேன்.., நீ என்னடா அங்கே வேடிக்கை பாத்துட்டு இருக்க?” அவனைப் பிடித்து உலுக்கினான்.

“அவ.., அங்கடா.., உன்னை.., அப்படியே..” தன் நெஞ்சில் கை வைத்து, ஒரு மாதிரி அசைத்து, ஊடுருவிப் போனாள்.., எனச் சொல்ல முடியாமல், செய்கையில் காட்ட, அவன் குரங்கு சேட்டையை ஒரு மார்கமாக பார்த்திருந்தான் முபாரக்.

கூடவே, “அவ.., அவ.., அங்கே.., இங்கே..” குரல் தொண்டைக்குழியில் சிக்கி, வெறும் காற்று மட்டும் வெளியேற, திணறி, திணறி உரைக்க, குழம்பிப் போனான்.

அவன் மட்டும் குழம்பியிருக்கவில்லை.., விஸ்மையாவும் தன் செய்கையை நம்ப முடியாதவளாக, தன் கை, உடல் என கைகளால் வருடியவள், தன்னைத் தானே பார்த்தவாறு நின்றிருந்தாள்.

“மச்சான்.., என்னடா பண்ணுது..? நெஞ்சை அடைக்குதா..? உடனே ஹாஸ்பிடல் போகலாம் வா..” அவனை அழைக்க, அவன் கன்னத்தில் ஒரு அறை விட்டவன், கிச்சனுக்கு ஓடினான்.

“ஹையோ.., இவனுக்கு என்னவோ ஆயிப் போச்சே..” கையை உதறி, அவன் பின்னால் ஓட, இளமாறனோ, கிச்சனுக்குள் இருந்த ப்ரிஜ்ஜில் இருந்து சில்லென தண்ணீரை எடுத்து, மடக் மடக்கென குடித்துக் கொண்டிருந்தான்.

“என்னடா மச்சான்..? எதுக்கு இப்போ பேயைப் பாத்த மாதிரி ஓடி வந்த..?” அவனிடம் கேட்க,

தண்ணீர் பாட்டிலை முழுதாக குடித்து முடித்தவன், “பேய் தாண்டா.., வா ஓடிப் போகலாம்..” வீட்டை விட்டு தெறித்து ஓடினான்.

“என்னது பேயா..?” கேட்ட, முபாரக் தானும் ஓட, அவர்கள் ஓடுவதைப் பார்த்த, விஸ்மையா, ‘பேய்..’ என்ற பதத்தில், தானும் அரண்டு அவர்கள் பின்னால் ஓடினாள்.

வீட்டை விட்டு வெளியே வந்த இளமாறன், வீட்டுக்குப் பின்னால் போய் நின்று மூச்சு வாங்கி நின்றான். அவன் அருகில் வந்த முபாரக், “என்னடா சொல்ற..? பேயா..?” கேட்க, அவன் பின்னால் வந்த விஸ்மையாவைப் பார்த்தவன், “ஹையோ..” மீண்டும் ஓடினான்.

“கொலைகாரப் பாவி.., என்னை அந்த பேய் கிட்டே சிக்க வச்சுட்டு நீ எங்கடா ஓடுற..?” கேட்டவன், பாய்ந்து அவன் பின்னால் ஓடினான்.

“பேய் எங்கடா..?” ஒரு வழியாக அவனைப் பிடித்து நிற்க வைத்து அவனிடம் கேட்க, அவன் பின்னால் வந்த விஸ்மையாவை பார்த்தவன், “உன் பின்னாடிதான் நிக்கறாடா..” உரைத்தவன், மீண்டும்ஓட முயன்றான்.

“நீதானேடா அவளோட பெட்.., பிறகு ஏன் என் பின்னாடி நிக்கறா..?” அவன் கேட்க, அவன் தலையில் நங்.., நங்கென குட்டினான்.

“ஸ்..ஆ..” தலையை பரபரவென தேய்த்துவிட்டு, “ஒரு ஹீரோ மாதிரி இருடா, இதென்ன சின்ன பிள்ளை மாதிரி குட்டி விளையாடுற..” தன் தலையை தேய்த்தவாறே கேட்க, அவனை கொலை வெறியில் முறைத்தான்.

“நான் ஹீரோன்னு உன்கிட்டே சொன்னேனா? நான் ஹீரோன்னு உனக்குத் தெரியும், பேய்க்கு தெரியுமா..?” கேட்டவன் மீண்டும் ஓடினான்.

“அது சரி.., கொலைகாரா.., நில்லுடா..” இருவரும் விடாமல் வீட்டை சுற்றிக் கொண்டு, ஓடிகொண்டே இருந்தார்கள்.

ஒரு கட்டத்தில் ஓட முடியாமல் மூச்சு வாங்க நின்றவன், அவள் பின்னால் வராமல் போகவே, வீட்டின் முன் பக்கம் தலையை மட்டும் நீட்டி எட்டிப் பார்த்தான்.

அவன் பின்னால் வந்த முபாரக்கும் எட்டிப் பார்க்க, அவனைத் திரும்பிப் பார்த்த இளமாறன், “ஆ..ஆ..” வென அலற, உடன் சேர்ந்து முபாரக்கும் அலறினான்.

“நாயே கிட்ட வந்து மூஞ்சக் காட்டாதடா.., ஏற்கனவே பயந்துபோய் இருக்கேன். இதில் நீ வேற..” அவன் மூஞ்சியில் உள்ளங்கையை வைத்து பின்னால் தள்ளி விட்டான்.

“பேயை பாத்தே பயப்படாதவன், என் மூஞ்சை பாத்து பயப்படுறியா? போடா அங்கிட்டு. வீட்டில் இருந்து பிரியாணி திங்க வேண்டியவனை, இப்படி நாய் மாதிரி வீட்டை சுத்தி ஓட வச்சுட்டு ஏன் பேச மாட்ட” வேகமாக மூச்சு வாங்கினான்.

அந்த நேரம், சட்டென அவள் அவன் முன்னால் வர, “ஏய்.., இங்கே பார்.., நான் ஒரு கன்னிப் பையன்.., சாபம் விட்டால்

தாங்க மாட்ட..” அவன் பயத்தில் உளற, அவனைப் பார்த்து களுக்கென சிரித்து விட்டாள்.

அவள் சிரிக்கவே, தன் நண்பனை திரும்பிப் பார்க்க, அவனோ, “பேய் கிட்டே இன்ட்ரோ குடுத்த முதல் ஆள் நீயாத்தாடா இருப்ப..” அவன் சொல்ல, அவன் முதுகை பதம் பார்த்தான்.

“ஹையோ.., ஹையோ.., அடிக்கறானே.., இதை கேக்க யாருமே இல்லையா..?” அவன் துள்ளி குதிக்க, அவர்கள் சேட்டையை சுவாரசியமாக பார்த்துக் கொண்டிருந்தாள்.

அதைப் பார்த்தவன், “ஏய்.., இங்கே பார்.., நான் இப்போ வெளியே போறேன். திரும்பி வர்றப்போ, நீ இங்கே இருக்கக் கூடாது..” அவளிடம் சொல்ல,

“பேய் கிட்டே என்னடா டீல் வேண்டிக் கிடக்கு..?” முபாரக் முதுகில் கையை வைத்து தேய்க்க முடியாமல் நெளிந்து, நெளிந்து உரைக்க, அவன் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு வெளியே சென்றான்.

“முபாரக்..., முதல்ல வண்டியை எடு.., இங்கே இருந்து தப்பிச்சால் போதும்..” இருவரும் வண்டியில் ஏறி பறக்க, அவர்களைப் பார்த்தவாறே முகம் வாட நின்றிருந்தாள் விஸ்மையா.

***

# பகுதி - 4.

வண்டி மின்னல் வேகத்தில் பயணிக்க, அது சென்று நின்ற இடமோ முபாரக்கின் வீடு. அதைப் பார்த்த இளமாறன், “எரும, எங்கேயாவது போவன்னு பாத்தா, இதென்னடா உன் வீட்டுக்கே வந்திருக்க? இங்கே எதுக்குடா வந்த?” அடிக்குரலில் உறுமினான்.

ஏற்கனவே அவன் வீட்டுக்கு அழைத்த அவனிடம் பிடிவாதமாக மறுத்துவிட்டுதான் சுமனின் வீட்டில் தங்கி இருக்கிறான். அவனது அம்மா வேறு வருந்தி அழைக்க, அதையும் தன்மையாகவே மறுத்திருந்தான். அப்படி இருக்கையில், முதல் நாளே அவன் வீட்டில் வந்து நின்றால் அவர் என்ன நினைப்பார்? எனவே தான் அவ்வாறு கேட்டான்.

“இப்போதைக்கு இதுதான் மச்சான் சேப். பேசாமல் இறங்கி வா..” அவனை விலக்கி நிறுத்தியவன், வண்டியில் இருந்து இறங்கினான்.

“ஏன்.., உன் வீட்டுக்கு மட்டும் பேய் வராதா என்ன?” நக்கலாக வினவினான்.

“பேய் பேய்ன்னு கடுப்படிக்காதடா. அங்கே என் கண்ணுக்கு எதுவும் தெரியலை. அங்கே வச்சே இதைச் சொன்னா, இன்னும் என்னைப் போட்டு வெளுப்பன்னுதான் சொல்லலை. இங்கேயே இருந்து நல்லா பிரியாணி சாப்ட்டுட்டு பிறகு வீட்டுக்குப் போ..”.

“ஏன்.., பிரியாணி வாசத்துக்கு அது வராதோ?” இளமாறன் விடுவதாக இல்லை.

‘ஹையோ சாவடிக்கறானே..’ மனதுக்குள் எண்ணியவன் பேசாமல் நின்றான்.

“டேய்.., ட்ரெயின்ல வந்த அசதியே இன்னும் தீரலை. கொஞ்ச நேரம் படுத்து எந்திரிக்கலாம்னா, கூட்டு வந்து லந்து பண்ணிட்டு இருக்க. நான் வேற எங்கேயாவது போறேன் போ..” அங்கிருந்து கிளம்ப முயன்றான்.

“டேய் மச்சான்.., வாசல் வரைக்கும் வந்துட்ட, வீட்டுக்குள்ளே வர என்னடா? உம்மா வேற உனக்கும் சேர்த்துதான் பிரியாணி செய்து இருக்காங்க, வா..” இருவரும் வாசலில் இருந்து வழக்கடிக்க,

“ஓ.., உன் வீட்டு பிரியாணியை திங்க, பிளான் பண்ணி இழுத்துட்டு வந்தியா?” கேட்டவன், அங்கே வந்த புதியவளைப் பார்த்து வார்த்தையை நிறுத்தினான்.

அவளைப் பார்த்தவுடன், “மச்சான்.., இதுதான் என் ஆளு..” இளமாறனின் கையைப் பிடித்து அழுத்தியவன், சின்னக் குரலில் உரைக்க, அப்பொழுதுதான் நிமிர்ந்து வீட்டைப் பார்த்தான்.

வாசலில் இவர்களைப் பார்த்தவாறு, குறிப்பாக முபாரக்கை பார்த்தவாறு, தன் தலையில் போட்டிருந்த முக்காட்டை சரி செய்தவள், கண்களில் காதலை தேக்கி சிரிக்க, “ஈ..” என இளித்தவாறு நின்றிருந்தான் முபாரக்.

அதைப் பார்த்த இளமாறன், முபாரக்கை திரும்பிப் பார்க்க, அவன் நின்ற விதத்தை பார்த்தவன், “எரும, முதல்ல இந்த எக்ஸ்பிரஷனை மாத்து, எனக்கே சகிக்கலை..” தன் தாடையை மெதுவாக வருடியவன், இதழ் அசையாமல் முபாரக்கின் காதுக்கருகில் உரைக்க, அவனோ இந்த உலகத்திலேயே இல்லை.

அதைப் பார்த்தவன், வலிக்காமல் தன் தலையிலேயே அடித்துக் கொண்டான். அதைப் பார்த்த நபீசா, சட்டென கலைந்தவள், ‘வாங்க..’ என்னும் படியாக தலையை அசைக்க, வாயில் ஒழுகும் ஜொள்ளை கூட அறியாமல் வாய் பிளந்திருந்த முபாரக்கை லேசாக இடித்தான்.

“நபீசா.., வீட்டுக்கு வந்தியா..?” சட்டென கலைந்தவன் அவளிடம் கேட்க,

“இல்ல.., வழி மாறி நீ அவ வீட்டுக்கு வந்துட்ட..” ‘கேக்கறான் பார்..’ இளமாறன் உரைத்து முடிக்கும் முன்பே,

“என்னது..” அலறியவன், பார்வையை வேகமாக சுழற்ற, அவன் செய்கையைப் பார்த்த நபீசா வாய் மூடி சிரித்தவாறே வீட்டுக்குள் ஓடி மறைந்தாள்.

விட்டால் அந்த நொடியே வண்டியை எடுத்துக்கொண்டு பறந்துவிடுவேன் என முபாரக் இருக்க, அவனை அடக்கிய இளமாறன், “டேய், இது உன் வீடு தாண்டா..” அவன் கையைப் பிடித்து தடுத்தான்.

அதைப் பார்த்த முபாரக், “மச்சான்.., நான் எதை வேண்ணா பொறுத்துப்பேன், என் ஆள் முன்னாடி என்னை டீஸ் பண்ண.., நான் பொறுத்துக்கவே மாட்டேன் ஆமா..” பொங்கியெழ அவனை வேற்றுகிரகவாசியைப்போல் பார்த்தான்.

“என்னடா திடீர்ன்னு? யாருடா அந்த பொண்ணு..?” வீட்டுக்குள் பார்வையை செலுத்தியவாறே கேட்டான்.

“அவதான்.., நான் நிக்கா பண்ணிக்கப் போற பொண்ணுடா..” முகத்தில் டன் டன்னாக வெட்கம் வழிய உரைக்க,

“அடச்சீ.., முதல்ல இப்படி வெக்கப்படுறதை நிப்பாட்டு, பாக்க முடியலை” அவன் சொல்ல, அதையெல்லாம் கண்டுகொள்ளும் நிலையில் அவன் இருக்கவில்லை.

வாசலில் வண்டி சத்தம் கேட்டும், இன்னும் மகன் வீட்டுக்குள் வரவில்லையே என அவனது உம்மா வெளியே வர, இருவரின் பேச்சும் தடை பட்டது.

“அடடே மாறா.., என்னப்பா வந்துட்டு வெளியவே நின்னு பேசிட்டு இருக்கீங்க, உள்ளே வா..” அவனை அழைத்தவர் வீட்டுக்குள் திரும்பி நடக்க, அவரைப் பின்தொடர்ந்தான்.

“எப்படிப்பா இருக்க? உன்னைப் பாத்து ஒரு ரெண்டு வருஷம் இருக்காது. உங்க அக்காவோட கல்யாணத்துக்கு பத்திரிகை கொடுக்க வந்த. பிறகு இப்போதான் வர்ற. உனக்கு வேலை இங்கேயே மாறிடுச்சுன்னு முபாரக் சொன்னான்” அவனுக்கு சோபாவை காட்டியவர், அவன் எதிரில் அமர்ந்தார்.

முபாரக்கோ, இவர்களை கண்டுகொள்ளாமல் கிச்சன் பக்கம் நகர, ‘தடிமாடு எங்கே போறான்னு தெரியலையே..’ மனதுக்குள் அவனை வசைபாடியவன், அவர் அறியாமல் பார்வையை உள்ளே செலுத்தினான்.

“ஆமாம்மா.., ரெண்டு வருஷம் ஆயிடுச்சு. பெங்களூர் எனக்கு செட் ஆகலை, சோ.., வேலையை இங்கேயே மாத்திட்டேன்..” அவருக்கு பதில் கொடுத்தான்.

“அக்காவுக்கு குழந்தை..?” அவர் இழுக்க,

“ஒரு வயசில் பையன் இருக்கான்..” அவன் சொல்லிக் கொண்டிருக்கையிலேயே, “யா அல்லா..” நபீசாவின் அலறல் மெல்லியதாக அவர்களை வந்து எட்ட, பட்டென இருக்கையில் இருந்து எழுந்துவிட்டார் முபாரக்கின் தாய்.

கூடவே.., “நபீசா.., என்ன ஆச்சு..?” குரல் கொடுத்தவர் கிச்சனுக்குச் செல்ல, பின்வாசல் வழியாக வெளியேறிய முபாரக், நல்ல பிள்ளைபோல் முன்வாசல் வழியாக வந்து இளமாறன் அருகில் அமர்ந்து கொண்டான்.

அவனை இளமாறன் சந்தேகமாக பார்க்க,சிக்கிகொண்ட முகபாவனையில் அவனைப் பார்த்து சிரித்து வைத்தான்.

கிச்சனில் திகைத்துபோய் நின்றிருந்த நபீசாவை பார்த்த சமீரா, “எதுக்கு கத்தின?” அவளிடம் கேட்க, “ப..ப..பல்லி..”

கையை மேலே சுவரில் காட்ட, அந்த வார்த்தையைக் கேட்ட இளமாறன், “கொஞ்சம் பெரிய சைஸ் பல்லி..” சன்னமாக உரைக்க, அவன் வாயை அடைத்தவன், இப்பொழுது அவனை அடித்தான் முபாரக்.

“மச்சான் சும்மா இருடா..” கூடவே ஒரு கெஞ்சல் வேறு.

‘சரி பிழைச்சு போ..’ என்னும் பார்வை பார்த்தவன், அடக்கப்பட்ட சிரிப்பை உதிர்க்க, ‘வேண்டாம்..’ கையெடுத்து கும்பிட்டவன், ‘எதுவும் பேசாதே’ இதழசைவில் உரைக்க, சமீரா வருவதைப் பார்த்தவன், தன் சிரிப்பை மறைத்துக் கொண்டான்.

“இந்த காலத்து பிள்ளைகளுக்கு எதைப் பாத்தாலும் பயம்தான்..” உரைத்தவர், அவன் கையில் சிறு ஜூஸ் பாட்டிலை கொடுக்க, மறுக்காமல் வாங்கி குடித்தான்.

“மாமி.., நான் போயிட்டு வர்றேன்..” கிச்சனுக்குள் இருந்து வெளியே வந்த நபீசா, சமீராவிடம் உரைத்தவள், முபாரக்கை செல்லமாக முறைத்தவாறே செல்ல, “மச்சான்.., உனக்கு இப்போ வெளியே வேலை இருக்குமே..” அவன் காதில் கிசுகிசுக்க, தாயின் எதிரில் நண்பனிடம் எதையும் சொல்ல முடியாமல் திணறிப்போய் அமர்ந்திருந்தான்.

“சரி நபீசா..” அவளுக்கு விடை கொடுத்தவர், அவள் சென்றுவிட்டதை உறுதி படுத்திக் கொண்டவர், “இவதான் நம்ம முபாரக்குக்கு பேசி வச்சிருக்க பொண்ணு. இவன் என்னன்னா.., அவளை கட்டவே மாட்டேன்னு ஒரே பிடிவாதம். எல்லாரும் சேர்ந்து சம்மதிக்க வச்சோம்.

“நீயே சொல்லுப்பா.., அந்த பொண்ணுக்கு என்ன குறைச்சல்? பிஎஸ்சி படிச்சிருக்கா, நல்லா சமைக்கிறா.., நல்ல குணவதி.., இவளை கட்டிக்க இவனுக்கு கசக்குது..” அவர் குறைபட, நண்பனை நம்பாத பார்வை பார்த்தான்.

‘பூனை ஏன் கருவாடு வேண்டாம்னு சொல்லுது..?’ சிந்தித்தவன், அவனை ஓர விழியில் பார்க்க, திருடனுக்கு

தேள் கொட்டிய மாதிரி முழித்தான்.

“உம்மா.., அதான் இப்போ சரின்னு சொல்லிட்டேன் தானே. நீங்க முதல்ல பிரியாணி ரெடியான்னு பாருங்க. அவன் சாப்ட்டுட்டு கொஞ்சம் ரெஸ்ட் எடுக்கட்டும்” அவரை கிளப்பினான்.

அவர் செல்லவே, நண்பனை அறைக்கு அழைத்துச் செல்ல,”என்னடா நடக்குது இங்கே?” அவனை பிடித்துக் கொண்டான்.

“மச்சான்.., எங்களைப் பொறுத்த வரைக்கும் இது லவ் மேரேஜ். அவங்களை பொறுத்த வரைக்கும் இது அரேஞ்சிட் மேரேஜ் அதான். இப்போதைக்கு உனக்கு இவ்வளவு தெரிந்தால் போதும். நீ என்ன பண்ற, முதல்ல நல்லா சாப்பிடுற,

“பிறகு நிம்மதியா தூங்கி எந்திரிக்கிற. உன் விஷயத்தை நாம பிறகு பேசிக்கலாம்” அவன் சொல்லவே, அதை அமைதியாக ஏற்றுக் கொண்டான். இளமாறனுக்கும் இரவில் சரியான உறக்கம் இல்லை என்பதால், உடலும் கண்ணும் ஓய்வுக்கு கெஞ்சியது.

மதிய உணவு, அதைத் தொடர்ந்து நிம்மதியான உறக்கம், மாலை காபிக்கு சமீரா அவர்களை அழைக்க, இருவரும் எழுந்து வந்து காபி குடித்தார்கள்.

“உம்மா.., நாங்க கொஞ்ச நேரம் மாடியில் இருக்கோம்..” உரைத்தவன், நண்பனை அழைத்துக் கொண்டு மாடியேறினான்.

“இப்போ சொல்லுடா மச்சான்.., உனக்கு என்ன பிரச்சனை?” மாடி திண்டில் அமர்ந்தவாறு முபாரக் கேட்க, அவனை முறைத்தான்.

“எனக்கு என்னடா பிரச்சனை?” அவனிடம் திருப்பிக் கேட்டான்.

“அதாண்டா.., காலையில் உன் வீட்டுக்கு வந்தப்போ, ஏதோ பேய், பூதம்னு சொல்லி என்னை ஓட விட்டியே அதான். நான் மறுபடியும் சொல்றேன், அங்கே எதுவுமே இல்லை. எல்லாம் உன் பிரம்மை. நீ என்ன பண்ற, நிம்மதியா போற.

“நானும் உன்னோடவே வந்திருப்பேன்.., இங்கே உம்மாவை கூட சம்மாளிக்கலாம், என் வாப்பா சரியான விடாக்கண்டன்.., ஆயிரத்தெட்டு கேள்வி கேட்டே சாகடிப்பார். உனக்கே தெரியுமே..” அவன் சொல்ல, எதுவும் சொல்லாமல் அவனையே பார்த்திருந்தான்.

திருப்தியாக உண்டு உறங்கி எழுந்ததால், ‘ஒரு வேளை முபாரக் சொல்வது உண்மையாக இருக்குமோ? ஒருவேளை எல்லாம் என் மன பிரம்மையா?’ தன்னைத் தானே கேட்டுக் கொண்டான்.

“முபாரக்.., நீ என்னை டீஸ் பண்ண வேண்டி, அவளைத் தெரியலைன்னு சொல்லலியே. ஒரு வேளை அவளை நீதான் அங்கே ஒளிச்சு வச்சிருக்கியா?” அவனை சந்தேகமாகப் பார்க்க,

“அடப்பாவி டேய்.., நீ பேசுறது யார் காதிலாவது விழுந்துடப் போகுதுடா. நான்தான் நபீசாவை விரும்பறேன்னு சொல்லிட்டேனே, மறுபடியும் இப்படிக் கேட்டால் என்னதாண்டா செய்யட்டும்?” அவன் அலறவே, அதில் இருந்த உண்மையை உணர்ந்து கொண்டான்.

“நிஜமாவே அங்கே எதுவும் இல்லையா..?” தான் கண்ணால் கண்ட உருவம் பொய் என அவனால் இன்னும் நம்ப முடியவில்லை.

“மறுபடியும் ஆரம்பிக்காதே மாறா. அங்கே எதுவும் இல்லை. நீ தைரியமா போ. போகும்போது என்னோட புல்லட்டை எடுத்துக்கோ. உன்னோட வண்டி பெங்களூரில் இருந்து வர்ற வரைக்கும் அதை யூஸ் பண்ணு. நான் என் பழைய ஹோண்டாவை யூஸ் பண்றேன்..” அவன் கையில் கீயை திணித்தான்.

அப்பொழுதும் அவன் சற்று தயங்கவே, “இல்லன்னா நீ இங்கேயே..”

“இல்ல வேண்டாம்.., நான் கிளம்பறேன்..” அவனை இடை வெட்டியவன் உடனே எழுந்து கொண்டான்.

வண்டியை ஓட்டி வருகையில் முழுவதும் அவனுக்கு அதே சிந்தைதான். ‘நான் அவளை பார்த்தது நிஜம் இல்லையா? நிஜமென்றால்..?’ அவனால் அதற்குமேல் சிந்திக்க முடியவில்லை.

விஸ்மையாவுக்கோ தான் எப்படி உணர்கிறோம் என்றே தெரியவில்லை. கடந்த மூன்று வருடங்களாக அவளுக்கு தனிமை மட்டுமே துணை. தான் யார்? எங்கே இருந்து வந்தோம்? இது தன் வீடுதானா? என ஏகப்பட்ட குழப்பங்கள்.

அதைவிட, தான் யாரிடம் பேசினாலும், யாரும் தனக்கு பதில் அளிக்காதது ஏன் என அவளுக்குத் தெரியவே இல்லை. முதல் முறையாக தன்னை ஒருவன் பார்க்கிறான், பேசுகிறான் என்பதில் ஏக சந்தோஷத்தில் இருந்தாள்.

அந்த சந்தோஷத்தை குலைக்கும் விதமாக, அவன் தன்னை பேய் எனச் சொல்லி பயந்து மிரண்டு ஓடியதை நினைத்து பெரும் கவலை கொண்டாள்.

‘பேய் என்றால் கால் இருக்காதே.., எனக்குதான் கால் இருக்கே..’ தன்னைத்தானே குனிந்து பார்த்தவள், சிந்தை வயப்பட்டாள்.

‘அவர் எப்போ வருவார்..?’ இளமாறனின் வரவை ஆவலாக எதிர்பார்த்தாள் என்றே சொல்லலாம். உலகில் மிகக் கொடியது தனிமை, அதை கடந்த சில வருடங்களாக அனுபவிபவளுக்கு, தன்னோடு பேச, தன் தனிமையைப் போக்க வந்த கடவுளாகவே அவனைப் பார்த்தாள்.

அவன் வரவை அவள் ஆவலாக எதிர்பார்க்க, அவள் வீட்டை விட்டு சென்றிருக்க வேண்டும் என்ற வேண்டுதலோடு

வீட்டுக்கு வந்தான் இளமாறன்.

***

# பகுதி - 5.

வீட்டுக்கு வந்து வண்டியை நிறுத்திய இளமாறன், பார்வையை கவனமாக உள்ளுக்குள் செலுத்த, அவன் வருவதை உணர்ந்த விஸ்மையா, வந்த உடனேயே அவனை டென்ஷன் செய்ய வேண்டாம் என்பதால், தட்டுமுட்டு சாமான் போட்டு வைத்திருந்த அறைக்குள் சென்று மறைந்தாள்.

அங்கே இருந்த ஒரு மர ஸ்டூலில் அமர்ந்தவள் நகம் கடிக்க, சற்று முன்னர் இளமாறன் கண்டித்தது நினைவுக்கு வர, பட்டென கரத்தை எடுத்துக் கொண்டாள். இதழோரம் ஒரு கீற்றான புன்னகையும், மனம் முழுவதும் ஒரு உற்சாக ஊற்றும் பிரவாகமெடுத்தது.

அறைக்கு வெளியே அவனது காலடி ஓசை கேட்கிறதா? என அவள் செவிமடுக்க, வீட்டுக்குள் வந்த இளமாறன், ஹால் முழுவதும் தன் பார்வையை செலுத்தினான்.

“ஹாய்.., பேயே.., இருக்கியா..?” அவன் குரல் வெளியே கேட்க, அவன் தன்னை ‘பேய்’ என அழைப்பதில் அவள் முகம் சுருங்கிப் போனது.

‘நான் பேயா..?’ தனக்குத் தானே கேட்டுக் கொண்டாள். அவளைப் பொறுத்த வரைக்கும் அவள் பேய் இல்லை. எனவே அதை அவளால் ஏற்கவும் முடியவில்லை.

தன் குரலுக்கு அவள் வெளிவராமல் போகவே, தன் அறைக்குள் நுழைந்தவன், அங்கே முழுவதும் அலசினான். அவள் அங்கேயும் இல்லாமல் போகவே, தான் கண்டது மன பிரம்மைதான் என்ற முடிவுக்கு வந்தான்.

ஆனாலும், வீட்டில் இருந்து வந்த அந்த மல்லிகையின் மணம்.., அதை அவனால் சாதாரணமாக எடுக்க முடியவில்லை.

‘மல்லிகைச்செடி இங்கே ஒண்ணு கூட இல்லை, அப்படியிருக்கும்போது இந்த வாசனை மட்டும் எப்படி வரும்?’ தனக்குத் தானே கேட்டவன், கவனமாக வீடு முழுவதும் ஆராய்ந்தான்.

அவள் எங்கேயும் இல்லாமல் போகவே, ‘ஹப்பாடி.., ஒரு வேளை நாம சொன்னதால் எங்கேயோ போய்ட்டா போல, அதுவும் நல்லதுதான். என்ன, இந்த வாசனையையும் சேர்த்து எடுத்துட்டு போயிருக்கலாம்..’ தனக்குள் எண்ணிக் கொண்டான்.

அறைக்குள் இருந்து வெளியே வந்தவன், ஹால் சோபாவில் அமர்ந்து, டீபாவின்மேல் காலை தூக்கிப் போட்டுவிட்டு, அங்கே இருந்த டிவியை இயக்கினான்.

அவன் டிவியை வைத்த நேரம், அதில் ‘பலூன்’ திரைப்படம் ஒளிபரப்பாக, திடுமென எழுந்த அதீத சத்தத்தில் திடுக்கிட்டவன், பட்டென அதை அணைத்துப் போட்டான்.

“இருக்குற கடுப்பில் இவனுங்க வேற.., படம் போட நல்ல நாள் பாத்தானுக” வாய்விட்டே புலம்பினான்.

வாயைக் குவித்து காற்றை ஊதியவன், சற்று ரிலாக்ஸ் செய்ய, சட்டென அவனது அலைபேசி ஒலியெழுப்பி அதன் இருப்பை உணர்த்த, துள்ளி எழுந்தவன், நொடியில் தன்னை சுதாரித்தான்.

“ச்சை.., இம்சடா..” தன் அலைபேசியை எடுத்தவன் அதில் ஒளிர்ந்த தாயின் எண்ணைப் பார்த்தவன், சட்டென அதற்கு செவிமடுத்தான்.

அவன் எடுக்கவே, “மாறா.., சென்னைக்கு போயிட்டு ஒரு போன் கூட போடலையேப்பா.., இவ்வளவு நேரம் பாத்துட்டு, நீ போடலைன்னு சொன்ன உடனே நானே போட்டுட்டேன். மதியம் சாப்ட்டியா? தூங்கி எழுந்துட்டியா?” அவனிடம் கரிசனையாக கேட்க, இந்தப் பக்கம் மெல்லிய குற்றவுணர்வுக்கு ஆளானான்.

“அம்மா.., நல்லபடியா வந்து சேர்ந்துட்டேன். மதியம் நம்ம முபாரக் வீட்ல சாப்ட்டேன். அக்கா வர்றேன்னு சொன்னாளே வந்தாளா? போன் பண்ணாளா?”.

“அவ இப்படித்தான் சொல்லுவா.., பிறகு போனைப் போட்டு, எனக்கு வேலை வந்துடுச்சுன்னு காலை வாருவா. அவ வந்தால் ஆச்சு. உனக்கு தெரியாதா? சரி, சமைக்கதுக்கு கொஞ்சம் காய் வாங்கிக்கோ மறந்துடாதே. மசாலா எல்லாம் நான் கொடுத்ததே ரெண்டு மாசத்துக்கு வரும்.

“நைட்டுக்கு வேண்ணா வெளியே வாங்கிக்கோ.., உடனே சமைக்கிறேன்னு கிச்சன்ல போய் நிக்காதே” ஒரு தாயாக அவனது வயிறு மட்டுமே அவருக்குத் தெரிந்தது. பெங்களூரில் இருக்கும்பொழுதே அவர் அப்படிதான் என்பதால், அனைத்தையும் அமைதியாக கேட்டுக் கொண்டான்.

“நைட்டுக்கும் முபாரக் வீட்டில் பிரியாணி கொடுத்து அனுப்பி இருக்காங்க. காய் வாங்க மறந்துட்டேன்.., இப்போ உடனே போய் வாங்கிட்டு வந்து ப்ரிஜில் வைக்கறேன். அப்பாவை ரொம்ப நேரம் வயல்ல வேலை செய்ய விடாதீங்க, இனிமேல் எல்லாத்தையும் நான் பாத்துக்கறேன்” அவன் சிறு கண்டிப்பாய் உரைக்க, அவர் மெல்லியதாக சிரித்துக் கொண்டார்.

“உனக்கு ஒரு கல்யாணத்தைப் பண்ணி, பேரன், பேத்தி எடுத்த பிறகு அக்கடான்னு இருக்கலாம். எங்களுக்கும் அவங்களோட பொழுது போகும். இப்போ உக்காந்து என்ன செய்ய?” மறைமுகமாக அவனது திருமணத்தைப் பற்றி பேச, மெல்லியதாக சலித்துக் கொண்டான்.

“ம்ச் அம்மா.., எனக்கு இப்போ என்ன வயசு ஆயிடுச்சு..? இன்னும் ரெண்டு வருஷத்துக்கு இந்த பேச்சே வேண்டாம். நான் முதல்ல போனை வைக்கறேன், விட்டா நீங்க பேசிட்டே இருப்பீங்க..” அலைபேசியை வைக்க முயன்றான்.

“படிப்பு முடிஞ்சு, வேலை பாக்குற, ஒண்டியா சமைச்சு சாப்பிடுற. காலாகாலத்தில் ஒரு கல்யாணம் பண்ணிகிட்டா, உனக்கு ஆக்கிப்போடுறது, துவைச்சுப் போடுறதுன்னு எல்லாத்தையும் அவ பாத்துப்பா. நானும் இங்கே கவலை இல்லாமல் இருப்பேன்” தன் கோரிக்கையை உரைத்துவிட்டே அவனை விட்டார்.

“ஆமா, நீங்க நினைச்சுகிட்டே இருங்க, எனக்கு ஆக்கி, தொவைச்சு போடுவான்னு. இந்த காலத்து பொண்ணுங்களுக்கு அதெல்லாம் தெரியாது. நீங்களா ஏதாவது கற்பனையை வளத்துக்காதீங்க. அவ துணியை என்னை தொவைக்க சொல்லாமல் இருக்குற வரைக்கும் சந்தோசம். நான் போனை வைக்கறேன்..” அதற்குமேல் அவரை பேச அனுமதிக்காமல் அலைபேசியை வைக்க முயன்றான்.

சட்டென நினைவுக்கு வந்தவனாக, “அம்மா.., இந்த பேய் எதைப் பாத்தும்மா பயப்படும்?” அவன் திடுமென கேட்க, அவர் அந்தப் பக்கம் அதிர்ந்து போவதை அவனால் உணர முடிந்தது.

“ஏன்ப்பா திடீர்ன்னு இப்படி ஒரு கேள்வி?”.

“கேட்டதுக்கு பதில் சொல்லும்மா..” சற்று எரிச்சலானான்.

“ஏண்டா.., நான் என்ன வேளைக்கு ஒரு பேயை ஓட்டிட்டா இருக்கேன்? விளக்கமாறு, செருப்பு, இதெல்லாம் கிட்ட இருந்தால் பேய் வராதுன்னு கேள்வி. இப்போ எதுக்கு நீ இதையெல்லாம் கேக்க?” அவருக்குப் புரியவே இல்லை.

“ம்.., பேய் ஓட்டத்தான்..” உரைத்தவன் அலைபேசியை வைத்து விட்டான்.

நாளைமுதல் வேலைக்குச் செல்லவேண்டும் என்பதால், முதல் வேலையாக சென்று காய் வாங்கி வர வேண்டும் என எண்ணியவன், வண்டியை கிளப்பிச் சென்றான். அவன் செல்லவே, அந்த அறைக்குள் இருந்து வெளியே வந்தவள்,

“இவருக்கு சமைக்க எல்லாம் தெரியுமா?” வியப்பாய் எண்ணிக் கொண்டாள்.

விஸ்மையாவைப் பொறுத்தவரை அவள் உணவு உண்பது இல்லை. அதேபோல், உறக்கம் என்பதும் அவளுக்கு கிடையாது. களைப்பு, சோர்வு, இப்படியான உணர்வுகளையும் அவள் உணர்வது இல்லை.

வீட்டுக்கு வெளியே வந்தவளுக்கு, அவனது வண்டியின் பின்னால் சென்று தொற்றிகொள்ளும் பேராவல் எழ, அதை எப்படி அடக்கினாள் என்றே அவளுக்குத் தெரியவில்லை.

அவள் நினைத்தால் நொடியில் அவன் வண்டியில் ஏறிவிட முடியும். ஆனால், தன்னைப் பார்த்து பயப்படும் அவனிடம் சட்டென சென்று தன்னை வெளிப்படுத்திக் கொள்ளவும் அவளுக்கு அச்சமாக இருந்தது.

தனக்குத் தேவையான காய்கறிகளை வாங்கி வந்தவன், அனைத்தையும் பிரிஜ்ஜுக்குள் வைக்க, சற்று தூரத்தில் இருந்து அவனை கவனித்துக் கொண்டிருந்தாள்.

மல்லிகையின் மணம் சட்டென அவன் நாசியை குப்பென தாக்க, வேகமாக திரும்பி தன் முதுகின் பின்னால் பார்த்தான். அவன் திரும்ப முயன்ற அந்த நொடி, அந்த ஸ்டோர் ரூமின் கதவை ஊடுருவி உள்ளே நுழைந்தாள் விஸ்மையா.

“நான் இருக்குறதை எப்படி கண்டு புடிக்கறார்..? நான் அவருக்கு முன்னாடி கூட நிக்கலையே..?” வாய்விட்டே சிந்தித்தாள். ஆனாலும், அவன் தன்னை உணர்ந்து கொள்வது ஒரு விதத்தில் பிடித்திருந்தது.

இந்த உலகத்தில் இத்தனை நாளாக இப்படி ஒருத்தி இருக்கிறாள் என யாருமே கண்டுகொள்ளாமல் இருக்க, இப்பொழுது ஒருவன் தன்னை கவனிப்பது அவளுக்கு பிடிக்காமல் போகுமா என்ன?

அவளுக்கு அவனிடம் பேசிப் பழக கொள்ளை ஆசையாக இருக்க, அவனோ, அவளை நெருங்க விடவும் அஞ்சிக் கொண்டிருந்தான்.

இரவு உணவை முடித்தவன், அங்கே இருந்த ஒரு விளக்கமாறையும், தன் செருப்பையும் படுக்கைக்கு கீழே எடுத்து வைத்துக் கொண்டான். அந்த மல்லிகையின் மணம் அவனுக்குச் சொன்னது, நிச்சயம் அவள் அங்கே இருக்கிறாள் என, எனவேதான் இந்த ஏற்பாடு.

உடை மாற்றிவிட்டு தன் படுக்கையில் படுத்துக் கொள்ள, ‘எங்கே போயிருப்பா..? போயிருந்தால் அந்த மல்லிகை வாசனை வர வாய்ப்பே இல்லையே. இங்கேதான் இருக்கான்னா எங்கே இருக்கா?’ அவன் மனம் என்னதான் முயன்றாலும் அவளை சிந்திப்பதை மட்டும் நிறுத்தவே இல்லை.

‘இங்கே இருந்தாலும் நம்ம முன்னாடி வராமல் இருக்குற வரைக்கும் பரவாயில்லை. ஒரு வேளை அவ ரத்தக்காட்டேரியா இருந்தா? நான் தூங்கின உடனே என் கழுத்தை கடிச்சு ரத்தத்தை உறிந்துவிட்டால்?’ அந்த நினைப்பு எழுந்த உடனே அவனுக்கு வியர்த்து வழிந்தது.

ஒரு வீட்டில் நாம் தனியாக இருக்கும் பொழுது, நீ தனியாக இல்லை, இங்கே அமானுஷ்யமாக வேறு நபரும் இருக்கிறார் எனத் தெரிய வந்தால் நம்மால் நிம்மதியாக இருக்க முடியுமா என்ன? அப்படி ஒரு நிலையில் தத்தளித்தான்.

மதியம் நிம்மதியாக உறங்கி எழுந்ததால் உறக்கம் வேறு அவனுக்கு போக்கு காட்ட, உருண்டு, உருண்டு உறங்க முயன்று கொண்டிருந்தான். நள்ளிரவு பன்னிரண்டைத் தாண்டவே, அவன் கண்கள் தாமாக உறக்கத்துக்குச் செல்ல, அடுத்த நொடி, அவன் அறையில் இருந்தாள் விஸ்மையா.

படுக்கையின் ஓரம் அமர்ந்தவள், அவன் முகத்தையே அசையாமல் பார்த்திருந்தாள். வெயில் காலம் என்பதால், அங்கே இருந்த ஏசியின் மெல்லிய குளிரில் போர்வை கூட இன்றி விழி மூடி படுத்திருந்தான் இளமாறன்.

ஒரு அரைக்கால் பெர்முடாசும், வெள்ளை நிற உள் பனியன் மட்டுமே அவனது ஆடையாக இருக்க, இடக்கரத்தை தலைக்கடியில் வைத்து, வலக்கரத்தை நெஞ்சின்மேல் வைத்தவாறு உறங்கிக் கொண்டிருந்தான்.

ஒரு ஆண்மகனின் அறையில் தனித்திருக்கிறோம் என்பது எல்லாம் அவளுக்குத் தெரியவே இல்லை. அது தவறு என அவள் சிந்திக்க கூட இல்லை. அவன் முன்னுச்சி முடி காற்றுக்கு மெல்லியதாக ஆட, அதன் அசைவையும், அவனது சீரான மூச்சுக்கு ஏறி இறங்கும் அவன் நெஞ்சையும் பார்த்தவாறே அமர்ந்திருந்தாள்.

உறக்கத்திலேயே சற்று அசைந்தவன், ஏதோ ஒரு உணர்வில் கண் விழிக்க, அங்கே தன்னைப் பார்த்தவாறே அமர்ந்திருந்த அவளைப் பார்த்து பயந்து எழுந்து அமர்ந்தான்.

அடுத்த நொடி பாய்ந்து விளக்கமாறையும் செருப்பையும் கையில் எடுத்தவன், “ஏய்.., இங்கே பார்.., நீ என் கிட்டேயே வர முடியாது. பாத்தியா.., என் கையில் என்ன இருக்குன்னு..?” கேட்டவன் அவற்றை அவள் முன்னால் காட்ட, வேகமாக படுக்கையில் இருந்து துள்ளி எழுந்து நின்றாள் விஸ்மையா.

***

# பகுதி - 6.

அவள் முன்னால் நீட்டப்பட்ட விளக்கமாறையும், செருப்பையும் பார்த்தவள், அதைப் பார்த்து பயந்துபோய், அவன் அருகில் இருந்து துள்ளி எழுந்து விட்டதாக அவன் நினைக்க, அவளோ, அவன் இப்படி இடையில் கண் விழிப்பான் என அறியாததாலேயே துள்ளி விலகி இருந்தாள்.

“என்ன பயந்துட்டியா..? எங்கே.., இப்போ என் கிட்டே வா பார்ப்போம்?” அவன் சவால்விட, அதைப் பார்த்தவளுக்கு ஏனோ சிரிப்புதான் வந்தது.

“வந்தா என்ன செய்வீங்களாம்..?” அவ்வளவு பயத்திலும் அவன் தன்னிடம் உரையாடுவது அவளுக்கு சுவாரசியத்தைக் கொடுத்தது. தன்னிடம் பேசும் முதல் ஜீவன்.., ஒரே ஜீவன்.., அவனிடம் பேச ஆவல் எழுந்தது.

“ஹங்.., வந்தா.., வந்தா.., அதான் வர முடியாதுன்னு சொல்றேன்ல. பேயே முதல்ல என் ரூம்ல இருந்து வெளியே போ.., இல்ல.., உன்னை சுவத்துல தூக்கி அடிச்சுடுவேன் பாத்துக்கோ..” உளறிக் கொட்டினான்.

‘அய்யய்யோ.., அவசரப்பட்டுட்டோமே.., எல்லா படத்திலேயும் பேய் தானே மத்தவங்களை தூக்கி அடிக்கும்..’ மனதுக்குள் அவன் நகம் கடிக்க,

அவளோ.., “சுவத்துல தூக்கி அடிக்க நான் என்ன ஆணியா..?” நக்கலாக கேட்க, ஒரு நொடி திருதிருத்தான்.

“ஏய்.., இங்கே பார்.., நீ என்னதான் என்னை டைவர்ட் பண்ணப் பாத்தாலும் நான் மசியவே மாட்டேன். என் ரத்தத்தை நீ குடிக்கவே முடியாது. இங்கே பாத்தியா., திருநீர் கூட போட்டிருக்கேன். வந்த.., பொசுங்கிடுவ..” படுக்கையில் சம்மணமிட்டு அமர்ந்தவன், இரண்டு கையில் இரு

பொருட்களையும் பிடித்தவன், அவளுக்கு நேராக நீட்டிக் கொண்டிருந்தான்.

அவன் பேசியதில் சட்டென அவள் முகம் வாட, “நான் ரத்தமெல்லாம் குடிக்க மாட்டேன்..” படுக்கைக்கு சற்று விலகி நின்றவள் பரிதாபமாக உரைத்தாள்.

“ஓ.., உங்க ஊர்ல ரத்தத்துக்கு வேற பேர் வச்சிருக்கீங்களா?” அவன் நக்கலாக கேட்க,

அதைக் கண்டுகொள்ளாமல், “அப்படியெல்லாம் இல்லை..” அவள் ரோஷமாக பதில் கொடுத்தாள்.

“அப்படியா? அப்போ எதெதுக்கு எப்படி சொல்வீங்கன்னு எனக்கு டியூஷன் எடு, அப்படி உக்காரு..” நிஜமாகவே அவளிடம் பேசும் தொனியில் உரைக்க, அதை நம்பி அமரப் போனாள்.

அதைப் பார்த்தவன், “அட சீ எந்திரி மேலே, நடு ராத்திரி ஒரு மனுஷனோட ரூமுக்கு வந்துட்டு, ரத்தம் குடிக்க மாட்டன்னா..? பிறகு எதுக்கு இங்கே வந்திருக்கியாம்? ஜூஸ் குடிக்கவா?” எங்கே அவள் அருகே வந்துவிடுவாளோ என அவன் பயப்படுவது அப்பட்டமாக அவன் கண்ணில் தெரிந்தது.

“நான் உங்களைப் பாக்கத்தான் வந்தேன்..” அவன் தன்னை புரிந்துகொள்ள வேண்டுமே என்ற மன்றாடல் அவள் குரலில் இருந்தது.

“பாக்குறதுக்கு நான் என்ன ஜூவில் இருக்கும் குரங்கா?” படு கோபமாக வினவ, அவளுக்கு ஏனோ சிரிப்புதான் வந்தது.

“உங்க ஊர்ல குரங்கை  மட்டும்தான் பாப்பீங்களா? மனுஷங்களை பாக்க மாட்டீங்களா?” அவள் வெடுக்கென கேட்க,

“நீ மனுஷியா..? பேயே தூரப்போ.., ஒரு மனுஷன் தூங்கின பிறகு அவன் ரூமுக்குள்ளே வந்துட்டு விளக்கமா கொடுத்துட்டு இருக்க? முதல்ல வெளியே போ.., நீ என்ன சொன்னாலும் உன் பசப்பில் நான் மயங்கவே மாட்டேன். இன்னைக்கு நீ பட்டினிதான். உனக்கு என் ரத்தம் கிடைக்காது” அவன் பெருமையாக உரைக்க, அவன் பேச்சில் அவள் முகம் வாடிப் போனது.

“நான்தான் அப்படி இல்லைன்னு சொல்றேனே..” அவள் கெஞ்சலில் இறங்க,

“ஏய்.., ஏய்.., இந்த கண்ணைக் கசக்குற வேலையே இங்கே வேண்டாம். மரியாதையா வெளியே போய்டு.., இல்ல.., ஏதாவது மந்திரவாதியை கூட்டி வந்து கட்டி வச்சுடுவேன்..” அவன் சொல்ல, அவள் முகத்தில் பெரும் பீதி தெரிந்தது.

“அப்படியெல்லாம் பண்ணாதீங்க..” அவள் உரைக்க,

“பாருடா.., பேயே நம்மகிட்டே கெஞ்சுது..” பெருமைபட்டுக் கொள்ள, அவள் கண்களில் சட்டென வழிந்த கண்ணீர் அவனை ஏதோ செய்தது.

“பேயே இங்கே பார்.., இந்த சீனே இங்கே கிடையாது. ஒழுங்கா வெளியே போ, நாளைக்கு எனக்கு ஆபீஸ் வேற போகணும். பேய் நீ, கிட்டவே உக்காந்து என்னையே குறுகுறுன்னு பாத்துட்டு இருந்தால் நான் எப்படி தூங்குறது?

“நீதான் ரொம்ப நல்லவளாச்சே.., எங்கே மரியாதையா வெளியே போ பாப்போம்.., போ பேயே..” படுக்கையில் இருந்து இறங்கியவன், அவளை வாசல் வழியாக அனுப்ப முயன்றான்.

“நான் ஒண்ணும் பேய் இல்லை..” அவள் அதை ஒத்துக்கொள்ள தயாராக இல்லை.

“அது சரி, உலகத்தில் பேய் கூட பொய் சொல்லும் போலையே.., நீ எதுவா வேண்ணா இருந்துட்டு போ, இப்போ வெளியே போ. பேய்.., பேய்..”.

அவன் மீண்டும் மீண்டும் பேய் என சொல்லவே, அவளுக்கு விம்மல் வெடிக்க, வாயை கையால் மூடியவள், சடாரென கதவை ஊடுருவி வெளியேறினாள்.

அவள் கதவின் அருகே வேகமாக செல்ல முயன்றதைப் பார்த்தவன், எங்கே கதவில் முட்டிக்கொள்ளப் போகிறாளே என பதைத்தவன், “பேயே, கதவு.., இடிச்சுக்கப் போற..” அவன் கையில் இருந்த செருப்பு தானாகவே கீழே விழ, அவள் கரத்தை பற்றி தடுக்க முயன்றான்.

அவள் கரத்தை பற்றியவன், காற்றை மட்டுமே பற்றிக்கொள்ள முடிந்தது. அவன் கரத்தில் சிக்காமல், கதவின் வழியே வெளியேறியவள், ஹாலில் கிடந்த சோபாவில் அமர்ந்து கொண்டாள்.

அவன் தன்னை விரட்டியதில் வருத்தம் இருந்தாலும், இறுதியாக தான் கதவில் மோதிகொள்ளப் போகிறோம் என அவன் பதைத்தது பெரும் ஆறுதலாக இருந்தது.

‘அவர் கெட்டவர் எல்லாம் இல்லை. ரொம்ப நல்லவர்..’ மனம் நொடியில் சட்டிபிகேட் வழங்க, மனம் ஒருபக்கம் நிம்மதியோடும், ஒரு துளி கண்ணீர் வேதனையோடும் வெளியேறியது.

கன்னத்தில் வழிந்த கண்ணீர் நொடியில் ஆவியாக, தன் கன்னத்தை உணர்ந்தவளுக்கு அங்கே ஈரம் தெரியவே இல்லை. இதற்குமேலும் அறைக்குள் சென்று அவனை தொல்லை செய்ய விரும்பாமல், அறைக்கதவை பார்த்தவாறு அங்கேயே அமர்ந்து கொண்டாள்.

அறைக்குள், இளமாறனோ.., “என்ன.., ‘போ’ன்னு சொன்ன உடனே போய்ட்டா. ஒரு வேளை நல்ல பேயோ..?” எண்ணியவன், அந்த செருப்பை கதவின் இடுக்கில்

சொருகிவிட்டு, விளக்கமாறை தன் அருகில் கீழே வைத்துக் கொண்டான்.

“இப்போ எப்படி வர்றான்னு பாக்கறேன்..” தன் செய்கையை தானே மெச்சிக் கொண்டான்.

படுக்கையில் விழுந்தவனுக்கு சற்று பயமாக இருந்தாலும், ஏதோ ஒரு நம்பிக்கையில் இமைகளை சற்று மூட, தன்னை அறியாமல் ஆழ்ந்த உறக்கத்துக்குச் சென்றான். அவன் உறங்கிய அடுத்த நொடி, அவளுக்கு தெரிந்தாலும், அப்பொழுது உள்ளே செல்ல அவள் முயலவில்லை.

காலையில் கண் விழித்தவன், அறைக்கு வெளியே வர, அவனுக்கு தரிசனம் கொடுத்தாள் விஸ்மையா. அவளை ஹாலில் பார்த்தவன், “ஏய், பேயெல்லாம் நைட் மட்டும்தானே வரும், நீ எப்படி இன்னும் இருக்க?” அவளிடம் கேட்க விழித்தாள்.

அவள் விழிப்பதை பார்த்தவன், ‘ஒரு வேளை இவ பேய் இல்லையோ, நாமதான் தப்பா நினைக்கிறோமோ?’ மனதுக்குள் எண்ணிக் கொண்டான்.

இரவு சரியாக உறங்கவில்லை என்றாலும், இன்று அலுவலகம் செல்ல வேண்டும் என்பதால் சீக்கிரமே எழுந்து விட்டான். காலை உணவு, லஞ்ச் என செய்ய வேண்டி இருந்ததால், அவளை கண்டுகொள்ளாமல் கிச்சனுக்குள் நுழைந்தான்.

முதல் வேலையாக பாலை அடுப்பில் வைத்தவன், தனக்கு காபி கலந்துவிட்டு, வெஜிடபிள் ரைஸ் செய்ய காயை பிரிஜ்ஜுக்குள் இருந்து எடுத்து வெளியே வைத்தான்.

அவன் செய்வதை அவள் வேடிக்கை பார்க்க, “என்ன வேடிக்கை பாக்குற? ஆம்பளை நான் சமைக்கறேன்.., வந்து காய் வெட்டி கொடுக்கக் கூடாது?” அவன் கேட்க, புருவம் இரண்டையும் மேலே ஏற்றி ஆச்சரியம் காட்டியவள், அவன் எடுத்து வைத்த கத்தியை எடுக்க முயன்றாள்.

ஆம்.., அவளால் முயல மட்டுமே முடிந்தது. கத்தியை எடுக்க அவள் எவ்வளவோ முயன்றும், காற்றில்தான் அவள் கைகள் துழாவியது. அவள் செய்கையைப் பார்த்தவன், “பாருடா.., பேய்க்கு கூட இரக்கம் இருக்கு” நக்கலாக உரைக்க, அவள் முகம் அப்படியே சுண்டிப் போனது.

அதைப் பார்த்தவனின் மனமும் ஏனென்றே தெரியாமல் வாடியது. “இதுவும் நல்லதுதான்.., நீ இல்லன்னா நான் தனியா இருக்க வேண்டி இருந்திருக்கும்” அவன் திடுமென உரைக்க, அவள் முகத்தில் பட்டென ஒரு பிரகாசம்.

“உங்களுக்கு சமைக்கவெல்லாம் தெரியுமா?” அவன் காய் நறுக்கும் அழகு, அரிசியை களைவது, இஞ்சி பூண்டு என வாகாக உரித்து அரைப்பது என செயல்பட, அதைப் பார்த்தவள் ஆச்சரியமாக கேட்டாள்.

“ஏன்.., உனக்கும் சமைச்சுக் கொடுக்கணுமா?” காயை எண்ணையில் போட்டவாறு அவன் கேட்க, “நான்தான் எதுவும் சாப்பிட மாட்டேனே..” வேகமாக உரைத்தாள்.

“ஓ.., ஒன்லி ஜூஸ்.., அதாவது ப்ளட் மட்டும்தான் குடிப்பியா?”.

“நீங்க இதை விடவே மாட்டீங்களா?” ஏனோ அவன் தன்னை பேய் என பேசுவதைக் கேட்க அவளுக்கு பிடிக்கவில்லை.

“பேய்க்கு பேய்ன்னு சொன்னால் கோபம் வருமோ..?” தன் வேலையில் கவனமாக இருந்தவன் அசால்ட்டாக உரைக்க, ‘இப்படி பேசாதீங்களேன்’ என்ற பார்வையாய் அவனைப் பார்த்தாள்.

அடுத்த அரைமணி நேரம் அவன் கிச்சனுக்குள் போராட, குக்கர் விசில் வந்த உடன், அதை அணைத்தவன், பிரெட், ஆம்ப்லேட் தயார் செய்ய அனைத்தையும் எடுத்து வைத்துவிட்டு குளிக்கச் சென்றான்.

கிச்சன் ஜன்னல் திறந்திருக்க, உள்ளே வந்த பூனை அவன் ஏற்கனவே காய்த்து வைத்திருந்த பாலை குடிக்க, அதை எப்படி தடுப்பதென்று அவளுக்குத் தெரியவில்லை. அதுவும் அவளைப் பார்த்ததுதான், ஆனால், கொஞ்சம் கூட பயப்படாமல் சலாட்டாக பாலை நக்கியது.

பூனை அவளை கண்ணை உருட்டிப் பார்க்கவே, சற்று பயந்தாலும் அதை வெளியே காட்டிக் கொள்ளவில்லை. ‘அவர் காய்ச்சி வச்ச பாலை குடிக்குதே’ எண்ணியவள், கொஞ்சம் தைரியத்தை திரட்டிக் கொண்டு விரட்ட முயன்றாள். அதுவோ அவளைப் பார்த்து சீறியது.

பொதுவாகவே விலங்குகளுக்கு ஆவிகள் கண்களுக்குத் தெரியும் என்பதால், அவளைப் பார்த்து குரல் உயர்த்தி கத்தியது.

“ச்சு.., அவள் விரட்ட முயல, அதுவோ அவள்மேல் பாய்ந்தது. அவ்வளவுதான், “ஆ.., காப்பாத்துங்க..” ஒரே அலறலாக அலறியவள், தாவி ஓடி, பூட்டியிருந்த இளமாறனின் அறைக்குள் நுழைந்துவிட, அப்பொழுதுதான், குளித்துவிட்டு உடை மாற்ற அறைக்குள் வந்த இளமாறனின் முன்னால் சென்று நின்றாள்.

சொல்லப்போனால்.., அவன் தேகத்தை ஊடுருவியவள், அலமாரிக்கு முன்னால் நின்றிருந்த அவன் முன்னால் போய் நின்றிருந்தாள்.

உள்ளாடையோடு மட்டுமே நின்றிருந்த அவன், அந்த நேரம் அவள் இப்படி உள்ளே வருவாள் என எதிர்பாராமல் திகைத்துப் போனான். அவசரமாக தான் விசிறியடித்த டவ்வலை தேடி இடையில் அணிந்து கொண்டான்.

கோபம் கட்டுக்கடங்காமல் பெருக, “பேயே.., ரூமுக்குள் வரப்போ இப்படித்தான் வருவாங்களா? கதவை தட்டணும் என்ற மேனர்ஸ் தெரியாது?” அவன் கத்த, உறைந்துபோய் நின்றிருந்தாள்.

பட்டென திரும்பிக் கொள்ள வேண்டும் என்ற நினைப்பு கூட இல்லாமல், அவனையே இமைக்காமல் வெறித்தாள். அவன் உள்ளாடையோடு நின்ற விதமும், அவன் கண்ணில் நொடியில் தெரிந்த அதிர்ச்சியும், படபடவென தன் டவ்வலை தேடிய விதமும், அதை அவசரமாக தன் இடையில் முடிந்து கொண்டது என அனைத்தையும் பார்த்திருந்தாள்.

சொல்லப்போனால், கண்களை மூடிக் கொள்ளவோ, அவனுக்கு முதுகு காட்டி திரும்பி நிற்க வேண்டும் எனவோ அவளுக்குத் தோன்றவே இல்லை. அவன் திட்ட துவங்கிய பிறகுதான் சுய உணர்வுக்கு வந்தவள், இமைகளை தட்டி விழித்தாள்.

“அது.., அங்கே பூனை..” அவள் திக்கித் திணற,

“இங்கே நாங்கல்லாம் பேயைப் பாத்தே பயப்படாமல் இருக்கோம். இதில் இவ பூனையைப் பாத்து பயப்படுறாளாம்.., என் மானமே போச்சு..” அவன் குதிக்க,

“நான் எதையும் பாக்கலை..” அவள் வெடுக்கென உரைத்தாள்.

“ஏன்.., சான்சை மிஸ் பண்ணிட்டோம்னு ரொம்ப வருத்தமா இருக்கோ? அதுக்கெல்லாம் நான் ஆள் இல்லை..” அவன் ரோஷமாக உரைக்க, கோபத்தில் அவளுக்கு மூச்சு வாங்கியது.

அவள் கண்களில் கோபத்தைப் பார்த்தவன் திகைத்துப் போனான். ‘அய்யய்யோ அவசரப்பட்டு வாயை விட்டுட்டோம் போலையே.., இவ உக்கிரமா முறைக்கறதை பாத்தா பயமா இருக்கே. சரி சம்மாளிப்போம்..’ எண்ணியவன்,

“சரி சரி.., உன்னை மன்னிச்சுட்டேன் வெளியே போ. இன்னொரு முறை இப்படி வராதே. ஒரு நேரம்போல் இன்னொரு நேரம் நான் இருக்க மாட்டேன்” அவன் ஜம்பமாக உரைக்க, வாய்க்குள் எதையோ முனகியவள் வெளியே செல்ல முயன்றாள்.

அவள் செல்லும் முன்பு, “பேயே..” அவன் அழைக்க, ‘என்ன?’ என்பதுபோல் அவனைப் பார்த்தாள்.

“நிஜமாவே எதையும் பாக்கலை தானே..” அவன் உறுதிபடுத்திக் கொள்ள,

அவளோ, “நீங்க ட்ரெஸ் போட்டிருந்தாலும், அந்த ட்ரெஸ் எல்லாம் என் கண்ணுக்கே தெரியாது” அவள் அசால்ட்டாக சொல்ல,

“அப்போ.., அப்படின்னா..? அய்யய்யோ.., ஒரு ஆம்பளையை பப்பிஷேமா பாக்க உனக்கு வெக்கமா இல்லை..” கேட்டவன், ஓடிபோய் கட்டிலுக்குப் பின்னால் மறைந்தான்.

அவன் செய்கையைப் பார்த்தவள், “ஹா..,ஹா.., ஹா..” வாய்விட்டே சிரிக்க, ‘இவ சிரிப்பு பேய் சிரிப்பு மாதிரி இல்லையே..’ ஒரு நொடி அவள் சிரிப்பில் தன்னை மறந்தான்.

சில நொடிகள் சிரித்தவள், தன் சிரிப்பை நிறுத்திவிட்டு, “நான் சும்மா சொன்னேன், தைரியமா வெளியே வாங்க..” அவள் சொல்ல, செம கடுப்பானான்.

“பேயே, உனக்கு எதில் விளையாடுறதுன்னு இல்ல? வெளியே போ..” கத்தினான். இப்போழுது அவனது கோபம் முன்னைப்போல் அவளைத் தாக்கவில்லை.

கதவின் வழியே தலையை மட்டும் நீட்டியவள், பூனை அங்கே இருக்கிறதா எனப் பார்க்க, அதுவோ வாசலுக்கு நேராக அவள் வரவை எதிர்பார்த்து காத்திருந்தது.

அதைப் பார்த்தவள், வெடுக்கென தலையை உள்ளே இழுத்துக் கொள்ள, அவளையே பார்த்துக் கொண்டிருந்தவன், “இப்போ என்ன..?” தன் பேண்டை கையில் எடுத்தவாறு கேட்டான்.

“பூனை வாசல் கிட்டேயே உக்காந்து இருக்கு..” எப்படி வெளியே போக, என அவள் நகம் கடித்தாள்.

“பூனைகூட என்ன ஒளிஞ்சு விளையாட்டு வேண்டிக் கிடக்கு..?” அவன் வெடுக்கென கேட்க, நிஜமாகவே அவனை எதையாவது கொண்டு அடித்துவிடும் நோக்கில் சுற்றிலும் பார்த்தாள்.

அவள் எண்ணம் புரிந்தவன், “பேயே.., இப்போ என்ன.., அந்த பூனையை விரட்டணும் அவ்வளவுதானே.., நான் பாத்துக்கறேன்.., நோ வயலன்ஸ்..” அவளிடம் சமரசம் பேசியவன், அவளை விலக்கிவிட்டு கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தான்.

அவன் வெளியே வர, அங்கே அவனைப் பார்த்தவாறு நின்றிருந்தான் முபாரக்.

***

# பகுதி - 7.

முபாரக்கைப் பார்த்த இளமாறன் பட்டென சிரிக்க, ‘இவர் எதற்காக சிரிக்கிறார்’ எண்ணியவள் வெளியே வந்து பார்த்தாள். அதைவிட முபாரக்கோ, தன் நண்பன் நின்ற நிலை கண்டு திகைத்து இருக்கையில் இருந்து எழுந்து நின்றான்.

“இவனையா பூனைன்னு சொன்ன..? ஹா…ஹா.., இவனை குரங்குன்னு சொல்லியிருந்தால் சரியா இருந்திருக்கும். அது சரி, உங்க ஊர்ல குரங்கையெல்லாம் பூனைன்னா சொல்லுவீங்க?” அவளிடம் திரும்பி சந்தேகம் கேட்க, அவனை முறைத்தான் முபாரக்.

நண்பனின் முகத்தில் கோபத்தை பார்த்த பிறகுதான் தான் என்ன சொன்னோம் என்பதையே நினைவு கூர்ந்தவன், சம்மாளிப்பாக, “வாடா மச்சான்.., என்ன காலையிலேயே இந்தப் பக்கம்..” அவனை அழைத்துக் கொண்டு அறைக்குச் செல்ல முயன்றான்.

‘இவன் யார்கிட்டே பேசறான்? கேட்டா பேய்ன்னு சொல்வான்’ மனதுக்குள் எண்ணியவன் அதை உறுதிபடுத்திக் கொள்ள, “ஏண்டா மச்சான், பேய் கூட டூயட்டா..?” அவன் கையில் இருந்த பேண்ட்டைப் பார்த்தவாறே கேட்க, அவனை கொலை வெறியில் முறைத்தான்.

அவன் முறைக்கவே, “இல்லடா மச்சான், நேத்தைக்கெல்லாம் பேயைப் பாத்து பயந்து வீட்டை சுத்தி ஓடிட்டு இருந்த, இன்னைக்கு என்னன்னா, விளம்பர மாடல் மாதிரி நிக்கறியா அதான் கேட்டேன்..” அவன் சம்மாளிக்க, அவன் முதுகுத்தோல் பழுக்கும் அளவுக்கு கும்மினான்.

“ஹையோ, அல்லா..” அவன் அலறவே, அவனை இழுத்துக் கொண்டு அறைக்குச் செல்ல முயன்றான்,

“உள்ளே வந்தால் உதைப்பேன்..” உள்ளே செல்லும் முன்னர், விஸ்மையாவிடம் அவன் சொல்ல, ‘இவன் யார்கிட்டே பேசறான்?’ என்பதுபோல் பார்த்திருந்தான் முபாரக்.

அவன் செய்கைக்கான காரணம் பட்டென புரிய, “ஏண்டா, தூங்கி எழுந்துமா நீ இன்னும் தெளியலை? இப்படி எதையாவது உளறிட்டு இருப்பியேன்னுதான் பாத்துட்டு போக வந்தேன். இங்கே யாரும் இல்லை புரியுதா?” மீண்டுமாக அழுத்திச் சொல்ல, சோர்ந்து போனான்.

“சரி, யாரும் இல்லன்னே வச்சுக்கலாம். எனக்கு ஆபீஸ் கிளம்பணும். சாப்ட்டியா? நான் ப்ரெட் டோஸ்ட் பண்ணப் போறேன் உனக்கு வேணுமா?” கேட்டவன் சட்டையை அணிந்துவிட்டு வெளியே வந்தான்.

விஸ்மையா அங்கே இருந்த சோபாவில் அமர்ந்திருக்கக், ‘நீ இன்னும் போகலையா?’ பார்வையால் கேட்டு அவளை முறைப்பாக ஏறிட, அவள் அதை கண்டுகொள்ளவே இல்லை.

‘இவளுக்கு ஏத்தம்தான்..’ மனதுக்குள் எண்ணியவன், ப்ரெட்டை டோஸ்ட் செய்துவிட்டு, பாலை அடுப்பில் வைக்க முயல, “ஹையோ.., அது பூனை வாய் வச்ச பால்..” அவள் அலற, அவள் போட்ட சத்தத்தில், அவன் கையில் இருந்த பாத்திரம் நழுவி கீழே விழுந்து பால் எல்லாம் சிதறியது.

“பேயே.., எதுக்கு இப்போ பேய் மாதிரி கத்துற? பாரு, உன்னால்தான் நான் பாலை கீழே கொட்டிட்டேன்” ஏற்கனவே அலுவலகத்துக்கு நேரமாகிக் கொண்டிருந்தது. அந்த நேரத்தில், சுத்தம் செய்ய வேண்டிய வேலை அடிஷனலாக சேர அவன் சுள்ளென விழுந்தான்.

“ஏண்டா.., முன்னெல்லாம் நாயேன்னு சொல்லுவ, இப்போ என்னடா பேயேன்னு மாத்திட்ட? அதோட நான் என்னடா செய்தேன்..?” முபாரக் அப்பாவியாக வினவினான்.

“ம்ச்.., உன்னை இல்லை.., அவளை..” அவனது முதுகுக்குப் பின்னால் கையைக் காட்ட, வேகமாக திரும்பிப் பார்த்தவனுக்கு எதுவும் தெரியவில்லை.

“உனக்கு சுத்தமா முத்திடுச்சுடா. உன்னை முதல்ல ஒரு நல்ல டாக்டர் கிட்டே காட்டணும்” அவன் சொல்ல, அவனை கொலைவெறியில் முறைத்தான்.

“இப்போ நீ வாயை மூடலை.., என்ன செய்வேன்னே தெரியாது” அவன் எரிச்சலானான்.

“நீ முதல்ல சாப்பிடு, நான் இதை கிளீன் பண்றேன். டென்ஷன் ஆகாதே” அவனை அனுப்பியவன், தன்னைச் சுற்றி பயப் பார்வை பார்த்தான்.

‘இவன் சொல்றது உண்மையா..? இல்ல பொய்யா..?’ அவன் சிந்திக்க, அந்த நேரம், மேடைமேல் இருந்த தட்டு காற்றுக்கு கீழே விழவே, தெறித்து ஓடி இளமாறனின் அருகில் அமர்ந்து கொண்டான்.

“என்னடா அதுக்குள்ள கிளீன் பண்ணிட்டியா? செம ஸ்பீட் தான் போ” அவன் சிலாகிக்க,

‘சும்மா இருந்தவனுக்கு பேய் பயம் காட்டிட்டு, நீ ஏன் பேசமாட்ட? பேய் இருக்கா இல்லையா? இவன் நெஜமாவே பாத்திருக்கானா இல்ல சும்மா சொல்றானா? ஐயோ.., இப்படி வடிவேலு மாதிரி புலம்ப விட்டுட்டானே’ மனதுக்குள் அலறினாலும் வெளியே எதையும் காட்டிக் கொள்ளவில்லை.

அதன் பிறகு, உண்டு முடித்து, தன் லேப்டாப் பேக், வண்டி கீ என அனைத்தையும் எடுத்துக் கொண்டவன், “முபாரக் நீ கிளம்பு, சாயங்காலம் பாக்கலாம்” உரைத்தவன், கதவை பூட்டும் முன்னர், உள்ளே இருந்த விஸ்மையாவை அவன் கண்கள் நோக்க, அவளும் அவனைத்தான் பார்த்துக் கொண்டிருந்தாள்.

முபாரக் முன்னே சென்றிருக்கவே, அவளிடம், “வீட்டை பத்திரமா பாத்துக்கோ” உரைத்துவிட்டுச் செல்ல, அவள் முகத்தில் சட்டென ஒரு வெளிச்சம்.

அதைப் பார்த்தவாறே தன் அலுவலகத்துக்கு கிளம்பிச் சென்றான். அலுவலகம் செல்லும்வரைக்கு மட்டுமே விஸ்மையாவின் நினைவு அவனுக்கு இருந்தது. அதன் பிறகு, அவனது அலுவலகத்தில் இருக்கும் வேலை அவனை மூழ்கடித்துக் கொண்டது.

சேல்ஸ் மேனேஜர் என்றால் சும்மாவா? பொருட்களின் இருப்பு, அது செல்ல வேண்டிய இடம், காலம், அதை தொடர்வது என அவனது வேலை அவனை உள்வாங்கிக் கொண்டது.

வீட்டில் விஸ்மையாவுக்கு போர் அடித்தது எனச் சொன்னால் மிகையில்லை. ஆனால், முன்பு உணரும் வெறுமையை அவள் இப்பொழுது உணரவில்லை. தனக்காகவே அவன் வந்திருப்பதாக அவளுக்குத் தோன்றியது.

‘அவரோட பேர் என்ன? கேக்கவே இல்லையே. அவரை எப்படி கூப்பிடுறது? என்னைப் பார்த்து எப்படி பயந்துகிட்டார். இப்போ கொஞ்சம் பரவாயில்லை’ நினைவுகள் அவனையே சுற்றி வந்தது. அவளது உலகத்தில் அவளுக்காக இருக்கும் ஒற்றை ஜீவன், அவனைப் பற்றி நினைக்காமல் யாரைப் பற்றி நினைப்பாளாம்?

‘அவர் என்கிட்டே சாதாரணமா பேசினால் பரவாயில்லை’ சிறு ஏக்கமாக எண்ணிக் கொண்டாள்.

இத்தனை வருட தனிமை வாழ்க்கையை அவனை வைத்து முடித்துக் கொள்ள ஏங்கியது அவள் மனம். தன்னைப்பற்றியே ஒருத்தி எண்ணுகிறாள் என்பதை உணராமல், தன் வேலையில் மூழ்கி இருந்தான் இளமாறன்.

காலைமுதல் இரவு எட்டு மணி வரைக்கும் அவனது அலுவல் அவனை இழுத்துக் கொள்ள, இதற்குமேல் வீட்டுக்குபோய் எதையும் சமைக்க முடியாது என்பதால், வழியில் கடையில் தனக்கென இரண்டு புரோட்டா வாங்கிக் கொண்டான்.

வீட்டுக்கு வந்தவன் கதவைத் திறக்க, அவனுக்காக காத்திருந்தாள் விஸ்மையா. முன்னர் அவளைப் பார்க்கும்பொழுது வரும் கோபம் இப்பொழுது அவனுக்கு வரவில்லை. மாறாக, ஒரு நிறைவு.., தன்னை எதிர்பார்த்து ஒருத்தி இருக்கிறாள் என்ற எண்ணம்.., அது கொடுக்கும் ஆனந்தத்தை முழுதாக உணர்ந்தான்.

அவன் முகத்தைப் பார்த்த விஸ்மையா, “என்ன ஆபீஸ்ல ரொம்ப வேலையா?” அவன் களைத்த முகம் பார்த்து கேட்டாள்.

“ஆமா.., ரெண்டு வார வேலை அப்படியே பெண்டிங்ல இருக்கு. எல்லாத்தையும் சரி செய்ய ஒரு வாரமாவது ஆகும்” உரைத்தவன், தன் கழுத்தில் இருந்த டையை உருவி டீபாவின்மேல் போட்டான்.

“ஓ..” அதற்குமேல் என்ன சொல்வது என்று அவளுக்குத் தெரியவில்லை.

அவன் தன் பேகை சோபாவில் வைத்துவிட்டு, அருகே அமர்ந்து காலில் இருந்த ஷூவை கழட்ட, விஸ்மையாவோ, அவனது பேகை தூக்க முயன்று கொண்டிருந்தாள்.

அவள் எதுவும் பேசாமல் போகவே, ‘என்ன சத்தத்தையே காணோம்?’ எண்ணியவன் அவளைப் பார்க்க, அவள் செய்கையைப் பார்த்தவன் சிரித்துக் கொண்டான்.

“ஏய்.., என்ன பண்ற..?” அவளிடம் கேட்க,

“இல்ல.., ரொம்ப டயடா இருக்கீங்க. சரி உங்க பேகை அதோட இடத்தில் வைக்கலாமேன்னு ட்ரை பண்றேன்.

ஆனா முடியலை..” அவள் உதட்டை பிதுக்க, அப்பொழுதுதான் அவளை ஊன்றி கவனித்தான்.

சட்டென பார்த்தாலே அழகி என சொல்லிவிடும் தோற்றம். சின்ன நெற்றி, திராட்சை விழிகள், அளவான நாசி.., இதழ்களில் இருக்கும் சிவப்பு, இயற்கையாகவே அமையப் பெற்றவள். எலுமிச்சையும், சிறு பிங்கும் கலந்த ஒரு நிறம்.

கிட்டத்தட்ட பிறந்த குழந்தையின் நிறத்தை ஒத்திருந்தாள். அவள் தேகத்தை தழுவியிருந்த அந்த நீல வர்ண சுடிதார், அவள் அழகுக்கு அழகு சேர்த்தது. அவன் தன்னையே இமைக்காமல் பார்க்க, அவளது இமைகள் இரண்டும் படபடவென அடித்து அவனைக் கலைத்தது.

அவளது கண்களில் இருந்த சிறு குழந்தைத்தனம், இதழ் பிதுக்கிய விதம், ஒரு ஆண்மகனான அவனை வசீகரிக்கவில்லை என்றால்தான் ஆச்சரியம்.

“எ..என்ன..? எனக்கு பேய் பல் ஏதாவது இருக்கான்னு பாக்கறீங்களா?” சற்று தடுமாறி, சம்மாளித்தாள்.

“அதெல்லாம் இல்லை.., எங்க அம்மா ஏன் என்னை கல்யாணம் பண்ணிக்கோ, கல்யாணம் பண்ணிக்கோன்னு சொன்னாங்கன்னு இப்போ புரியுது. அதை யோசிச்சுட்டு இருந்தேன்”

தன் போக்கில் உரைத்தவன், அவள் கண்களில் அதிர்ச்சியைக் கண்ட பிறகுதான், இதை இப்பொழுது சொல்லியிருக்க வேண்டாமோ என எண்ணினான்.

“அ..ப்ப..டின்..னா..?” அவள் மேலிமைகள் இரண்டும் வில்லாய் வளைய, கேள்வி கேட்டாள்?

“இல்ல.., அதை பிறகு சொல்றேன்..” ஒரே நாளில் அவளிடம் வெளிப்படையாக பேசிவிடும் அளவுக்கு அவர்கள் நெருங்கவில்லையே. எழுந்தவன் அறைக்குச் செல்ல,

அவன் கொண்டுவந்த சாப்பாட்டு பொட்டலத்தை பிரிக்க முயலத் துவங்கினாள்.

ஒரு அவசர குளியல் போட்டவன், பெர்முடாசும், ஒரு டிஷர்டும் அணிந்து கொண்டு தன் அறையை விட்டு வெளியே வந்தான். “அட, நீ இன்னும் இந்த பிராக்ட்டிசை விடலையா? உனக்கும் பரோட்டா வேணுமா என்ன?” கேட்டவன், உணவு பொட்டலத்தை எடுத்துக் கொண்டு, கிச்சனுக்குள் சென்று மறைந்தான்.

ஒரு தட்டில் பரோட்டாவை பிய்த்து போட்டவன், சால்னாவை ஊற்றிவிட்டு, வெளியே வந்து அமர்ந்தவன், டிவியை உயிர்பித்தான்.

கே டிவியில் கேப்டன் கண்கள் சிவக்க, கழுத்து நரம்பு புடைக்க, கத்திக் கொண்டிருக்க, அசுவாரசியமாய் அதில் கவனத்தை பதித்திருந்தவன், தன்னை விஸ்மையா பார்த்துக் கொண்டிருப்பது புரிய, பட்டென திரும்பி அவளைப் பார்த்தான்.

அவன் தன்னைப் பார்க்கவே, அவள் வேகமாக டிவியின் பக்கம் திரும்பிக் கொண்டாள். சில நொடிகளில் மீண்டுமாக அவனைத் திரும்பிப் பார்க்க, அவனோ, அப்பொழுதும் அவளையே பார்த்துக் கொண்டிருக்க, பிடிபட்ட உணர்வில் விழித்தாள்.

“ஏய்.., எதுக்கு என் முகத்தையே பாத்துட்டு இருந்த..?” அவன் கேட்க, அவனிடம் என்ன சொல்வதாம்? எனக்கு காலை முதல் தனியாக இருந்து போர் அடிக்கிறது, உன்னிடம் பேச வேண்டும் என சொல்ல முடியுமா என்ன?

“ஹாங்.., அது.., நீங்க ரொம்ப சுவாரசியமா படம் பாத்துட்டு இருந்தீங்களா, அதான்..” அவள் இழுக்க,

“பேய் கூட பொய் சொல்லுமா? சரிதான்..” அவன் உரைக்க, அவனது பேய் என்ற வார்த்தை எப்பொழுதும் போல அவளை வாட்டியது.

உணவை உண்டு முடித்தவன், தட்டை கழுவி வைத்துவிட்டு, தன் அலைபேசியை எடுத்தவன், தன் தாயிடமும் அக்காவிடமும் உரையாடிவிட்டு, தன் படுக்கை அறைக்குச் சென்று படுத்துக் கொண்டான்.

அவனுக்காக வெளியிலேயே காத்திருந்தாள் விஸ்மையா. அவள் கண்கள் ஒருவித ஏக்கத்தில் அவனது அறைக்கதவையே பார்த்துக் கொண்டிருந்தது.

***

# பகுதி - 8.

அடுத்து வந்த நாட்களிலும் இதே கதையே நடக்க, விஸ்மையாவுக்கு அவனோடு நெருங்கிப் பழக முடியாதது பெரும் மனக் குறையாகவே இருந்தது. அவன் தன்னோடு பேச வேண்டும், தனக்காக நேரம் செலவழிக்க வேண்டும் என அவள் தவித்துக் கொண்டிருந்தாள் என்று சொல்வதை விட ஏங்கிக் கொண்டிருந்தாள் என்றுதான் சொல்ல வேண்டும்.

நாட்கள் ஒவ்வொன்றும் கடக்கையில் அவளது எண்ணம் அதிகரித்தது என்றால், இளமாறனை பொறுத்த வரைக்கும், அவள் தன்னை தொல்லை செய்யாமல் இருந்தால் பரவாயில்லை என்னும் நிலைக்கு வந்திருந்தான். அதற்குமேல் எதையும் யோசிக்க அவன் தயாராக இல்லை.

வீட்டுக்கு வரும் வேளையில் அவள் இருக்கிறாளா? அவளுடன் எதையோ பேசியவாறு சமைப்பான், தன் உணவை முடித்துக் கொள்வான். உணவு உண்ணும் வேளையில் டிவி அவன் கவனத்தை நிறைத்துக் கொள்ளும்.

உணவை முடித்தவுடன், தாய்க்கோ, இல்லை சகோதரிக்கோ அலைபேசியில் அழைத்து உரையாடுபவன், அடுத்த நிமிடம் படுக்கச் சென்றுவிடுவான். அவன் உறங்கியபிறகு, அவன் முகத்தையே பார்த்தவாறு, விஸ்மையா அமர்ந்திருப்பதை அவன் உணரவே மாட்டான்.

அந்த வீட்டில் இருக்கும் ஒரு பொருளைப்போல், பேயும் அங்கே இருக்கிறது. அவ்வளவுதான் அவன் எண்ணம். அதற்குமேல் அவளைப்பற்றி கேட்டு தெரிந்து, அவளிடம் பேசி உறவை வளர்த்துக் கொள்ளவெல்லாம் அவன் விரும்பவே இல்லை.

சொல்லப்போனால் பேய் பேயின் இடத்தில் இருக்கட்டும், நான் என் நிலையில் இருந்து கொள்கிறேன் என்னும்

முடிவில் இருந்தான்.

அவனது அந்த விலகலே, விஸ்மையாவை அவனை தொல்லை செய்யத் தூண்டியது. அவனை தன்னை கவனிக்க வைக்கத் தூண்டியது. வழக்கமாக அவன் வேலைக்குச் செல்கையில், தலையசைத்து விடை கொடுப்பவள், முதல் முறையாக பாராமுகம் காட்டினாள்.

வாசல் அருகே நின்று வண்டியை கிளப்பியவன், விஸ்மையா வெளியே வராமல் போகவே, ஹாரன் அடித்து அவளை வெளியே அழைத்தான். அவனது வண்டியின் ஹாரன் ஒலி கேட்டாலும் கொஞ்சம் கூட அசையாமல் இருக்கையில் அமர்ந்திருந்தாள்.

‘இதுக்கு ஒண்ணும் குறைச்சல் இல்லை..’ முறுக்கிக்கொண்டு அமர்ந்திருந்தாள். ‘மத்த நேரத்தில் எல்லாம் ஒரு மனுஷியா.., இல்ல.., பேயா கூட மதிக்கிறதில்லை, ஆபீஸ் போறப்போ மட்டும் கட்டுன பொண்டாட்டியாட்டம் சொல்லிக்காமல் போக மாட்டார்.

‘அவர் வீட்டை பாத்துக்கணுமாம்.., ஏன் இல்லன்னா திருடன் வந்து தூக்கிட்டு போய்டுவானாமா? இன்னைக்கு வெளியே போகப் போவதில்லை, என்ன செய்யிறார்ன்னு பார்ப்போம்..’ இருந்த இடத்தை விட்டு அவள் அசையவே இல்லை.

அவன் விடாமல் அடிக்கவே, பக்கத்து வீட்டில் இருந்த ஆட்கள் வந்து எட்டிப் பார்க்கவே, வேறு வழியின்றி இறங்கி வீட்டுக்குள் வந்தான்.

“ஏய்.., நான் ஹாரன் அடிக்கிறது காதில் விழல, வந்து பாய் சொன்னா குறைஞ்சா போய்டுவ? இப்படி அசையாமல் இருந்தா என்ன அர்த்தம்?” சற்று கோபமாகவே இரைந்தான்.

“ஏன்.., நான் பாய் சொல்லலன்னா வேலைக்குப் போகாமல் என் கூடவே இருந்துடுவீங்களா?” அவள் கோபமாக கேட்க,

அவன் புருவம் முடிச்சிட்டது.

‘இப்படி பேச மாட்டாளே..’ எண்ணியவன் ஒரு தோள் குலுக்கலோடு கிளம்பிச் செல்ல, ஏனோ அவளுக்கு கண்கள் கலங்கியது.

‘நான் கோபமா இருந்தால், என்னை சமாதானம் செய்ய மாட்டாராமா? அப்படியே போய்டுவாரா..?’ அவளால் எதுவும் செய்ய முடியவில்லை. சில நிமிடங்கள் அங்கேயே அமர்ந்திருந்தவளுக்கு, அவன் கோபமாகச் சென்றது மனதை வருத்தியது.

அப்படியே விடவும் மனமற்று, வண்டியில் சென்று கொண்டிருந்த அவனுக்கு முன்னால் சட்டென வந்து நிற்க, எங்கே அவள்மேல் மோதிவிடப் போகிறோமோ என்ற பதட்டத்தில் பிரேக்கை சடனாக அழுத்தினான்.

அந்த நேரம் அவள்மேல் மோதினாலும், அவளுக்கு எதுவும் ஆகாது என்பதெல்லாம் அவன் நினைவுக்கு வரவே இல்லை.

சடன் பிரேக் போட்ட இளமாறனின் வண்டி கொஞ்சம் ஸ்கிட் ஆக, இறுதி நொடியில் சுதாரித்து நின்றுவிட்டான். அவன் வந்த வேகத்துக்கு, நடு  ரோட்டில் அப்படி சட்டென பிரேக் போடுவான் என்பதை எதிர்பாராத பின்னால் வந்த வண்டிக்காரன், தன் வண்டியை ஒடித்து திருப்பினான்.

பின்னால் வந்தவன் சுதாரித்தாலும், அவனுக்குப் பின்னால் வந்தவன் அவன்மேல் மோத, குட்டி விபத்தே அங்கே அரங்கேறி இருந்தது. அவ்வளவுதான், அவனுக்கு பின்னால் வந்த வண்டியில் இருந்தவர்கள் அனைவரும் அவனை வசைமாரி பொழிய, அவனது கோபம் எல்லாம் விஸ்மையாவின்மேல் திரும்பியது.

“பொறம்போக்கு.., ஊட்ல சொல்லிட்டு வந்தியா.., மூஞ்சப்பாரு..” ஒரு ஆட்டோக்காரன் கத்திவிட்டு செல்ல,

“உனக்கு விளையாட நடுரோடுதான் கிடச்சதா? சர்க்கஸ் காமிக்கணும்னா ஏதாவது ஓரமா போய் பண்ணு..” பின்னால் வந்த கார் காரன் அவன் பங்குக்கு கத்த, “சாரி.., சாரி.., தெரியாமல்..” அனைவரிடமும் மன்னிப்பை வேண்டியவனை யாரும் மன்னித்ததாகவே இல்லை.

“பாத்தா படிச்சு நல்ல வேலையில் இருக்குறவன் மாதிரி இருக்கு, உனக்கு ஏம்ப்பா இப்படி விபரீத விளையாட்டு..?” ஒரு பெரியவர் தன்மையாகவே உரைக்க, அதையும் அவனால் சகிக்க முடியவில்லை.

‘எல்லாம் இவளால்..’ அவன் அருகே, அவனுக்கு எதுவும் அடிபட்டுவிட்டதோ என பதைப்பாக, இப்படி ஆகிவிட்டதே என தவிப்பாக அவன் அருகில் நின்றிருந்தவள்மேல் மொத்த கோபமும் பாய்ந்தது.

“இப்போ சந்தோஷமா.., கண்டவன் எல்லாம் என்னை கை நீட்டி பேசுற அளவுக்கு வச்சுட்டல்ல.., இதுக்குதான் வந்தியா? உன்னையெல்லாம்.., போனா போகுது பேய்ன்னு பாத்தா.., ரொம்ப அட்வான்டேஜ் எடுத்துக்கற” நடுரோட்டி அவளிடம் கத்த, சுற்றி இருந்தவர்களுக்கோ, அவன் காற்றோடு பேசுவதாகவே தோன்றியது.

“ஹையோ.., நான் உங்களோட வரதான் நினைத்தேன். இப்படி ஆகும்னு நான் எதிர் பாக்கலை…” கையை உதறியவள், அவன் தன்னை தவறாக நினைப்பதை தாங்க முடியாமல் உரைத்தாள்.

“வேற எப்படி எதிர்பாத்த? பேயைப் பாத்தால் பயப்படாமல் கொஞ்சுவாங்களா?” எரிந்து விழுந்தான்.

“இப்படிப் பேசாதீங்க.., நான் ஒண்ணும் பேய் இல்லை..” கண்ணீர் கண்களை முட்ட, பார்வையை சுழற்றியவள், “எல்லாரும் நம்மையே பாக்கறாங்க..” அவள் சொன்ன பிறகுதான், அவனைச் சுற்றி சிறு கூட்டம் இருக்க, சிலரின் கரங்களில் இருந்த அலைபேசி உயிர்பெற்று அவனை படம் பிடித்துக் கொண்டிருந்தது.

“உன்னை இப்படியே விட்டதுதான் நான் பண்ண தப்பு” அடிக்குரலில் அவளிடம் பொரிந்தவன்,

சுற்றி இருந்தவர்களைப் பார்த்து, “இங்கே என்ன டிஸ்கோதேயா நடக்குது.., வேடிக்கை.., பாத்துட்டு இருக்கீங்க. உங்களுக்கெல்லாம் வேற வேலையே இல்லையா? ஆ ஊ ன்னா செல்போன் கேமராவை ஆன்பண்ணி படம் புடிக்க வேண்டியது..” கூட்டத்தை சற்று விலக்கியவன், தன் பைக்கை எடுத்துக் கொண்டு அங்கிருந்து கிளம்பினான்.

“டேய்.., லூசு போலடா.., பாத்தா அப்படித் தெரியவே இல்லை பாரேன்” கூட்டத்தில் ஒருவன் உரைக்க, அவனுக்கு அப்படியே பற்றிக்கொண்டு வந்தது.

“உன் கூட சேர்ந்ததுக்கு என்னை லூசுன்னு வேற சொல்ல வச்சாச்சு” அவனுக்கு கோபம் கண்மண் தெரியாமல் கிளர்ந்தது. வண்டியை ஸ்டார்ட் செய்து ஏறிக் கொண்டு சென்றான்.

ஏற்கனவே முபாரக், சுமனிடம் என்ன சொன்னானோ, அலைபேசியில் அழைத்து தினமும் அரைமணிநேரம் அறிவுரை என்ற பெயரில் கவுன்சிலிங் கொடுக்கறான்.

உடன் இருப்பவர்கள் அனைவருக்கும் தான் ஒரு காட்சிப்பொருளாகும் நிலையை அடியோடு வெறுத்தான். எனவேதான் அவளோடான தன் பேச்சை, இருப்பை குறைத்துக்கொள்ள அவன் முயல, அவளோ, அவனோடான உறவை வளர்க்க முயன்றாள்.

இரண்டுக்கும் நடுவே நடக்கும் போராட்டத்தில் தான் இப்படி ஒரு சம்பவம் வேறு.

“ஆண்டவா.., முபாரக்கோட வண்டி வேற.., இதுக்கு ஏதாவது ஆச்சு, என்னை தொலைச்சுடுவான்..” அவன் பார்வை அந்த வண்டியை சற்று குனிந்து ஆராய வேறு செய்தது.

அதைப் பார்த்தவள், எங்கே அவன் மீண்டுமாக விழுந்துவிடப் போகிறானோ எனப் பதறி, “என்னங்க.., நேரா பாத்து ஓட்டுங்க..” அவனுக்குப் பின்னால் இருந்து உரைக்க, திடுமென ஒலித்த அவள் குரலில் வண்டி சற்று தடுமாறி நேரானது.

“அடச்சீ.., நீ இன்னும் போகலையா? என்னை பொணமா ஆக்கணும்னு ஒரு முடிவோட வந்தியா? நீ பேயா அலையிறது போதாதுன்னு, என்னை வேற பேயா அலைய வைக்கப் பாக்குறியா? ஒழுங்கு மரியாதையா இங்கே இருந்து போய்டு.., இல்ல என்ன செய்வேன்னே எனக்குத் தெரியாது..” அவன் கத்த, அவன் வார்த்தைகள் கொடுத்த அதிர்வில் திகைத்துப் போனாள்.

‘அவரை நான் பிணமாக்குவதா..? அந்த வார்த்தையின் அர்த்தம் தெரிந்துதான் சொன்னாரா?’ எண்ணியவள் அங்கேயே நின்றுவிட, வாகனங்கள் அந்த சாலையில் அவளை ஊடுருவி பயணித்துக் கொண்டிருந்தது.

தன் அலுவலகம் வந்த இளமாறன், முதல் வேலையாக முபாரக்குக்கு அழைத்தான். அவன் அழைக்கவே, கடையில் வேலையாக இருந்தவன், தன் அலைபேசியை எடுத்தான்.

“சொல்லுடா மாறா..?” அவன் குரல்கொடுக்க,

“ஏதாவது மெக்கானிக் தெரியுமாடா? வர்றப்போ வண்டியில் இருந்து விழுந்துட்டேன், வண்டிக்கு கொஞ்சம் அடி..” பெட்ரோல் டேன்க் கொஞ்சம் சிராய்த்திருக்க, சைடில் இருந்த கம்பியும் நன்றாகவே உராய்ந்திருந்தது.

“என்னது.., வண்டியில் இருந்து விழுந்துட்டியா? வண்டி கிடக்குது, உனக்கு ஏதாவது அடியா? நான் உடனே வர்றேன்..” அலைபேசியை வைத்தவன், உடனே அவனைப் பார்க்க கிளம்பி விட்டான். இளமாறன் பேச வந்த எதையும் அவன் கேட்கும் நிலையில் இல்லை.

அடுத்த அரைமணி நேரத்தில், இளமாறனின் அறையில் முபாரக் இருக்க, அவனை முறைத்துக் கொண்டிருந்தான். "என்னடா பேசுற நீ..? பேய் வந்து உன்னை தள்ளி விட்டுதா? இந்த கதையை நீ இன்னும் விடவே இல்லையா?" கடுப்பானான்.

"உன்கிட்டே சொல்ல வேண்டாம்னுதான் நினைத்தேன்.., நீதான் விடலை. இப்போ இப்படி சொன்னா எப்படிடா? நீ நம்பினாலும் இல்லை என்றாலும் அதுதான் உண்மை.." அவன் சொல்லிக் கொண்டு இருக்கையிலேயே அந்த அறைக்குள் வந்தாள் விஸ்மையா.

அவள் உள்ளே வருவதைப் பார்த்தவன், 'இப்போ கூட இங்கேதான் இருக்கா' சொல்ல வந்ததை அவனது கோபத்துக்கு பயந்து மறைத்தான். ஆனாலும் அவளை முறைத்துப் பார்த்தான்.

தன்னை யாரும் நம்பவில்லை என்பதில் இளமாறனுக்கு அவ்வளவு ஆத்திரமாகவும் எரிச்சலாகவும் இருந்தது. அதைவிட சற்று நேரத்துக்கு முன்னர், அத்தனைபேர் முன்னிலையில், நடு ரோட்டில் அவமானப்பட்டது வேறு அந்த கோபத்தை விசிறி விட்டது.

அந்த கோபத்தில் அவன் இருக்கையிலேயே அவள் அவனது அறைக்குள் வர, அவளை கடித்து குதறும் வேகம் இருந்தாலும், முபாரக் தன்னோடு இருந்த காரணத்தால் அமைதி காத்தான்.

"மாறா.., நீ டென்ஷன் ஆகாதே.., நான் மெக்கானிக் ஷாப்புக்கு பைக்கை எடுத்துட்டு போறேன். நீ கொஞ்சம் நிதானமா உன் வேலையைப் பார். ஏற்கனவே உன்னைப் பார்க்க ஒரு லேடி வந்திருக்காங்க. நான் இங்கே ரொம்ப நேரம் இருக்க முடியாது" உரைத்தவன் இருக்கையில் இருந்து எழுந்து கொண்டான்.

வெளியே சென்றவன், 'இதுக்கு ஏதாவது செஞ்சே ஆகணும். இவன் இப்போ சரி ஆயிடுவான், பிறகு சரி

ஆயிடுவான்னு பாத்துட்டு இருந்தால் நல்லா இருக்காது' எண்ணியவாறே சென்றான்.

அவன் செல்லவே, விஸ்மையாவின் பக்கம் திரும்பிய இளமாறன், "நான் இவ்வளவு சொல்லியும் என் ஆபீஸ்க்கே வந்துட்ட இல்ல. வெளியே என்னை எல்லாரும் லூசுன்னு சொன்னது போதாதா? இங்கேயும் என் மதிப்பை இறக்கணுமா..?" கடித்த பற்களுக்கிடையில் வார்த்தைகளை துப்பினான்.

அவனைத்தேடி விடாமல் ஏன் வருகிறோம் என்று அவளுக்கும் புரியவில்லை. அவனுடனேயே, அவன் கண் பார்வையிலேயே இருக்க வேண்டும் என மனம் விரும்புவதை என்ன செய்ய?

"உங்களை பாத்துட்டு போகலாம்னு வந்தேன்.." சின்னக் குரலில் உரைத்தாள்.

"ஏன்.., இருக்கேனா போயிட்டேனான்னு பாக்கவா?" அவன் சுள்ளென கேட்க, அவள் முகமே சுண்டி போனது.

அதில் அவன் மனமும் சோர்ந்து போக, அவளிடம் பேசும் முன்னர், அவன் அறைக்கதவை தட்டும் ஓசை கேட்கவே, தன் டையை சரி செய்தவன், இருக்கையில் நேராக அமர்ந்து கொண்டான்.

"எக்ஸ்கியூஸ் மீ.." குரல் கொடுத்தவாறே, அவள் உள்ளே வர, "எஸ்.." குரல் கொடுத்தவன் எதிர் இருக்கையை காட்டினான்.

அப்பொழுதும் விஸ்மையா வெளியே செல்லாமல் இருக்கவே, "உன்னை வெளியே போன்னு சொன்னேன்.." அவள் தயங்கி நிற்கவே, கிட்டத்தட்ட கத்தினான்.

உள்ளே வந்தவளோ, அவன் தன்னிடம்தான் சொல்கிறானோ என எண்ணியவள், இருக்கையில் அமராமல் பட்டென எழுந்து கொள்ளவே, "யூ சிட்.., உங்களை

இல்லை..” அவளிடம் தன்மையாக உரைத்தவன், “உன்னைத்தான்..” கடுமையாக விஸ்மையாவிடம் உரைக்க, வந்தவள் அவனை பயப் பார்வை பார்த்தாள்.

“நீங்க ஏன் நிக்கறீங்க..? உக்காருங்க..” அவன் சொல்லவே, தயக்கமாக அவன் எதிரில் கிடந்த இருக்கையில் அமர்ந்தாள். அவனோ, “சொல்றது காதில் விழுதா இல்லையா?” வெடிக்க, “சார்.., அதான் உக்காந்துடேனே” வேலை கேட்டு வந்திருக்கும் அவளுக்கு பட்டென முகத்தை திருப்பிக்கொண்டு செல்லவும் முடியவில்லை.

“அது அவளை..” அறையின் வாசல் அருகே கை காட்ட, அங்கே திரும்பிப் பார்த்தவளுக்கு எதுவும் தெரியவில்லை.

“சார்.., ஆர் யூ..” அவள் வார்த்தைகளை முடிக்கும் முன்பே,

“என்ன.., எனக்கு லூசான்னு கேக்கறியா? ஆமா நான் லூசுதான்.., இப்போ என்ன..?” அவன் வேகமாக இருக்கையில் இருந்து எழ, அவ்வளவுதான், வந்தவள் பின்னங்கால் பிடரியில் பட, எழுந்து ஓடியே போனாள்.

அவள் வெளியே ஓடவே, “போச்சு.., இப்போ இவ வெளியே போய் என்ன சொல்லப் போறாளோ? உன்கிட்டே ஒரு முறை சொன்னால், சொன்னதை செய்யவே மாட்டியா? ஏன் இப்படி என் உயிரை வாங்கற..?” விஸ்மையாவிடம் சாடினான்.

அவளோ.., “நீங்க ரொம்ப டென்ஷனா இருக்கீங்க, உங்களை எப்படி தனியா விட்டுப் போக? வீட்டுக்குப் போனாலும் என்னால் நிம்மதியா இருக்கவே முடியாது” அவள் அப்பாவியாக உரைக்க, தாறுமாறாக எகிறிய அவன் கோபம், அப்படியே வடிந்து போனது.

“சத்தியமா முடியலை.., ஒரு மனுஷன் ஒரு விஷயம் சொன்னால், அதைச் செய்யாமல்..” தன் தலையை அழுத்தமாக கோதிக் கொண்டான்.

“இந்த பேயோட சகவாசத்தை முதல்ல நிறுத்தணும்” சத்தமாக புலம்பினான்.

அதைப் பார்த்தவள், “தலை வலிக்குதா..? இப்படியெல்லாம் ஆகும்னு நான் நினைக்கவே இல்லை..” சொன்னதையே திரும்பச் சொல்ல, வாயைக் குவித்து காற்றை உள்ளிழுத்து வெளியே ஊதினான்.

இளமாறனின் அறையில் இருந்து அந்த பெண் வெளியே ஓடி வருவதைப் பார்த்த முபாரக், என்னவோ ஏதோ என அவளைத் தடுத்து, “என்னம்மா..? என்ன ஆச்சு..?” தன் நண்பன் அவளிடமும் ஏதாவது வித்தியாசமாக நடந்து கொண்டானோ என அறிய வேண்டி கேட்டான்.

“சார்.., மேனேஜர் ரொம்ப நல்ல மாதிரின்னு என் சித்தப்பா சொன்னாங்களேன்னு இங்கே வந்தால்.., அந்த ஆள் சரியான லூசா இருக்கான் சார். ‘உள்ளே வா’ன்றான்.., திடும்னு ‘போ’ன்னு சொல்றான்.., ‘உக்காரு’ன்றான்.., ‘உன்னைத்தான்’றான்.., என்னால் முடியாது.

“ஒருமணி நேரத்துக்கே மூச்சு திணறுது, இதில் நாள் முழுக்க, மாசம் முழுக்க, வருஷம் முழுக்கன்னா அவ்வளவுதான்.., எனக்கு இந்த வேலையே வேண்டாம். நான் இப்படியே கிளம்பறேன். முடிஞ்சா அவரை நல்லா ஹாஸ்பிடலா போய் பாக்க சொல்லுங்க..” உரைத்தவள் ஓடியே போனாள்.

இளமாறனைத் தேடி அவன் அறைக்குச் செல்லத் திரும்பிய முபாரக், அலைபேசி ஒலிக்கவே அதை எடுக்கவே, “முபாரக், உனக்கு ஒரு வீடியோ அனுப்பி இருக்கேன் பார். அசப்பில் பார்த்தால் நம்ம மாறன் மாதிரியே இருக்கான்” அந்தபக்கம் இருந்தவன் சொல்லவே, வேகமாக அதைப் பார்த்தான்.

காலையில் நடந்த சம்பவம், அதற்குள்ளாகவே வாட்ஸ்ஆப் வழியாக அவனை வந்தடைந்து இருந்தது. அதில், நடு ரோட்டில், இளமாறன் தனியாக கை நீட்டி பேசுவதும்,

முறைப்பதுமாக இருக்க, அதை நிறுத்தியவன் தன் தலையிலேயே அடித்துக் கொண்டான்.

சற்று நேரத்துக்கு முன்னர் எடுத்த தீர்மானம் உறுதியாக, அவனை உடனடியாக ஒரு மனநல மருத்துவரிடம் அழைத்துச் செல்வது என முடிவெடுத்தான்.

***

# பகுதி - 9.

‘சைக்காட்ரிஸ்ட் அமரேந்திரன்’ என்ற பெயர்ப்பலகையைத் தாங்கிய அறைக்கு முன்னர் நின்றுகொண்டிருந்தான் முபாரக். அவனை முறைத்தவாறே சற்று கோபமாக, பிடிக்காத ஒரு முகபாவத்தில் அவனுக்கு அருகில் நின்றிருந்தான் இளமாறன்.

“என்னை லூசுன்னு முடிவே பண்ணிட்ட.., அதானே..” லட்சம் முறையாக தன்னிடம் இதையே கேட்ட நண்பனை கெஞ்சலாக பார்த்துக் கொண்டிருந்தான் முபாரக்.

“உன்னை யாருடா அப்படி சொன்னது? ஜஸ்ட் ஒரு சின்ன செக்கப் அவ்வளவுதான். எல்லாம் சரியா போய்டும்..” அவனுக்கு விளக்கம் கொடுக்க, அவனை கொலைவெறியில் முறைத்தான்.

“யாரு அப்படி சொன்னதுன்னு கேட்டுட்டு, அப்புறம் சரியாயிடும்னா என்ன அர்த்தம், எரும?” அடிக்குரலில் சாடினான்.

‘ஆண்டவா, இந்த லூசு டாக்டர் உள்ளே கூப்ட்டுடா பரவாயில்லை, அல்லா..’ மனதுக்குள் அலறினான்.

“அவர் சொன்னா.., நான் லூசு இல்லைன்னு ஆயிடுமா?” சுள்ளென கேட்க, தன் தலையிலேயே நோகாமல் அடித்துக் கொண்டான்.

“இப்படி ஏறுக்குமாறா கேக்குறதை முதல்ல நிறுத்து” முபாரக் கடுப்பானான்.

அவர்களுக்கு அருகில், புது இடத்தை பார்க்கும் ஆவலில் அந்த ஹாலில் இருந்த ஒரு ஓவியத்தை ரசித்துக் கொண்டிருந்தாள் விஸ்மையா. அதைப் பார்த்தவன், ‘என்னை இப்படி ஒரு நிலைக்கு கொண்டுவந்து விட்டுட்டு,

எப்படி நிக்கறா பார். பெரிய தாஜ்மஹால் இது, பேய் சுத்திப் பாக்குது' மனதுக்குள் பல்லைக் கடித்தான்.

அவளிடம் எதையாவது சொல்லப் போனால், அதற்கும் முபாரக் ஏதாவது சொல்வான் என்பதால் சற்று பொறுமை காத்தான்.

அவர்கள் தங்களுக்குள் சின்னக் குரலில் பேசிக் கொண்டிருக்க, "சார், நீங்க போகலாம்" செவிலி அழைக்கவே, ஒரு பெரும் விடுதலை உணர்வோடு, இளமாறனின் கையை அழுத்தமாக பற்றி உள்ளே அழைத்துச் சென்றான்.

அமரேந்திரன்.., டாக்டர்களுக்கே உரிய அனைத்து இலக்கணத்தோடு இருந்தார். அமைதியான, சாந்தமான பார்வை. மூக்கின் நுனியில் எப்பொழுது வேண்டுமானாலும் விழுவேன் என தொற்றிக் கொண்டிருந்த கண்ணாடி, நரையோடிய தலைமுடி என காட்சியளித்தார்.

"உக்காருங்க.." அவர் இருக்கையை காட்ட, அவருக்கு எதிரில், காலியாக கிடந்த இருக்கையை நிரப்பினார்கள்.

அவரது பார்வை தன் எதிரில் இருந்த இருவரையும் சற்று நேரம் பார்க்க, முபாரக் அவரையே பதில் பார்வை பார்த்தான்.

'இவர் என்ன குறுகுறுன்னு பாக்குறார்? நிஜமாவே இவர் டாக்டர் தானா?' தனக்குள் கேட்டுக் கொண்டிருந்தான்.

ஆனால், இளமாறனோ, தனக்குப் பின்னால் சற்று திரும்பிப் பார்த்தவன், மருத்துவரின் அறையில் ஒரு ஓரத்தில் போட்டிருந்த சோபாவில் அமர்ந்திருந்த விஸ்மையாவைப் பார்த்தது.

கூடவே, காற்றுக்கு ஆடிய மேகசினை, இமைகளை கூட தட்டி விழிக்காமல், வைத்தவிழி வாங்காமல் பார்த்துக்

கொண்டிருந்த அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

“டாக்டர்.., நான் சொன்னேனே..” முபாரக் துவங்கவே, அவனை கை காட்டி தடுத்தவர், “மிஸ்டர் மாறன்.., அந்த மேகசினை பாக்கணுமா? வேண்ணா போய் எடுத்துக்கோங்க..” அவர் சொல்ல, பட்டென தன் பார்வையை திருப்பிக் கொண்டான்.

“இல்ல.., சும்மா..” இளமாறன் தடுமாற, அனைத்தையும் கூர்மையாக கவனித்தார்.

“சோ.., சொல்லுங்க..” அவர் கேட்க, இளமாறன் இதழ்களை அழுத்தமாக வைத்துக் கொள்ள, “டாக்டர், அதான் சொன்னேனே.., இவன் கண்ணுக்கு பேய் தெரியுதுன்னு சொல்றான்..” அவன் துவங்கினான்.

“லெட் ஹிம் டாக்..” கையில் ஒரு பேனாவை எடுத்தவர், தன் முன்னால் இருந்த வெள்ளை காகிதத்தில் அவன் சொல்வதை குறித்துக் கொள்ள தயார் ஆனார்.

“ஆமா.., என் கண்ணுக்கு அந்த பேய் தெரியறா. அதைச் சொன்னால், நீங்களும் என்னை லூசுன்னுதான் சொல்லப் போறீங்க. நான் கிளம்பறேன்” இருக்கையில் இருந்து எழுந்துகொள்ள முயன்றான்.

“நான் அப்படி சொல்லவே இல்லையே..” அவர் சொல்ல, அவரை நம்ப முடியாத பார்வை பார்த்தவன், மீண்டுமாக இருக்கையில் அமர்ந்தான்.

அவன் பார்வையில் வியப்பை பார்த்தவர், அதை கண்டுகொள்ளாமல், “முதல்ல ஒரு விஷயம்.., அது பேய் இல்லை.., ஆத்மா..” அவர் திருத்த, நண்பர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

“என்னடா இவர்.., உனக்கு பெயோட்டுவார்ன்னு பாத்தா, பேய்க்கு பேர் வச்சுட்டு இருக்கார்..” முபாரக் நண்பனிடம்

சன்னமாக உரைக்க, அந்த நேரத்திலும் இளமாறனுக்கு சிரிப்பு வந்தது.

“சும்மா இருடா..” அவனை அடக்கியவன், மருத்துவரை ஏறிட்டான்.

அவன் சொன்னது அவரது காதில் விழுந்தாலும் அதை பெரிதாக எடுக்காமல், “அந்த ஆத்மாவோட பேர் என்ன?” இளமாறனிடம் கேட்க, அவன் விழித்தான்.

‘ச்சே.., இத்தனைநாள் இதை அவகிட்டே கேக்கணும்னு தோணவே இல்லையே’ மனதுக்குள் எண்ணியவன் அவள் பக்கம் பார்க்க, அவளோ, “விஸ்மையா..” மெல்லியதாக உரைக்கவே, “விஸ்மையாவாம்” அதை அவரிடம் சொல்ல, முபாரக் ‘பே..’ என பார்த்துக் கொண்டிருந்தான்.

‘இவனுங்க நம்மளை வச்சு காமெடி பண்றாய்ங்களா?’ தன் பார்வையை அவன் மாற்றிக் கொள்ளவே இல்லை.

திடுமென, “டேய், அதென்ன விஸ்மையாவாம்.., இப்படி ஒரு பேரா? ரொம்ப புதுசா இருக்கு” அவன் இடைபுக, இவனை கொன்னா என்ன? என்பதுபோல் பார்த்திருந்தான்.

“விஸ்மையா.., போதுமா..?” அவன் சொன்ன விதத்தில், இனிமேல் வாயை திறந்தால் தனக்கு அடி உறுதி என்பது புரிய, தன் கையாலேயே வாயை மூடிக் கொண்டான். அதைப் பார்த்து மெல்லியதாக சிரித்துக் கொண்டான்.

“குட் நேம்.., அவங்க எதுக்காக உங்ககிட்டே வந்திருக்காங்களாம்?” அடுத்த கேள்வி அவரிடம் பிறக்க, ஒரு சங்கடமான பார்வை பார்த்தான்.

“நான் அதை கேக்கலை டாக்டர்..” அவரிடம் உரைத்தவன், அவள் பக்கம் பார்க்கவே, அவன் பார்வை நொடிக்கொருதரம் அந்த சோபாவின் பக்கம் பாய்வதைப் பார்த்தவர்,

“அவங்க அங்கேதான் இருக்காங்களா?” அவனிடம் கேட்க, ‘ஆம்..’ என தலை அசைத்தான்.

“அங்கேயா..? அலறிய முபாரக், அவன் பார்த்த அதே திக்கில் பார்க்க, அவனுக்கு ஒன்றும் தெரியவில்லை.

“அவங்க இப்போ என்ன பண்றாங்க..?” அவர் கேள்விகளை அடுக்க, முபாரக் ‘இவர் டாக்டர் தானா..?’ என்ற சந்தேகத்தில் அவரைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

“அந்த மேகசின் காத்துக்கு பக்கம் திரும்புறதால், அவளால் படிக்க முடியாம திணறிட்டு இருக்கா..” அவன் மெல்லிய சிரிப்பில் சொல்ல, டாக்டர் அவன் பார்த்த திக்கில் இருந்த வெறுமையை சில நொடிகள் இமைக்காமல் பார்த்திருந்தார்.

“அவங்களால் அந்த புக்கை எடுக்க முடியலையா?” அவனிடம் கேட்க,

“இல்ல டாக்டர்.., அவளால் அதெல்லாம் முடியாது. எல்லா இடத்திலும் காற்று மாதிரி நுழஞ்சுடுவா..” தான் சொல்லும் விஷயத்தை ஒருவர் முதல் முறையாக நம்புகிறார் என்பதால், அவன் மனதில் பெரும் விடுதலை உணர்வு எழுந்தது.

‘இவன் பேய் கதை சொல்றான், அதை இவர் வேற சுவாரசியமா கேக்கறார்’ முபாரக்குக்கு தலையை பிய்த்துக்கொள்ளலாம் போல் இருந்தது.

“அவங்க பாக்குறதுக்கு எப்படி இருக்காங்க?” மருத்துவர் கேக்க,

“பேய் மாதிரி..” முபாரக் இடைபுக, கொஞ்சம்கூட தயவே பாக்காமல், அவன் தலையில் ‘நங்,நங்’கென மாறன் குட்ட, வலியில் வாய்விட்டே அலறினான்.

விஸ்மையா வாய்விட்டே சிரிக்க, “நாயே நடுவுல பேசின, அப்படியே சமாதி ஆக்கிடுவேன்..” கொலைவெறியானான்.

மருத்துவரோ, “வில் யூ பிளீஸ் கெட் அவுட்..” அமைதியாக கோரிக்கை வைக்க, “நான் நல்லபிள்ளையா உக்காந்துக்கறேன் டாக்டர்.., நீ பேய் கதை சொல்லுடா..” வாய்க்கொழுப்பு அடங்க மறுத்தது.

‘இவன வச்சுகிட்டு..’ எண்ணியவன், சற்று இலகுவாகி இருந்தான்.

மருத்துவரோ, “அதாவது, அவங்களோட ஹைட்.., வெயிட்.., கலர்..” அவர் ஒவ்வொன்றாக கேட்க, அவளையே பார்த்தவன், “எப்படியும் அஞ்சடிக்கு மேலே இருப்பா. பிறந்த குழந்தையோட நிறம். அழகுக்கும் மேலே.., பேரழகி..” அவன் கண்கள் அவளையே ஊடுருவியது.

அவன் தன்னைப்பற்றி வர்ணிக்கத் துவங்கவே, அவளது முகம், மேலும் சிவந்து, விழிகள் வியப்பில் விரிய, இதழ்களில் மென்னகை பூக்க, முழு வெட்கம் அவள் முகத்தில் கவிழ்ந்தது. அதைப் பார்த்தவனால், தன் பார்வையை திருப்பிக் கொள்ளவே முடியவில்லை.

அந்த நேரம் அவளைப் பார்த்தவனுக்கு, மனதுக்குள் எதுவோ தடம் புரள, அவளை கட்டிக்கொள்ள தோன்றியது என்றே சொல்லலாம்.

“டாக்டர்.., அவன்தான் ஏதோ உளர்றான்னா.., நீங்களும் என்ன என்னவோ கேக்கறீங்க? அப்போ நீங்க இவன் சொல்றதை நம்பறீங்களா?” சிறு அதிர்ச்சியாய் கேட்டான் முபாரக்.

முபாரக்கின் பேச்சில் சட்டென கலைந்தவன், தன் பார்வையை வேகமாகத் திருப்பி, சிறு சங்கடமாக அவரை ஏறிட்டான். அவன் மனதை படித்தவர், அதை விடுத்து,

“ஏன்.., நம்புவதில் என்ன இருக்கு? இந்த உலகத்தில் நம் சக்திக்கு மீறிய எத்தனையோ விஷயங்கள் இருக்கு. அதில் இதுவும் ஒன்று..” அவர் நிதானமாக இருக்கையின் பின்னால் சாய்ந்துகொள்ள, நண்பர்கள் இருவரும் அவரை வியப்பாய் பார்த்தார்கள்.

“டாக்டர்.., அப்போ பேய் உண்மைன்னு சொல்றீங்களா?” முபாரக் கேட்க,

“ஆத்மா..” அவனை திருத்தினார்.

“சரி ஆத்மா..” உடனே ஒத்துக் கொண்டவன்,

“டாக்டர், பேய்க்கும் ஆத்மாவுக்கும் என்ன வித்தியாசம்” முபாரக் அவரிடம் மேலே கேட்கும் முன்னர், இளமாறன் இடையிட்டான்.

அவனை அமைதியாய் ஏறிட்டவர்.., “குட் கொஸ்டீன்..” அவனை பாராட்டியவர்,

“உதாரணத்துக்கு, நான் ஒரு விஷயத்தை சொல்றேன். புதுசா கல்யாணம் ஆன ஜோடி ஒண்ணு, தங்களோட ஹனிமூனுக்கு கார்ல போயிட்டு இருந்தாங்க. ஒரு காட்டுப் பாதையில், திடும்னு ஒரு பொண்ணு அவங்க காரை வழி மறிச்சா.

“அவ கண்ணில் கண்ணீர் வழிஞ்சுட்டே இருந்தது. அந்த இடம் வேற ஒரு லோன்லியா இருக்கவே, அவளுக்கு ஏதோ ஆபத்துன்னு காரை நிறுத்துறாங்க. அப்போ, அந்த பொண்ணு.., ‘என் குழந்தையை காப்பாத்துங்க. அங்கே தனியா இருக்கா.., பிளீஸ்’ன்னு கெஞ்சவே,

“காருக்குள் இருந்த புதுப் பொண்ணுக்கு பயம்.., எங்கே அவங்களை ட்ராப் பண்றாளோன்னு அவ நினைக்க, அவளோட எண்ணத்தை உணர்ந்த அந்த பொண்ணு, அவங்க காலில் விழுந்து கெஞ்சாத குறையா கேக்கவே,

அந்த பையன் மனம் இரங்கி, அவளோட போக முடிவெடுத்தான்.

“அவனோட மனைவிக்கு காருக்குள் இருக்க பயமா இருக்கவே, அவங்களோடவே போனா. கொஞ்ச தூரத்தில், ஒரு கார் ஆக்ஸிடென்ட்ல மாட்டியிருக்க, பின் சீட்டில் ஒரு குழந்தை கதறிட்டு இருந்தது. அவ்வளவுதான், ரெண்டுபேரும் அங்கே ஓடி, ஒரு வழியா ‘ஜேம்’மாகி இருந்த கார் கதவைத் திறந்து, முதல்ல குழந்தையை வெளியே எடுத்தாங்க.

“அந்த குழந்தையோ.., ‘அம்மா..அம்மா..’ன்னு அழவே, முன் சீட்டுக்கு போய் பார்த்தா.., கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி அவங்ககிட்டே ஹெல்ப் கேட்ட அந்த பொண்ணு, விபத்தில் ஸ்பாட்லேயே இறந்திருந்தா. ரெண்டுபேரும் பயத்தில் திரும்பி பார்த்தா, அந்த பொண்ணு அப்போ அங்கே இல்லை..” அவர் நிறுத்தவே இருவரும் வியப்பு நிறைந்த விழிகளோடு அவரை வெறித்தார்கள்.

“டாக்டர்.., அப்போ..” இளமாறன் இழுக்க,

“எஸ்.., உங்க கெஸ் சரிதான். தன்னைச் சார்ந்தவர்களுக்கு ஒரு துன்பம், இல ஏதாவது உதவி வேணும்னா அந்த ஆத்மா செயல்படும். உங்களைத் தேடி வந்திருக்கும் விஸ்மையாவுக்கும் உங்களால் ஏதோ உதவி தேவைபடுது. அது என்னன்னு தெரிஞ்சு நிறைவேற்றிட்டா, அவங்க போய்டுவாங்க.

“முதல்ல அவங்ககிட்டே பேசுங்க.., அவங்க யார்? எதுக்காக உங்களைத் தேடி வந்திருக்காங்க? அவங்களுக்கு என்ன வேணும்? எல்லாம் தெரிஞ்சுட்டு நிறைவேற்றி வைங்க. பயப்பட தேவை இல்லை.

“உங்களுக்கு அவங்களால் ஆபத்து இருந்திருந்தால் எப்பவோ அது நடந்திருக்கும். பேய்க்கும், ஆத்மாவுக்கும் என்ன வித்தியாசம்னு கேட்டீங்கல்ல, இதுதான் வித்தியாசம். பேய் தொல்லை செய்யும், ஆபத்தை

கொடுக்கும், பழி வாங்கும். ஆத்மா அதையெல்லாம் செய்யாது.

“மனிதர்களில் எப்படி நல்லவங்க கெட்டவங்க இருக்காங்களோ, அப்படிதான் ஆத்மாவிலும், நல்ல ஆத்மா, கெட்ட ஆத்மான்னு இருக்கு. இங்கே இருக்கும் யார் கண்ணுக்கும் அவங்க தெரியலை, உங்க கண்ணுக்கு மட்டும் அவங்க தெரியறாங்கன்னா அதுக்கு ஏதாவது காரணம் இருக்கும்னு உங்களுக்கு தெரியலையா?

“ஒரு நிமிஷம்..” உரைத்தவர், தன் இருக்கைக்கு கீழே குனிந்து, கையில் ஒரு தடிமனான புத்தகத்தை எடுத்தவர், “தி சோல்.., இந்த புக்கை படிச்சு பாருங்க. உங்களுக்கு இன்னும் தெளிவு கிடைக்கும்” அந்த புத்தகத்தை இளமாறனின் கரத்தில் கொடுத்தார்.

முபாரக்கின் பக்கம் திரும்பியவர், “உங்க பிரண்டை லூசு, உளர்றான்னு சொல்றதை முதல்ல நிறுத்துங்க. ஹி இஸ் நார்மல். என்ன சாதாரண மனிதர்களை விட, ஆத்மாவை பார்க்கும் சக்தி அவருக்கு அதிகம் இருக்கு அவ்வளவுதான்” அவனிடம் விளக்க, அரை மனதாக ஏற்றுக் கொண்டான்.

“டாக்டர், இதனால் அவனுக்கு எதுவும்..” ‘ஆபத்து இல்லையே..’ என அவன் கேட்க, மறுப்பாக தலை அசைத்தார்.

“டாக்டர்.., ஆத்மாவால் எதையும் எடுக்கவோ, இல்ல தொடவோ முடியாதா? இளமாறன் கேட்க,

“அப்படி சொல்லிட முடியாது. ஆத்மாவுக்கும் மன பலம் இருந்தால், அதனால் எவ்வளவோ அற்புதங்களை செய்ய முடியும். அடுத்து என்ன நடக்கப் போகுது என்பதை கணிக்க முடியும், எதிர்காலத்தை சொல்ல முடியும், இப்படி நிறைய..” அவர் சொல்ல, இப்பொழுது தன் அருகில் நின்ற விஸ்மையாவை நிமிர்ந்து பார்த்தான்.

அவனுக்கு அருகில் நெருங்கி, மேஜைமேல் ஒரு கையை ஊன்றி, அவன் கையில் இருந்த புத்தகத்தை அவள் பார்த்துக் கொண்டிருக்க, மேஜைமேல் இருந்த அவள் கரத்தை மெதுவாக தீண்ட முயன்றான். அவனால் காற்றை மட்டுமே ஸ்பரிசிக்க முடிந்தது.

அவன் செய்கையைப் பார்த்தவர், மௌனமாக சிரித்துக் கொண்டார். “ஓகே டாக்டர்.., தேங்கியூ..” இருக்கையில் இருந்து எழுந்தவன், அவர் கை பற்றி குலுக்கிவிட்டு வெளியேறினான்.

இளமாறனின் கண்கள் முதல் முறையாக, ஒரு பரிவோடு, சொந்தத்தோடு விஸ்மையாவைத் தழுவியது. அவன் பார்வை தன்பக்கம் திரும்ப, இரு புருவம் உயர்த்தி, பார்வையாலேயே ‘என்ன?’ எனக் கேட்க, அந்த கவிதையை நிச்சயம் ரசித்தான்.

***

# பகுதி - 10.

பைக் சாலையில் பயணித்துக் கொண்டிருக்க, இளமாறனின் சிந்தனை முழுவதும் விஸ்மையாவையே சுற்றி வந்தது. அவள் விஷயத்தில் தான் மிகவும் சுயநலமாக நடந்துகொண்டதாகவே தோன்றியது.

‘டாக்டர் கேட்ட விஷயங்களை நானே அவளிடம் முன்பே கேட்டிருந்திருக்க வேண்டும்’ மனம் அதன்போக்கில் சிந்தித்துக் கொண்டிருந்தது.

“என்னடா மாறா.., சைலண்டா வர்ற..? அவளைப் பத்தியே யோசிக்கறியா?” அவன் கேட்க, தன் நினைவுகளில் இருந்து கலைந்தவன், “ஆமாடா..” உண்மையை ஒத்துக் கொண்டான்.

“எனக்கென்னவோ இதெல்லாம் தேவையில்லாத வேலைன்னு தோணுதுடா. பேசாமல் அவளை இங்கே இருந்து போகச் சொல்லிடு. எனக்கு பயமா இருக்குடா. உங்க அம்மா, அக்காவை எல்லாம் யோசிச்சு பாருடா” அவனுக்கு நண்பனின் நலன் மட்டுமே முக்கியமாக இருந்தது.

“முபாரக்.., நான் ஒண்ணு கேக்கவா?”.

“கேளுடா..”.

“இப்போ அந்த இடத்தில் உன் ஆள் இருந்தாலும் இப்படிதான் பேசுவியா?” அவன் நிதானமாக கேட்க, பைக்கை செலுத்திக் கொண்டிருந்தவன், தன் நண்பனை திரும்பிப் பார்த்தான். அவனையே அசராமல் பார்த்தான் இளமாறன்.

அவனது பார்வையே, அவன் ஏதோ முடிவுக்கு வந்துவிட்டதை உணர்த்த, தலையை அசைத்தவன்,

‘என்னவோ செய்..’ என்பதுபோல் வண்டியை அவன் வீட்டில் அவனை விட்டுவிட்டு கிளம்பிவிட்டான்.

வீட்டுக்குள் நுழைந்த இளமாறன், “விஸ்மையா..” முதல் முறையாக அவளை பெயர் சொல்லி அழைத்தான். அவன் அழைக்கவே, பட்டென அவன் முன்னால் தோன்றியவள், ‘இங்கேதான் இருக்கேன்..’ என அவனைப் பார்த்தாள்.

அவன் தன்னை பெயர் சொல்லி அழைத்தது வேறு ஒரு இனிய இதத்தை அளிக்க, அவள் முகத்தில் புதிதாய் ஒரு ஒளி. கூடவே, ஒரு சிறு வெட்கம், தடுமாற்றம், படபடப்பு.., தன் பார்வையை அவன்மேல் இருந்து திருப்பியவள், தரையைப் பார்த்தாள்.

“விஸ்மையா.., உன் நேம் வித்தியாசமா இருக்கு. யார் வச்சா?” அவள் நிலையை கண்டுகொள்ளாமல் அவளிடம் கேட்டான்.

“அது.., எனக்கு நானே வச்சுகிட்ட பேர்..” அவள் சொல்ல,

“பார்ரா.., உனக்கு நீயே பேர் வச்சுகிட்டியா? நல்லாத்தான் இருக்கு. உன் வீடு எங்கே? உன்னைப் பெத்தவங்க, கூடப் பிறந்தவங்க..?” அவன் கேள்விகளை அடுக்க, விழித்தாள்.

அவள் முழிப்பதை பார்த்தவன், “என்ன சொல்லு..” அவளைத் தூண்டினான்.

“எனக்கு எதுவும் ஞாபகம் இல்லை..” அவள் உரைக்க, அங்கே இருந்த சோபாவில் சென்று அமர்ந்தான்.

“சரி இங்கே வந்து உக்கார்..” அவன் அழைக்கவே, அவன் அருகில் தயக்கமாய் வந்து அமர்ந்தாள்.

“இப்படி பட்டுன்னு சொல்லிடக் கூடாது.., நிதானமா யோசிச்சு சொல்லு” அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

அவள் விரல்கள் தாமாகவே வாய்க்குச் செல்ல, மெல்லியதாக கடித்தவள், யோசிக்க முயன்றாள். அவள் செய்கையைப் பார்த்தவன், “நகத்தை கடிக்காதேன்னு எத்தனை முறை சொல்றேன்..” அவள் கரத்தை தட்டிவிட முயன்றான். அவனால் முயல மட்டுமே முடிந்தது.

அவன் முயற்சியைப் பார்த்தவள், தானாகவே விரல்களை விடுவித்துக் கொண்டு, “மூணு வருஷமா அதையேத்தான் யோசிக்கிறேன். எதுவும் ஞாபகத்துக்கு வரலை” பரிதாபமாக உரைக்க, அவள் சொன்ன மூன்று வருட கணக்கில் அப்படியே உறைந்து போனான்.

“என்ன சொன்ன..? மூணு வருஷமாவா..? சுமனோட வீட்டில் அவங்க ஒரு வருஷமா தானே இல்லை..” அவன் தன் சந்தேகத்தை கேட்க,

“ஆமா.., அதுக்கு முன்னாடி எல்லாம் ஏதாவது காம்ப்ளெக்ஸ், மால், சில நேரம் ரோடுன்னு எங்கேயாவது உக்காந்து இருப்பேன். நாய் எல்லாம் கூட துரத்தும். அப்போதான் ஒரு நாள் இந்த வீடு பூட்டி இருப்பதை பாத்துட்டு இங்கே வந்து இருந்தேன்..” அவள் சொல்லச் சொல்ல, எப்படி உணர்ந்தான் என்றே தெரியவில்லை.

“கஷ்டமா இருந்திருக்கும் இல்ல..?” அவன் தனக்கு தானே சொல்லிக் கொள்ள,

“ஆமா, ரொம்ப போர் அடிக்கும்.., பகல் முழுக்க இந்த சென்னையை சுத்தி வருவேன். ரொம்ப ரேரா ஏதாவது குழந்தைங்க கண்ணுக்கு தெரிவேன். அவங்களோட விளையாடுவேன். சில குழந்தைங்க பயப்படுவாங்க.., அப்போ அவங்களை விட்டு வந்துடுவேன்..” அவள் கதைபோல் சொல்ல, அதை கேட்டுக் கொண்டான்.

“சரி விடு.., அதான் இப்போ நான் வந்துட்டேனே..” அவளுக்கு ஆறுதல் சொல்ல அவனை ஆர்வமாய் ஏறிட்டாள்.

“உனக்கு எதுவும் ஞாபகம் வரலன்னா பரவாயில்லை, அதையெல்லாம் கொஞ்சம் நிதானமாவே யோசிக்கலாம், முதல்ல உனக்கு ட்ரெயினிங் கொடுக்கறேன். எங்கே இந்த புக்கை எடு பார்ப்போம்” டீபாவின்  மேல் இருந்த புத்தகத்தை சுட்டிக் காட்டினான்.

அவளும் அதை விதம் விதமாக எடுக்க முயல, “குட்.., இதுதான் உனக்கு இன்னைக்கு முழுக்க வேலை. இதை நீ எடுத்தே ஆகணும்..” சொல்லிவிட்டு அறைக்குள் சென்று மறைந்தான்.

அலுவலகம் செல்ல கிளம்பி வந்தவன், “நான் ஆபீஸ் கிளம்பறேன். லேட்டா போறதால், லேட்டாதான் வருவேன். என் கூடவே இருக்கணும்னு அங்கே வந்துடாதே..” அவன் சொல்ல அவனை சிணுங்கலாக ஏறிட்டாள்.

“என்னால் முடியலை..” வார்த்தையாலும் அதை வெளிப்படுத்த,

“நோ.., அப்படி சொல்லக் கூடாது. மனசை ஒருமுகப்படுத்து. அதை எடுத்தே ஆகணும், நான் பொருட்களை உணரணும்னு நினை, உன்னால் நிச்சயம் முடியும்..” அவள் அருகில் நின்றவன், அவள் அதை எடுக்க முயற்சிக்கவே மேலும் சில நிமிடங்கள் நின்றான்.

அவன் அங்கேயே இருப்பதை பார்த்தவள், “உங்களுக்கு டைம் ஆச்சுன்னு சொன்னீங்க” அவனை சீண்டலாக ஏறிட, அவன் கண்களில் சுவாரசியம் ஏறியது.

அதைப் பார்த்தவள், புத்தகத்தை எடுக்கும் சாக்கில் திரும்பிக் கொள்ள, “விஸ்மையா.., அதை எடுக்க முடியலன்னா, வேற எதையாவது ட்ரை பண்ணு. அதாவது உனக்கு ரொம்ப புடிச்ச விஷயத்தில் கவனத்தை திருப்பு, கண்டிப்பா உன்னால் முடியும்” அவள் அருகே சற்று குனிந்து உரைக்க, அவனது சென்ட் வாசனை அவள் நாசியைத் தீண்டியது.

இதற்கு முன்னர், அவன் இவ்வளவு நெருங்கியதாக அவளுக்கு நினைவில்லை. அவள் இமைகள் சற்று படபடக்க, விரல்களை லேசாக பிசைந்து கொண்டாள். அவள் முகத்தில் என்ன கண்டானோ, "ஆத்மாவுக்கு கூட வெக்கம் வருது. ம்.., இதுவும் பாக்க நல்லாத்தான் இருக்கு. அப்படியே ரோஸ் கலர்ல.." அவன் குரல் இப்பொழுது மெல்லியதாக, கிசுகிசுப்பாக வெளியேற, பட்டென அங்கிருந்து மறைந்தாள்.

அதைப் பார்த்தவன், வேகமாக அறை முழுவதும் பார்வையை சுழற்றியவன், "விஸ்மையா.., நான் சாயங்காலம் வரும்போது, நீ எதையாவது அட்லீஸ்ட் டச் பண்ணியாவது காட்டணும். இல்லன்னா நான் டென்ஷன் ஆயிடுவேன்.." ஏதோ ஒரு திக்கில்  விரல் நீட்டி எச்சரித்துவிட்டு சென்றான்.

அவன் செல்லவே அவன் நின்ற இடத்தில் பிரசன்னமானவள், "வ..வ.., இம்மாம் பெரிய புக்கை எப்படி எடுக்கவாம்?" வாய்விட்டே உரைத்தவள், மேலும் சற்று நேரம் தன் முயற்சியை தொடர்ந்தாள்.

நேரம் ஓடியதே தவிர அவளால் அந்த புத்தகத்தை தொடக் கூட முடியவில்லை. சில நொடிகள் ஆழமாக மூச்செடுத்தவள், மீண்டும் முயல, தோல்வியே மிஞ்சியது.

'சரி, வேற எதையாவது எடுப்போம்..' எண்ணியவள், அங்கே ஷோக்கேசில் இருந்த பொருட்கள், பூஜாடி, டிவி திரை, சுவர், சுவரில் இருந்த சுவிட்ச் என தன் முயற்சியை தொடர்ந்தாள். அனைத்தும் தோல்வியே.

போர் அடித்துபோய் அங்கே இருந்த சோபாவில் கால் நீட்டி படுத்துக் கொண்டாள். அதுவும் சில பல நிமிடங்கள்தான் அவளால் முடிந்தது. 'அவர் சொல்லிட்டு போனதை எப்படி செய்யாமல் இருக்க?' யோசித்தவள், எழுந்து கிச்சனுக்குச் சென்றாள்.

நேற்று அவன் சாப்பாடு செய்த பாத்திரங்கள் அனைத்தும் சிங்க் முழுக்க நிரம்பி வழிய, அதை கழுவ, குழாயை திருப்ப முயன்றாள். தனக்குத் தெரிந்த அனைத்து விதங்களிலும் முயல, ம்ஹூம்.., குழாயை தொட்டு கூட பார்க்க முடியவில்லை.

‘பேய் எல்லாம் என்னென்னவோ செய்யுமாம் .., நமக்கு ஒரு குழாயை திருப்ப முடியலை’ சோர்ந்து போனாள். ஹாலுக்கு வந்தவள் அதன் நீள அகலத்தை அளந்தாள்.

அந்த நேரம், இளமாறனின் அறைக்கதவு காற்றுக்கு அசைய, சற்று தயக்கமாக உள்ளே நுழைந்தாள். கலைந்த படுக்கை, போர்வையை மடித்து தலையணைமேல் வைத்திருந்தான். வெளியே சென்றபொழுது அவன் அணிந்திருந்த உடையை கழட்டி, கட்டில்மீது வீசியிருந்தான்.

சுவரில் ஹேங்கரில் அவனது சில உடைகள் தொங்கிக் கொண்டிருக்க, படுக்கைக்கு அருகில், டேபிள் லேம்ப் பக்கத்தில், புகைப்பட சட்டத்துக்குள், தன் பற்கள் தெரிய சிரித்துக் கொண்டிருந்தான் இளமாறன்.

தன் ஒற்றை விரல் நீட்டி அந்த புகைப்படத்தை தொட முயன்றவள், வேகமாக கரத்தை பின்னால் இழுத்துக் கொண்டாள். கிட்டத்தட்ட ஒரு மாதத்துக்கும் மேலாக அவனோடு இருக்கிறாள், அப்பொழுதெல்லாம் தோன்றாத உணர்வு, அந்த நேரம் அவளை பிடித்து ஆட்டியது.

“இளா..” சன்னமாக அவன் பெயரை உச்சரித்துப் பார்த்தாள். என்னவோ குப்பென ஒரு உணர்வு வந்து தாக்க, வேகமாக அறைக்கு வெளியே வந்து அமர்ந்து கொண்டாள்.

சோபாவில் அமர்ந்தவள், ‘என்ன இது..? நானா இப்படி..? எனக்கு அவர் மேலே காதலா? இது நடக்குமா..? முறையா..?’ அவளையே கேட்டுக் கொண்டாள். நடக்குமோ நடக்காதோ.., அந்த உணர்வு அவ்வளவு பிடித்தது.

இங்கே விஸ்மையா அவனைப் பற்றியே யோசிக்க, அலுவலகத்தில் வேலையில் மூழ்கி இருந்தவனை கலைத்தது அலைபேசி அழைப்பு. அதைப் பார்த்தவன், 'என்ன இது.., அம்மா இந்த நேரம் கூப்பிடுறாங்க?' எண்ணியவன் வேகமாய் அழைப்பை ஏற்றான்.

"சொல்லுங்கம்மா.., என்ன இந்த நேரம் கூப்பிட்டு இருக்கீங்க? எல்லாரும் நல்லா இருக்கீங்க தானே?" மறைக்க முயன்றாலும் அவன் குரலில் சிறு பதட்டம் தொற்றிக் கொண்டது.

"எல்லாரும் நல்லா இருக்கோம்ப்பா.., கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி உன் அக்கா வீட்டுக்கு வந்திருந்தா. அவ ஒரு விஷயம் சொன்னா, அதான்.., அதை உன்கிட்டே உடனே சொல்லிடலாம்னு போன் பண்ணேன்.." அவர் சொல்லவே, ரிலாக்ஸ் ஆனான்.

"சாயங்காலம் வரைக்கும் காத்திருக்க முடியாத அளவுக்கு அப்படி என்னம்மா முக்கியமான விஷயம்?" இருக்கையில் நன்றாக சாய்ந்து கொண்டான்.

"அது.., உன் அக்காவோட படிச்ச பொண்ணோட தங்கச்சி.., சென்னையில் ஒரு கம்பெனியில்தான் வேலை பாக்கறாளாம். அவளுக்கு வரன் தேடறாங்களாம். உனக்கு பாக்கலாம்னு சொன்னா. நல்ல பொண்ணாம்.., உங்க அக்காவுக்கு கூட நல்லா தெரியுமாம்.

"எல்லா வெள்ளிக்கிழமையும், அங்கே இருக்க முருகன் கோவிலுக்குப் போவாளாம். வர்ற வெள்ளிகிழமை நீ ஒரு எட்டு அவளைப் போய் பாத்துட்டு சொல்றியா? உனக்குப் பிடித்திருந்தால் மேற்கொண்டு பேசலாம்.." அவன் சம்மதம் சொல்ல வேண்டுமே என தவிப்பது அவர் குரலிலேயே தெரிந்தது.

"அம்மா.., இந்த வாரம் முடியாது.., வேண்ணா அடுத்தவாரம் பாத்துட்டு சொன்னா போதுமா..?" அவருக்கு மறைமுகமாக சம்மதம் வழங்க, அப்படியே மகிழ்ந்து போனார்.

“அது சரி.., அந்த கோவில் முழுக்க வர்ற பொண்ணுகளை நான் உத்து உத்து பாத்தா என்னை கட்டி வச்சு உதைப்பாங்க, அதுக்கு என்ன செய்யலாம்?” குறும்பாக கேட்க,

“எலேய்.., பொண்ணு போட்டோ வேணும்னு நேராவே கேக்க வேண்டியது தானே. உன்கிட்டே கேட்டுட்டு அனுப்பலாம்னுதான் இருந்தேன். உன் அக்கா உனக்கு அவ போட்டோவை அனுப்பி வைப்பா. மறக்காமல் போய் பாத்துட்டு சொல்லுப்பா..” அவர் உரைக்கவே,

“என்னம்மா.., பொண்ணை உங்களுக்கு ரொம்ப பிடிச்சிருக்கு போல” அவன் கேட்க,

“ஆமாப்பா.., பொண்ணு சும்மா மகாலஷ்மி மாதிரி இருக்கா” அவர் நிறைவாய் உரைக்க, அவன் இதழ்களில் மெல்லிய புன்னகை கீற்று.

“சரிம்மா.., நீங்க போட்டோவை அனுப்புங்க. நான் பாத்துட்டு சொல்றேன்” அலைபேசியை வைத்துவிட்டான். வேலை அவனை நெட்டித் தள்ள, அவனால் அதன் பிறகு எதையுமே சிந்திக்க முடியவில்லை.

மதிய உணவையும், இரவு உணவையும் அலுவலகத்திலேயே முடித்து விட்டு, வீட்டுக்கு கிளம்பும் நேரத்தில்தான் விஸ்மையாவின் நினைவே அவனுக்கு வந்தது.

‘ச்சே.., அவளை எப்படி மறந்தேன்? எதையாவது எடுத்தாளோ என்னவோ தெரியலையே?’ எண்ணியவன் வண்டியை வீட்டுக்கு விரட்டினான்.

வீட்டுக்குள் நுழைந்தவன், அவளை ஹாலில் காணமல், “விஸ்மையா எங்கே இருக்க?” குரல் உயர்த்தி அழைக்கவே, அவன் முன்னால் நின்றாள்.

“ஹேய்.., எதைவாது டச் பண்ணியா இல்லையா? தெரிஞ்சுக்க ஆர்வமா இருக்கு” நிஜமாகவே அவ்வளவு ஆர்வமாகத்தான் இருந்தான்.

அவளோ.., எதுவும் பேசாமல்.., மெதுவாக அவனை நெருங்கியவள், அவன் கையை மணிக்கட்டில் பற்ற, “நான் கேட்டதுக்கு பதில் சொல்லாமல், இப்படி..” அவன் பேச்சு பாதியில் தடைபட அவன் விழிகள் அப்படியே ஆச்சரியத்தில் விரிந்தது.

***

# பகுதி - 11.

இளமாறனால் தன் கண்களையே நம்ப முடியவில்லை. கூடவே, தன்னை தீண்டிய அவள் கரத்தையும் நம்ப முடியாமல் வெறித்தவன், அடுத்த நொடி, “விஸ்மையா.., ஆவ்சம்.., இதெப்படி..? இதெப்படி நடந்தது? எங்கே இந்த பேகை வாங்கு பார்ப்போம்..?” அவள் கரத்தில் தன் லேப்டாப் பேகை கொடுக்க, தயங்காமல் அதை வாங்கிக் கொண்டாள்.

“சூப்பர்.., யாஹூ.., அந்த முபாரக் மண்டையன் நாளைக்கு வரட்டும் அவனை தெறிக்க விடலாம்..” உற்சாக கூச்சலிட்டவன், ஆர்வம் மிகுதியில், அவளை தாவி அணைக்க முயன்றான்.

அவனால் அது முடியாமல் போகவே, “ஓ.., உன்னை என்னால் டச் பண்ண முடியாதா?” சற்று சோர்ந்த குரலில் கேட்க, வேகமாக அவன் கைகளுக்குள் இருந்து விலகி நின்றாள்.

அவள் செய்கையைப் பார்த்தவன், “என்ன..?” புருவம் உயர்த்த, அவனது பேகை கீழே வைத்தவள், தன் வலக்கரத்தை அவன் பக்கம் நீட்டினாள்.

“அப்படின்னா..?” அவன் புரியாமல் கேட்க, “கையை நீட்டி என்னைத் தொடுங்க” அவள் சொல்லவே, மென்மையாக, மெதுவாக அவள் கரத்தை பற்றினான்.

அப்படியே ஒரு ஐஸ் கட்டியை கையில் தொட்ட உணர்வு. “ஸ்.., சப்பா.., என்ன இப்படி சில்லுன்னு இருக்க..?” அவள் விரல்களை விட்டுவிட்டு, அவள் கரத்தின் மணிக்கட்டு வரைக்கும் தொட்டவன், அவள் முழங்கை வரை மெதுவாக வருட, அப்படியே காற்றில் கலந்து காணாமல் போனாள் விஸ்மையா.

“விஸ்மையா.., என்ன இது..? எங்கே போன..?” அவனது அலறலை அவள் கண்டுகொள்ளவே இல்லை.

அங்கே இருந்த மற்றொரு அறையில், தன் கரத்தை பார்த்தவாறு உறைந்துபோய் நின்றிருந்தாள். அவனுக்கு எப்படி சில்லென இருந்ததோ, அதேபோல் அவளுக்கு அப்படி ஒரு கதகதப்பாக இருந்தது.

அவன் பற்றிய கரம் மட்டும் வெம்மையாக இருக்கும் உணர்வு. தன் இடக்கரத்தால் வலக்கரத்தை வருட, இப்பொழுது அவளும் சில்லென உணர்ந்தாள்.

‘அவர் தொட்டால் நானும் கதகதப்பாக மாறிடுவேனா?’ தனக்குத் தானே கேட்டுக் கொண்டாள். அவள் கையில் கதகதப்பு உடல் முழுவதும் விரவும் உணர்வு.

அவன் தொட்ட அந்த நொடி, அவனை முழுதாக அணைத்துக் கொள்ள அவள் கரங்களும், மனமும் துடித்ததை அடக்க முடியாமல்தான் அங்கிருந்து அகன்றுவிட்டாள். இந்த மாதிரி உணர்வுகள் அவளுக்குப் புதியவை.

தன் தொடுகைக்கான மூலம் எப்படி வந்தது என அவன் கேட்டால் என்ன சொல்வது என்று அவளுக்குத் தெரியவில்லை. சொல்லப்போனால் அந்த கேள்விக்கும் பயந்துதான் ஓடி வந்துவிட்டாள்.

அவனது அறையில், அவனது புகைப்படத்தை பார்த்த அந்த நொடி, அதை கையில் எடுத்துகொள்ள அவள் மனம் பரபரக்க, விரல் நீட்டி முதலில் தொட முயன்றவள், ஒரு நொடியில் சுதாரித்து விலகினாலும், அதன் பிறகான அவளது முயற்சியை அவன் அறையில்தான் செய்ய முடியும் எனத் தோன்றவே அங்கே சென்றாள்.

முதலில் தயக்கமாக அதைத் தொட முயன்றவள், பிறகு ஆழமாக மூச்செடுத்து, மனதை ஒருமுகப்படுத்தியவள்,

சட்டென அவனது புகைப்படத்தை கரத்தில் எடுக்க, அது அவள் கையோடு வந்துவிட்டது.

அதன் பிறகு, அனைத்துப் பொருட்களையும் அவளால் எடுக்க முடிந்தது. ஒரு பக்கம் சந்தோசம் என்றால், மறு பக்கம் படபடாய், பயமாய் இருந்தது. ‘இது எங்கே போய் நிற்கும்?’ அந்த கேள்விக்கான விடை அவளிடம் இல்லை.

“விஸ்மையா நீ இங்கேதான் இருக்கன்னு எனக்குத் தெரியும், வா..” அவள் இருந்த அறையின் கதவு தட்டப்பட, தன் மனதையும் முகத்தையும் சீர்படுத்திக் கொண்டு வெளியே வந்தாள்.

“உனக்கு சக்தி வந்த இந்த விஷயத்தை செலிபரேட் பண்ணாமல் அந்த ரூமுக்குள் என்ன செய்யிற?” மெல்லியதாக கடிந்தவன், “அங்கே பார்..” அவன் சுட்டிக் காட்டிய திசையில், நாலு ஸ்லைஸ் பிரெட் அடுக்கி வைக்கப் பட்டிருக்க, அதன் மேல் ஒரு மெழுகுவர்த்தி வீற்றிருந்தது.

“என்ன இது?” அவள் கேட்க,

“இந்த நேரத்தில் கேக் வாங்கப் போனால், கடைக்காரனே என்னை கேவலமா பாப்பான். சோ.., வீட்டில் இருந்ததையே அட்ஜஸ்ட் பண்ணிட்டேன். வா.., வந்து முதல்ல கட் பண்ணு..” அவள் கை பிடித்து இழுக்க முயல, அது அவனால் முடியவில்லை.

சட்டென அவள் பக்கம் திரும்பியவன், கைகளை நெஞ்சுக்கு குறுக்காக கட்டிக் கொண்டான். “சோ.., நீ மனசு வைத்தால் மட்டும்தான் நான் உன்னை தொட முடியும் அதானே..” தலையை ஒரு பக்கம் சாய்த்து, கண்களில் குறும்பு வழிய அவன் கேட்க, முகத்தை வேகமாக திருப்பிக் கொண்டாள்.

“ஓகே கூல்.., ஒரு பொண்ணை அவளோட பெர்மிஷன் இல்லாமல் தொடக் கூடாது என்பது ஆத்மாவுக்கும் பொருந்தும்னு எடுத்துக்கறேன். வா..” தோளைக்

குலுக்கியவன், முன்னால் செல்ல, அவனைப் பின்தொடர்ந்தாள்.

பிரட்டை கட் செய்தவள், ஒரு சிறு துண்டை எடுத்துவிட்டு, அவன் முகம் பார்க்க, கண்களில் சிரிப்போடு அவளையே பார்த்திருந்தான். “ம்.., கேக் கட் பண்ணா என்ன செய்யணும்னு தெரியாதா?” அவன் கேட்க, அவள் கரம் உயர்ந்து அவன் வாய்க்கு அருகே சென்றது.

அதை வாயில் வாங்கிக் கொண்டவன், “உனக்கு..” அவன் சிறு பீசை எடுத்தவாறு கேட்க, அவள் தலை மறுப்பாக ஆடியது.

“ஓ.., நீ எதுவும் சாப்பிட மாட்டல்ல, மறந்துட்டேன். சரி, ரொம்ப லேட் ஆச்சு, நான் தூங்கப் போறேன். நீயும் தூங்கு” உரைத்தவன் அறைக்குச் சென்று மறைந்தான்.

சில நிமிடங்களில் அவன் ஆழ்ந்த உறக்கத்துக்குச் செல்ல, அவன் அறையில் இருந்த சேரில் அமர்ந்து அவனுக்குத் தெரியாமலே அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

மறுநாள் முபாரக் வீட்டுக்கு வரவே, “விஸ்மையா ஒரு காபி..” இளமாறன் குரல் கொடுக்க, அடுத்த சில நிமிடங்களில், ஒரு காப்பிக் கோப்பை காற்றில் மிதந்தவாறு அவனை நோக்கி வந்தது.

அதைப் பார்த்தவன், “ஐயோ.., ஆண்டவா.., என்னடா இது?” அவன் அலற,

“சும்மா வாங்குடா..” அவன் சொல்லவே, நடுங்கும் கரத்தால் அதை வாங்கிக் கொண்டான். கையில் இருந்த கோப்பை அவன் கையில் ஆட்டத்தால் தடுமாறி விழப் போக, இளமாறன் அதை சரியாக பிடித்து வைத்தான்.

“டேய் மச்சான்.., அப்போ நீ சொன்னது எல்லாம் நிஜமா? என்னால் நம்பவே முடியலடா?” திணறினான்.

“உன் கண்ணு முன்னாடியே ஆதாரத்தை காட்டிட்டேன். இதுக்கு மேல நான் என்ன செய்ய?” அவன் அலுத்துக் கொள்ள, அவன் அருகில் வந்து நின்றாள் விஸ்மையா.

“பய இன்னும் நாலு நாள் தூங்க மாட்டான்” அவளிடம் சொல்ல, அவன் தோளில் மெதுவாக அடித்தாள்.

“சும்மா இருங்க, அவரே பயந்துபோய் இருக்கார். இதில் நீங்க வேற” அவனை அடக்கினாள்.

“சரிடா மச்சான்.., எனக்கு வெளியே கொஞ்சம் வேலை இருக்கு, பிறகு வர்றேன்” அவன் கிளம்ப முயல,

“டேய், வர்ற வெள்ளிக்கிழமை என்னோட ஒரு இடத்துக்கு வரணும்” அவன் உரைக்கவே,

“எங்கேடா..?” அவன் கேட்க, தன் அலைபேசியை உயிர்ப்பித்தவன், அதில் இருந்த பெண்ணின் புகைப்படத்தை காட்டினான்.

“யாருடா இது..?” கேட்டவனது முகம் சட்டென பிரகாசமாக, “மச்சான், உனக்கு பொண்ணு பாத்திருக்காங்களா? சொல்லவே இல்லை. கண்டிப்பா வர்றேன்.., அதுக்கு முன்னாடி, சண்டே பீச் போகலாம். நீயும் இங்கே வந்த பிறகு வெளியே எங்கேயும் போகக் காணோம்”.

“ம்.., போகலாம்.., நைட் டின்னர் கூட வெளியவே முடிச்சுடலாம்” இருவரும் திட்டமிட, விஸ்மையாவின் முகம் விழுந்து போனது.

இளமாறனுக்கு பெண் பார்க்கப் போகிறார்கள் என்ற செய்தி அவளுக்கு பெரும் ஏமாற்றத்தையும் வலியையும் கொடுத்தது. ‘பிறகு, அவர் உன்னையா கட்டிக்க முடியும்?’ அவளது மனசாட்சி கேள்வி கேட்க, அவளால் பதில் சொல்ல முடியவில்லை.

அன்று ஞாயிற்றுக் கிழமை.., காலையில் சோம்பலாக கண் விழித்தவன், தன் துணி அனைத்தையும் சர்ஃப் போட்டு ஊற வைத்துவிட்டு, வெளியே சென்று அரைக்கிலோ சிக்கன் வாங்கி வந்து சமைக்கத் துவங்கினான். அவன் செய்வது அனைத்தையும் அமைதியாக பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவள் அமைதியாக இருக்கவே, “என்ன எதுவுமே பேச மாட்டேங்கற? இன்னைக்கு மௌன விரதமா?” அவன் கேட்க, மறுப்பாக தலை அசைத்தாள்.

“எனக்கு சமைக்கத் தெரியாது.., இல்லன்னா நான் செய்திருப்பேன்” அவள் சொல்ல, அவளை முறைத்தான்.

“நீயென்ன நான் வச்ச வேலைக்காரியா? நீ எதுவும் சாப்பிடுவதில்லை, குளிப்பதில்லை, உடை மாற்றுவதில்லை. அப்படி இருக்கும்போது நீ செய்யலன்னு நான் ஏதாவது குறை சொல்ல முடியுமா? இதை யோசிக்கிற நேரத்தில், உன்னைப்பற்றி ஏதாவது ஞாபகம் வருதான்னு யோசி” அவன் வேலையை பார்க்கத் துவங்கினான்.

மாலையில் முபாரக் வீட்டுக்கு வரவே, இருவருமாக பீச்சுக்கு கிளம்பினார்கள். விஸ்மையாவைப் பார்த்தவன், “நீயும் எங்களோட வா.., உனக்கும் ஒரு சேஞ்சா இருக்கும்” அவன் சொல்லவே, அவளும் அவர்களோடு இணைந்து கொண்டாள்.

பீச்சுக்கு சென்ற அடுத்த ஐந்தாவது நிமிடம், முபாரக்கின் காதலி அங்கே வர, “மச்சான்.., ஒரு அரைமணி நேரத்தில் உன்னோட ஜாயிண்ட் பண்ணிக்கறேன். பிளீஸ்..” உரைத்தவன், அவன் பதிலை எதிர்பாராமல் கிளம்பிவிட்டான்.

பீச்சில் கூட்டம் அலைமோத, “விஸ்மையா.., அப்படியே கொஞ்ச தூரம் போய்டலாமா? இங்கே ரொம்ப ரஷ்ஷா இருக்கு” அவன் கேட்கவே, வேகமாக அவனுக்குப் பின்னால் மறைந்தாள்.

அவள் செய்கையைப் பார்த்தவன், “என்ன ஆச்சு? எதுக்கு இப்படி ஒளியிற?” அவன் கேட்டுக் கொண்டிருக்கையிலேயே அருகில் ஒரு அல்சேஷன் டாக் குலைத்துக் கொண்டு அவனை நோக்கி ஓடி வந்தது.

“ஐயையோ.., இது ஏன் இப்படி ஓடி வருது?” அவன் அலற, அதற்குள்ளாகவே அவன்மேல் பாய தயார் ஆனது.

“இளா.., இங்கே இருந்து போகலாம்..” அவன் பின்பக்க சட்டையை கொத்தாக பற்றி, முகத்தை அழுத்தமாக அவன் முதுகில் பதித்தவளின் தேகம் சில்லென அவனைத் தாக்க, கூடவே அவள் நடுங்கிக் கொண்டிருப்பதும் புரிந்தது.

“இந்த உலகத்திலேயே நாயைப் பார்த்து பயப்படும் பேயை இப்போதான் பாக்கறேன்” அவன் பட்டென உரைத்த பிறகுதான், தான் என்ன சொன்னோம் என்பதையே உணர்ந்தான்.

அந்த நாய் அவன்மேல் பாய்வதற்கு முன், நாயின் உடமையாளர் ஓடிவந்து அதைப் பிடித்துக் கொண்டார். நாய் விடாமல் குலைக்க, “ஜாக்கி, கொயட்..” அதை அடக்கியவன், “சாரி.., இவன் இதுக்கு முன்னாடி இப்படி நடந்துகிட்டதே இல்லை..” அவர்களிடம் மன்னிப்பை வேண்டியவன், நாயை வலுக்கட்டாயமாக இழுத்துச் சென்றான்.

நாயோ விடாமல் குலைத்து, திமிறி.., அவர்களை நோக்கி பாய காத்துக் கொண்டிருந்தது. அது கண்ணை விட்டு மறையும் வரைக்கும் அசையாமல் நின்றவன், அதன் பிறகுதான், தன்மேல் ஒட்டிக் கொண்டிருந்த அவளை உணர்ந்தான்.

“விஸ்மையா.., நாய் போய்டுச்சு..” அவளது நெருக்கம் அவனை தடுமாற வைத்துக் கொண்டிருந்தது.

அவன் சொன்ன பிறகுதான், பட்டென அவனை விட்டு விலகியவள், சங்கடமாக அவன் முகம் நோக்கினாள். அவளைக் கண்டுகொள்ளாமல், அவளது இடக்கரத்தை

வலக்கரத்தோடு கோர்த்தவன், “சாரி..” மெதுவாக உரைக்க, அவளோ புரியாமல் அவனை ஏறிட்டாள்.

நாயின் பயத்தில் இருந்தவளுக்கு, அவன் சொன்னது கேட்டிருக்கவில்லை. அவளுக்கு தான் சொன்னது கேட்கவில்லை என்பதை புரிந்தவன், “இல்ல, நான்தானே உன்னை பீச்சுக்கு கூட்டி வந்தேன்.., அதான்..” சமாளித்தான்.

“எனக்கு பிடிச்சிருக்கு..” காற்றாகிப் போன குரலில் அவள் உரைக்க, அவள் விரல்களை தன் விரல்களால் இன்னும் அழுத்தமாக பற்றிக் கொண்டான்.

அவள் கையோடு கை கோர்த்து அவன் நடக்க, அவள் பக்கமாக நீட்டியிருந்த கரம் மட்டுமே மற்றவர்களின் பார்வைக்கு விழ, கூடவே அவன் தனியாக பேசிக்கொண்டு போவதுபோல் இருந்தது.

அதை தூரத்தில் இருந்து கவனித்த முபாரக், “நான் இப்போ வர்றேன்” அவளிடம் சொல்லிவிட்டு, கிட்டத்தட்ட இளமாறனை நோக்கி ஓடினான்.

அவர்கள் முன் மூச்சு வாங்க நின்றவன், “மச்சான்.., என்னை நாய் துரத்துறதை கூட கண்டுக்காமல் வந்திருக்கேன். ஏன் தெரியுமா?” அவன் பார்வை குறிப்பாக அவன் கரத்தில் பதிய, இளமாறன் அதை கண்டுகொள்ளவே இல்லை.

“ஏண்டா மச்சான்.., லவ்வருக்கு பஜ்ஜி வாங்கிக் கொடுக்க காசு இல்லையா?” சீரியசாக முகத்தை வைத்துக் கொண்டு கேட்க, விஸ்மையா பக்கென சிரித்துவிட்டாள்.

“என் நேரம்..” அவன் தலையில் அடித்துக் கொள்ள,

“ஓ.., அது இல்லையா..? வேற என்ன? ஏதாவது சேட்டை பண்ணி, அவ உன்னை தொரத்தி விட்டுட்டாளா?” அடுத்ததாக கேட்க, அவனை கொலைவெறியின் முறைத்தான்.

“உன்மேல் அக்கறை பட்டு வந்தேன் பாரு.., எனக்கு இது தேவைதான்” அவனிடம் பொரிந்தவன், “அம்மா தங்கச்சி.., சுத்தி இருக்குறதில் பாதிபேர் இவனைத்தான் பாக்கறாங்க. உங்க ரொமான்ஸை தனியா போய் வச்சுகிட்டா பரவாயில்லை” குத்துமதிப்பாக அவள் பக்கம் பார்த்தவாறு உரைக்க, பட்டென தன் கரத்தை விலக்கிக் கொண்டாள்.

“எரும.., என்ன பேசுற நீ..?” அவனை கண்டித்தான்.

“நீ பண்ணும்போது நல்லா இருந்தது, நான் சொன்னா மட்டும் கோபம் வருதா? இப்போ நீ கையை கோர்த்துகிட்டு போனியே, அதுக்கு என்னடா ராசா அர்த்தம்?” அவன் கேட்க, இளமாறனால் பதில் சொல்லவே முடியவில்லை.

“சரி சரி.., நீ போ.., நான் பாத்துக்கறேன்” அவனை அனுப்பியவன், அவளோடு நடையைத் தொடர்ந்தான்.

சற்று தூரத்தில் மீன் பிடிக்கும் படகுகள் நிறுத்தப் பட்டிருக்க, அதன் மறைவில் காதலர்களின் செல்ல சீண்டல்களும், இதழ் தீண்டல்களும் சுகமாய் அரங்கேறிக் கொண்டிருந்தது.

அதைப் பார்த்த இளமாறன் கண்டுகொள்ளாமல் நடக்க, விஸ்மையாவுக்குத்தான் ஒரு மாதிரியாக, அவஸ்தையாக இருந்தது. ‘இங்கிருந்து போய்விட்டால் பரவாயில்லை’ அவள் எண்ண, இளமாறனோ பேச்சு சுவாரசியத்தில் நடந்துகொண்டே இருந்தான்.

நிறைய தூரம் வந்துவிடவே, “நாமளும் ஒரு படகு பக்கம் உக்காரலாமா?” அவன் கேட்க,

“ஹாங்..” அதிர்ந்து விழித்தாள் விஸ்மையா.

***

# பகுதி - 12.

அன்றைக்கு இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் ஒன்டே கிரிக்கெட் மேட்ச். தன் கடைக்கு மட்டம் போட்டுவிட்டு, இளமாறனின் வீட்டுக்கு வந்துவிட்டான் முபாரக். அவனையும் விடுப்பு போட வைத்து விட்டான்.

நண்பர்கள் இருவரும் கிரிக்கெட்டில் மூழ்க, அவர்களுக்கு அருகில் அமர்ந்து தானும் டிவியை பார்க்கும் சாக்கில், அவ்வப்பொழுது இளமாறனை பார்த்துக் கொண்டிருந்தாள்.

இப்பொழுதெல்லாம் அவனைக் காணும் பொழுதே அவள் முகத்தில் ஒரு இளநகை வந்து ஒட்டிக் கொள்ளும். அன்று நாமளும் ஒரு போட்டுக்கு பக்கத்தில் உக்காருவோமா என அவன் கேட்டதும், அதற்கு அவள் அதிர்ந்து விழித்ததைப் பார்த்தவனது முகத்தில் டன் கணக்கில் அசடு வழிந்தது.

“ஹையோ.., நான் அந்த அர்த்தத்தில் கூப்பிடலை” அவன் அலற, அது தெரிந்தாலும்,

“பிறகு..?” சிறு கோபமாக வினவ,

“காலேஜில் படிச்சப்போ ஒரு பொண்ணை கூட கரெக்ட் பண்ண எனக்கு தைரியம் போறாது. இதில் ஆத்மாவை எல்லாம் கரெக்ட் பண்ண எனக்கு தெரியாது தாயே.., என்னை உட்டுடு..” இப்பொழுது நிஜமாகவே அலறினான்.

“அப்போ போட்..” அவள் கேட்க,

“இனிமேல் போட்டுன்னு எழுதுன வார்த்தையை கூட படிக்க மாட்டேன் போதுமா?” அவன் கையெடுத்து கும்பிட, விழுந்து விழுந்து சிரித்தாள்.

அந்த நினைப்பில் இப்பொழுதும் புன்னகை மலர, அவள் சிரிப்பதை பார்த்தவன், ‘என்ன..?’ என்பதுபோல் பார்வையால் வினவினான்.

அந்த நேரம் கோலி செஞ்சுரி அடிக்க, தன் டிஷர்ட்டை கழட்டிய முபாரக், “யாஹோ.., யாஹூ.., ஊ..” கையில் வைத்து அதைச் சுற்ற, திடுமென அவனது இந்த செய்கையை எதிர்பாராத இளமாறன் திகைக்க, விஸ்மையாவோ தன் கைகளால் முகத்தை பட்டென மூடிக் கொண்டாள்.

“நாயே.., முதல்ல சட்டையைப் போடுடா..” அவனைப் பிடித்து அமுக்கியவன், எதிர் இருக்கையை சுட்டிக் காட்ட,

“ஐயய்யோ.., என் மானமே போச்சே..” அலறியவன், வேகமாக அதை அணிந்து கொள்ள, அவன் வாயை மூடினான் இளமாறன்.

“ஏண்டா.., அவங்க இங்கேயா இருக்காங்க. எதுவும் பாக்கலை தானே..” கையை நெஞ்சுக்கு குறுக்காக மறைத்துக் கொண்டவன் அவன் கரத்தை மெதுவாக விலக்கிவிட்டு கேட்க, விஸ்மையா விழுந்து விழுந்து சிரித்துக் கொண்டிருந்தாள்.

“உன் திருவாயை மூடுடா..” அவனை அடக்கியவன், “அடச்சீ முதல்ல கையை எடுத்துத் தொலை, பாக்குற எனக்கே ஒரு மாதிரி இருக்கு” அவன் சொல்ல, பட்டென கரத்தை விலக்கிக் கொண்டான்.

அதற்குள் விஸ்மையா அந்த இடத்தை விட்டு அகன்றிருந்தாள். “அவங்க இங்கே இருக்காங்கன்னு முதல்லையே ஏண்டா சொல்லலை?” நண்பனிடம் பாய,

“ம்.., நீ இப்படி சட்டையைக் கழட்டி சீன் போடுவன்னு எனக்கு எப்படிடா தெரியும்?” அடக்க மாட்டாமல் சிரித்தான்.

“அப்படிச் சொல்லாதடா..” அவன் வாயை மூட, “அவ போய்ட்டா..” அவன் சொன்ன பிறகுதான் முபாரக் நிம்மதியானான்.

“கிரிகெட் பாக்குற மூடே போச்சு. நான் மீதியை என் வீட்ல போய் பாத்துக்கறேன்” அவன் கிளம்ப முயல,

“என்னடா.., அங்கே உன் ஆள் முன்னாடி சீன் போட போறியா?” இளமாறன் கேட்க, அப்படியே கடுப்பானான்.

“அவகிட்டே போட்டா பரவாயில்லை போடா.., அது சரி, எனக்கு ஒரு சந்தேகம்” அவன் பீடிகையாக துவங்கவே, நிச்சயம் எதுவோ வில்லங்கமாக கேட்கப் போகிறான் என்று தெரிந்து போனது.

“என்னடா..?” அவன் கேட்க,

“இல்ல.., இந்த மாதிரி ஆவிக்கெல்லாம் நிறைய பவர் இருக்குமாமே, அவங்க கிட்டே சொல்லி, என் அப்பாவோட ஏடிஎம் கார்டோட பின் நம்பர் மட்டும் கேட்டு சொல்றியா?” அவன் கேட்க,

“அதை ஏண்டா அவகிட்டே கேட்டுட்டு, நான் உன் அப்பாகிட்டே கேட்டு சொல்றேனே” அவன் தன் அலைபேசியை எடுக்கவே, “நீ ஆணியே புடுங்க வேண்டாம் ராசா.., நான் கிளம்பறேன்” அவன் செல்ல முயன்றான்.

“என்னை தேவையில்லாமல் லீவ் போட வச்சுட்டு, நீ எங்கே தப்பிச்சு போகப் பாக்குற, உக்காருடா..” அவனைப் பிடித்து அமர்த்திக் கொண்டான். அதன் பிறகு, கிரிகெட் முடியும் வரைக்கும் விஸ்மையாவை வெளியே காணவே இல்லை.

கிரிக்கெட் முடிந்து அவன் செல்லப் போகையில், “நாளைக்கு சாயங்காலம் முருகன் கோவிலுக்கு ஆறு மணிக்கு சரியா வந்துடுடா. நானும் அங்கே இருப்பேன்” உரைக்கவே, அவனிடம் விடை பெற்றுச் சென்றான்.

அதேபோல் மறுநாள் மாலையில், இருவரும் கோவிலுக்குச் செல்ல, விஸ்மையாவும் உடன் வந்தாள். இளமாறன் பெரிதாக எந்த பரபரப்பையும் காட்டவில்லை. கோவிலுக்குள் சென்றவன், முருகனை வணங்கிவிட்டு

அங்கே இருந்த கல் மண்டபத்தில் வாசலைப் பார்த்தவாறு அமர்ந்து கொண்டான்.

அவன் அருகில் அமர்ந்திருந்த விஸ்மையாவின் மனம் உள்ளுக்குள் மறுகிக் கொண்டிருந்தாலும், வெளியே அமைதியாகவே இருந்தாள். இளமாறன் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதே, முபாரக் உள்ளே வர, சரியாக இளமாறனைப் பார்த்தவன் அவன் அருகில் சென்று அமரப் போனான்.

“டேய்.., இந்த பக்கம் உக்காரு..” அவன் விஸ்மையாவின் அருகில் உட்காரப் போகவே, அவனைத் தடுத்தான்.

“பெண் ஆவிகிட்டே கூட என்னை உக்கார விடமாட்டியாடா? நல்லா வருவடா” போலியாக அலுத்துக் கொண்டவன், அவனுக்கு மறு பக்கம் அமர்ந்தான்.

கூடவே, “ஆவியெல்லாம் கோவிலுக்குள் வர முடியாதுன்னு சொல்வாங்களேடா?” அவனிடம் சந்தேகம் கேட்க அவனை முறைத்தான்.

“சரி அதை விடு, நாம விஷயத்துக்கு வருவோம். பொண்ணு எப்படி இருக்கான்னு உங்க அம்மா சொன்னாங்க?”.

“அப்படியே மகாலஷ்மி மாதிரி இருப்பாளாம்” ஒரு அறிவிப்புபோல் உரைத்தான்.

“என்னடா ரொம்ப சலிப்பா சொல்ற, அவளை கட்டிக்கிற ஐடியால தானே இருக்க?” அவனிடம் கேட்க, இளமாறனின் பார்வை, விஸ்மையாவிடம் நிலைத்தது.

அதே நேரம், “மச்சான்.., நீ போட்டோல காட்டினது அந்த பொண்ணைத் தானே” அவன் கேட்க, சட்டென அந்தப் பக்கம் பார்த்தான்.

போட்டோவில் பார்த்ததை விட, ஒரு சுற்று பருமனாக இருந்தாள். முகத்தில் பெரிதாக எந்த மாற்றமும் இல்லாமல்

போகவே, அவர்களால் அவளை சுலபமாக அடையாளம் காண முடிந்தது.

அவளைப் பார்த்தவுடன் இளமாறன் நினைத்தது இதுதான்.., “அவளது கல்லூரி காலத்து புகைப்படத்தை தனக்கு அனுப்பி இருக்கிறார்கள்’ என எண்ணிக் கொண்டான்.

அவள் கையில் சிறு தட்டோடு உள்ளே அர்ச்சனை நடக்கும் இடத்துக்குச் செல்ல, அவளையே பார்த்திருந்த முபாரக், “மச்சான்.., உங்க அம்மா மகாலட்சுமியை, முன்ன பின்ன போட்டோவில் கூட பாத்திருக்க மாட்டாங்க போலடா” முபாரக் பட்டென சொல்ல, வாய்விட்டே சிரித்துவிட்டான்.

“ஏண்டா இப்படி சிரிக்கிற..? உனக்கும் அப்படித்தான் தோணுச்சா?” அவன் கேட்க, அவன் முதுகிலேயே ஒன்று போட்டான்.

“கேலி பண்ணாதடா. பொண்ணு கொஞ்சம் குண்டு அவ்வளவுதான். நமக்கு பிடிக்கலன்னா பேசாமல் இருந்துடணும், அதை விட்டு, இப்படியெல்லாம் சொல்லக் கூடாது. அவளுக்குன்னு ஒருத்தன் எங்கேயாவது பொறந்திருப்பான்” அதைச் சொல்கையில் விஸ்மையாவையே பார்த்தான்.

“நல்ல வேளைடா அது நீ இல்லை. முதல்ல அந்த பொண்ணை ஒரு போட்டோ எடுத்து அம்மாவுக்கு அனுப்பு. இந்த மகாலஷ்மியை அவங்களும் கண் குளிர பாக்கட்டும்..” அவன் தன் அலைபேசியை எடுக்க, அவனை தடுத்தான்.

“மத்தவங்க பெர்மிஷன் இல்லாமல் அவங்களை போட்டோ எடுப்பது தப்பு. அம்மாவோட திருப்திக்கு வேண்டி வந்தோம், பார்த்தோம்.., நம்ம முடிவை சொல்லப் போறோம் அவ்வளவுதான். வா போகலாம்..” அங்கிருந்து எழுந்து விட்டான்.

இங்கே வந்தது முதல் அவள் முகம் சோர்ந்து கிடந்ததையும், அந்த பெண்ணை பார்த்த அந்த நொடி, அவள் முகம் சற்று வாடியதையும், படபடப்பாய் தன் முகம் நோக்கியதையும் கவனித்துக் கொண்டுதான் இருந்தான்.

கடந்த சில நாட்களாக அவள் தன்னிடம் பழகும் விதத்தை வைத்து, அவளுக்கு தன்மேல் விருப்பம் இருக்கிறது என்பதை அவன் அறிந்து கொண்டான். இது எப்படி சரியாக வரும் என்பது அவனுக்குத் தெரியவில்லை.

ஆனாலும், அவள் முன்னிலையில் ஒரு பெண்ணைப் பார்த்து, அவளை திருமணம் செய்துகொள்ளும் தைரியம் தனக்கு இல்லை என்பதை இங்கே வந்த பிறகுதான் அவன் தெளிவாக உணர்ந்தான்.

சொல்லப்போனால், இது அவனுக்கே அவன் வைத்துக் கொண்ட பரீட்சை என்றுதான் சொல்ல வேண்டும். முதலில் தாயிடம் சம்மதம் சொன்னபொழுது அவன் மனதில் எந்த சலனமும் இல்லை. ஆனால், நாட்கள் கடக்க, விஸ்மையா அவன் மனதுக்குள் நுழைந்து கொண்டாள்.

ஆனாலும், அவள் நிலை உணர்ந்தவனுக்கு, தான் இப்படியே வாழ்க்கை முழுவதும் இருக்க முடியாது என்ற காரணத்தால்தான், அவனது தாய் சொன்ன இந்த பெண்ணை பார்க்க வந்தான். அவள் வரும் வரைக்கும் இயல்பாக இருக்க முடிந்த அவனால், அவள் வந்த பிறகு அப்படி இருக்க முடியவில்லை.

வந்த அவளைப் பார்த்ததை விட, விஸ்மையாவின் முகத்தைத்தான் அதிகம் பார்த்தான். அவளுக்கான தன் தவிப்பு, இதே நிலைமையில் அவளை வைத்துக் கொண்டு, வாழ்க்கையின் அடுத்த கட்டத்துக்கு செல்ல முடியாது என்பது அவனுக்குத் தெளிவாக புரிந்து போனது.

முபாரக் அப்படியே வீட்டுக்கு கிளம்பிவிட, தன் வீட்டுக்கு வந்தவன், தாய்க்கு அழைத்து, பெண்ணைப் பற்றி

உரைத்துவிட்டு, தனக்கு வேறு வரன் பார்க்கச் சொல்லிவிட்டு அலைபேசியை வைத்தான்.

அவன் பேசுவதை அங்கே இருந்த ஜன்னல் வழியாக வெளியே பார்ப்பதுபோல் பாவனை செய்துகொண்டிருந்த விஸ்மையாவும் கேட்டுக் கொண்டுதான் இருந்தாள். ‘இந்த துன்பத்தை இனிமேல் தொடர்ந்து அனுபவிக்க வேண்டுமா?’ துயரமாக எண்ணிக் கொண்டாள்.

அலைபேசியை வைத்துவிட்டு, அவள் அருகே நெருங்கியவன்.., “விஸ்மையா..?” அவள் காதுக்கு அருகில் அழைக்க, பட்டென அவன் பக்கம் திரும்பினாள்.

அவள் கண்கள் இரண்டும் பரிதவிப்பாய் அவனை ஏறிட்டது. அவள் கண்களில் இருந்த கலக்கம் அவனைத் தாக்க, “டூ யூ லவ் மீ..?” இன்னும் அதிகமாக அவளை நெருங்கி, அவள் கண்களை உற்றுப் பார்த்து கேட்டான்.

அவள் என்ன பதில் சொல்வதாம்? மௌனமாக தலை கவிழ, “என்னைப் பார்த்து பதில் சொல் விஸ்மையா” அவள் தாடையைப் பிடித்து நிமிர்த்தினான்.

“அதனால் எந்த பிரயோஜனமும் இல்லை. நாம.., நீங்க இப்படியே இருக்க முடியாது” அவள் துக்கமாய் உரைக்க, அவனுக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை.

“இதுக்கு ஒரே ஒரு வழிதான் இருக்கு” அவன் சொல்ல,

“என்ன வழி..” அப்படி ஒன்று இருக்கிறதா என தவித்தாள்.

“நீ யார்ன்னு என்கிட்டே சொல்லணும். உன் அப்பா.., அம்மா.., குடும்பம் எனக்குத் தெரியணும் விஸ்மையா. இப்படியே என்னால் இருக்க முடியாது. நான் பிரம்மச்சாரி ஆக விரும்பலை. எனக்கும், மனைவி, குழந்தைகள் இப்படி வாழ ஆசை இருக்கும்தானே..” அவன் சொல்லச் சொல்ல, அவள் கண்களில் கண்ணீர் பெருகியது.

அவன் கேட்பதும், சொல்வதும் நியாயம்தானே.., அவனது நியாயமான ஆசையை அவள் எப்படி மறுக்க முடியும்?

“எனக்கு எதுவும் நினைவுக்கு வரலை.., நான் என்ன செய்ய?” தவிப்பாய் கேட்க,

“நீ இப்படி சொல்ல முடியாது. எனக்குத் தெரிஞ்சாகணும்.., சொல்லு, ஏதாவது.., ஏதாவது ஒரு சின்ன க்ளூ..,என்னால் உன்னை அப்படியே விட முடியாது. நீ சொல்லு.., உனக்கு நான் வேணும்தானே..” அவன் கோபமாக கத்திக் கொண்டிருக்க, நொடியில் அவன் கழுத்தை வளைத்தவள், அவன் இதழ்களில் தன் இதழைப் பாதித்தாள்.

அவளது இந்த செய்கையை எதிர்பாராத இளமாறன், அவளிடமிருந்து விலக முயல, அந்த பூவுடலுக்கு எங்கிருந்துதான் அவ்வளவு பலம் வந்ததோ தெரியவில்லை, அவள் பிடியில் இருந்து அவனால் அசையக் கூட முடியவில்லை.

இதழ்களுக்குள் சில்லென்ற ஒரு தாக்கம்.., அதைவிட, அவன் சுவாசத்தை தீண்டிய அந்த மல்லிகை மணம். சில நாட்களாக அவன் உணராத அந்த வாசனையை அவன் சுவாசம் உணர, அவன் இந்த உலகிலேயே இல்லை.

அவள் இடையை முரட்டுத்தனமாக வளைத்தவன், தன் பலம் கொண்ட மட்டும் அவளது கீழுதட்டை பற்களால் கடித்து வைத்தான். அவளுக்கு வலியெதுவும் இல்லை போல..., அவளுக்கு சுவாசமும் வேண்டியிருக்கவில்லை.

அவள் இதழ்களுக்குள் தன் தேடலை நடத்தியவனின் அடிவயிறு வரைக்கும் சில்லென்ற இதம் பரவ, அவள் வாய் வழியே அந்த ஆன்மாவை தீண்டிக் கொண்டிருந்தான்.

அவன் கரம் உயர்ந்து அவள் முதுகை வளைக்க, அவன் கைகளுக்குள் அவள் இருந்தாலும், அவன் உணர்ந்தது என்னவோ ஒரு வெற்றிடம்தான். “இளா..” அவள் மனதுக்குள் உரைத்த அந்த பெயர், அவன் செவிகளை

நிறைக்க, இளமாறன் கைகளுக்குள் கரைந்து காணாமல் போயிருந்தாள் விஸ்மையா.

***

# பகுதி - 13.

இளமாறனும், விஸ்மையாவும் சில மாதங்களாக தங்கள் லோகத்தில் சஞ்சரிக்கத் துவங்கி விட்டார்கள் என்றே சொல்லலாம். முபாரக், இளமாறனை என்ன சொல்லி திருத்துவது எனத் தெரியாமல் விழி பிதுங்கினான்.

இளமாறனின் தாய் சொன்ன பெண்கள் ஒவ்வொருவரையும் மறுக்காமல் சென்று பார்த்தான். ஆனால், யாரையும் பிடித்திருக்கிறது என்றோ, திருமணம் செய்யும் மனநிலையிலோ அவன் இருக்கவே இல்லை. அதை நன்கு அறிந்தவன் முபாரக் மட்டுமே.

அதே நேரம் அவனது திருமண நாளும் நெருங்கவே, அவனால் முன்புபோல் இளமாறனை தினமும் சென்று சந்திக்க முடியவில்லை. முபாரக்குக்கு இளமாறன் அந்த ஆத்மாவுக்கு உதவுவதில் எந்த தயக்கமும் இல்லை, ஆனால், அவன் வாழ்க்கையில் அவளுக்கு பங்கு கொடுக்கும் அவனது முடிவை அவன் ஏற்க தயாராக இல்லை.

இளமாறனின் பெற்றவர்களிடமோ, மற்றவர்களிடமோ கூட முபாரக்கால் உண்மையை உரைக்க முடியவில்லை. சில விஷயங்களை சுமனிடமே கூட சொல்லத் தயங்கினான். வீணாக ஏன் வெளிநாட்டில் இருப்பவனை தொல்லை செய்ய வேண்டும் என்பது அவனது எண்ணம்.

இப்பொழுது போகும் போக்கை பார்த்தால், இதை யாரிடமாவது சொல்லாமல் போனால், பின்னால் பிரச்சனை முற்றிய பிறகு முடிவெடுத்து என்ன பயன்? எனவே சுமனுக்கு அழைத்தான். அன்று வெள்ளிக்கிழமை, சுமனுக்கு விடுமுறை தினம்.

காலையில் தாமதமாக எழுந்து அவன் தன் வேலையை பார்த்துக் கொண்டிருக்க அவனுக்கு அழைத்தான்.

“சொல்லுடா கல்யாண மாப்பிள்ளை, நீ என்னை கூப்பிடவில்லை என்றாலும் அரசியும், என் பொண்ணும் கண்டிப்பா வருவாங்க. எனக்கு இங்கே மூணு வருஷ காண்ட்ராக்ட் இருக்கு, அது முடியாமல் நான் இங்கே இருந்து அசையவே முடியாது.

“சாரிடா மச்சான்.., பட் கண்டிப்பா நான் ஊருக்கு வந்த உடனே உன்னை வந்து பார்ப்பேன்..” அவன் சங்கடமாக சொல்லிக்கொண்டே போக, அவன் பேசி முடிக்கும் வரைக்குமே அமைதியாக இருந்தான்.

அவன் அமைதியைப் பார்த்தவன், “என்னடா மச்சான்.., ஏதாவது பிரச்சனையா? கல்யாணத்தில்..” அவன் இழுக்க,

“ச்சே.., அதெல்லாம் எதுவும் இல்லடா. இது.., நம்ம மாறன் பத்தி. அவன் செய்யிறது எதுவுமே எனக்கு சரியாவே படலை. நான் சொன்னா எதையுமே கேட்டுக்க மாட்டேங்கறான். எனக்கு என்னவோ பயமா இருக்கு. அந்த பேய் அவனை மயக்கி வச்சிருக்கோன்னு தோணுது..” அவன் சொல்ல,

“இதெயெல்லாம் ஏண்டா என்கிட்டே அப்போவே சொல்லலை. நான் கேட்டதுக்கு எல்லாம் சரி ஆயிடுச்சு, அவன் என்னவோ தெரியாமல் உளறினான்னு சொன்ன?” டென்ஷன் ஆனான்.

“ம்ச்.., தேவையில்லாமல் உன்னை ஏன் டென்ஷன் பண்ணணும்னு விட்டுட்டேன். ஆனா இப்போ.., நிலைமை கை மீறி போகுதுடா” எனத் துவங்கி, நேற்றுவரை அங்கே நடந்தவற்றை உரைக்க, சில நிமிடங்களுக்கு சுமனால் எதுவும் பேசவே முடியவில்லை.

“இத்தனை நாள் இதையெல்லாம் சொல்லாமல், நிலைமை கை மீறி போன பிறகு சொல்றியேடா உன்னை என்ன செய்ய? இது எனக்கு முதல்லையே தெரிந்திருந்தால், உடனே அவனை வீட்டை காலிபண்ண சொல்லியிருப்பேன்.

ஏதோ பூஜை, மந்திரம்னு எதையாவது ட்ரை பண்ணியிருக்கலாம்.

“இப்போ.., அவளோடவே பயித்தியம் மாதிரி இருக்கான்னு சொல்ற, இந்த நிலையில் என்ன செய்ய முடியும்? ஏண்டா உனக்கெல்லாம் மண்டையில் மூளை இருக்கா இல்லையா? இல்லன்னா கடவுள் அதுக்கு பதிலா களிமண்ணை படைச்சு இருக்காரா?

“எனக்கு இப்போ வரவே முடியாத சூழ்நிலை. இல்லன்னா நான் நேர்ல வந்து அவனை ஒரு வழி பண்ணியிருப்பேன். போன்ல அவன்கிட்டே நான் பேசிட்டுதான் இருக்கேன். ஆனா, இதையெல்லாம் பத்தி என்கிட்டே மூச்சுகூட விடலை பாத்தியா?

“நீ என்ன செய்வியோ எனக்குத் தெரியாது. அவன் அந்த பேயை விடணும். உன்னால் பேச முடியலையா.., அவன் வந்த உடனே எனக்கு போன் பண்ணு, அவன்கிட்டே நான் பேசறேன். அவன் கேக்கலையா.., அவங்க வீட்டுக்கு சொல்லிடலாம்.

“இதையெல்லாம் நாமளே வச்சுட்டு இருக்க முடியாது. இந்த விஷயம் அவங்க அம்மாவுக்கு தானா தெரிய வரப்போ, உன் வீட்டுக்கு அனுப்பினேன், என் பிள்ளையை இப்படி பண்ணிட்டியேன்னு ஒரு வார்த்தை சொல்லிட்டா, நானெல்லாம் இருக்குறதுக்கே அர்த்தம் இல்லாமல் போய்டும்..” உணர்ச்சிவசப்பட்டு பேசினான்.

அவனால் நண்பன் இப்படி ஒரு சிக்கலில் மாட்டி இருக்கிறான் என்பதை ஜீரணிக்கவே முடியவில்லை. “என்னடா நீ.., பெரிய வார்த்தை எல்லாம் பேசற? நான் அவன்கிட்டே பேசறேண்டா. நம்மளால் அப்பவும் முடியலன்னா அவங்க அம்மாகிட்டே சொல்லிடலாம்.

“நீ இதையே நினைச்சு டென்ஷன் ஆகாதே. இத்தனைநாள் உன்கிட்டே சொல்லாமல் இருந்ததுக்கு காரணமே, இப்படி நீ டென்ஷன் ஆவன்னுதான். என் மேரேஜுக்கு வருவான்,

அப்போ அவனை பாத்து பேசறேன்” உரைத்தவன் அலைபேசியை வைத்து விட்டான்.

இங்கே இவர்களது டென்ஷனுக்கு காரணமானவனோ, விஸ்மையாவோடு உரையாடிக் கொண்டிருந்தான். அதுவும் சற்று கோபமாக.., அவன் கோபத்தைப் பார்த்தவளுக்கு, என்ன சொல்வது என்றே தெரியாமல் கையைப் பிசைந்தவாறு நின்றிருந்தாள்.

“நான் இத்தனை நாளா கேட்டுட்டே இருக்கேன், நீ இன்னுமே எந்த விஷயத்தையும் சொல்லாமல் இருந்தால் என்ன அர்த்தம்? எங்க அம்மா எனக்கு விடாமல் பொண்ணு பாக்கறாங்க அது தெரியுதா? எத்தனை நாள்தான் நான் சாக்கு சொல்லி தப்பிக்கிறது?” அவன் கேட்க, அவன் கேள்விக்கு சத்தியமாக அவளால் பதில் சொல்ல முடியவில்லை.

“நீங்க வேண்ணா கல்யாணம் பண்ணிக்கோங்க. நான் இப்படியே இருந்துடறேன். உங்களை பாத்துட்டே..” அவள் பேசிக் கொண்டிருக்க, அவளை அடிக்க கை நீட்டிக் கொண்டு கோபமாக அவளை நெருங்கினான்.

அவள் அதிர்ந்து பின்வாங்க, “ஒரு பொண்ணை அடிச்சுட்டேன் என்ற கெட்ட பெயர் எனக்கு வேண்டாமேன்னு பாக்கறேன்” அவள் பயத்தை பார்த்தவன், முயன்று தன்னை அடக்கினான்.

“நான் எவளையோ கல்யாணம் பண்ணிக்கிறதுக்கா உன்னை கட்டிக்கிட்டு அழறேன்? எப்படி.., நீ இப்படியே இருக்குறதா..? அதுக்கு ஏன் என்னோட இருந்து என் உயிரை வாங்கற? வேற எங்கேயாவது போய் தொலைய வேண்டியது தானே.

“ச்சே.., பொண்ணுங்கதான் இப்படி இருக்குதுன்னா, அதுங்க ஆத்மாவும் அப்படியே இருக்குது. முழு சுயநலம்.., அவங்களுக்கு ஒரு பிரச்சனை வரும்னா அப்படியே ஒதுங்கிக்கிறது. நாங்கல்லாம் சட்டையை கிழிச்சுகிட்டு

ரோட்ல அலையணும் அதானே..” அவன் காரமாக கத்திக் கொண்டிருக்க, அவன் தலையை மெதுவாக வருட, சில்லென்ற அந்த ஸ்பரிசத்தில் அவன் மனம் அப்படியே குளிர்ந்து.

மெதுவாக கண் திறந்தவன், “ஒவ்வொரு முறையும் நான் கேக்கும்போது இப்படிதான் செய்யற. இது தற்காலிக அமைதி. எனக்கு முழு அமைதி வேணும். கனவிலேயே என்னால் வாழ முடியாது விஸ்மையா.., நினைவில் வாழணும்..” அவன் ஏக்கமாக உரைக்க, அவனை அப்படியே இறுக்கிக் கொண்டாள்.

“கண்டிப்பா நான் முயற்சி பண்றேன்.., எனக்காக இல்ல.., நமக்காக..” அவன் காதுக்குள் உரைக்க, ஒரு ஏகாந்தத்தில் திளைத்திருந்தான்.

வெளியே மழை கொட்டித் தீர்க்க, சென்னையில் மழை வருவதே அபூர்வம் என்பதால், அதை அலுவலகத்தின் ஜன்னல் வழியாக ரசித்துக் கொண்டிருந்தான். ரசனை வெளியில் இருந்தாலும், மனதுக்குள் விஸ்மையாவின் நினைவுகள் விடாமல் துரத்திக் கொண்டிருந்தது.

அவள் அருகில் இருக்கையில் அவன் மனம் அமைதி அடைந்திருப்பதும், அவள் அருகில் இல்லாத நேரங்களில் குழம்பித் தவிப்பதுமாக ஒரு இக்கட்டான மனநிலையில் இருந்தான்.

‘இந்த மழை விடற மாதிரி இல்லை.., பேசாமல் வீட்டுக்கு கிளம்பிட வேண்டியதுதான். முடிந்தால் நாளைக்கு வரலாம், இல்லையா லீவ் போட்டுடலாம்’ மழையின் தாக்கம் அதிகம் இருக்க, எண்ணியவன், தன் வண்டி கீயை எடுத்துக் கொண்டான்.

அவன் கிளம்பி வெளியே வர, அவனது வண்டிக்கு அருகில் நின்றிருந்தாள் விஸ்மையா. அவளைப் பார்த்தவன், “என்ன இன்னைக்கு ஆபீஸ்க்கே வந்துட்ட?” அவளிடம் கேட்டவன், வண்டியில் ஏறி அமர்ந்தான்.

“அது.., நீங்க வர்ற வழியில் ரோட்ல ஒரு லாரி ஜேம் ஆகி நிக்குது. புல் ட்ராபிக்.., நீங்க அந்த பக்கம் வந்து சிக்கிட கூடாதேன்னு சொல்ல வந்தேன்” உரைத்தவள், அப்பொழுதும் தயங்கி நிற்க, அவளை கேள்வியாக ஏறிட்டான்.

“நீ கிளம்பல..?” அவன் கேட்க,

“இந்த மழையில் நனைய எனக்கு ரொம்ப புடிக்கும். அதோட.., உங்களோட நான் வண்டியில் வரவா?” அவள் கண்களும் முகமும் அவனிடம் கெஞ்சியது.

“நீ சாதாரணமா கேட்டாலே நான் ஓகே சொல்லுவேன். இப்படி கொஞ்சினால்” கேட்டவன் மெதுவாக அவள் நெற்றியில் முட்டி பிரிந்தான்.

அவனது வண்டி பெங்களூரில் இருந்து வந்துவிட்டதால், அதைத்தான் இப்பொழுது உபயோகப்படுத்திக் கொண்டிருந்தான். மழை வலுவாக இருக்கவே, பைக்கின் ஹெட்லைட் ஒளியால் கூட ரோட்டை பார்க்கவே முடியவில்லை.

எங்கே மேடு, எங்கே பள்ளம்.., டிரைனேஜ் மூடியை திறந்து வைத்திருக்கிறார்களா எதுவும் தெரியவில்லை. நீர்த்திவலைகள் வெள்ளிக் கம்பிகளாக தரையை நனைக்க, அந்த குளிரில் சாலைப் பயணத்தை ரசித்தே அனுபவித்தான்.

வீட்டுக்குச் செல்லும் சுற்றுப் பாதையில் பாதி வழியில் இருக்கையில், அங்கேயும் சிறு ட்ராபிக் ஜேம். மழையில் வீட்டுக்குச் சென்று சேரத் துடித்த குடிமக்கள் அனைவரும், ஹாரனை அலறவிட, வழியில் இருந்த கார் காரரோ கையை பிசைந்து கொண்டிருந்தார்.

அதைப் பார்த்தவன், “விஸ்மையா, இரு நான் என்னன்னு பாத்துட்டு வர்றேன்” உரைத்தவன், வாகனங்களைத் தாண்டி விரைந்தான்.

“சார்.., எனி பிராப்ளம்..? காரை தள்ளி ஓரமா விட நான் ஹெல்ப் பண்ணவா?” முதல் முறையாக கேட்ட கனிவான குரலில், நிமிர்ந்த அந்த கார் காரனோ, “சார், வண்டியில் பெட்ரோல் இல்லாமல் நின்னுடுச்சு. என் ப்ரண்ட் வாங்கப் போயிருக்கான்.

“காரை தள்ளி ஓரமா நிறுத்தலாம்னா.., மழைநீர் வடிகாலுக்கு தோண்டி வச்சிருக்காங்க. என்னால் எதுவுமே செய்ய முடியலை” மழையின் இரைச்சலுக்கு ஒருவர் குரல் மற்றவர்களுக்கு கேட்க, சற்று உரக்கவே பேச வேண்டி இருந்தது.

அதே நேரம், பின்னால் இருந்த கார் காரனோ, விடாமல் ஹாரனை ஒலிக்கவிட, அது ஏற்படுத்திய ஒலி அவர்கள் செவிப்பறையையே கிழித்தது எனச் சொல்லலாம்.

மழையில் நனைந்தவாறே, பின்னால் திரும்பிப் பார்த்த இளமாறன், தன் கையை உயர்த்தி, சற்று பொறுமையாக இருக்குமாறு கை காட்ட, அவனோ அதைக் கண்டுகொள்ளாமல் மீண்டும் ஹாரனை தெறிக்க விட்டான்.

மழையின் இரைச்சல், மற்ற வாகனங்களின் ஹாரன் ஒலியோடு கூடவே, இந்த கார் காரனின் செய்கையும் சேர, இரண்டு மூன்றுமுறை சொல்லிப் பார்த்த இளமாறனுக்கு சுள்ளென்ற கோபம் பெருகியது.

அதே நேரம், நின்றுபோன காருக்கு அவனது நண்பன் கேனில் பெட்ரோல் வாங்கிக் கொண்டு வரவே, அதை ஊற்றவிடும் பொறுமை கூட இல்லாமல் மீண்டுமாக ஹாரனை ஒலிக்க விட்டான்.

அதற்குள்ளாக விஸ்மையாவும் அங்கே வந்து சேர்ந்திருக்க, கோபமாக அந்த கார்காரனை நோக்கிப் போன இளமாறனின் பின்னால் சென்றாள். அந்த காரின் ஜன்னலை தட்டியவன் அதை இறக்கச் சொன்னான். அவன் இறக்கவே, “சார்.., அந்த கார் பெட்ரோல் இல்லாமல்

நின்னுடுச்சு. அதுக்கு இப்போதான் பெட்ரோல் வந்திருக்கு.., அதை ஊத்தினால்தான் காரை எடுக்க முடியும்.

“உங்களுக்கு ரொம்ப அவசரம் போல.., வேண்ணா ஒண்ணு பண்ணலாம்.., உங்களுக்கு அவ்வளவு அவசரம்னா, நீங்க இறங்கிப்போய் அந்த பெட்ரோலை ஊத்துங்க, அது வரைக்கும், உங்களுக்கு பதிலா நான் ஹாரன் அடிக்கறேன். என்ன ஓகே யா..?” முதலில் சின்ன குரலில் துவங்கியவன், முடிக்கையில் பெரும் குரலில் கத்தியிருக்க, அருகில் அமர்ந்திருந்த அவனது மனைவி முகத்தை திருப்பிக்கொண்டு வாய்மூடி சிரிக்க, அந்த கார் காரனோ பேயறைந்த முகபாவத்தில் ஸ்தம்பித்துப் போயிருந்தான்.

அவன் என்னவோ சண்டை போடப் போகிறான் என நினைத்த விஸ்மையாவும் இளமாறன் சொன்னதைக் கேட்டு விழுந்து விழுந்து சிரிக்கவே, இளமாறனின் முகத்திலும் அழகான ஒரு புன்னகை.

அவன் சிரித்தவாறே வருவதைப் பார்த்த அந்த கார் காரன், “என்ன சார், அப்படி என்ன சொன்னீங்க.., இப்போ ஹாரனையே காணோம்?” பின்னால் சுட்டிக்காட்டி கேட்க,

“அதுவா.., ஹாரன் அடிச்சு உங்க கை ரொம்ப வலிச்சிருக்கும், நான் வேண்ணா உங்களுக்கு பதிலா அடிக்கவான்னு கேட்டேன், மனுஷன் மிரண்டுட்டார்” அவன் சொன்ன பாவனையில் பக்கென சிரித்துவிட்ட அவன், தன் கை நீட்டி, “டாக்டர் தேவகடாட்சம்..” தன் கையை நீட்ட, “இளமாறன்..” தன் கையை நீட்டி இருவரும் அறிமுகப்படுத்திக் கொண்டார்கள்.

“வித்தியாசமான பேர்.., எந்த ஹாஸ்பிடல்..?” இளமாறன் கேட்க,

“பக்கத்தில் இருக்கும்  விமலா ஹாஸ்பிடல்.., அங்கே வந்தால், என் உதவி எப்பவும் உங்களுக்கு உண்டு” விடைபெற்று திரும்பினார்கள்.

ட்ராபிக் ஒரு வாறு கிளீயர் ஆகவே, இளமாறன் தன் பைக்கை நிதானமாக செலுத்த, ஒரு தெருவுக்குள் அவன் பைக் திரும்பிய அந்த நேரம், விஸ்மையாவின் இதயத்துடிப்பு சட்டென எகிற, தன் கரத்தை அவன் வயிற்றில் கோர்த்தவள், அவன் முதுகோடு ஒட்டிக் கொண்டாள்.

எப்பொழுதும் சில்லென இருக்கும் விஸ்மையாவின் ஸ்பரிசம், முதல் முறையாக மழையின் குளுமையை உணர்ந்ததாலோ என்னவோ, அவள் தேகம் வெம்மையாக இருப்பதுபோல் இருந்தது. ஏற்கனவே மெதுவாக சென்றுகொண்டிருந்த அவனது வண்டி இன்னும் ஊர்ந்து செல்ல, தன் முகத்தை அவன் முதுகில் அழுத்திக் கொண்டாள்.

“விஸ்மையா.., என்ன ஆச்சு..?” அவன் மெதுவாக கேட்க,

“இல்ல.., ஒண்ணும் இல்ல...” வேகமாக உரைத்தவளது பார்வையோ, “விமலா ஹாஸ்பிடல்” என்ற பெயர்ப் பலகையை பார்த்த அந்த நொடி, வெடுக்கென பார்வையை திருப்பியவள், “இளா.., வேகமா போங்க.., எனக்கு பயமா இருக்கு” அவள் சொல்லவே வண்டியை சற்று ஓரம் கட்டியவன் அவளைத் திரும்பிப் பார்த்தான்.

“போகலாம் இளா.., இங்கே.., இங்கே வேண்டாம்..” அவள் பார்வை பயமாய் மருத்துவமனை பக்கம் பாய, மழைத்துளிகள் முகத்தில் பட்டு தெறிக்க, அந்த ஐந்துமாடி கட்டிடத்தை நிமிர்ந்து பார்த்தான்.

சிவப்பு, நீல எழுத்துக்கள் கண்ணைப் பறிக்க, ‘விமலா ஹாஸ்பிடல்..’ அந்த எழுத்துக்கள் அவன் மனதில் அச்சடித்து பதிந்து போனது. எப்பொழுதும் பிங்க் வர்ணத்தில் இருக்கும் அவளது முகம் வெளிறிப்போய் இருக்க, வியர்வை கூட அரும்பி இருந்ததோ என்ற சந்தேகம் அவனுக்கு எழுந்தது.

“இளா.., பிளீஸ்.., எனக்கு என்னவோ..” அவன் சட்டையை உலுக்கவே, அதற்குமேல் அங்கே நிற்காமல் வண்டியைக் கிளப்பிவிட்டான். மனமோ, ‘இது என்னவென்று பார்க்கணுமே..’ குறித்துக் கொண்டது.

வீட்டுக்கு வந்த விஸ்மையா ஏதோ பயத்திலேயே இருக்க, அவளை ஹால் சோபாவில் அமர வைத்தவன், வேகமாக அறைக்குள் சென்று உடை மாற்றிவிட்டு வெளியே வர முயல, அவளே அவன் அறைக்குள் வந்தாள்.

வந்த வேகத்தில் அவனை அணைத்துக் கொண்டவள், “நீங்க என்னை விட்டு போக மாட்டீங்க தானே..” அவள் கேட்க, அவள் மனதை எதுவோ அலைக்கழிப்பதை உணர்ந்தவன், அவளை மெதுவாக அணைத்துக் கொண்டு நின்றிருந்தான்.

“விஸ்மையா.., நான் உன்னை விட்டு எங்கேயும் போக மாட்டேன். இங்கே பார்.., ஒண்ணும் இல்லை, ஹாஸ்பிடல் பாத்தியே.., உனக்கு ஏதாவது ஞாபகம் வருதா?” அவன் கேட்க மறுப்பாக தலை அசைத்தாள்.

“சரி விடு.., மழையில் நனைந்தது, எனக்கு ஏதாவது சூடா சாப்பிடணும் போல இருக்கு, கிச்சன்ல நேத்தைக்கு வாங்கின சிக்கன் இருக்கு, குளிருக்கு ப்ஃரை பண்ணி சாப்ட்டா சூப்பரா இருக்கும் வா..” அவளை அழைத்துச் சென்றவன், தன் வேலையைப் பார்த்தான்.

சமைத்து, அவன் சாப்பிட்டு முடிக்கும் வரைக்குமே அவள் தெளியவில்லை. அதைப் பார்த்தவன், படுக்கச் செல்கையில், அவளையும் தன்னோடு அழைத்துச் சென்றான். இரவில் தன் படுக்கை அறைக்குள் நுழையக் கூடாது என்பது அவளுக்கு அவன் இட்டிருக்கும் கட்டளை.

தன் படுக்கையில் படுத்தவன், அவளை தன்மேல் சாய்த்துக் கொள்ள, இலவம் பஞ்சு கூட கனமாய் இருக்கும், ஆனால் அவளோ காற்றாய் இருந்தாள்.

“இளா..” கிசுகிசுப்பாய் அழைத்தவள், அவன் நெஞ்சில் புதைந்து கொள்ள, அவளை இறுக அணைத்தவன், “எதுவும் யோசிக்காதே.., தூங்கு” அவளை மாற்ற முயன்றான்.

அவளோ.., “நான் எப்பவும் தூங்க மாட்டேன்..” அவன் கண்களுக்குள் ஊடுருவ, அவனோ அவள் விழிப் பார்வையில் கட்டுண்டான்.

“இளா.., இங்கே நடக்கும் எதுவும் நிஜமில்லை என்று எனக்குத் தெரியும், ஆனாலும்..” அவள் இதழ்கள் அவன் இதழ்களை நாடிச் செல்ல, அதை அமைதியாக வரவேற்றான். அவன் இதழ்களில் ஆழமாக முத்தமிட்டவள், அவனை ஏறிட, “தப்பு விஸ்மையா..” அவள் செய்ய விரும்புவது என்னவென்று அவனுக்குப் புரிகிறதுதானே.

“இங்கே தப்பே நடக்கப் போவதில்லை இளா.., எனக்கு என் இளா வேணும். அவன் கொடுக்கும் சில நினைவுகள் வேணும்..” அவனோடு உயிராய் இழைய.., சில கற்பனைகளுக்கு உருவம் கொடுக்க முயன்றார்கள்.

மெதுவாய்.., மிக மெதுவாய் அவளைத் தீண்ட, அவன் கண்களையே இமைக்காமல் பார்த்திருந்தாள். சில நொடிகளுக்குள் அவன் கண்கள் உணர்த்திய செய்தியை நம்ப முடியாமல் அவன் திகைக்க, “விஸ்மையா.., இது..?” அவன் பார்வை அவள் தேகம் எங்கும் பரவ, அவன் தேகம் மெல்லியதாய் சூடானது.

அவனை அருகே இழுத்தவள், “என் உடைகள் கூட என் கற்பனைதான் இளா..” அவன் காதுக்குள் கிசுகிசுக்க, அவள் மேனியில் கவிழ்ந்தான். நடக்கவே முடியாத ஒன்றை நடத்த துணிந்தார்கள். எதார்த்தத்தில் அவர்களது கற்பனை மட்டுமே சங்கமிக்க, உடல்களின் பங்கு சிறிதும் இருக்கவில்லை.

அவன் நினைவுகளில் அவள் ஊடுருவ.., கற்பனை கோட்டையில், ஒரு போர்வைக்குள், இரு வெற்று தேகங்கள் உரசிக் கொண்டன. இளமாறன் உறக்கத்தில்

இருக்கிறானா, விழிப்பில் இருக்கிறானா என அவனால் பிரித்தறிய முடியவில்லை.

ஆனால், தன் நினைவுகள்.., அதில் அவளோடு கலந்து, கூடிக் கழித்து, ஆழ்ந்த உறக்கத்தில் அமிழ்ந்தான் இளமாறன்.

***

# பகுதி - 14.

முபாரக்கின் திருமணத்துக்கு முந்தின நாள், அவனைப் பார்க்க செல்லத் தயாராகிக் கொண்டிருந்தான் இளமாறன். இடையில் இருந்த நாட்களில் அவன் கல்யாண வேலையாக அலைந்து கொண்டிருக்க, இளமாறன் விஸ்மையாவின் விஷயம் ஏதாவது தெரிய வருமா என தேடிக் கொண்டிருந்தான்.

இடையில் சுமன் போன் செய்து பேசிய பேச்சுக்கள் அனைத்தும் நினைவில் ஆடி இம்சித்தது. அவன் பேசியதில் எதுவும் தவறு இருப்பதாகவும் அவனுக்குத் தோன்றவில்லை. ஆனால், அதில் இருந்த உண்மையை ஏற்கத்தான் கடினமாக இருந்தது.

அன்று அவனுக்கு அழைத்த சுமன், எந்தவிதமான முன்னறிவிப்பும் இன்றி, “நீ உன் மனசில் என்னதான் நினைச்சுட்டு இருக்க மாறா? நீ செய்வது சரின்னு உனக்கே தோணுதா?” அவன் கேட்க, நிச்சயம் அந்த கேள்விக்கு அவனால் பதில் சொல்லவே முடியவில்லை.

அவன் கேட்பது புரியவில்லை என நடிக்கவும் முடியவில்லை. அவன் என்ன கேட்கிறான் என தெளிவாக புரிகையில், எப்படி நடிக்கவாம்?

“சுமன்.., நான் இதுக்கு ஒரு முடிவைத்தான் தேடிட்டு இருக்கேன். இன்னும் ஒரு வருஷம்.., அதுக்குள்ளே அவளைப்பற்றிய ஏதாவது ஒரு விஷயமாவது எனக்குத் தெரியாமல் இருக்காது...” அவன் சொல்லிக் கொண்டிருக்க,

“என்னடா.., அவளோட பெத்தவங்களைப் பத்தி தெரிஞ்சுகிட்டு, அவங்ககிட்டே போய், பேயை பொண்ணு கேக்கப் போறியா? அது உனக்கே பயித்தியக்காரத்தனமா தெரியலை” கத்தினான்.

“இல்லடா.., எனக்கென்னவோ அவ செத்திருப்பான்னு தோணலை” அவன் சொல்ல,

“ஆண்டவா.., நான் உன் முன்னாடி இருந்திருந்தால், நீ என்ன ஆகி இருப்பன்னே தெரியலை. ஏண்டா, உன் முன்னாடி ஆவியா அலையிறா, அவ சாகலன்னு சொல்றியே.., உனக்கென்ன பயித்தியமா?” தொண்டை கிழிய ஆக்ரோஷமாக பேசினான்.

“சுமன்.., நான் சொல்றதை ஒரே ஒரு நிமிஷம் கேள்..” இளமாறன் கெஞ்ச,

“நான் சொல்றதை நீ கேள் மாறா. அவ நல்லவளாவே இருக்கட்டும். அவளோட ஆத்மா சாந்தி அடையாமல் தவிச்சுட்டு இருக்கு, அதை சாந்தி செய்ய என்ன செய்யலாம்னு யோசிப்போம்..”

அவன் சொல்ல.., “இல்ல.., இல்ல.., என்னைப் பொறுத்த வரைக்கும் அவ சாகலை. இன்னும் ஒரு வருஷம்.., அதுக்குப் பிறகு, நீங்க என்ன சொன்னாலும் கேக்கறேன்” அவன் பதிலை எதிர்பாராமல் வைத்துவிட்டான்.

இப்பொழுது அதை யோசித்தவன், முபாரக் வீட்டுக்குச் சென்றால், நிச்சயம் அவனும் அதைப் பற்றி பேசுவான் எனத் தெரியும். ஆனாலும், அவனது கேள்விகளுக்கு பயந்து, அவன் கல்யாணத்துக்குப் போகாமல் இருக்க முடியுமா என்ன? எனவே கிளம்பினான்.

“விஸ்மையா.., நான் முபாரக் வீட்டுக்கு போறேன். நீ அங்கே வர வேண்டாம்” அவள் முகம் பார்க்க மறுத்தான்.

அவன் மனதில் ஓடும் எண்ணம் புரியவே, அமைதியாக இருந்துவிட்டாள். முபாரக் வீட்டுக்கு அவளையும் அழைத்துச் சென்றால், நிச்சயம் அவள் மனது வருத்தப்படும் என்பதால் அவளை தவிர்த்தான்.

மனதில் சுழன்ற எண்ணங்களால், சாலையில் அவன் கவனம் பதிய மறுத்தது. இரண்டு மூன்று வாகனங்கள் ஹாரன் அடித்து அவன் கவனத்தை கலைக்க முயன்றதை அவன் கவனிக்கவே இல்லை. ஒரு கட்டத்தில் தன்னை மறந்து, அவன் ஒன்வேயில் நுழைந்திருக்க, எதிரில் வாகனம் வரும் என எதிர்பாராமல், திருப்பத்தில் வேகமாக வந்த லாரி, இறுதி நிமிடம் சுதாரித்தும், அவனோடான மோதலை தவிர்க்க முடியவில்லை.

அவனது தலை லாரியின் முன்பக்கம் அடிக்க, அடுத்த நொடி, லாரியை விட்டு பல அடி தூரம் கடந்துபோய் விழுந்திருந்தான். அந்த நொடி, அவனுக்கு ஏதோ ஆபத்து என்பதை உணர்ந்த விஸ்மையா, அடுத்த நொடி அவன் முன்னால் இருந்தாள்.

“இளாளாளா...” அவளது அலறலை கேட்பார் அங்கு எவரும் இல்லை. சுற்றி இருந்தவர்களும் வேடிக்கை பார்க்க, விபத்து நடந்ததோ, முபாரக்கின் வீட்டுக்கு வெகு அருகில். அடுத்த நிமிடம் முபாரக்கின் வீட்டில், அவன் முன்னால், அவனை அழைத்துக் கொண்டிருந்தாள்.

அதோடு கூடவே.., அவள் கண்முன்னால் மற்றொரு விபத்து அரங்கேறிய நினைவும் சேர, சில நொடிகள் விக்கித்துப் போனாள். ‘எனக்கு ஆக்சிடெண்ட் ஆச்சு.., நான்..’ தன் நினைவுகள் மீட்டப்பட, அதை தடுத்தவள், இளமாறனுக்கு உதவுவதே முதல் செயல் என்ற முடிவுக்கு வந்தாள்.

“அண்ணா.., அவருக்கு ஆக்சிடெண்ட் ஆயிடுச்சு.., வாங்க.., உடனே வாங்க.., அண்ணா..” அவளது கதறல் அவனைத் தீண்டவே இல்லை.

அவன் திருமண விஷயமாக ஒருவரிடம் உரையாடிக் கொண்டிருக்க, அவனைக் கலைக்க தன்னால் ஆனமட்டும் முயன்றாள்.அவள் இருந்த பதட்டத்தில், எதையாவது எடுத்து, அவனை அடித்து கலைக்கலாம் என்பது கூட தோன்றவில்லை.

அவனை கலைக்க முடியவில்லை என்பதால், மீண்டுமாக விபத்து நடந்த இடத்துக்குச் செல்ல, அங்கே யாரோ ஒருவர் ஆம்புலன்சுக்கு போன் செய்து கொண்டிருந்தார். இலமாறனிடம் இப்பொழுது எந்தவிதமான அசைவும் இருக்கவில்லை.

அவனை நெருங்கியவள், அவனைத் தொட்டு உலுக்க முயல, அது அவளால் முடியவில்லை. “இளா.., இளா.., கண் முழிச்சு பாருங்க. பாருங்க” அதற்குமேல் அங்கே இருக்க முடியாமல், மீண்டும் முபாரக்கைத் தேடித் போனாள்.

“அண்ணா.., நான் பேசுறதை கொஞ்சம் கேளுங்களேன். இங்கே பாருங்க..” அவள் அவன் முன்னால் நின்று கதற, அது அவனுக்குத் தெரியவே இல்லை.

“ஹையோ.., நான் பேசுறது இவருக்கு கேக்கவே இல்லையே..” அப்படியே மடிந்து, அங்கே இருந்த இருக்கையில் அமர்ந்து விட்டாள். கண்ணீர் ஆறாகப் பெருகியது. எவ்வளவு நேரமோ தெரியாது.., அவள் அழுதுகொண்டிருக்க,

அதே நேரம், “ஆண்ட்டி.., ஏன் அழறீங்க..?” ஒரு குழந்தையின் குரல் கேட்க, பட்டென நிமிர்ந்து பார்த்தாள்.

“உன..க்கு நா…ன் தெரிய…றேன்னா..? காட்.., என்னோட வா..” அந்த குழந்தையை கை பிடித்து அழைத்துச் சென்றவள், முபாரக்கின் முன்னால் அந்த குழந்தையை நிறுத்த, அந்த குழந்தையைப் பார்த்தவன், “அனு.., இங்கே என்ன பண்ற..? அம்மா எங்கே..?” கேட்டவன் தன் பார்வையை அரசிக்கு வேண்டி சுழற்றினான்.

“அனு.., அங்கிள்கிட்டே ஒண்ணு சொல்லணும்..” விஸ்மையா அழுகையோடு உரைக்க,

“அங்கிள்.., இந்த ஆண்ட்டி உங்ககிட்டே என்னவோ சொல்லணுமாம். ரொம்ப அழறாங்க..” விஸ்மையாவை திரும்பிப் பார்த்து உரைத்தாள்.

“யார்..? கேட்டவன், சட்டென நின்றுவிட்டவன், “என்னவாம்..?” அவனுக்கு அது யாராக இருக்கும் எனத் தெரியுமே.., எனவே கேட்டான்.

“இளமாறன் அங்கிள்க்கு ஆக்சிடெண்ட் ஆகிடுச்சுன்னு சொல்லு.., இங்கேதான்.., நெக்ஸ்ட் ஸ்ட்ரீட்ல..” அவள் சொன்னதை குழந்தை மொழி பெயர்க்க, அடுத்த நிமிடம், பெரும் பட்டத்துக்கு உள்ளானான்.

“என்னது.., மாறனுக்கு..?” குழந்தையை கைகளில் அள்ளியவன், “எங்கேன்னு கேட்டு சொல்லுமா.., நாம போகலாம்..” எதிரில் வந்த அரசியிடம், “சிஸ்டர்.., நான் இப்போ வந்துடுறேன். குழந்தையை நான் கூட்டி போறேன்.., பிளீஸ்..” அவள் மேலே எதுவும் கேட்கவே முடியாத அளவுக்கு உரைக்க, சம்மதமாக தலை அசைத்தாள்.

அவனது உம்மா அழைத்ததை அவன் கணக்கிலேயே எடுக்கவில்லை. அடுத்த நிமிடம், இளமாறனின் முன்னால் நிற்க, “டேய் மாறா..?” அவன் இளமாறன் அருகில் அமர்ந்து அவனை உலுக்க, அதற்குள்ளாக ஆம்புலன்ஸ் வந்து நின்றது.

அவனை அதில் ஏற்ற, குழந்தையை தனக்கு தெரிந்தவரிடம் கொடுத்தவன், “இவளை எங்க வீட்ல விட்டுடுங்க..” உரைத்தவன், ஆம்புலன்சில் ஏறிக் கொண்டான். விஸ்மையாவும் அவனோடுதான் இருந்தாள். இதேபோல் ஒரு ஆம்புலன்சில் தான் சென்ற நினைவு.., கண்கள் இருட்டிக்கொண்டு வந்தது.

நிச்சயம் விஸ்மையா தன்னோடு வருவாள் என்று அவனுக்குத் தெரியும். அடுத்த அரைமணி நேரத்தில் மருத்துவமனையில் இருந்தார்கள். உடனடியாக ஐசியூவிற்கு மாற்றப்பட, அவனுக்கு சிகிச்சை அளிக்கப் பட்டது.

அதே நேரம் அவனது அலைபேசி விடாமல் அடிக்கவே, அதை எடுத்துப் பார்க்க, அவன் வீட்டில் இருந்து அழைப்பு

வந்துகொண்டிருந்தது. கல்யாண மாப்பிள்ளை அவன் அங்கே இல்லாமல் இருந்தால், அவனைத் தேடாமல் என்ன செய்வார்கள்?

அந்த நேரம் உடனடியாக விஷயத்தை யாரிடம் சொல்லவென்றும் அவனுக்குத் தெரியவில்லை. சட்டென சுமனின் நினைவு வர அவனுக்கு அழைத்தான். “சுமன், நம்ம மாறனுக்கு ஆக்சிடெண்ட்.., இங்கே பக்கத்தில் ஹாஸ்பிடல்ல அட்மிட் பண்ணியிருக்கேன். எனக்கு வீட்டில் இருந்து கண்டினியூவா கால்.., இங்கே யாராவது ஒரு ஆள் இல்லாமல் முடியாது. எனக்கு என்ன செய்யன்னு தெரியலை” அவன் சொல்லவே,

“மச்சான்.., நீ வீட்டுக்கு கிளம்பு, நான் அரசியையும் அவங்க அப்பாவையும் வரச் சொல்றேன். எப்படியும் நைட் அங்கே யாரையும் அலவ் பண்ண மாட்டாங்க. சோ.., இப்போதைக்கு ஏதாவது மெடிசின், இனிஷியல் பேமெண்ட்.., இதுக்குதான் அங்கே ஆள் வேண்டி இருக்கும்.

“சரி, உனக்கு எப்படி அவனுக்கு ஆக்சிடெண்ட்ன்னு தெரியும்? யார் சொன்னா?”.

“விஸ்மையா வழியாதான் தெரியும் மச்சான். அந்த நேரம் நான் அங்கே போயிருக்கலன்னா, ஆம்புலன்சில் அவனோட யாரும் போக இல்லைன்னு இன்னும் நேரம் கடத்தி இருப்பாங்க. அவ சரியான நேரத்தில் சொல்லவே, கரெக்ட்டா கூட்டி வந்துட்டேன்” பெரும் ஆறுதலாக உரைத்தான்.

“உன் கண்ணுக்கு தெரியறாளா?” அவன் கேட்க,

“இல்லடா, உன் பொண்ணு அனுதான் சொன்னா. அதாவது விஸ்மையா அவளோட கண்ணுக்கு தெரியறா போல. அனேகமா இப்போ அவ இங்கேதான் இருக்கணும். எனக்குத் தெரியலை..” அவன் சொல்லும்பொழுதே, அவன் கரத்தை மெதுவாக தொட, சில்லென்ற அந்த ஸ்பரிசம் உணர்ந்தவன்,

“டேய் மச்சான்.., அவ இங்கேதான் இருக்காடா.., நான் அவகிட்டே பேச முடியுதான்னு பாக்கறேன்.., நீ அரசியை வரச் சொல்லுடா..” அலைபேசியை வைத்துவிட்டான்.

“தங்கச்சி.., அவனுக்கு எதுவும் ஆகாது. நீ கவலைப் படாதே” அந்த நேரத்தில் அவளுக்கும் ஆறுதல் தேவைப்படும் என்பதை உணர்ந்து சொன்னான்.

அவனது கரத்தைப் பிடித்து, அவன் பேக்கட்டில் இருந்த பேனாவை எடுக்க வைத்தவள், அந்த பேப்பரில், ‘அவங்களுக்கு தலையில் லேசான அடி அவ்வளவுதான். இன்னும் நாலு நாளில் கிளம்பிடலாம். அவங்க வீட்டுக்கு இப்போ தகவல் சொல்ல வேண்டாம். நானே அவங்களை பாத்துக்கறேன்’ அவள் ஒரு பேப்பரில் எழுதி காட்ட, வியப்பாய் நின்றிருந்தான்.

அதெப்படி முடியும்? அவனைப் பெற்றவர்களுக்குச் சொல்லாமல் மறைப்பது அவனுக்குச் சரியாகப் படவில்லை. வேண்டுமென்றால், அவன் கண் விழித்தவுடன், அவனை வைத்தே போன் பேச வைக்கலாம் என எண்ணிக் கொண்டான்.

இப்பொழுது உடனடியாக உரைத்தால், அவனுக்கு என்னவோ ஏதோ என்று பயந்து விடுவார்கள். அதிலும் அவன் பேசவில்லை என்றால் நிச்சயம் பெரிதாக எதுவோ என எண்ண வாய்ப்பு இருப்பதால், அந்த முடிவை சற்று ஒற்றி வைத்தான்.

அதே நேரம், ஐசியூவில் இருந்து வெளியே வந்த மருத்துவர், “இப்போதைக்கு எந்த ஆபத்தும் இல்லை. கொஞ்சம் பிளட் லாஸ்.., தலையில் அடி என்பதால் ஒரு எம்ஆர்ஐ ஸ்கேன் எடுத்து கன்பாம் பண்ணிக்கலாம்” அவர் சொல்ல, நிம்மதியாக மூச்சு விட்டான்.

“டாக்டர்.., அவனை நாங்க பாக்கலாமா?” அவன் சொல்லவே, குழப்பமாக அவனை ஏறிட்டார். இருப்பவன்

அவன் ஒருவன் மட்டும், இதில் நாங்கள் என கேட்டால் அவர் குழம்பாமல் என்ன செய்வார்?

“இப்போ அவர் நல்ல மயக்கத்தில் இருக்கார். டிஸ்டப் பண்ணாமல் பாத்துட்டு வாங்க. நாளைக்கு காலையில் ரூமுக்கு மாத்திடலாம். ரிப்போர்ட்டை பொறுத்து பிறகு முடிவு செய்யலாம்”.

அவர் செல்லவே, “உனக்கு எப்படிம்மா தெரியும்?” அவன் அவளிடம் கேட்க,

‘என்னால் உணர முடியும்’ அதையும் எழுதியே காட்டினாள்.

அதே நேரம், அவனது அலைபேசி மறுபடியும் இசைக்கவே, ‘நீங்க கிளம்புங்க..’ அவனை அனுப்ப முயன்றாள். அதே நேரம், அரசியும், குழந்தை அனுவும் அங்கே வர, “அம்மா.., அதோ அந்த ஆண்ட்டி தான்..” அவள் சொல்லவே, அரசி விழித்தாலும், சுமன் மூலமாக விஷயங்கள் அவளுக்குத் தெரியும் என்பதால் அதிர்ச்சி எல்லாம் ஆகவில்லை.

“நீங்க எப்படி இவ்வளவு சீக்கிரம் வந்தீங்க?” அவன் அவர்களிடம் கேட்கவே, அனு வந்து விஷயத்தை சொன்ன உடனேயே அங்கே இருந்து கிளம்பிட்டேன். வந்தவர் ஆம்புலன்ஸ் இந்த ஹாஸ்பிட்டலில் இருந்து வந்ததா சொன்னார், சோ வர வசதியா போச்சு.

“டாக்டர் வெளியே வந்தாரா என்ன சொன்னாங்க?” அவள் கேட்கவே அனைத்தையும் உரைத்தான்.

“முருகா.., இத்தோட போச்சே.., சரி, நீங்க இதுக்குமேலே இங்கே இருக்க வேண்டாம். ஏதாவது தேவை என்றால் நாங்க பாத்துக்கறோம். ஏற்கனவே உங்க வாப்பா டென்ஷன் ஆக ஆரம்பிச்சுட்டாங்க. அவங்களும் எவ்வளவு நேரம்தான் சம்மாளிப்பாங்க.., கிளம்புங்க..” அதற்குமேல் அவனை அங்கே இருக்க விடவில்லை.

அனுவோ அவர்கள் பேசிக் கொண்டிருக்க, அதற்குள்ளாகவே விஸ்மையாவோடு பேசத் துவங்கி விட்டாள். “ஆண்ட்டி, நீங்க ரொம்ப அழகா இருக்கீங்க. நான் உங்களை ஒரே ஒரு கிஸ் பண்ணிக்கவா?” குழந்தை விழி விரித்து, ஆசையாக கேட்க அவள் எப்படி மறுக்கவாம்?

அவள் பக்கமாக தன் கன்னத்தை நகர்த்த, தன் பிஞ்சு இதழ்களை மென்மையாக அதில் பதித்தாள். இளமாறனுக்கு ஆபத்து எதுவும் இல்லை என்பதை அறிந்த பிறகு, அவளால் சற்று இயல்பாக இருக்க முடிந்தது.

முபாரக் செல்லவே, அனுவின் அருகில் வந்த அரசி, “என்ன அனு, ஆன்ட்டிகிட்டே பேசிட்டு இருக்கறியா? கேட்டவள் அவர்கள் அருகில் அமர்ந்தாள்.

“அனு, ஏதாவது மெடிசின் வாங்கச் சொன்னாங்களான்னு கேள்” தன் மகளிடம் சொல்ல,

“வந்துட்டு இருக்காங்கன்னு சொல்லு.., அதே மாதிரி டெப்பாசிட் இருபத்தையாயிரம் கட்டணும்னு சொல்லுமா” அவள் சொல்லவே சரியாக அங்கே வந்தாள் செவிலி. விஸ்மையா சொன்னதையே அவளும் சொல்லவே, அவளது பவரை எண்ணி வியந்தவளாக அங்கிருந்து சென்றாள்.

சற்று நேரத்தில் அவளது தந்தை வரவே, இருவருமாக சேர்ந்து சென்று பணத்தை கட்டிவிட்டு, தேவையான மருந்தை வாங்கிவிட்டு வந்தார்கள்.

அங்கே இருந்த செவிலியிடம் மருந்தைக் கொடுக்கவே, “இங்கே யாரும் இருக்க முடியாது. நாளைக்கு டாக்டர் வந்து பார்த்த பிறகுதான் ரூமுக்கு மாற்றுவதைப் பற்றி சொல்வார். சோ.., நாங்களே பாத்துக்கறோம்” உரைக்கவே விஸ்மையாவிடம் சொல்லிவிட்டு அவர்கள் சென்றுவிட்டார்கள்.

ஐசியூவின் உள்ளே, அவன் அருகில் சென்று அமர்ந்து கொண்டாள் விஸ்மையா. நள்ளிரவுக்கு மேல்.., நான்குமணிக்கு அவனுக்கு விழிப்பு வரவே, “இளா.., நான் இங்கேதான் இருக்கேன்.., நீங்க தூங்குங்க..” அவள் உரைக்கவே, மீண்டுமாக கண் மூடிக் கொண்டான்.

மறுநாள் காலையில் அவனை அறைக்கு மாற்றுகையில், இளமாறனின் குடும்பம் மொத்தமும் அங்கே வந்து சேர்ந்தது. முபாரக் அவர்களுக்கு தெரிவிக்க வேண்டாம் என நினைத்திருக்க, சுமன் விஷயத்தை பக்குவமாக அவர்களிடம் சொல்லிவிட்டான்.

யார் அவனோடு இருந்தாலும், பெற்றவர்கள் கவனிப்பதுபோல் ஆகாதே. அடுத்த நான்கு நாட்களும், அனைவரும் அவனோடு இருந்து கவனிக்க, இளமாறன் அருகில் கூட செல்ல முடியாமல் தவித்துப் போனாள்.

அறையின் ஓரத்தில், தன்னையே ஏக்கமாகப் பார்த்திருக்கும் அவளுக்கு என்ன ஆறுதல் சொல்வது என்றும் அவனுக்குத் தெரியவில்லை. அவளிடம் இப்பொழுது பேசினால், மற்றவர்களின் சந்தேகத்துக்கு ஆளாக வேண்டும் என்பதால் அவன் ரிஸ்க் எடுக்கவும் தயாராக இல்லை.

அறையில் யாரும் இல்லாத நேரம் என்பதே இருக்கவில்லை. தாயும் தந்தையும், உடன் பிறந்தவளும் என அனைவரும் அவனை ஒரு குழந்தைபோல் பார்த்துக் கொண்டார்கள். அந்த மொத்த குடும்பத்தைப் பார்த்து, தானும் அதில் ஓர் அங்கம் ஆகவேண்டும் என்ற ஆவல் அவளுக்கு கொழுந்துவிட்டு எரிந்தது.

அதைவிட, தனக்கு ஞாபகத்துக்கு வந்த விஷயங்களை அவனிடம் சொல்லியே ஆகவேண்டும் என்ற ஏக்கம் வேறு அவளை ஆட்டி வைத்தது. ஒரு வழியாக அவன் டிச்சார்ஜ் ஆகி வீட்டுக்கு வர, அந்த இரவில் அவர்களுக்கு தனிமை கிடைத்தது.

“இளா..” கேவலாக அழைத்தவள் அவனை கட்டிக் கொள்ள, “எனக்கு ஒண்ணும் இல்லம்மா. ஜஸ்ட் கையில் சிராய்ப்பு, தலையில் சின்ன அடி அவ்வளவுதான். இதுக்கு ஏன் இப்படி அழற?” அவளை தன்னோடு இறுக்கிக் கொண்டான்.

“எனக்கு உங்ககிட்டே ஒரு விஷயம் சொல்லணும்..” அவள் சொல்ல, அவனோ,

“நாலு நாளா தலைக்குள் இருக்கும் பாரம் இறங்கவே இல்லை. இன்னைக்கு வீட்டுக்கு வந்த பிறகுதான் நிம்மதி. அதுவும் உன் லிப்ஸ் தலைக்கட்டில் பட்ட பிறகு, எவ்வளவு இதமா இருக்கு தெரியுமா?” கேட்டவன் அவளை தன்மேல் போட்டுக் கொள்ள, அவன் கண்களை ஊடுருவினாள்.

அவன் புருவம் உயர்த்தவே, “நான் வேணுமா..?” அவளது அந்த வெளிப்படையான பேச்சில் சிரித்துக் கொண்டான். அவள் அப்படி கேட்பதால், அவள்மேல் அவனுக்கு வெறுப்போ, கோபமோ தோன்றவில்லை.

மாறாக, தனக்காக எதையும் செய்யத் தவிக்கும் அந்த ஆத்மாவின் செய்கை, அதை வெறித்தனமாய் நேசிக்கத் தோன்றியது. அந்த அன்பு கற்பனைக்கு அல்லாமல், நிஜத்தில் முழுதாக வேண்டும் என விரும்பினான்.

“ஆமா.., நீ வேணும்.., நிஜத்திலும்..” அவன் சொல்ல, அவன் இதழோடு கலந்தவள், அவன் நினைவுகளோடும் கலந்தாள்.

அதே நேரம்.., சுமனிடம் பேசிக் கொண்டிருந்த அவனது தாய், மகனது வாழ்வில் ஒரு ஆவியின் குறுக்கீடு இருப்பதை உணர்ந்து திகைத்துப் போனார். வந்த அன்றைக்கே அவருக்கு சந்தேகம்தான். தாங்கள் அந்த அறையில் இருக்கையில், தங்களையும் மீறி வேறு ஏதோ ஒன்று இருப்பதாக அவருக்குத் தோன்றியது.

அதை உறுதி செய்தது சுமனின் பேச்சு. விஸ்மையாவை தன் மகனின் வாழ்க்கையில் இருந்து அகற்ற என்ன வழி

என அந்த தாய் சிந்திக்கத் துவங்கினார். இதை அறியாத இருவரும் தங்கள் உலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்தனர்.

***

# பகுதி - 15.

இளமாறன் உடல் தேறி, தன் அலுவலகத்துக்குச் செல்ல துவங்கி விட்டான். அவனது அக்கா, அப்பா என அனைவரும் ஊருக்கு கிளம்பிச் சென்றிருக்க, அவனது தாய் அவனோடு தங்கிவிட்டார். அவர் தன் உடல்நிலை தேற வேண்டியே தன்னோடு தங்கிவிட்டார் என அவன் நினைத்தான்.

ஆனால் அவர் தங்கிவிட்டதுக்கான உண்மை காரணம் அவனுக்குத் தெரியவில்லை என்றாலும், அவரது மனம் விஸ்மையாவுக்கு நன்றாகப் புரிந்தது. அவருக்கு தன்னைப் பற்றிய ஏதோ சந்தேகம் மனதில் விழுந்து விட்டதை அவளால் தெளிவாக உணர முடிந்தது.

தினமும் வீட்டில் அவர் செய்யும் பூஜை, இளமாறனின் நெற்றியில் வைத்து விடும் குங்குமம், திருநீர்.., என சில பல கதைகளை அது சொல்ல, அவையெல்லாம் விஸ்மையாவை பாதிக்கவில்லை என்பதுதான் உண்மை.

அந்த உண்மை இளமாறனின் தாய்க்கும் புரிய, நாளுக்குநாள் அவரது கவலை அதிகரித்தது. விஸ்மையாவுக்கு அவரது நிலையை நன்றாக உணர முடிந்தது.

அவரது மகனது வாழ்க்கை நன்றாக இருக்க வேண்டும் என அவர் நினைப்பதில் தவறென்ன இருக்கிறது? என்ற அவளது எண்ணமே, அவரது நினைப்பை பற்றி இளமாறனிடம் சொல்லாமல் தவிர்க்க வைத்தது.

விபத்தைப் பற்றிய தன் நினைவுகளைப் பற்றி அவனிடம் சொல்ல வேண்டும் என நினைத்தாலும், இனிவரும் சூழல்கள் எப்படி இருக்கும் எனத் தெரியாமல் அவனிடம் சொல்லி, அவனைக் குழப்பவும் அவள் விரும்பவில்லை.

ஒரு வேளை, அவள் நிரந்தரமாக இளமாறனை விட்டுப் பிரிய வேண்டி வந்தால், தான் சொன்ன விஷயங்களை வைத்து, அவன் தன்னை தேடிக்கொண்டு அலைய வேண்டாமே என நினைத்தாள். அவனை விட்டு நிரந்தரமாக பிரிய, தன் மனதை பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும் என எண்ணினாள்.

அவன் குடும்பம், மனைவி, குழந்தைகள் என வாழவேண்டும் என எண்ணினாலும், அது தன்னோடாக இருக்க வேண்டும் என மனம் விரும்புவதை என்ன செய்ய என்று அவளுக்குத் தெரியவில்லை. குறைந்த பட்சம், அவனாவது நிம்மதியாக சந்தோஷமாக இருக்க வேண்டும் என அனைத்தையும் மனதுக்குள் புதைத்தாள்.

நிச்சயம் எதுவோ பெரிதாக வரப் போகிறது என்பது மட்டும் அவளுக்குத் தெளிவாகத் தெரிந்தது. சுமனும் இந்தியாவுக்கு வந்து இரண்டு மாதங்கள் நிறைவடைந்து விட்டது. நாட்கள் ரெக்கை கட்டிப் பறக்கும் உணர்வு.

அன்றும் அப்படித்தான்.., விஸ்மையாவின் உள்ளுணர்வு என்னவோ நடக்கப் போகிறது என அறிவுறுத்த, நிம்மதியின்றி தவித்தாள். அவள் நிலையில்லாமல் தவிப்பதைப் பார்த்தவன், “விஸ்மையா.., கொஞ்ச நாளா நானும் கவனிக்கறேன், எதைப் பத்தியோ ரொம்ப யோசிக்கற, ஆனா என்னன்னு சொல்ல மாட்டேங்கற?” அவளை உலுக்கினான்.

“இளா.., நான் இல்லாமல் போய்ட்டா நீங்க என்ன செய்வீங்க?” படபடப்பாய் அவள் வினவ,

“அதுக்கு வாய்ப்பே இல்லை.., உன்னை நான் எங்கேயும் விடுறதா இல்லை..” வேகமாக உரைத்தவன், “விஸ்மையா.., உண்மையைச் சொல், உன் உள்ளுணர்வு ஏதாவது சொல்லுதா?” அவன் கூர்மையாக கேட்க,

“அப்படியெல்லாம் எதுவும் இல்லை இளா..” வேகமாக சமாளித்தாள்.

அவள் சம்மாளித்தாலும், அவளை நம்பாத பார்வை பார்த்தான். மறுநாள் காலையிலேயே அவனது தோழர்கள் இருவரும் வந்திருக்க, “என்னடா.., ரெண்டுபேரும் சேர்ந்தே வந்திருக்கீங்க? ஆச்சரியமா இருக்கு..? ஏதாவது விசேஷமா? இல்ல பார்ட்டியா?” அவர்களைப் பார்த்து கண்ணடிக்க, இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

“அதெப்படிடா அவ்வளவு சரியா சொல்ற.., நம்ம புது மாப்பிளை பேச்சுலர் பார்ட்டிதான் கொடுக்கலை, இப்போ கொடுக்கறேன் வாங்கன்னு கூப்ட்டான் அதான் வந்தேன். இன்னைக்கு சண்டே தானே சும்மா ஜாலியா போகலாம்..” சுமன் பேச, முபாரக் வெறும் பார்வையாளனாக மட்டுமே இருந்தான்.

“என்னடா.., பார்ட்டின்னா மச்சான் சும்மா பறப்பான்.., இப்போ அவர் கொடுப்பதால் ரொம்ப சோகமா இருக்காரோ? வேண்ணா நான் பாதி பில் பணம் நான் கொடுக்கறேண்டா” அவன் வயிற்றில் குத்த, இதழ்களை இழுத்து வைத்து புன்னகைத்தான்.

முபாரக்கின் பார்வை, இளமாறனின் தாய் இருந்த திக்கில் பயணிக்க, சுமன் அவன் விலாவில் கை முஷ்டியால் இடித்து கலைத்தான். “அதெல்லாம் வேண்டாம், நீ வா போகலாம்..” இருவருமாக அவனை இழுத்துக் கொண்டு செல்ல, அவன் பார்வை விஸ்மையாவிடம் திரும்பியது.

‘நீங்க போயிட்டு வாங்க..’ அவள் கை அசைக்க, உற்சாகமாகவே கிளம்பினான். அவர்கள் கிளம்பிய சில மணி நேரத்தில், அவர்கள் வீடே மாறத் துவங்கியது. இரண்டு மூன்று முஸ்லிம் அஸ்ரத்க்கள் அவன் வீட்டுக்கு வர, வீடு முழுக்க சாம்பிராணிப் புகை போடத் துவங்கினார்கள்.

விஸ்மையாவின் உடல் குளிர்ஜூரம் வந்து நடுங்குவதுபோல் நடுங்கத் துவங்கியது. எப்பொழுதும்

சில்லென இருக்கும் அவளது தேகம் முழுவதும், கொதிநிலையை அடைய, வியர்த்து வழிந்தாள். கூடவே சுவாசம் என்பதை அறியாத அவளே, மூச்சுக்குத் திணறும் உணர்வு.

அஸ்ரத்க்கள் அனைவரும் கூட்டாக அமர்ந்து, மயில் பீலியால் வீடு முழுக்க மந்திரித்தவர்கள், அவள் மேல் தீர்த்த தண்ணியைத் தெளிக்க, அவ்வளவுதான், ஆசிட் பட்ட உணர்வில் புழுவாய் துடிக்கத் துவங்கியது அந்த ஆத்மா.

நண்பர்களோடு ஹோட்டலில் அமர்ந்திருந்த இளமாறன், மனதுக்குள் விஸ்மையாவை நினைக்க, அவள், அவன் முன்னால் வரவில்லை. எப்பொழுதும் அவன் அவளைப் பார்க்க வேண்டும் என மனதுக்குள் நினைக்கும் முன்பே, அவன் முன்னால் இருப்பவள், அப்பொழுது இல்லை.

அதுவே எதுவோ சரியில்லை என அவனுக்கு உணர்த்தியது. “விஸ்மையா.., விஸ்மையா வா..” சன்னமாக அழைத்தவன், அப்பொழுதும் அவள் வராமல் போகவே, இருக்கையில் இருந்து எழுந்தான். நண்பர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

“என்னடா மச்சான்.., என்ன ஆச்சு..? லஞ்ச் பாதியில் நிக்குது, நீ என்னவோ உளறிட்டு இருக்க?” சுமன் அவனைத் தடுத்தான்.

அவனை சூடாக ஒரு பார்வை பார்த்தவன், “நான் வீட்டுக்கு கிளம்பறேன் சுமன். எனக்கு லஞ்ச் வேண்டாம். நீங்க சாப்ட்டுட்டு வாங்க..” அங்கிருந்து கிளம்ப முயன்றான்.

அவனுக்கு முன்னால் நின்று பாதையை மறைத்த சுமன், “தாராளமா வீட்டுக்குப் போகலாம்.., முதல்ல சாப்பாட்டை முடி. அதுக்குள் எதுவும் ஆயிடாது” அவனை கை பிடித்து அமர வைக்க முயன்றான்.

அவன் கரத்தை தட்டி விட்டவன், “எனக்கு லன்ச் வேண்டாம்.., விஸ்மையாவை காணோம். நான் மனசுக்குள்

நினைத்தாலே வந்துடுவா. இப்போ கூப்பிட்டும் வரலை, அவளுக்கு என்னவோ.., என் மனசே சரியில்லை, நான் வீட்டுக்கு போயே ஆகணும்" பிடிவாதமாக எழுந்தான்.

"நீ இப்போ எங்கேயும் போக முடியாது மாறன்.., அதுக்கு நாங்க அனுமதிக்கவும் மாட்டோம்" சுமன் அவன் கரத்தை அழுத்தமாக பற்றிக் கொள்ள, அவன் தன் கையை பற்றியிருந்த இடத்தையும், நண்பர்கள் இருவரையும் மாற்றி மாற்றி பார்த்தான்.

"அப்போ.., அப்படின்னா.., நீங்கதான் ஏதோ பிளான் பண்ணீங்க அப்படித்தானே. வீட்டில் எங்க அம்மா உங்களைப் பார்த்து ஏதோ கண்ணைக் காட்டினாங்க, நானா ஏதோ நினச்சுக்கறேன்னு நினைத்தேன். இப்போ பார்த்தா.., உங்களோட என் அம்மாவும் கூட்டா?" கேட்டவன், அவன் கையை உதறினான்.

"எதையாவது உளறாதடா. உனக்கு நாங்க எல்லாம் நல்லதுதான்ஸ் செய்வோம்.." அவன் சொல்ல, "போடா.." ஆத்திரமாக உரைத்தவன் கையைக் கழுவும் பொறுமை கூட இல்லாமல் ரோட்டில் இறங்கி ஓடத் துவங்கினான்.

வீட்டிலிருந்து வருகையில், அவனது வண்டியை எடுக்கப் போனபொழுது, பிடிவாதமாக மறுத்தவர்கள் அவர்கள்தான். அவர்கள் தன்னை முட்டாளாக்கியது புரிய, அவன் கண்களில் கண்ணீர் வழிந்தது.

"விஸ்மையா.., விஸ்மையா.." அலறியவாறே ரோட்டில் ஓடினான். ரோட்டில் சென்ற வாகனத்தில் இருந்தவர்கள் சென்றவர்கள் தன்னை வித்தியாசமாகப் பார்த்ததை கொஞ்சம் கூட அவன் கண்டுகொள்ளவே இல்லை.

பைக்கை கிளப்பி வந்த நண்பர்கள் அவனைப் பார்த்துவிட, அவன் அருகில் வந்தவர்கள், "மச்சான், ரோட்ல எல்லாரும் பாக்காறாங்கடா.., முதல்ல வண்டியில் ஏறு.." முபாரக் அழைத்தான்.

“போடா துரோகி.., ஆட்டோ..” அருகில் சென்ற ஆட்டோவை கை காட்டி அழைத்தவன் அதில் ஏறிக் கொண்டான். அவன் விலாசம் சொல்ல, ஆட்டோ சாலையில் விரைந்தது.

வீட்டில் அஸ்ரத்க்கள் மீண்டுமாக மந்திரங்களை ஜெபிக்க, புழுவாய் துடித்தாள். “இல்ல.., வேண்டாம்..” அவளது கதறலை கேட்பவர் அங்கே யாரும் இல்லை. மந்திரங்கள் அனைத்தும் அவளை முற்றாக அமுக்க, காற்றில் கரையத் துவங்கினாள் விஸ்மையா.

தங்கள் பூஜையை முடித்தவர்கள், “இனிமேல் அந்த ஆத்மாவோட தொல்லை உங்களுக்கு இருக்காது. இந்த எந்திரத்தை வீட்டுவாசல்ல கட்டி வைக்கறேன். இதை எப்பவும் எடுக்காதீங்க..” உரைத்தவர்கள் சென்றுவிட, வீட்டை வேகமாக ஒழுங்கு படுத்தினார் இளமாறனின் தாய்.

வாசலில் நின்ற ஆட்டோவுக்கு காசுகூட கொடுக்கும் எண்ணமில்லாமல் வீட்டுக்குள் பாய்ந்திருந்தான் இளமாறன். “விஸ்மையா.., விஸ்மையா..” கத்தி அழைத்தவன், வீடு முழுக்க ஒரு பயித்தியக்காரத்தனமான வேகத்தில் தேடினான்.

வீட்டில் தெரிந்த மாற்றத்தை அவனது விழிகள் கண்டு கொண்டது. வீட்டில் நிரம்பியிருந்த சாம்பிராணியின் மணம்.., அது உணர்த்திய செய்தி, மல்லிகையின் வாசம் வருகிறதா? அவன் நுகர, அந்த வாசனையே அங்கே இல்லை.

“மாறா.., மாறா..” அவனது தாய் அவனைக் கலைக்க, அதை உணரும் நிலையில் கூட அவன் இல்லை.

ஒரு கட்டத்துக்கு மேல், அவன் விடாமல் அவள் பெயரை ஜெபிக்கவே, அவனை அழுத்தமாக பிடித்து நிறுத்தியவர், அவன் கன்னத்தில் ஓங்கி அடித்தார். அவர் இப்படி செய்வார் என எதிர்பாராத சுமனும், முபாரக்கும் வேகமாக அவர் அருகில் வர, இருவரையும் பிடித்து தள்ளிய இளமாறன், “அம்மா, என்னை இன்னும் எத்தனை அடி

வேண்ணாலும் அடிங்க.., ஆனா, என் விஸ்மையாவை என்ன பண்ணீங்கன்னு மட்டும் சொல்லுங்க” அவன் கதற, நண்பர்கள் இருவராலும் அதைப் பார்க்க முடியவில்லை.

“இதுக்குதாண்ட சொன்னேன்..” முபாரக் சுமனிடம் உரைக்க, அவன் தன் தலையிலேயே அடித்துக் கொண்டான். இளமாறன் ஏதோ கொஞ்சம் அப்சட் ஆவான், அவனை சமாதானம் செய்யலாம் என அவர்கள் நினைக்க, இது..? அவனது கதறல், அழுகை.., அவர்களால் அவனை நெருங்கவே முடியவில்லை.

“என்னடா பேசுற நீ? அந்த ஆத்மாவுக்கு இப்போ நாங்க எந்த கெடுதலும் செய்யலை. அதுக்கு சாந்தி கொடுத்திருக்கோம் அவ்வளவுதான்” அவன் தாய் சொல்ல, பிரம்மை பிடித்தவன்போல் அவரை வெறித்தான்.

“என்னம்மா சொன்னீங்க.., சாந்தியா..? நான் இல்லாமல் அவ எங்கே இருந்தாலும் நிம்மதியா இருக்க மாட்டாம்மா..” பித்து பிடித்தவன்போல் பிதற்ற, அவனை கோபமாக ஏறிட்டார்.

“ஒரு ஆத்மாவுக்கு இந்த உலகம் நிரந்தரம் இல்லை. அது அதோட உலகத்துக்குப் போய் சேர்வதுதான் முறை..” அவர் மீண்டும் சொல்ல, விரக்தியாக சிரித்துக் கொண்டான்.

“அவளுக்கு நான் ப்ராமிஸ் பண்ணி இருந்தேன்ம்மா.., அவங்க பேமிலி எல்லாம் கண்டுபிடிச்சு கொடுப்பேன்னு. இப்படி என்னை கடன்காரன் ஆக்கிட்டீங்களே. என் லைப் மொத்தமும் அவதான்ம்மா. இப்போ அவளைத் தொலைச்சுட்டு..” அவன் கண்ணீர் விட்டு கதற, நண்பர்களின் கண்களும் கலங்கியது.

“ஆத்மாவுக்கு பேமிலி, சென்டிமென்ட் எதுவும் கிடையாதுடா. இப்போ இப்படி புலம்புற நீயே ஒரு நாள், உனக்கு நான் நல்லது செய்தேன்னு சொல்லுவ பார். நீங்களும் ஏம்ப்பா இப்படி கண் கலங்கிட்டு நிக்கறீங்க?

அவன் சரியாயிடுவான் நீங்க கிளம்புங்க” அவர்களை அனுப்ப முயன்றார்.

“அப்போ.., நீங்க பிளான் பண்ணித்தான் இங்கே தங்கி இருந்தீங்க அப்படித்தானே. என்கிட்டே கேட்டிருக்கலாமேம்மா.., நான் சொல்லியிருப்பேனே, இப்போ.., அவளை மொத்தமா தொலைச்சுட்டு நிக்கறேனே, என்னால் தாங்கவே முடியலம்மா..” புலம்பினான்.

“டேய்.., அவங்களுக்குதான் புரியலை, தெரியலை.., நீங்க.., நீங்க இப்படி கல்நெஞ்சக்காரங்களா இருப்பீங்கன்னு நான் கொஞ்சம் கூட நினைக்கலடா. உங்களால் எப்படிடா இதுக்கு துணை போக முடிந்தது. முபாரக், உங்க வாப்பாவுக்கு ஹார்ட் அட்டாக் வந்தப்போ யாருடா சொன்னது?

“உன் வாப்பா இப்போ உயிரோட இருக்க காரணமே விஸ்மையா தாண்டா. அதை எப்படிடா அவ்வளவு சீக்கிரம் உன்னால் மறக்க முடிஞ்சது? சுமன், உன் வீட்டில், உன் பொண்ணு அனுகிட்டே, விஸ்மையாவை விரட்டிட்டேன்னு உன்னால் போய் சொல்ல முடியுமா?

“அன்னைக்கு அவ மரத்தில் இருந்து விழப் போனப்போ தாங்கிப் பிடிச்சது விஸ்மையா தாண்டா. அந்த நன்றி உங்க மனசில் கொஞ்சம் கூடவாடா இல்லை. இப்படி நன்றி கெட்டு போயிட்டீங்களேடா. ஒரு ஆத்மாவுக்கு இருந்த மனிதாபிமானம் கூட, உங்ககிட்டே இல்லையேடா.

“ச்சீ.., உங்களோட இத்தனை வருஷம் ப்ரண்ட்ஷிப் வச்சிருந்தேன்னு நினைத்தால் எனக்கு அசிங்கமா இருக்குடா. இனிமேல் என் கண் முன்னடி வராதீங்க. இன்னையில் இருந்து நீங்க யாரோ நான் யாரோ. அம்மா, உங்க புள்ளைகிட்டே இருந்து அவளை விரட்டணும்னு நினைச்சீங்க, அதில் ஜெயிச்சுட்டீங்க.

“இனிமேல் நீங்க இங்கே இருக்க வேண்டாம். உங்களை பாக்குறப்போ எல்லாம், நீங்க பண்ண இந்த விஷயம்தான்

எனக்கு ஞாபகம் வரும். உங்கமேலே நான் வச்சிருக்க பாசம் கொஞ்சம் கூட குறையக் கூடாதுன்னு நினைக்கறேன்.

“உங்களுக்கு ஒரு விஷயம் தெரியுமா.., அவளால் வரப்போவதை எல்லாம் முன்னாடியே கணிக்க முடியும். நீங்க செய்யப் போவதை எல்லாம் முன்னாடியே தெரிந்திருந்த பொழுதும், என்கிட்டே அதைப் பற்றி ஒரு வார்த்தை சொல்லலை தெரியுமா?

“உங்க புள்ளையோட உயிரை காப்பாத்திக் கொடுத்தவளுக்கு நல்ல கைமாறு செஞ்சுட்டீங்கம்மா. எனக்கு ஆக்சிடெண்ட் ஆனப்போ, சுத்தி இருந்தவங்களில் ஒருத்தன் ஆம்புலன்ஸ்க்கு போன் பண்ணானே.., அவன் சொன்னாம்மா, ஏதோ ஒரு அமானுஷ்ய சக்தி அவனை அப்படி செய்யத் தூண்டிச்சுன்னு..

“எனக்குத் தெரியும்மா.., அது என் விஸ்மையாதான்னு எனக்குத் தெரியும். அவளைப்போய்..” முகத்தை மூடிக்கொண்டு கதறியவன், “நீங்க இப்போவே ஊருக்கு கிளம்புங்கம்மா. நான் தற்கொலை எல்லாம் பண்ணிக்க மாட்டேன். நீங்க கிளம்புங்க.

“டேய்.., இவங்களை பஸ் ஏத்தி விட்டுட்டு, நீங்க உங்க வீட்டுக்குப் போங்க. நான் சொன்னதை நீங்க செய்யலன்னா.., இங்கே இருந்து எங்கேயாவது கண் காணாமல் போய்டுவேன்..” உரைத்தவன் அறைக்குள் சென்று கதவை அடைத்துக் கொண்டான்.

“விஸ்மையா.., நீ எங்கே இருக்க? நான் பேசுறது கேக்குதா? கேக்குதா?” அவனது அழுகுரல் வெளியே கேட்க, அங்கே இருந்தவர்களால் எதுவும் செய்ய முடியவில்லை.

***

# பகுதி - 16.

விஸ்மையா எப்பொழுது அவனை விட்டுப் போனாளோ, இளமாறன் நடைபிணமாய் மாறிப் போனான். அவனது சந்தோசம், நிம்மதி அனைத்தும் விஸ்மையாவோடு கரைந்து காணாமல் போய்விட்டது.

அவளது நினைப்பில் இருந்து, சில நாட்களில் மாறிவிடுவான், மறந்து மீண்டுவிடுவான் என அனைவரும் நினைக்க, அதைப் பொய்யாக்கியவன் மீண்டும், மீண்டும் விஸ்மையாவின் நினைப்பில் கரைந்தான் என்றே சொல்லலாம்.

அவனது தாயிடம் பேசுவதை முழுதாக நிறுத்திவிட்டான் எனச் சொல்ல முடியாது. ஆனால், அவர் அழைத்தால் பேசுவானே தவிர, அவனாக அவரை அழைக்க மறுத்தான். அவனது அக்கா அவனை விடாமல் அழைத்து, அவன் மனதை மாற்ற முயன்று கொண்டிருந்தாள்.

அன்று ஞாயிற்றுக்கிழமை.., வீட்டில் தன் அறையில் படுத்து விட்டத்தை வெறித்துக் கொண்டிருந்தான் இளமாறன். எதுவும் செய்யப் பிடிக்கவில்லை. வெளியே போகப் பிடிக்கவில்லை, சமைக்கப் பிடிக்கவில்லை, உண்ணப் பிடிக்கவில்லை உறங்கப் பிடிக்கவில்லை.

வாழ்க்கையில் இப்படி ஒரு வெறுமையை சுமப்போம் என்று அவன் கற்பனை கூட செய்து பார்த்ததில்லை. அதைவிட, இப்படி ஒருத்தியை உயிராய் நேசிப்போம் என்பதும் அவனுக்குத் தெரிந்திருக்கவில்லை. அவள் தன்னோடு இருந்த வரைக்கும் தெரியாத காதல், அவள் இல்லை எனத் தெரிந்த பிறகு முழுதாய் புரிந்தது.

‘இந்த அளவுக்கா அவளை நேசித்தேன்?’ அவன் தன் வேதனையை விழுங்கிக் கொண்டான். மற்றவர்களைப் போல், போதையை அவன் நாட விரும்பவில்லை.

அவன் அலைபேசி இசைத்து தன் இருப்பை உணர்த்த, சிறு எரிச்சலாய் அதைப் பார்த்தான். அதில் ஒளிர்ந்த அக்காவின் எண்ணைப் பார்த்தவன், அழைப்பை ஏற்றான்.

“அக்கா.., இப்போ உன்கிட்டே பேசுற மனநிலையில் நான் இல்லை. போனை வச்சுடு..” அலைபேசியை வைக்க முயன்றான்.

“மாறா.., போனை வச்சுடாதே. இன்னும் எத்தனை நாள் இப்படியே இருப்ப? அந்த ஆவியோட உன்னால் வாழ முடியாது என்பது உன் புத்திக்கு ஏறலையா.., இல்ல ஏறாத மாதிரி நடிக்கறியா?” சிறு கோபமாகவே கேட்டாள்.

“இதைக் கேக்கத்தான் போன் பண்ணியா? என் கோபம் அது இல்லை. எதையாவது செய்ய முன்னாடி என்கிட்டே ஒரு வார்த்தை சொல்லணும்னு யாருக்குமே தோணலை இல்ல..” அவன் வேதனையாகக் கேட்க, அவளும் வருந்தினாள்.

“நடந்ததையே நினைச்சுட்டு இருந்தால் எல்லாம் சரியா போய்டுமா?” தன்மையாவே கேட்டாள்.

“அது இல்லக்கா.., உனக்கு ஒரு விஷயம் சொல்லவா, விஸ்மையாவோட ஆத்மாவை அழிக்க முடியாது. அதுக்கு சாந்தி கொடுக்கவும் முடியாது” படுக்கையில் இருந்து எழுந்து அமர்ந்தவன் கிட்டத்தட்ட கத்தினான்.

“என்னடா சொல்ற..?” பூங்கோதை அதிர்ந்தாள்.

“ஆமா.., செத்துப்போன ஆத்மாவுக்குதான் இதையெல்லாம் செய்ய முடியும். அவதான் சாகவே இல்லையே..” அவன் சொல்ல, அதை கோதையால் நம்ப முடியவில்லை.

“நீயா எதையாவது கற்பனை செய்யாதே மாறா.., அவளை மறந்துட்டு கொஞ்சமாவது நடப்புக்கு வா..” அவள் குரல் அவனிடம் கெஞ்சிற்று.

“எனக்குத் தெரியும்க்கா.., நீங்க யாருமே இதை நம்ப மாட்டீங்கன்னு எனக்குத் தெரியும். அவளுக்கு சாந்தி கொடுக்கறேன்னு, இங்கே இருந்து விரட்டிட்டாங்க. அதுதான் உண்மை..., அதை விட, அவளை யார் கண்ணுக்கும் தெரியாத மாதிரி காற்றா மாத்திட்டாங்க..” அவன் அலைபேசியிலேயே அழ, அவன் சொல்லச் சொல்ல, இங்கே தன் தலையிலேயே அடித்துக் கொண்டாள்.

அவன் இப்படி சிறு பையன்போல் அழுவது அவளுக்கும் வருத்தத்தை அளிக்கிறதுதான். ஆனால், அவன் அழுகையைப் பார்த்து தானும் கொஞ்சினால், அவன் அதற்குள் மூழ்கிவிடுவான் என்பது புரிய கண்டிப்பை தொடர்ந்தாள்.

“நீ சொல்றதை எல்லாம் நான் நம்பறேன்னே வச்சுக்கோ.., இப்போ அவ இல்லை.., அவ வரப் போவதும் இல்லை. இப்போ சொல்லு, நீ என்ன செய்யப் போற?” ஆழமாக மூச்செடுத்தாள்.

“இல்லக்கா.., என்னால் அப்படியெல்லாம் விட முடியாது. நான் அவளுக்கு ஒரு நியாயம் செய்யாமல் ஊருக்கு வர்றதா இல்லை. இனிமேல் இதைப் பற்றி பேசாதே. அம்மா, அப்பாவை அடிக்கடி போய் பாரு..” அதற்குமேல் அதைப்பற்றி பேச அவன் தயாராக இல்லை.

“நான் கண்டிப்பா போய் பாக்கறேன். இன்னொரு விஷயம், நம்ம வாழ்க்கையில் ஒரு விஷயம் நடக்குதுன்னா, அதுக்கு காரணம் நாம இல்லை. நம்மை படைச்ச ஆண்டவன்தான் ஆட்டி வைக்கறான் நாம ஆடறோம்.

“அவர் சொல்வதை எல்லாம் செய்யும் கருவிகள் மட்டும்தான் நாம. இப்போ அவ.., அவ பேர் என்ன.., விஸ்.., விஸ்.., சரி ஏதோ ஒண்ணு, அவ உன்னை விட்டு இந்த நேரம் பிரிஞ்சு இருக்கணும்னு ஆண்டவன் நினைத்தால், அதை யாராலும் மாற்ற முடியாது.

“அவர் நினைத்ததை அம்மா மூலமா எக்சிகியூட் பண்ணிட்டார். அதுக்கு பலியானது அம்மாவும், உன் பிரண்ட்ஸ்சும். எல்லாரும் உன்மேல் இருந்த கோபத்திலா செஞ்சாங்க..? நீ நல்லா இருக்கணும்னு தானே செஞ்சாங்க. அது உனக்கு இன்னும் புரியலன்னா என்னால் எதுவும் செய்ய முடியாதுடா.

“இப்போ நீ எங்களை எல்லாம் விட்டுட்டு இப்படி தனியா இருப்பதால் அவ வந்துடுவாளா? கடவுள் நினைப்பதை நாம மாத்த முடியாது. அவ உன் வாழ்க்கையில் வரணும்னு அவர் முடிவு செய்தால், இடையில் யாராலும் தடுக்க முடியாது.

“இனிமேல் நானா உனக்கு போன் பண்ண மாட்டேன். நீ இப்படிதான் ஆகணும்னு அவர் முடிவு பண்ணிட்டா, என்னால் மட்டும் மாத்த முடியுமா என்ன? இந்த ஜென்மம் முழுக்க உன்னை நினைச்சு நாங்க துக்கப்படணும்னா பட்டுட்டு போறோம்” அலைபேசியை வைத்து விட்டாள்.

பூங்கோதை பேசிய ஒவ்வொரு வார்த்தையும் அவன் மனதுக்குள் நுழைந்து, அவனை வெகுவாய் சிந்திக்க வைத்தது. அவ்வளவு நேரமாக எதிலும் பிடிப்பில்லாமல் இருந்தவன், முதல் முறையாக சற்று தெளிந்தான்.

எவ்வளவு நேரம்தான் அப்படியே இருக்க முடியும்? தன்னை தேற்றிக் கொண்டவன், அறையை விட்டு எழுந்து வெளியே வந்து, ஒரு வாரமாக துவைக்காமல் போட்டிருந்த துணிகள் அனைத்தையும் எடுத்து ஊற வைத்தான். அவ்வளவு நேரமாக பசி உணர்வே இல்லாதவன், அதை உணர, கொஞ்சமாக சமைத்துக் கொண்டான்.

அனைத்தையும் ஒதுங்க வைத்தவன், துணிகளை துவைத்துவிட்டு அவற்றை காயப்போட வெளியே வர, வாசலிலேயே அமர்ந்திருந்தான் முபாரக். அவனை அந்த நேரம் அங்கே எதிர் பார்த்திருந்தாலும், அவனைக் கண்டுகொள்ளாமல், பக்கெட்டோடு பின்னால் சென்றான்.

தன்னைப் பார்த்தாலே முன்னர் கதவடைப்பவன், அவ்வாறு செய்யாமல் போவதே போதுமானதாக இருக்க, உற்சாகமானான்.

அவன் பின்னால் ஓடிய முபாரக், “மச்சான்.., சத்தியமா இப்படியெல்லாம் ஆகும்னு நினைக்கவே இல்லடா. அம்மா, உன் நல்லதுக்குன்னு சொன்ன பிறகு, எங்களால் மறுத்து எதுவும் சொல்ல முடியலை.

“நீங்க மட்டும் நிஜத்தில் ஒரு பொண்ணை கல்யாணம் செஞ்சுட்டு நல்லா இருப்பீங்க, அவன் மட்டும் இப்படி ஆவியோட போராடணுமான்னு கேட்டப்போ, அவங்களுக்கு என்ன பதில் சொல்றதுன்னே எங்களுக்குத் தெரியலடா. அவங்க கேட்டது சரி தானே..” அவன் சொல்ல, பட்டென அவனைப் பார்த்து முறைத்தான்.

“இல்ல.., சரின்னா.., நான் அப்படி சொல்ல வரலை.., அது என்னன்னா.., உனக்குன்னு வர்ற பொண்டாட்டியை நாங்க எல்லாம் பாக்க வேண்டாமா.., அதான்..” அவன் எதையோ சம்மாளிக்க முயல, அதற்கும் முறைத்தான்.

அவன் பார்வையில் சூடேற, “ஐயோ.., தப்பால்லாம் எதுவும் சொல்லடா. அவளைப் பாக்கணும்னா.., அதை எப்படிச் சொல்ல..” அவன் திணற, அவன் திணறுவது சுவாரசியத்தை கொடுத்தாலும், வெளியே அவனை முறைத்துக் கொண்டிருந்தான்.

“டேய்.., என்னைப் பத்திதான் உனக்குத் தெரியுமே.., சொல்லத் தெரியலடா. ஆனா நீ இப்படி இருக்குறதை பாக்க முடியலடா. இத்தனை நாளா உன் பின்னாடியே அலையிறேனே உன் மனசு இரங்கலை? இந்நேரம் ஏதாவது பொண்ணு பின்னாடி அலைஞ்சிருந்தா, அவளாவது கரெக்ட் ஆகி இருப்பா..” அவள் அலுப்பாக உரைக்க,

“உன் பொண்டாட்டி உன்னை தூக்கி போட்டு மிதிச்சிருப்பா” இளமாறன் பட்டென உரைக்க, அவன் முகம் போன போக்கில் வாய்விட்டே சிரித்துவிட்டான்.

“மச்சான்.., நீ சிரிச்சுட்டடா.., சிரிச்சுட்ட.., யாஹூ.., நான் உனக்கு வேண்டி எங்க அஸ்ரத் கிட்டே எல்லாம் பேசினேண்டா. உன் விஸ்மையா உனக்கு நிச்சயம் கிடைப்பான்னு சொன்னாங்க. அவங்க வந்த உடனேயே கண்டு புடிச்சுட்டாங்களாம்,

“அது ஒரு சுத்த ஆத்மான்னு.., இங்கே இருந்து விரட்ட மட்டும்தான் செஞ்சாங்களாம்..” அவன் வேகமாக உரைக்க, அவ்வளவு நேரத்தில் கொஞ்சம் தெளிந்திருந்த இளமாறனின் முகம் மீண்டும் இறுகவே, தன் தலையிலேயே அடித்துக் கொண்டான்.

“மச்சான்.., டென்ஷன் ஆகாதடா.., எல்லாத்தையும் நாம சரி பண்ணிடலாம்” அவன் தோளோடு இறுக அணைத்துக் கொண்டான்.

“மாறா.., சுமனை வரச் சொல்லவா.., பாவண்டா அவன்.., உன் முன்னாடி கூட வர முடியாமல், ரொம்ப வெக்ஸ் ஆகிட்டான். அனு கூட அவன்கிட்டே பேசுறதே இல்லையாம். பிளீஸ்டா.., நீ மனசு வைத்தால், அவன் சந்தோஷப் படுவாண்டா..” அவன் கெஞ்ச, சற்று யோசித்தான்.

“சரி அவனையும் வரச் சொல்..” அவன் அனுமதி வழங்க, உடனே அவனுக்கு அழைத்து, அவனை வரச் சொன்னான்.

“மச்சான்.., அவன் வர முன்னாடி, உன் முகத்தில் மண்டியிருக்கும் காட்டை எல்லாம் வெட்டலாம். நான் உனக்கு ஹெல்ப் பண்றேன்” அவன் முன்னால் ஷேவிங் செட்டும், சிசருமாக நிற்க, திகைத்தான்.

“என்னடா இது..?” இளமாறன் கேட்க,

“இல்லடா.., உன்னை சந்தோசப்படுத்தலாமேன்னு.., ஏதோ என்னால் முடிந்தது.” முபாரக் சொல்ல, தன் தலையிலேயே அடித்துக் கொண்டான்.

“நீ சொன்ன தோரணையே சகிக்கலை.., நானே பாத்துக்கறேன்” அவன் கையில் இருந்து பறித்துக்கொண்டு சென்றான். அசட்டு சிரிப்பு சிரித்தவன், “நீ பேசின சந்தோஷத்தில் என்ன செய்யன்னே தெரியலை” உரைத்தவன், வீட்டை ஒழுங்கு படுத்தத் துவங்கினான்.

அவன் அனைத்தையும் ஒழுங்கு படுத்தி முடிக்க, இளமாறன் குளித்துவிட்டு வந்தான். அவன் வரவே, அடுத்த ஐந்தாவது நிமிடம், கையில் ஒரு பிக்ஷாப்பரோடு அவன் வீட்டுக்கு வந்தான் சுமன். வந்தவன் வாசலோடு நிற்க, “மாறா.., சுமன்..” அவனை கவனிக்காத மாறனை கலைத்தான்.

இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டிருக்க, “உள்ளே கூப்பிடு மச்சான்” சின்னக் குரலில் சொல்ல, அடுத்த நிமிடம் இரு நண்பர்களும் ஓடி வந்து ஒருவரை ஒருவர் தழுவிக் கொண்டார்கள்.

“சாரிடா மாறா..” சுமன் கலங்கிய குரலில் அவன் சொல்ல, “அதைப் பற்றி நாம பேச வேண்டாம்” அவனைத் தடுத்து விட்டான்.

“வாம்மா.., ஏன் வெளியவே நின்னுட்ட.., அனு குட்டி..” தரையில் மண்டியிட்டு அமர்ந்தவன், தன் கைகளை விரிக்க, ஓடி வந்து அவன் கரத்துக்குள் புகுந்து கொண்டாள்.

“எங்க டேடிதான் விஸ்மையா ஆண்ட்டியை விரட்டிட்டாங்களா? ஐ ஹேட் மை டேடி..” அவள் இதழ் பிதுக்கி, கண்கள் கலங்க அழுகைக்குத் தயார் ஆனாள்.

அதைப் பார்த்தவன், “அப்படின்னு யார் சொன்னா..? ஆண்ட்டி ஊருக்கு போயிருக்காங்க, இன்னும் கொஞ்ச நாளில் வந்துடுவாங்க..” அவளுக்கு ஆறுதல் சொல்லும் சாக்கில் தனக்கே ஆறுதல் சொல்லிக் கொண்டான்.

“ஊருக்கா போயிருக்காங்க..? முபாரக் அங்கிள் சொன்னாங்களே.., எங்க டேடித்தான் ஆண்டியை விரட்ட வச்சுட்டாங்கன்னு..” குழந்தை முபாரக்கை பார்க்க,

‘கொலைகாரப் பாவி..’ சுமன் அவனை கொலைவெறியில் முறைத்தான்.

“அப்படி டைரெக்டா சொல்லலை..” அவன் இழுக்க, ‘மூடு..’ என்பதுபோல் அனைத்து விரல்களையும் குவித்துக் காட்ட, சட்டென வாயை மூடிக் கொண்டான்.

“அங்கிள் சும்மா சொல்லியிருப்பாங்க. நான் சொல்றதை நீ நம்பலையா?” இளமாறன் கேட்க,

“நம்பறேன்.., ஏன்னா அவங்க உங்களோட தானே இருப்பாங்க, அப்போ உங்ககிட்டேதான் சொல்லிட்டு போயிருப்பாங்க..” குழந்தை சொல்ல, கலங்கிய தன் மனதை வேகமாக சீர்படுத்தினான்.

“அங்கிள், நான் உங்களுக்கு ஒரு சர்ப்ரைஸ் வச்சிருக்கேன். இருங்க..” அவனிடம் சொன்னவள், அவன் கையணைப்பில் இருந்து விலகி, தாய் வைத்திருந்த பிக் ஷாப்பரை திறந்து, ஒரு வெள்ளை காகிதத்தை எடுத்துக் கொண்டு வந்தாள்.

அனைவரின் கவனமும் அவள் பேப்பரில் பதிய, “நான் ஆண்டியை ட்ரா பண்ணேன் பாருங்களேன்..” குழந்தை பேப்பரை விரிக்க, அவளுக்குத் தெரிந்த விதத்தில், அவள் பார்த்த விதத்தில் பென்சிலால் பெரிதாக ஒரு பொம்மையை வரைந்திருந்தாள்.

கழுத்தில் ஒரு செயின், கையில் வளையல், காதில் கம்மல், அந்த பொம்மையின் முகத்தில் இடக் கன்னத்தில், சின்னதாக ஒரு கோடு.., என அதைக் கூட அவள் கிறுக்கியிருக்க, சட்டென தன் கண் கலங்க, அதை அவளிடம் இருந்து மறைக்க, நொடியில் அந்த இடத்தில் இருந்து அகன்றிருந்தான்.

“ஏன் டேடி, அங்கிள் போய்ட்டாங்க.., நான் வரஞ்ச பிச்சர் அவங்களுக்கு பிடிக்கலையா?” குழந்தை கேட்க, அரசி வந்து அவளை கைகளில் அள்ளிக் கொண்டாள்.

“அது அப்படி இல்லடா.., அங்கிள் உள்ளே எதையோ மறந்து வச்சுட்டாங்க போல, அதை எடுக்க போயிருக்காங்க. நாம சாப்பாட்டை எல்லாம் எடுத்து வைக்கலாமா, வா.., அம்மாவுக்கு ஹெல்ப் பண்ணுங்க” குழந்தையை திசை திருப்பினாள்.

கூடவே,தன் கணவனைப் பார்த்தவள், ‘போய் பாருங்க..’ கண்களால் உத்தரவிட்டுவிட்டு சென்றாள்.

யாருக்கும் எதுவும் சொல்ல முடியாத, செய்ய இயலாத நிலை. தன் அறைக்குள் புகுந்து கதவை அடைத்துக் கொண்டவன், ‘விஸ்மையா..’ மனதுக்குள் அரற்றினான். சில நிமிடங்கள் கடக்க, அறைக்கதவு மெதுவாக தட்டப்படவே சட்டென தன்னை மீட்டவன், கதவைத் திறந்தான்.

சுமனும், முபாரக்கும் ஆளுக்கு ஒரு பக்கமாக அவனை அணைத்துக் கொள்ள, “ம்ச்.., விடுங்கடா.., எல்லாம் சரியா போய்டும்..” ஆழமாக மூச்செடுத்தவன் மெல்லியதாய் சிரிக்க முயன்றான்.

“சின்னப் பிள்ளைடா.., அவளுக்கு..” சுமன் துவங்கவே,

“இதை நீ என்கிட்டே சொல்லணுமா என்ன? ரொம்ப நாள் கழிச்சு ஒண்ணா சேர்ந்திருக்கோம்.., இப்போ தேவையில்லாமல் எதையும் பேச வேண்டாம். ஆமா.., வரப்போ பெரிய பையோட வந்தீங்க.., என்ன அது?” அவன் கேட்க,

“இன்னைக்கு சமைச்சதை அப்படியே தூக்கிட்டு வந்துட்டோம்.., சிக்கன், ரசம், ரைஸ்.., மோர்.., எல்லாம்.., வா சாப்பிடலாம்” அனைவரும் சேர்ந்து அமர, அவர்களுக்கு அரசி பரிமாறினாள்.

“நீயும் உக்காரும்மா.., நாமளே போட்டுக்கலாம்..” இளமாறன் உரைக்க, அவர்களோடு தானும் அமர்ந்து கொண்டாள்.

அனைவரும் ஒன்றாக அமர்ந்து உண்டு, வெளியே மரத்தின் நிழலில் அமர்ந்து உரையாட, இளமாறனின் மனம் விஸ்மையாவையே எண்ணிக் கொண்டிருந்தது. ‘அவள் இப்பொழுது இருந்திருந்தால் எப்படி இருந்திருக்கும்?’ அவனால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

குழந்தையோடு விளையாடி, நண்பர்களோடு உரையாடி, அவனது பொழுது நன்றாகவே போனது. “மச்சான், இவன் மேரேஜ் லைப் எப்படி இருக்குன்னு கேளேன்..?” கண்ணைச் சிமிட்டி சுமன் உரைக்க, ‘ஏன் இப்படிச் சொல்கிறான்’ எனப் புரியாமல் ஏறிட்டான்.

சுமன் அவ்வாறு சொல்லவே, கெஞ்சலாக அவனைப் பார்த்த முபாரக், “மச்சான்.., வெந்த புண்ணில் வேலை பாய்ச்ச கூடாது..” அழு குரலில் உரைக்க, இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

“என்னடா ஆச்சு..?” இளமாறன் புரியாமல் கேட்க,

“இவன் பொண்டாட்டி, இவனோட வாப்பாவோட கட்சி.., பயலை இங்கே அங்கே நகர விடுறதே கிடையாது. காலையில் பத்து மணிக்கு கடை, மதியம் ரெண்டு மணிக்கு லஞ்ச்.., சாயங்காலம் ஐஞ்சு மணிக்கு காபி, நைட் ஒன்பது மணிக்கு வீடு. ஸ்ட்ரிக்ட் டைம்டேபிள் தான்..” சுமன் சொல்ல, நம்ப முடியாமல் அவனை ஏறிட்டான்.

“அதையெல்லாம் நம்ம ஆளு கேக்க மாட்டானே..” இளமாறன் தாடையை தேய்த்தான்.

“அங்கேதான் இருக்கு விஷயமே.., பய ஒரு டைமிங்கை மிஸ் பண்றதே கிடையாது. சண்டே மட்டும் ஐயாவுக்கு ப்ரீ..” .

“டேய்.., டேய்.., வேண்டாம்.., உனக்கு என் கையால்தான் சமாதி சொல்லிட்டேன்” அவனை அடக்க முயன்றான்.

“அதெப்படிடா சாத்தியம்..?” இன்னும் இளமாறனால் நம்ப முடியாமல் கேட்டான்.

“அதுவா.., நைட் மட்டும்.., மட்டும்..”,

இருக்கையில் இருந்து எழுந்த முபாரக், அவனை அடிக்க பாய, சுமன் எழுந்து ஓடினான். அவனை விரட்டிச் சென்றவன், “எரும வாயை மூடுடா., தங்கச்சியெல்லாம் இருக்கா..” அவன் அலறலை கண்டுகொள்ளாமல், “டைம் டேபிளே கிடையாதாம்..” அவன் சொல்லிவிட, இவர்கள் விளையாடத் துவங்கியதுமே, காபி போட வீட்டுக்குள் குழந்தையோடு சென்றுவிட்டாள் அரசி.

“ஓ ஹோ..” இளமாறன் விழுந்து விழுந்து சிரிக்க, “உன்கிட்டே சொன்னேன் பார்.., என் புத்தியை செருப்பால் அடிக்கணும். உன்ன..” அக்கம் பக்கம் தேடியவன், அருகே இருந்த ஒரு கல்லை எடுத்து அவனைக் குறி பார்த்து வீசினான்.

சுமன் நொடியில் அங்கிருந்து விலகிவிட, அவனைநோக்கி பாய்ந்து சென்ற அந்தக் கல், வாசலுக்கு மேலே, அஸ்ரத்க்கள் விட்டுச் சென்றிருந்த எந்திரத்தில் பட்டு, அது இரண்டாகப் பிழந்து கீழே விழ, இளமாறனின் நாசி, மல்லிகை மணத்தை உணர்ந்தது.

***

# பகுதி - 17.

இளமாறனால் சில நிமிடங்கள் தன் நாசி உணர்த்தும் செய்தியை நம்ப முடியவில்லை. ‘ஒரு வேளை நான் அவளையே நினைப்பதால் இப்படி கற்பனை செய்து கொள்கிறேனோ?’ தன்னைத் தானே கேட்டுக் கொண்டான்.

முபாரக் இன்னுமே சுமனை துரத்திக் கொண்டிருக்க, அவர்கள் விளையாட்டை கவனிக்க நினைத்தாலும், அந்த வாசம் அவனை வெகுவாய் தொல்லை செய்தது. கீழே விழுந்த தகட்டை எடுத்த முபாரக், “மாறா.., இது அவங்க வச்சுட்டு போனதா? இதை நான் கவனிக்கவே இல்லை பாரேன்..” அவன் சொல்ல, இளமாறனிடம் பதில் இல்லாமல் போகவே அவனைத் திரும்பி பார்த்தான்.

“விஸ்மையா.., நீ இங்கேதான் இருக்கற.., என்னால் உணர முடியுது” சுற்றிலும் பார்வையை சுழற்றினான்.

நண்பர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ள, “முபாரக், சுமன், அவ வந்துட்டா.., வந்துட்டாடா.., விஸ்மையா..” கத்தி அழைத்தான்.

முபாரக்கும், சுமனும் என்ன செய்வது, சொல்வது எனத் தெரியாமல் நிற்க, இளமாறனின் கைகளில் சில்லென்ற ஒரு உணர்வு.., “விஸ்மையா..” நெகிழ்வாய் அழைத்தவன், தான் சில்லென உணர்ந்த இடத்தில் தன் கரத்தை வைக்க, அவனால் அவளை உணர முடியவில்லை.

“விஸ்மையா.., என்ன விளையாட்டு இது.., என் முன்னாடி வா..” புலம்பினான்.

“மாறா..” அவனை நெருங்கிய முபாரக் அவன் தோளை அழுத்திவிட்டு நிமிர, இளமாறனின் கரத்தை பிடித்தவாறு நின்றிருந்த அவளை அவனால் காண முடிந்தது.

“மாறா.., அவடா.., சுமன்.., வா..” அவனால் தன் கண்கள் காட்டுவதை நம்ப முடியவில்லை.

“மச்சான்.., நான் உயிரோட தானே இருக்கேன்” அவன் திடுமென கேட்டவன், தன் கரத்தை விலக்கிக் கொண்டான்.

“என்னடா உளர்ற..?” அவனைக் கடிந்தான் இளமாறன்.

“இல்லடா.., நான் சாகலை.., என்  கண்ணுக்கு அவ தெரியலை..” அவன் சொல்ல,

“விஸ்மையா.., என்மேல் கோபமா..? அதான் என் கண்ணுக்கு தெரியாமல் இருக்கறியா? நீ இல்லாமல் செத்..” செத்துட்டேண்டி.., சொல்லும் முன்னர் அவன் வாயை அடைத்தவள், அவன் கண்களுக்கு தெரிந்தாள். இருவரின் பார்வையும் ஒன்றோடு ஒன்று கவ்விக்கொள்ள, அப்படியே நின்றுவிட்டார்கள்.

அவர்கள் அருகில் வந்த சுமன், “முபாரக், கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி என்னவோ சொன்ன?” ஒரு மாதிரி உறைந்துபோய் நின்றிருந்த அவனை உலுக்கினான்.

“அவ என் கண்ணுக்கு தெரிஞ்சாடா.., சும்மா தேவதையாட்டம்.., இல்ல, அப்படிச் சொன்னால் தேவதை எல்லாம் தூக்கு போட்டுக்கும்.., இது அதுக்கும் மேலே.., அப்படியே பிங்க் கலர்டா..” அவன் விழிகளை ‘பே’ என விரித்து வைத்து உரைக்க, அவன் மண்டையிலேயே கொட்டினான்.

“ஸ்.., ஆ.., காட்டெருமை.., ஏண்டா மண்டையில் கொட்டின, எப்படி வலிக்குது தெரியுமா? உனக்கு அவளை பாக்க முடியலையேன்னு வயித்தெரிச்சல்” தலையை பரபரவென கையால் தேய்த்தவன், எரிந்து விழுந்தான்.

முபாரக்கின் அலறலில் கலைந்த இளமாறன், “டேய்.., அவ வந்துட்டாடா. இதோ, என் பக்கத்தில் தான் நிக்கறா” அவன்

சொல்ல, “நானும் கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி பார்த்தேன். இப்போ பாக்க முடியலை” முபாரக் சொல்ல,

“நிஜமாவாடா.., நீ பாத்தியா..” இளமாறன் எப்படி உணர்ந்தான் என்றே சொல்ல முடியவில்லை. அந்த நொடி, அப்படியே அவளை அழைத்துக் கொண்டு, அவளோடு இந்த உலகத்தின் ஏதாவது மூலைக்கு சென்றுவிடும் வேட்கை.

அவன் மனம் புரிந்தவன்போல், “மச்சான்.., பத்து நிமிஷம் டைம் எடுத்துக்கோ” உள்ளே அழைத்துச் செல், என உரைக்க, அடுத்த நிமிடம், எதைப் பற்றியும் நினைக்காமல் தன் அறைக்குள் அவளோடு புகுந்திருந்தான்.

“இளா..” அவள் மறுப்பாக அழைக்க, அதையெல்லாம் கண்டுகொள்ளும் நிலையில் அவன் இல்லை.

“விஸ்மையா..” அழைத்தவன், அவளை இறுக அணைத்துக் கொண்டான். நிச்சயம் அது கற்பனைதான் என்பது அவனுக்குத் தெரியும். ஆனாலும், அவன் உணர்ந்த அந்த குளுமை.., இதம்.., அதை கண் மூடி அனுபவித்தான்.

“எங்கே போய்ட்ட.., எங்கே இருந்த? மறுபடியும்..” அவள் எத்தனை தெரு, ஷாப்பிங்க மால் என அலைந்தாளோ, என்று தவித்துப்போய் அவன் கேட்க, அவன் வாயை கரத்தால் மூடினாள்.

“என்னை அந்த தகட்டுக்குள்ளே அரஸ்ட் பண்ணிட்டாங்க. நான் எங்கேயும் அலையலை, இங்கேதான் இருந்தேன். உங்களோடவே..” அவனை தாவி அணைத்துக் கொண்டாள். இத்தனை நாள் பிரிவு அவனுக்கு மட்டுமா? அவளுக்கும்தானே.

தானும் சில நொடிகள் அவளை இறுக அணைத்துக் கொண்டவன், எதையுமே பேசவில்லை.

சட்டென தெளிந்தவன், அவளை விட்டு விலகி, “ஏண்டி என்கிட்டே சொல்லலை? எங்க அம்மா இப்படி செய்யப்

போறாங்கன்னு உனக்குத் தெரியும் தானே..” அவ்வளவு நேரமாக அவளிடம் குழைந்து நின்றவன், கோபமாக அவளை விட்டு விலகி நின்றான்.

“இளா.., நான் சொல்வதை ஒரு நிமிஷம் கேளுங்க..” அவள் சொல்ல, அவன் கொஞ்சம் கூட அசையவே இல்லை.

அவனது கோபம் கண்டு வருந்தியவள், “நாம இப்படியே வாழ முடியாது இளா. அதான்.., நீங்களாவது நல்லா இருக்கணும், சந்தோஷமா இருக்கணும்னு நினைத்துதான், நான் எதையுமே சொல்லலை” அவள் சொல்லச் சொல்ல, அவன் கோபம் அதிகரித்தது.

“நீ இல்லாத வாழ்க்கையில் எனக்கு சந்தோஷமா?” அவன் கோபமாக திருப்பிக் கேட்க, அவள் தலை கவிழ்ந்தாள்.

“அத்தனை மாசம் இல்லாமல், திடீர்ன்னு என் சந்தோசம் பற்றிய நினைப்புக்கு என்ன வந்ததாம்?” எனக்குத் தெரிந்தே ஆகவேண்டும் என்று நின்றான்.

“ஒரு விபத்தில் உயிரை இழந்த என்னால், என் மூலமா  உங்களுக்கு எதிர்காலமே இருக்காது இளா. அதான்.., என் மனசை கல்லாக்கிட்டு அவங்க செய்கைக்கு உடன் பட்டேன்..” அவள் சொல்ல, பெரும் கோபமாக அவளை நெருங்கினான்.

“இல்ல.., நீ சாகலை.., அப்படிச் சொல்லாதே. அப்படிச் சொன்னா.., நானே உன்னை கொன்னுடுவேன்” கோபமும், ஆற்றாமையும் போட்டி போட, பெரும் ஆத்திரமாக அவளை நெருங்கினான். அவனது கோபம் கண்டாலும், கொஞ்சம் கூட அசராமல் நின்றாள்.

அவள் அசையாமல் நிற்கவே, “சரி.., உனக்கு எப்போ அது நினைவுக்கு வந்தது? அது மட்டும்தானா.., இல்ல வேற எதாவதும் ஞாபகத்துக்கு வந்ததா?” பொறுமையாக கேட்டான்.

அதே நேரம், கதவு வேகமாக தட்டப்பட, “அங்கிள், விஸ்மையா ஆண்ட்டி வந்துட்டாங்களாமே அப்படியா?” அனுவின் குரல் அறைக்கு வெளியே கேட்க, தன் அறைக்கதவை திறந்தான்.

அவன் முகம் சோர்ந்திருப்பதைக் கண்ட நண்பர்கள் குழம்ப, அனுவோ, விஸ்மையாவோடு போய் பேசினாள். சில நிமிடங்கள் கடக்க, “டேடி.., ஆண்ட்டி பாத்தீங்களா..? எவ்வளவு அழகு?” அவள் சொல்ல, “ஆமாடா, நிஜமாவே அழகுதான்” முபாரக்கும் உரைத்தான்.

“நீங்க எல்லாம் சொல்றீங்க.., என்னால் பாக்க முடியலையே” சுமன் உரைக்க, இளமாறனின் அருகில் வந்தவள், “இளா, உங்களை தொட்டுட்டு பார்த்தால் நான் அவங்க கண்ணுக்குத் தெரிவேன். ட்ரை பண்ண சொல்லுங்க” அவள் சொல்ல, ‘நிஜமாவா..?’ ஆச்சரியமானான்.

முபாரக்கும், சுமனும் இனிமேல் என்ன நடந்தாலும் நண்பனுக்கு ஆதரவாக இருப்பது என முடிவு எடுத்து விட்டதால், அவன் நிம்மதி மட்டுமே முக்கியம் என்ற முடிவுக்கு வந்து விட்டார்கள். கூடவே, இளமாறனுக்கு ஏதாவது உதவி தேவைப் பட்டால், அதையும் செய்து கொடுப்பது என முடிவெடுத்தனர்.

“சுமன், முபாரக்.., என் கிட்டே வாங்க.., என்மேல் கை வைங்க..” அவன் சொன்னவாறே செய்தவர்கள், ‘என்ன?’ என்பதுபோல் அவனைப் பார்க்கவே, கையை சற்று தூரத்தில் சுட்டிக் காட்ட, அனுவின் அருகில் நின்ற விஸ்மையாவை இருவரும் பார்த்தார்கள்.

‘ஹப்பா.., என்ன அழகுடா சாமி..’ அவர்கள் இப்படித்தான் எண்ணினார்கள்.

அவர்கள் என்ன பேசுவது எனத் தெரியாமல் அப்படியே நிற்க, “ஹலோ..” மென்மையாக புன்னகைக்க, “ஹாங்..,

ஹாய்..” தங்கள் அதிர்ச்சியை கை விட்டவர்கள், அவளைப் பார்த்து கை அசைத்தார்கள்.

“மச்சான்.., உனக்கு கண்ணுக்குத் தெரியாத இடத்தில் எங்கேயோ மச்சம் இருக்குடா” முபாரக் சொல்ல, அவனை முறைக்க முயன்று தோற்றான். கூடவே அவன் முகம் வாட, “என்னடா.., சந்தோஷப்படுவன்னு பாத்தா, முகம் ரொம்ப வாடி இருக்கு?” சுமன் அவனிடம் கேட்டான்.

“ம்ச்.., என்னடா சொல்லட்டும்.., நானே அவ சாகலைன்னு நம்பினா, இவ, நான் ஆக்சிடெண்டில் செத்துட்டேன்னு சொல்றா. எனக்கு எப்படி இருக்கும், நினைச்சுப் பார்..” வேதனையாக உரைத்தான்.

“மச்சான்.., எனக்கு என்னவோ ஆக்சிடெண்ட் நடந்தது மட்டும்தான் உண்மையா இருக்கும்னு தோணுது. ஆக்சிடென்ட் எப்போ நடந்ததுன்னு கேள்?” விஸ்மையா பேசுவது ஊமைப்படம் போலத்தான் அவர்களுக்கு இருந்தது.

அவர்கள் கேட்டதை சில நொடிகள் யோசித்தவள், “ஒரு மூணு வருஷத்துக்கு முன்னாடி.., திருப்பதியில் இருந்து சென்னைக்கு வர்றப்போ.., அவ்வளவுதான் எனக்கு ஞாபகம் இருக்கு. அதுக்கு மேலே எதுவும் ஞாபகத்துக்கே வரலை. நான் எவ்வளவோ ட்ரை பண்ணிட்டேன்” அவள் சொன்னதை நண்பர்களிடம் சொன்னான்.

“இது போதுமே.., திருப்பதி டூ சென்னை ஹைவேல மிஞ்சிப்போனால் எத்தனை விபத்து நடந்திருக்கும்? நாம கன்னிமாரா போறோம்.., மூணு வருஷத்துக்கு முன்னாடி வந்த எல்லா நியூஸையும் கலெக்ட் பண்றோம்” உற்சாகமானார்கள்.

அவர்களது சந்தோசம் அவளையும் தொற்றிக் கொள்ள, அரசி, காபி கோப்பைகளோடு அங்கே வந்தாள். அவளிடம் அவர்கள் விஷயத்தை சொல்ல, “அண்ணா.., நானும் அவங்களை பாக்கணும்” அவள் சொல்லவே, “அம்மா..,

நீங்க என்னை தொட்டுக்கோங்க" குழந்தை உரைக்க, அவளை மடியில் தூக்கி வைத்துக் கொண்டாள்.

"விஸ்மையா.., இதெல்லாம் ஒரு முடிவுக்கு வரணும். இது அவரோட லைப் பத்தினது" அரசி சொல்ல, மௌனமாக தலை அசைத்தாள்.

"சிஸ்டர், இதுக்கு முன்னாடியும் நாங்க அவனை டச் பண்ணியிருக்கோமே, அப்போல்லாம் நீங்க எங்க கண்ணுக்கு தெரியவே இல்லை" முபாரக் தன் சந்தேகத்தை கேட்க,

"கெட்டதிலும் ஒரு நல்ல விஷயம்னுதான் இதைச் சொல்லணும்.., நான் யார் கண்ணுக்காவது தெரியணும்னு நினைத்தால், இப்போ அதை என்னால் செய்ய முடியும்" அவள் சொல்ல, சில நொடிகள் அங்கே மௌனத்தில் கடந்தது.

அரசியும் குழந்தையும் வீட்டுக்குச் சென்றுவிட, நண்பர்கள் மூவரும், மறு நாள் முதல், நூலகமே கதியென ஆனார்கள். கிட்டத்தட்ட ஒரு வாரம்.., திருப்பதி டூ சென்னைக்கு இடையில் நடந்த விபத்துக்கள் பதினொன்று இருக்க, ஒவ்வொரு விலாசமாக போய் பார்க்க முடிவெடுத்தார்கள்.

அந்த விபத்து நடந்தவர்களின் விலாசங்களை சுமன், அவனுக்குத் தெரிந்த பத்திரிகை அன்பன் மூலமாக சேகரிக்க, அவர்கள் வேலை சற்று சுலபமானது. மறு நாள் முதல், சென்னையில் ஒவ்வொரு விலாசமாக தேடிச் செல்லத் துவங்கினார்கள்.

கிட்டத்தட்ட பத்து வீடுகளை சந்தித்த பிறகும், எந்த முன்னேற்றமும் இருக்கவில்லை. இறுதியாக இருப்பது ஒரே வாய்ப்புதான். அதுவும் இல்லையென்று ஆனால், என்ன செய்வது என்றே தெரியவில்லை. இளமாறனின் நம்பிக்கை கொஞ்சம் கொஞ்சமாக தேய்ந்து கொண்டு வந்தது என்றே சொல்லலாம்.

அன்று இறுதி வாய்ப்பு.., ஒரு மருத்துவரின் குடும்பம், டாக்டர். பரமேஸ்வரன், டாக்டர்.மாலதி, அவர்களது மகள் சக்தி, அவளும் மருத்துவர்தான். சொல்லப்போனால், விமலா  மருத்துவமனையே அவர்களதுதான். பரமேஸ்வரனின் தாயின் நினைவால், அவர் பெயரில் இயங்கியது அந்த மருத்துவமனை.

வீடு என சொல்ல முடியாத, பங்களாவுக்குள் நுழையவே, வாட்ச்மேனின் அனுமதி வேண்டி இருந்தது. பொதுவாகவே, இளமாறனும், அவனோடு விஸ்மையாவும் மட்டுமே செல்வது வழக்கம். அன்றும் இருவரும் செல்ல, அந்த வீட்டின் முன்னால் நின்ற அந்த நிமிடம், கேட்டில் இருந்த வாட்ச்மேனைப் பார்த்தவள்,

“இளா.., இவர் முனிபாய்..” அவள் சொல்லவே, “முனிபாய்.., டாக்டர் இருக்காங்களா?” அவன் கேட்க, தன்னை பெயர்சொல்லி அழைத்த அவனை வியப்பாய் ஏறிட்டார்.

“உங்களுக்கு என்னைத் தெரியுமா? எப்படி என்னைத் தெரியும்?” அவர் கேட்க,

“விஸ்மையா.., சொன்னா..” அவன் சொல்ல, அப்படி ஒரு பெயரை நான் கேள்விகூட பட்டதில்லையே என்பதுபோல் அவனைப் பார்த்தார்.

விஸ்மையாவோ, “இளா.., சக்தி.., சக்தி சொல்லுங்க..” அவள் கண்கள் வீட்டை அங்குலம் அங்குலமாக, பரவசமாக, பாசமாக  அலச, அப்படியே உறைந்துபோய் நின்றுவிட்டான்.

அவன் இதழ்களோ, “டாக்டர் சக்தி..?” அவள் பக்கம் கை நீட்டி கேட்க, ‘ஆம்’ என தலை அசைத்தாள்.

***

# பகுதி - 18.

இளமாறன் சக்தியின் பெயரைச் சொல்லவே, “அட, தம்பி, உங்களுக்கு சக்தி அம்மாவைத் தெரியுமா? எப்படி இருந்தவங்க.., இப்போ..” குரல் நடுங்க, உரைத்தவர், “நீங்களே உள்ளே போய் பாருங்க தம்பி..” அவனை உள்ளே அனுமதித்தார்.

“இளா.., இளா.., நான்.., நான் சாகலை.., இங்கே.., என் வீட்டில்.., உள்ளே வாங்க..” அவளால் தன் உணர்வுகளை வார்த்தையில் வடிக்க முடியவில்லை.

“விஸ்மையா.., நிஜமா?” அவன் பேச்சிலும் சிறு பரபரப்பு.

அந்த நிலையிலும் இளமாறனுக்கு மனதுக்குள் பெரும் நிம்மதி.., அவனது விஸ்மையா இங்கே உயிரோடுதான் இருக்கிறாள் என்ற எண்ணம் கொடுத்த நிம்மதி.., உற்சாகமாகவே வாசலில் அடியெடுத்து வைத்தான். எப்படியும் அவளை மீட்டுவிடலாம் என்ற நம்பிக்கை..,

அவன் தயக்கமாக உள்ளே நுழைய, அவனுக்கு முன்பாகவே, பாய்ந்து உள்ளே சென்றாள் விஸ்மையா என்னும் சக்தி. அவன் அழைப்புமணியை அழுத்தவே, உள்ளே சென்றவள் வெளியே வர, “இளா.., என்ன இது? உள்ளே வாங்க..” அவனை அழைத்தாள்.

அதே நேரம் அழைப்புமணியின் ஓசையில் வாசலுக்கு விரைந்த மாலதி கதவைத் திறக்கவே, அப்பொழுதுதான் கதவு மூடி இருந்ததையே உணர்ந்தாள். அவனைப் பார்த்து ஒரு அசட்டு சிரிப்பு சிரிக்க, வெளியே வந்தவரைப் பார்த்தவள், “இளா.., அம்மா..” உரைத்தவள், தாயை தாவி அணைக்க முயன்றாள்.

“விஸ்மையா பாத்து..” அவன் பதற, மாலதி அவனை குழப்பமாக  ஏறிட்டார். ‘விஸ்மையா..?’ கேள்வியாக

அவனை ஏறிட்டவர், அவனது பார்வை அருகே பதியவே, திரும்பி பார்த்தார்.

“நீங்க.., சக்தியோட அம்மாவா..?” அவன் கேட்க, சட்டென பார்வையை திருப்பியவரின் முகம் பெரும் வேதனையை பிரதிபலித்தது.

“ம்.., ஆமா.., உள்ளே வாப்பா..” அழைத்தவர், உள்ளே அழைத்துச் சென்றார். சக்தியோடு கல்லூரியில் படித்த தோழர், தோழியர் அனைவரும் அடிக்கடி அவர்களை வந்து சந்திப்பதால், அவனையும் அப்படி எண்ணி அழைத்தார்.

அங்கே இருந்த சோபாவை காட்டி அவனை அமரச் சொன்னவர், “நீ சக்தி கூட படிச்சவனாப்பா..? இப்போதான் உனக்கு விஷயம் தெரியுமா? இத்தனை வருஷம் நீ இந்தியாவில் இல்லையா? உன்னை பார்த்த ஞாபகம் எனக்கு இல்லையே..” கலங்கிய தன் கண்களை நாசூக்காக துடைத்துக் கொண்டார்.

அவரிடம் உண்மையையும் சொல்ல முடியாமல், பொய் சொல்லவும் மனமின்றி அவரை பார்த்தவன், ‘ஏதாவது சொல்..’ என்பதுபோல் அவளைப் பார்த்தான்.

அவளோ, அவனைக் கவனிக்காமல், தன் தாயையும், வீட்டையுமே பரவசமாக பார்த்துக் கொண்டிருந்தாள். அவனோ, “இல்ல, நான் அவளோட படிக்கலை..” மறுத்தவன், அதற்குமேல் அவரிடம் எப்படி விளக்கவென்று தெரியாமல் அமைதியானான்.

‘படிக்கலைன்னா..?’ மாலதி அவனை குழப்பமாக ஏறிட, “இளா.., அப்பா எங்கேன்னு கேளேன்” அவனிடம் சொல்ல,

அவன் கேட்கவே, “அவரா.., ஹாஸ்பிடல் போயிருக்கார்.., ஒரு எமர்ஜென்சி கேஸ்..” அவனிடம் சொன்னவர், “அவகூட படிக்கலைன்னு சொல்ற, பிறகு.., ஓ.., ஒரு வேளை அவ உங்க ரிலேட்டிவ் யாருக்காவது ட்ரீட்மெண்ட் கொடுத்தாளா?

ஒரு நிமிஷம் இருப்பா.., குடிக்க ஏதாவது கொண்டு வரச் சொல்றேன்” இருக்கையில் இருந்து எழ முயன்றார்.

அவரைத் தடுத்தவன், “விஸ்.., சக்தி..” அவளை ரத்தமும் சதையுமாக காணப்போகும் வேகம் உள்ளுக்குள் கொட்டிக் கிடக்க, வெளியே அமைதியாக காட்ட பெரும் முயற்சி செய்தான். அவனை உணர்ந்த விஸ்மையா, நொடியில் அவனை நெருங்கியவள், அவன் இடக்கரத்தை தன் கரத்தோடு கோர்த்துக் கொண்டாள்.

“அதோ.., அந்த ரூம்லதான் இருக்கேன்..” அவள் ஒரு அறையை சுட்டிக் காட்ட, மாலதி உரைக்கும் முன்பே, சோபாவில் இருந்து எழுந்து அந்த அறையை நோக்கி நடந்தான்.

“உனக்கு எப்படிப்பா தெரியும்? இதுக்கு முன்னாடி வந்திருக்கியா என்ன?” அவனிடம் கேட்க, நீர் நிறைந்த விழிகளோடு அவரை ஏறிட்டவன், மறுப்பாக தலை அசைத்தான்.

“நான்..” அறைக்குள் செல்லலாமா என அவன் கேட்க, அவரே அறையைத் திறந்துகொண்டு உள்ளே சென்றார். அவரின் பின்னால் அவன் நுழைய, அந்த அறையின் குளுமை சில்லென அவனைத் தாக்கியது. கூடவே, அறை முழுவதும் வீசிய மல்லிகைப் பூவின் மணம்.., ஒரு நொடி அப்படியே நின்றுவிட்டான்.

“என்னப்பா அப்படியே நின்னுட்ட..?” அவன் பின்னால் வராமல் போகவே, திரும்பி கேட்டார்.

‘ஒன்றும் இல்லை..’ என்பதுபோல் தலை அசைத்தவன், பார்வையை அறைக்குள் சுழற்றினான்.

அந்த அறை ஒரு ஐசியூ என்பதை அவனால் நொடியில் உணர்ந்துகொள்ள முடிந்தது. செயற்கை சுவாசம், இதயத்துடிப்பை காட்டும் கருவி.., அவள் கையில் இறங்கும்

சலைன் பாட்டில் என அனைத்தையும் பார்த்தவன், அடிமேல் அடி வைத்து கட்டிலை நெருங்கினான்.

அவள் முகத்தைப் பார்க்க, அவன் கண்ணீர் கண்களை நிறைந்து அவன் பார்வையை மறைத்தது. அவனைப் பார்த்து திரும்பிய மாலதி, “தம்பி, என் பொண்ணு ரொம்ப அழகுன்னு எங்களுக்கெல்லாம் ரொம்ப பெருமை. இந்த உலகத்தில் என் பொண்ணை மாதிரி யார் உண்டுன்னு, அவ்வளவு தலைக்கனமா இருந்தோம்.

“அடுத்த குழந்தை பெத்துகிட்டா.., எங்கே இவளை டாமினேட் பண்ணிடுமோன்னு ரெண்டாவது குழந்தையை பெத்துக்கறதையே அவாய்ட் பண்ணோம். அப்படி பெருமையா வளர்த்த எங்க மக இப்போ.., இப்படி..” அவர் உடைந்து அழ, அவன் கண்களிலும் கண்ணீர் வழிந்தது.

புறங்கையால் தன் கன்னத்தில் வழிந்த கண்ணீரை சுண்டி எறிந்தவன், அவளைப் பார்க்க, தன் முன்னால் நிற்கும் அந்த பேரழகி, படுக்கையில் உடலும், சதையுமாக, ரத்தப்பசை இழந்து, வெளிறி, இத்தனை வருடங்களாக குளுக்கோஸ் மட்டுமே உணவாக இருக்க, சற்று எலும்பும் தோலுமாகத்தான் இருந்தாள்.

ஆனால், முகத்தில் இருக்கும் அந்த அழகு.., அதில் கிஞ்சித்தும் மாற்றம் இருக்கவில்லை. அவன் அவளையே பார்த்துக் கொண்டிருக்க, மகளது படுக்கையை நெருங்கிய மாலதி, அவள் தலையை பாசமாக வருடினார்.

“அவ அழகி மட்டும் இல்லை.., ரொம்ப புத்திசாலியும் கூட, மெரிட்ல டாக்டர் சீட் வாங்கிப் படித்தாள்.., எங்க கண்ணே எங்க பொண்ணுக்கு பட்டுடுச்சு போல, அதான்.., இப்படி..” தன்னை மீறி அவர் அழுகையில் குலுங்க, வேகமாக அவரை நெருங்கி, அவர் தோளை ஆதரவாக தட்டினான்.

“எவ்வளவு நாளா இப்படி..?” அவள் வெண்டிலேஷனில் இருப்பது அவனுக்குத் தெரிந்தது எனவே கேட்டான்.

“ஒரே பொண்ணு.., மெடிக்கல் உலகம் ஆயிரம் சொல்லலாம். அவளோட மூளை செத்துடுச்சு.., கோமாவுக்கு போய்ட்டா, அவளால் மீள முடியாது.., என்ன வேண்ணா சொல்லலாம். ஆனா.., எங்களுக்கு அவ பொண்ணுதானே. அவ உயிரோட இருக்கும்போது, அவளை எப்படி விட்டுக் கொடுக்க முடியும்?

“எங்க காலம் முடியும் வரைக்கும் அவ இப்படியே இருந்தால் கூட பரவாயில்லை. ஆனா, அவ முழுசா எங்களை விட்டுப் போவதை எங்களால் நினைத்து கூட பாக்க முடியலை..” அவள் நெற்றியில் மென்மையாக இதழ் ஒற்றினார்.

அவனோ விஸ்மையாவைப் பார்த்தவன், , “விஸ்மையா.., இவங்க கண்ணீர் உன்னை கொஞ்சம் கூட அசைக்கவே இல்லையா? இவங்க மேலே இரக்கம் வரலை..? இப்போ, இந்த நிமிஷம்.., நீ இந்த உடம்புக்குள் போய் ஆகணும்..” அவன் கத்த, இவன் என்ன பேசுகிறான் எனப் பார்த்தார்.

“இளா.., என்ன சொல்ற? இல்ல என்னால் முடியாது..” அவள் மறுக்க,

“இல்ல.., நீ போய் ஆகணும். நீ இப்படி உடம்பாலையும், ஆத்மாவாலையும் பிரிஞ்சு இருக்கவா நான் இத்தனை கஷ்டப்பட்டேன்..” மாலதியை விட்டு, அவளை நெருங்கினான்.

“அந்த உடம்புக்கு என்னை தாங்கும் சக்தி இல்லை இளா..” அவள் கண்களில் பெரும் கலவரம்.

“அந்த பேச்சுக்கே இடமில்லை.., நான் சொல்றேன்.., நீ போ.., இல்ல, நான் என்ன செய்வேன்னே எனக்குத் தெரியாது” கத்தினான்.

“இளா.., நான் இப்போ அந்த உடம்புக்குள் போனால், அடுத்த நிமிஷமே நான் இறந்துடுவேன். உங்களுக்கு அதுதான் வேணுமா?” அவனை விட்டு போக முடியாத தயக்கம், பயம் அவளை இவ்வாறு பேசத் தூண்டியது.

“இல்ல.., அப்படி நடக்காது.., எனக்குத் தெரியும்.., விஸ்மையா.., நீ லேட் பண்ற ஒவ்வொரு நிமிடமும் நமக்கு ரொம்ப முக்கியம்.., போ..” கோபத்தில் கத்தினான்.

அவன் தனக்குத் தானே பேசிக் கொள்வதுபோல் இருக்க, மாலதி புரியாமல் திகைப்பாய் அவனைப் பார்த்துக் கொண்டிருந்தார். “தம்பி, நீங்க யார்கிட்டே பேசறீங்க?” அவர் கேட்க,

“உங்க சக்தி கிட்டேதான். அவ ஆத்மா.., அதோ வெளியே இருக்கு. அவ அந்த உடம்புக்குள் போகணும். விஸ்மையா.., உனக்கு நான் வேணும்னா இதைச் செய்..” அவன் அவளை நெருங்க, அவள் பின்னடைந்தாள்.

மாலதிக்கோ, அவன் நார்மலாக இல்லையோ என்ற சந்தேகம். “தம்பி, நீங்க என்ன சொல்றீங்க? சக்தி, ஆத்மா..?” புரியாமல் கேட்டார். அதே நேரம் அவளது தந்தை பரமேஸ்வரன் அங்கே வர, குழப்பமாக அவர்களை ஏறிட்டார்.

“மாலதி, யார் இது? என்ன விஷயம்? உங்க சத்தம் வெளியே வரைக்கும் கேக்குது...” மனைவியை நெருங்கினார்.

“இந்த தம்பி.., என்னென்னவோ சொல்றாங்க.., நம்ம சக்தி ஆத்மா இருக்குன்னு..” அவருக்கும் தெரியாத விஷயத்தை அவர் எப்படி விளக்க முடியும்?

“யார்ன்னே தெரியாதவங்களை இப்படித்தான் சக்தியோட ரூம் வரைக்கும் கூட்டி வருவியா? ஹல்லோ.., நீங்க யார்..? முதல்ல இங்கே இருந்து வெளியே போங்க..” அவனை அப்புறப்படுத்த முயன்றார்.

“அங்கிள், நான் சொல்வதை ஒரு நிமிஷம் கேளுங்க..” அவன் தடுக்க,

“எதுவா இருந்தாலும் வெளியே போய் பேசலாம். இங்கே பேச முடியாது” பிடிவாதமாக அவனை நெருங்கினார்.

“பிளீஸ் அங்கிள்.., நான் சொல்வதை ஒரு நிமிஷம் கேளுங்க, விஸ்மையா., நான் சொல்வதை இவங்க ஏத்துக்கணும்னா நீ அந்த உடம்புக்குள் போயே ஆகணும்” அவர் கையில் சிக்காமல், சக்தியின் படுக்கையை நெருங்கினான்.

அவளோ, “இல்ல இளா.., என்னால் உங்களை விட்டு போக முடியாது” உரைத்துவிட்டாள். அவள் எதனால் ரிஸ்க் எடுக்க விரும்பவில்லை என்பதை உரைக்கவே, அவனுக்கும் கண்மண் தெரியாத கோபம் வந்தது.

“என்னை விட்டு போக முடியாதா? இப்போ சொல்றேன் கேட்டுக்கோ, எனக்கு நீ வேண்டாம்.., இதோ படுத்திருக்காளே இவதான் வேணும். உன்னை எப்படி இவளுக்குள்ளே போக வைக்கணும்னு தெரியும்” வெறிபிடித்தவன்போல் கத்தியவன், அவளுக்கு கொடுத்திருந்த வெண்டிலேடரை உருவி எறிந்தான்.

“ஏய்.., என்ன காரியம் பண்ண..?” பதறி வந்த பரமேஸ்வரன், அந்த கருவியை பொருத்த முயல, அவரை வேகமாகத் தடுத்தான்.

அவன் தடுக்கவே, அவனை கன்னம் கன்னமாக அறைய, அதையெல்லாம் தாங்கிக் கொண்டு நின்றிருந்தான். விஸ்மையாவோ.., சக்தியின் உடலில் இருந்து அந்த கருவியை அகற்றிய அடுத்த நிமிடம், மூச்சுக்குத் திணற, ஆத்மா துடித்த அதே அளவு, அவளது உடல் தூக்கிப் போட்டது.

இதயத்துடிப்பை காட்டும் கருவி ஏறுக்கு மாறாக துடிக்க, சற்று நேரத்தில் அதன் இயக்கம் நின்று போனது. அதே நேரம், ஆத்மாவான விஸ்மையா காற்றில் கரைந்து காணாமல் போயிருந்தாள்.

“என் பொண்ணை கொன்னுட்டியேடா பாவி.., பாவி..” மாலதியின் அழுகை அந்த அறையை நிறைத்தது.

***

# பகுதி - 19.

இளமாறன் அப்படியே துவண்டு, துடித்து, இடிந்து நின்றுவிட்டான். சக்தியின் இதயத்துடிப்பை காட்டும் கருவி முடங்கிய இறுதி ‘பீப்’ ஒலியை கேட்டவனுக்கு, தன் மொத்த உயிரும் போன உணர்வு. விஸ்மையா வேறு காற்றில் கலந்து காணாமல் போயிருக்க, அவள் தன்னை விட்டு மொத்தமாக போய்விட்டாள் என துடித்துப் போனான்.

‘அந்த உடம்புக்கு என்னைத் தாங்கும் சக்தி இல்லை என்று சொன்னாளே, அதைக் கேட்காமல், அவள் எனக்கு முழுதாக வேண்டும் என்ற சுயநலத்தில், அவள் நிழலையும் இழந்து விட்டேனா?’ அவன் மனதின் ஓலம் வெளியே யாருக்கும் கேட்கவே இல்லை.

தன்னை சரமாரியாக அடித்த பரமேஸ்வரனை கூட அவன் தடுக்கவில்லை. விஸ்மையா இருந்த இடம் வெறுமையாக இருக்க, கண்களை இறுக மூடியவன், ஆழமாக மூச்செடுத்தான். கடைவிழியோரம் கண்ணீர் வழிந்தது.

மாலதியோ ஒரு படி மேலே போய்.., “என் பொண்ணை கொன்னுட்டியேடா பாவி..” என அவனை திட்டித் தீர்த்தவர், மகளின் அருகில் ஓடினார். எதற்கும் அவன் அசையவே இல்லை. ‘என்னை விட்டு போய்விட்டாளா? இல்லை, அது அவளால் முடியாது’ மனதுக்குள் பேசியவனுக்கு, விழி திறக்கும் தைரியம் கூட இருக்கவில்லை.

மாலதி விஸ்மையாவின் படுக்கையை நெருங்கிய அந்த நொடி, விஸ்மையாவின் இதயத்துடிப்பை காட்டும் அந்த கருவியானது, ‘பீப்..., பீப்...’ மெல்லியதாக, சில நொடி இடைவெளியில் ஒலிக்க, அவரால் தன் காதையே நம்ப முடியவில்லை.

“என்னங்க..” அவரது அலறலில், பரமேஸ்வரனும் இளமாறனை விட்டுவிட்டு மகளின் அருகில் ஓடினார்.

இப்பொழுது, அந்த கருவி.., ‘பீப்பீப்பீப்’ விடாமல் இசைத்து அவளது வரவை உரைக்க, பெற்றவர்களால் நம்பவே முடியவில்லை.

“ஹேய் மேன்.., ஷி இஸ் பேக்.., ஷி இஸ் பேக்.., ஓ காட்.., யூ டிசர்வ் இட்..” உற்சாக கூச்சலில், சின்னப் பிள்ளைபோல் துள்ளிக் குதித்தார். மனைவியை இறுக தழுவியவர் தன் சந்தோஷத்தை வெளிப்படுத்த, அவளைப் பெற்றவர்களின் கண்களில் இப்பொழுது ஆனந்த கண்ணீர் வழிந்தது.

“ஹேய்.., கமான் மேன்.., கம்.., அண்ட் சீ ஹெர்..” பரமேஸ்வரன் குரல்கொடுக்க, அடுத்த நொடி, தானும் அவள் படுக்கைக்கு அருகில் ஓடினான்.

“சக்தி.., சக்தி.., இங்கே பாரும்மா.., சக்தி..” பெற்றவர்கள் இருவரும் ஒருவர் மாற்றி ஒருவர் குரல் கொடுக்கவே, மெதுவாக புருவம் நெரித்தாள்.

“மாலதி.., உடனே ஹாஸ்பிடல் போயாகணும்., கமான் குயிக்.., நான் ஆம்புலன்ஸை எடுக்கறேன், “யங் மேன்.., கூல்.., அவ ‘காட்’டை தள்ளிட்டு வாங்க” தன் வயதை மீறி, சின்னப் பையன் போல், பாய்ந்து வெளியே ஓடினார்.

அடுத்த அரைமணி நேரத்தில் அவர்கள் மருத்துவமனையில் இருக்க, விமலா மருத்துவமனையின் மருத்துவர்கள் அனைவருமே அவளைக் காண, பரிசோதிக்க குவிந்தார்கள் என்றே சொல்லலாம்.

மூன்று வருடமாக கோமாவின் இருந்தவள், ஒரே நாளில் தானாக சுவாசிக்கிறாள், அதுவும் எந்த கருவியின் உதவியும் இல்லாமல், எனச் சொன்னால் அது உலக அதிசயம் இல்லையா?

விஸ்மையாவை கவனிக்கத் துவங்கிய பிறகு, இளமாறனை கவனிக்கும் நிலையில் யாரும் இருக்கவில்லை. மருத்துவர் பட்டாளம் அந்த ஐசியூ அறைக்குள் நுழைவதும், பரபரப்பாக வெளியே

வருவதுமாக இருக்க, யாராவது ஒரு வார்த்தை சொல்ல மாட்டார்களா? ஏங்கியவாறு நின்றிருந்தான்.

அறைக்குள் நுழைந்து, அவள் கரத்தை கெட்டியாக பிடித்துக்கொள்ள எழுந்த வேகத்தை அப்படியே தனக்குள் புதைத்துக் கொண்டு நின்றிருந்தான். சிலபல மணிநேரங்கள் அந்த மருத்துவமனையே அல்லோகலப்பட, எதிலும் பாதிக்காமல் ஒரு மூலையில் நின்றிருந்தான்.

அவள் உயிரோடு வந்துவிட்டாள் என சந்தோஷப்படுவதா? இல்லையென்றால் தன்னை விட்டு போய்விட்டாளே என வருத்தப்படுவதா என அவனுக்கு எதுவும் புரியவில்லை. ‘விஸ்மையா.., வந்துடேன்.., என்கிட்டே வந்துடேன்..’ ஆவி துடித்தது.

தான் கண்ணீர் விட்டு அழுதால், அதுகூட மற்றவரின் கவனத்தை தன்மேல் திருப்பும் என அறிந்தவன், தன் வேதனையை முடிந்த மட்டில் விழுங்கிக் கொண்டு நின்றிருந்தான்.

‘அவளுக்கு எதுவும் இல்லை, அவள் பெர்பெக்ட்லி ஆல் ரைட்.., இன்னும் கொஞ்ச நேரத்தில் கண் விழித்து விடுவாள்’ என மருத்துவர்கள் உரைக்கும் வரைக்கும், அந்த காரிடாரின் மூலையில் தனிமையில் நின்றிருந்தான்.

எப்பொழுது அவளுக்கு எதுவும் இல்லை, அவள் சற்று நேரத்தில் கண் விழித்து விடுவாள் எனத் தெரிந்ததோ.., அடுத்த நிமிடம் அங்கே இருந்து கிளம்பிவிட்டான். இதயம் கனக்க, அங்கிருந்து அவனால் அகலவே முடியவில்லை என்றாலும், முயன்று கிளம்பினான்.

அதற்குமேல் அவனுக்கு அங்கே வேலை இருப்பதாக அவனுக்குத் தோன்றவில்லை. அவளது உயரம், படிப்பு, பதவி, இதையெல்லாம் நேரில் கண்ட பிறகு, அவளுக்கு தான் இணையே இல்லை என்று தோன்றியது.

குறைந்தபட்சம், அவன் மருத்துவராக இருந்திருந்தாலாவது ஏதாவது முயன்றிருக்கலாம். இது.., ஒரு சாதாரண பிஈ முடித்து, சேல்ஸ் மேனேஜர் பதவி, எண்பதாயிரம் சம்பளம்,

இப்பொழுது அட்மினிஸ்ட்ரேஷனில் தொலைதூரக் கல்வியில் எம்பிஏ முடித்திருக்கிறான் அவ்வளவே. ஒரு மருத்துவமனையையே சொந்தமாக வைத்திருக்கும் விஸ்மையா (சக்தி) எங்கே.., மாத சம்பளத்துக்கு வேலை பார்க்கும் அவன் எங்கே..,

இது நடக்கும் என்ற எண்ணம் அவனுக்கு சுத்தமாக இல்லை. அவள்மேல் வைத்த காதலுக்காக, இவ்வளவு பெரிய இடத்தோடு போராட முடியும் என்று அவனுக்குத் தோன்றவில்லை. அது நியாயமாகவும் அவனுக்குப் படவில்லை.

அதைவிட, ஆத்மாவாக இருந்தபொழுது விரும்பியவள், இப்பொழுதும் விரும்ப வேண்டும் என்ற கட்டாயம் எதுவும் இல்லையே. தளர்ந்த நடையோடு அங்கிருந்து வெளியேறினான்.

அவனைப் பார்த்த ஒரு மருத்துவர், அவனைத் தடுத்து, “ஹல்லோ மிஸ்டர் இளமாறன்..” அவனிடம் உரையாட, அவரை புரியாத பார்வை பார்த்தான்.

“என்ன மறந்துட்டீங்களா? அந்த ரெயினி டே.., கார்.., பெட்ரோல், டாக்டர் தேவகடாட்சம்.., இப்போ ஞாபகம் இருக்கா?” அவனிடம் கேட்க, அவனுக்கு அவனையே நினைவில்லாமல் இருக்கையில், இவரையா ஞாபகம் இருக்கும்?

ஆனாலும், முயன்று நினைவுக்கு கொண்டு வந்தவன், “ஓ.., ஹல்லோ டாக்டர்” உயிர்ப்பே இல்லாமல் பேச,

“எனி பிராப்ளம்? யாருக்காவது உடம்பு சரியில்லையா? லெட்ஸ் சீர்(cheer) இளமாறன். எதுவா இருந்தாலும் பாத்துக்கலாம்” அவன் தோளை தட்டினான். மனநல

மருத்துவனான அவனால், இளமாறன் ஏதோ அழுத்தத்தில் இருப்பதை நொடியில் உணர முடிந்தது.

“விஸ்மையா.., இல்ல.., சக்தி..” துவங்கியவன், மருத்துவரின் கண்களில் கவனம் ஏற, “நான் நாளைக்கு வந்து உங்களை பாக்கறேன்” அவன் அங்கிருந்து செல்லத் துவங்கினான்.

“நீங்க இப்படித்தான் சொல்வீங்க.., எதுக்கும் உங்க கார்ட் ஒண்ணு கொடுங்க, நானே காண்டாக்ட் பண்றேன்” அவன் பிடிவாதமாக இருக்கவே, தன் விசிட்டிங் கார்ட் ஒன்றை எடுத்துக் கொடுத்தான். இப்பொழுது வந்த சக்தியின் பெயரை அவன் உரைக்கவேதான், கம்பல் செய்து அவனது விசிட்டிங் கார்டை வாங்கிக் கொண்டான் தேவகடாட்சம்.

“தென் ஓகே.., நீங்க இப்போ நல்ல மூட்ல இல்லை.., அது எனக்கு நல்லாவே தெரியுது. வீட்டுக்கு போய் நல்லா ரெஸ்ட் எடுங்க.., நான் கால் பண்றேன். நம்மளால் எதுவும் முடியவில்லை என்றாலும், கடவுளால் முடியாத காரியம் எதுவும் கிடையாது..” அப்பொழுதும் ஆறுதல் சொல்லி அனுப்பினான்.

வீட்டுக்குச் சென்றவன், அங்கே இருந்த முபாரக்கிடம் எதுவும் பேசாமல் அறைக்குள் சென்று புகுந்துகொள்ள, ‘வழக்கம்போல் தோல்வி போல’ என எண்ணியவன், அவன் பின்னால் சென்றான்.

“டேய் மச்சான்.., இதுக்கெல்லாம் அப்சட் ஆனால் எப்படிடா..?” கேட்டவன் அவனைத் தொட்டவாறே, அறைக்குள் முழுவதும் பார்க்க, அங்கே விஸ்மையா இருக்கும் அறிகுறியே இல்லை.

அதைப் பார்த்தவன், “விடுடா.., இவன்வேற, எப்போ பார் உரசிகிட்டே” அவன் கரத்தை விலக்கினான். அதைக் கண்டுகொள்ளாமல், “மாறா, விஸ்மையா எங்கடா..?” அவனிடம் கேட்க,

“அவ போய்ட்டா..” உரைத்தவன், தன் இடக்கரத்தை கண்ணுக்கு மேலாக வைத்துக் கொண்டு, அப்படியே படுத்துக் கொண்டான்.

“போயிட்டாளா..? எங்கே..?” அவனுக்குப் புரியவில்லை.

“அவங்க வீட்டுக்கு போய்ட்டா..” அவன் சொல்ல, நம்ப முடியாமல் பார்த்தான்.

“அவங்க வீட்டுக்கு.., டேய்.., அப்போ.., அவளோட வீட்டை கண்டு புடிச்சுட்டியா? இதை ஏண்டா இவ்வளவு சோகமா சொல்ற? சரி, அவ இல்லாமல் நீ மட்டும் ஏன் வந்துட்ட?” அவன் கேட்டுக் கொண்டிருக்க, அங்கே வந்தான் சுமன்.

“போன விஷயம் என்னடா ஆச்சு மச்சான்.., ஒரே ஆர்வமா இருக்கு” அவன் அருகில் அமர்ந்தான்.

இருவரையும் ஒரு பார்வை பார்த்தவன், தன் படுக்கையில் எழுந்து அமர்ந்தான். வெயிலில் வந்தது உடல் வியர்வையில் நனைந்திருக்க, படுக்கையை விட்டு இறங்கியவன், தன் சட்டையை கழட்டி அங்கே இருந்த ஹேங்கரில் மாட்டினான்.

‘என்னடா இவன்..’ என இருவரும் பார்க்க, அவனோ.., “விஸ்மையா யார் தெரியுமாடா..? அவளோட உண்மையான பேர் சக்தி.., விமலா ஹாஸ்பிடல் இருக்கே, அதோட ஏக வாரிசு..” எனத் துவங்கி, நடந்தவை அனைத்தையும் விவரிக்க, என்னவோ கதை கேட்கும் பாவனையில் இருவரும் வாய் பிளந்து கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

“எல்லாம் சரி.., நீ ஏன் அவகூட இருக்காமல் வந்துட்ட? அவ கண் விழித்து, அவகூட பேசின பிறகு வந்திருக்க வேண்டியது தானே” சுமன் சொல்ல, அவனை வேதனையாக ஒரு பார்வை பார்த்தான்.

“அவ சாதாரண விஸ்மையாவா இருந்திருந்தால் நிச்சயம் செய்திருப்பேன். ஆனா, அவ சக்திடா.., டாக்டர் சக்தி..,

இல்லடா இது சரி வராது" தன் வேதனையை விழுங்க ஆழமாக மூச்செடுத்தான்.

அவன் வேதனை புரிய, "மச்சான்.., அவ டாக்ட்டரோ இல்ல மினிஸ்டரோ, அவளை நீ விரும்புற தானே, அவளும் உன்னை விரும்பறா, பிறகு என்னடா?" முபாரக் எரிச்சலானான்.

"இங்கே நான் விரும்புறது பிரச்சனையே கிடையாது. இனிமேல் நாம அதைப் பற்றி நினைக்க வேண்டாம். ஒரு ரெண்டு நாள், நான் ஊருக்கு போயிட்டு வர்லாம்னு நினைக்கறேன். ஆபீஸ்ல லீவ் கேக்கணும். சுமன், நீ எப்போ கிளம்புற?" அவர்களிடம் சாதாரணமாக உரையாட முயன்றான்.

அவன் முயற்சி புரிய, ஒருவர் ஒருவரை பார்த்துக் கொண்டவர்கள், "மச்சான், நாம ஒரு முறை, ஹாஸ்பிடல் போய் பாத்துட்டு என்ன செய்யணுமோ செய்யலாம்டா" சுமன் அவனிடம் கெஞ்சினான்.

"சுமன், நம்ம நடுத்தர வர்க்கத்துக்கு ஒரு இயல்பான குணம் உண்டு. ஒண்ணு நமக்கு கிடைக்காது அப்படின்னு தெரிஞ்சுட்டா, என்ன கஷ்டப்பட்டாவது நாம அதை மறந்துட்டு, நமக்கு புடிச்சதை விரும்ப ஆரம்பிச்சுடுவோம். இங்கேயும் அதை அப்ளை பண்ணலாம் தப்பில்லை" தன் வேதனையை விழுங்கிக் கொண்டான்.

"இந்த மண்ணாங்கட்டி உனக்கு அப்போ தெரியலையாடா. அவளை காணோம்னு அப்போ அப்படி தவிச்ச.., இப்போ முழுசா, நீயே அவளை கொடுத்துட்டு வந்து நிக்கற?" சுமன் எரிச்சலானான்.

"இல்லடா, ரெண்டுக்கும் பெரிய வித்தியாசம் இருக்கு. அப்போ அவளை தொலைச்சுட்டு நின்னேன். இப்போ.., பொறுப்பா, அவங்க அம்மா அப்பாகிட்டே விட்டுட்டு வந்திருக்கேன்.." அவன் சொல்ல,

“ஆமா.., இவரு பருப்பா இருக்காரு. என் வாயில் நல்லா வந்துடும் சொல்லிட்டேன். அவளைப் போய் பாத்து கூட்டி வான்னா, என்னடா தத்துவம் பேசிட்டு இருக்க. இந்த சீனெல்லாம் இங்கே கிடையாது. நீ போகலன்னா என்ன, நாங்க போய் பேசுறோம்” முபாரக் சொல்ல, அவனையே பார்த்திருந்தான்.

“என் வார்த்தையை மீறி எதையும் செய்ய மாட்டீங்கன்னு நினைக்கறேன். சரி, இன்னைக்கு லீவ் போட்டது போட்டுட்டேன், லஞ்சுக்கு வெளியே போகலாமா?” அவன் கேட்க, அவனை வேற்றுகிரகவாசியைப்போல் பார்த்தார்கள்.

“டேய்.., எனக்குதனடா லவ் பெயிலியர்.., நீங்க ஏன்டா மூஞ்சியை இப்படி வச்சுட்டு இருக்கீங்க? இப்போ என்னோட வர்றீங்களா இல்லையா?” அவன் கேட்க, இருவரும் மனமே இல்லாமல் கிளம்பினார்கள்.

***மருத்துவமனையில், அந்த நேரம் விஸ்மையாவிடம் அசைவு தெரிய, பெற்றவர்கள் இருவரும் அவளை நெருங்கி நின்றார்கள்.

“சக்தி.., சக்தி..” அவர்கள் மெதுவாக அழைக்க, இமைகளை பிரிக்க முடியாமல் மிகவும் சிரமப்பட்டு கண் திறந்தவள், சட்டென ஒளி கண்களைத் தாக்க, இமைகளை சுருக்கி அழுத்தமாக மூடிக் கொண்டாள்.

மூன்று வருட கோமா வாசம், அவள் புலன்கள் முதல், மொத்த தேகத்தையும் சற்று மந்தமாக்கி இருந்தது.

“சக்தி.., இங்கே பாரும்மா..” மாலதி அழைக்க, மீண்டுமாக கண் திறந்தவள், மெதுவாக அவரைப் பார்த்தாள். விஸ்மையாவின் நெற்றியின் இரண்டு பக்கமும் சிறு கருவி இணைக்கப் பட்டிருக்க, அதன் வழியாக அவளால் அவர்களை அறிய முடிகிறதா என்பதை கண்காணித்துக் கொண்டிருந்தார்கள்.

பொதுவாக இப்படி மீண்டு வரும் கேஸ்களில் அவர்களுக்கு மொத்தமாக அனைத்தும் மறந்திருக்கும். எனவே அது விஸ்மையாவின் விஷயத்திலும் நடந்திருக்கிறதா என அறியவே அவர்கள் அவ்வாறு செய்தார்கள்.

நீண்ட வருட கோமா என்பதால், ஆதிமுதல் அந்தமாக அவளை பரிசோதிக்க விரும்பியே அவ்வாறு செய்தார்கள்.

தாயைப் பார்த்தவள், எந்த பாவனையும் வெளிப்படுத்தாமல் போகவே, அந்த கருவியை பார்த்துக் கொண்டிருந்த மருத்துவர், தன் கட்டைவிரலை கீழ்நோக்கி காட்டி இதழ் பிதுக்கினார். அங்கிருந்த அனைவரும் முயன்ற பிறகும், அந்த கருவியிலோ, விஸ்மையாவின் பார்வையிலோ எந்த மாற்றமும் இருக்கவில்லை.

***

# பகுதி - 20.

“சக்தி.., அப்பா பாரும்மா.., உனக்கு ஒண்ணும் இல்லை, நல்லா இருக்க” பரமேஸ்வரன் குரல் கொடுக்க, அவருக்கும் அந்த பார்வையே பதிலாக கிடைத்தது. அவளுடன் வேலை செய்த மருத்துவர்கள், செவிலி, என அனைவரும், அவளுக்கு டென்ஷன் கொடுக்காத வகையில், அவளுக்கே அது ஒரு டெஸ்ட் என தெரியாத வகையில் அவளுக்கு தங்களை நினைவுக்கு கொண்டுவர முயன்றார்கள்.

அந்தோ பரிதாபம், அனைத்தும் வெற்றிகரமாக தோல்வியையே தழுவியது. அந்த நேரம், “மாலதி.., நம்ம பொண்ணை மீட்டுக் கொடுத்த அந்த பையனை எங்கே?” கணவனிடம் கேட்க, உடனே சிறு பரபரப்புக்கு உள்ளானார்கள்.

“அதானே.., அவனை எப்படி மிஸ் பண்ணோம். இங்கேதான் எங்கேயாவது இருப்பான்..” உரைத்தவர், செவிலியை அழைத்து, “சக்தி கூட வந்த அந்த பையனை எங்கே..? அவன் எங்கே இருந்தாலும் தேடி கூட்டி வாங்க..” சொல்ல, அவர்கள் யாரைத் தேடுவதாம்?

அடுத்த ஒருமணி நேரத்தில் மருத்துவமனையையே புரட்டி விட்டார்கள். அவன் இருந்த அறிகுறியே இல்லை. “தப்பு பண்ணிட்டோங்க.., அவனை நாம இப்படி விட்டிருக்க கூடாது..” மாலதி சொல்ல, அதே நினைவில்தான் அவரும் இருந்தார்.

“ச்சே.., பொண்ணை பார்த்த சந்தோஷத்தில் அவனை மிஸ் பண்ணிட்டோமே. அவனை நான் கை நீட்டி வேற அடிச்சுட்டேன். அவன் பேர் என்ன? எங்கே இருந்து வந்தான்? ஏதாவது சொன்னானா?” மனைவியிடம் கேட்க, அவர் கையை விரித்தார்.

“எனக்கு அந்த நேரம் அதையெல்லாம் கேக்கணும்னு தோணவே இல்லை. நம்ம சக்தி கூட படிச்சவனா இருக்கும்னு நினைத்தேன். ஆனா, அது இல்லைன்னு சொன்ன ஞாபகம் இருக்கு. அதுக்கு மேலே, அவளைப் பாக்கணும்னு சொன்ன பிறகு, என்ன நடந்ததுன்னே எனக்குத் தெரியலை.

“அவளோட ஆத்மா வெளியே இருக்கு, இதோ இங்கே நிக்கறான்னு எல்லாம் சொன்னப்போ, என்னவோ மனநிலை சரியில்லாதவனோன்னு நினைத்தேன். அதுக்குப் பிறகு நடந்ததுதான் உங்களுக்குத் தெரியுமே” அவர் சொல்ல, தன் நெற்றியை தேய்த்துக் கொண்டார்.

“மாலதி.., சிசிடிவி புட்டேஜ் பார்த்தால் அவனை அடையாளம் தெரியுமே வா..” உடனடியாக இருவரும் அண்டர்கிரவுண்டில் இருந்த கேமரா கட்டுப்பாட்டு அறைக்குச் சென்றார்கள்.

கண்காணிப்புக் கேமராவை கவனித்துக் கொண்டிருந்த அவனை நெருங்கியவர்கள், “முருகா.., சக்தியை இங்கே கூட்டி வந்தப்போ இருந்த சிடியை போடுங்க” அவர்கள் சொல்லவே, வேகமாக அதை நேரம் கணித்து ஓடவிட்டான். ஆம்புலன்சில் இருந்து இறங்கியது முதல், ஐசியூவிற்குள் செல்லும் வரைக்கும், சக்தியின் கால் பக்கம் நிழல்போல் அவன் தொடர்வது தெரிந்தது.

அடுத்ததாக மருத்துவர்கள் தங்கள் வேலையைப் பார்க்கவே, காரிடாரின் ஓரத்தில் சென்று நின்றவன், கிட்டத்தட்ட இரண்டுமணி நேரத்துக்கும் மேலாக அங்கிருந்து அசையவே இல்லை. ஐசியூ வாசலையே அவன் பார்த்திருந்த அந்த பார்வை.., உலகத்தின் சோகம் அத்தனையும் அவன் முகத்தில் கவிழ்ந்திருந்தாற்போல் இருந்தது.

இறுதியாக, அவன் முகம் மெல்ல மலர்வதும், முகத்தை கரங்களால் அழுந்த துடைத்துக் கொண்டவன், ஆழமாக

மூச்சு விட்டு விட்டு, ஐசியூ வாசலை சில நொடிகள் பார்த்துவிட்டு, வெளியேறிச் செல்வதும் தெரிந்தது.

இவரை ஃபாலோ பண்ணுங்க.., பரமேஸ்வரன் உரைக்கவே, முருகன் ஒவ்வொரு கேமராவாக அவன் சென்ற பாதையில் இருந்தவற்றை இயக்கி காட்டினான். ஒரு இடத்தில், அவனும் டாக்டர் தேவகடாட்சமும் பேச, “என்னங்க, அவன் டாக்டர் தேவா கிட்டே பேசறான்..” மாலதி கிட்டத்தட்ட கூச்சலிட்டார்.

“மாலதி கூல்.., நமக்கு இது போதும், உடனே தேவாவை வரச் சொல்றேன். முருகா.., இவனோட ஒரு போட்டோ மட்டும் உடனே என் போனுக்கு அனுப்புங்க..” உரைத்தவர், தன் அலைபேசியை எடுத்து தேவாவை அழைத்தவர்,

“தேவா.., உடனே என் ரூமுக்கு வாங்க..” உரைத்துவிட்டு அங்கே இருந்த லிப்டில் நுழைந்து கொண்டார்.

“என்னங்க.., அந்த பையனை கண்டு புடிச்சுடலாம் தானே. அந்த பையனுக்கு எப்படி நம்ம பொண்ணைத் தெரியும்?” அவரால் ஆர்வத்தை அடக்க முடியவில்லை.

“இத்தனை வருஷம் பொறுத்துட்டோம்.., ஜஸ்ட் ஒரு ஒரு மணி நேரம் வெயிட் பண்ண முடியாதா? வா..” அவர்கள் அறையில், தேவாவுக்காக காத்திருக்கத் துவங்கினார்கள்.

அடுத்த பத்தாவது நிமிடம், தேவா அவர்கள் அறையில் இருக்க, “டாக்டர், கூப்ட்டீங்க..” அறைக்குள் நுழைந்து சில நிமிடங்கள் கடந்தும் அவர்கள் எதுவும் பேசவில்லை என்பதால் அவர்களை கலைத்தான்.

தன் அலைபேசியை இயக்கிய பரமேஸ்வரன், “இவரை உங்களுக்குத் தெரியுமா?” அலைபேசியை அவன் முன்னால் நீட்டினார்.

அதை வாங்கியவன், அதில் இருந்த இளமாறனைப் பார்த்துவிட்டு, “ம்.., இவர் பேர் இளமாறன்.., ஒரு இக்கட்டான

சூழ்நிலையில் அவரை சந்தித்தேன்” என அந்த மழை நாளின் நினைவுகளை அவர்களோடு பகிந்து கொண்டான்.

பெரியவர்கள் இருவரும் ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்துக் கொள்ள, “டாக்டர், எனி இஷ்யூ..?” அவர்களது பார்வைப் பரிமாற்றம் அப்படித்தான் இருந்தது.

“இல்ல.., அவர் உடனே இங்கே வரணும். முக்கியமா சக்தியை அவர் பாக்கணும்” அவர்கள் சொல்ல,

“நானும் கெஸ் பண்ணேன்.., கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி அவர் வெளியே போகும் பொழுது, சக்தி மேம் பேரை சொல்லிட்டு, வேகமா அதை மாற்றினார்..” அவர்களிடம் உரைத்தான்.

“அவரோட காண்டாக்ட் டீட்டெயில் ஏதாவது?” அவர் இழுக்கவே,

“அவரோட விசிட்டிங் கார்ட் ஒண்ணு என்கிட்டே இருக்கு” சொன்னவன், தன் கோட்டுக்குள் கையை நுழைத்து, அதை வெளியே எடுத்து அவர்களிடம் கொடுத்தான்.

அதை வாங்கிப் பார்த்தவர்கள், “உடனே அவரை கால் பண்ணி வரச் சொல்லுங்க” பரமேஸ்வரன் சொல்லவே, அவர்கள் முன்பே அழைத்தான்.

அப்பொழுதுதான் ஹோட்டலில் உணவு உண்ண அமர்ந்திருந்த இளமாறனின் அலைபேசி ஒலிஎழுப்பவே, அதில் ஒளிர்ந்த புது எண்ணைப் பார்த்தவன், எடுக்கவா, வேண்டாமா என சிந்தித்துவிட்டு, ஆன் செய்து காதில் வைத்தான்.

“இளமாறன்..?” தேவா கேள்வியாய் நிறுத்த,

“ஹோல்டிங்..” அவன் சொல்லவே, தேவா, தன் அலைபேசியை ஸ்பீக்கரில் போட்டான்.

“இளமாறன், நான் டாக்டர் தேவகடாட்சம் பேசறேன்” அவன் சொல்ல,

“டாக்டர் நீங்க.., அங்..கே.., எது..வும்.., விஸ்மையா.., ஸ்.., சக்தி கண் முழிச்சுட்டாங்களா?” அவன் ஆவி துடிப்பதை அலைபேசி வழியே அனைவராலும் உணர முடிந்தது.

“என்னடா மச்சான்.., விஸ்மையாவுக்கு என்ன..?” உடன் இருந்த நண்பர்கள் பதறுவதும் அவர்களுக்கு கேட்டது.

அதை கண்டுகொள்ளாத தேவா “நீங்க உடனே கிளம்பி ஹாஸ்பிடல் வாங்க.., நேர்ல சொல்றேன்..” அலைபேசியை வைத்து விட்டான்.

அவன் வைக்கவே, “தேவா, அவர்கிட்டே உண்மையை சொல்லியிருக்கலாமே” மாலதி கேட்க,

“இல்ல டாக்டர், நான் உண்மையை சொன்னால் அவர் நிச்சயம் வர மாட்டார்” அவன் சொல்ல, மிகச்சிறந்த மனநல மருத்துவன் அவன் சொல்வதை மறுக்காமல் ஏற்றுக் கொண்டார்கள்.

“ஏன்னு சொல்ல முடியுமா?” பரமேஸ்வரன் கேட்க,

“எனக்கு சரியா சொல்லத் தெரியலை.., பட்.., எல்லாத்தில் இருந்தும் விலகி இருக்கணும்னு அவர் நினைப்பதை மட்டும் என்னால் கெஸ் பண்ண முடியுது. மீதியை அவரிடம் பேசினால் சொல்லிடுவேன்..” அவன் சொல்ல, இப்பொழுது இளமாறனின் வருகைக்காக காத்திருந்தார்கள்.

அடுத்த அரைமணி நேரத்தில் அவர்கள் முன்னால் நின்றான் இளமாறன். வாசலிலேயே அவனைப் பார்த்து, நேராக பரமேஸ்வரனிடம் அழைத்து வந்தான் தேவா. அனைவரும் அமைதியாக இருக்கவே, “என்னன்னு யாராவது சொல்லுங்களேன். ஏன் இப்படி அமைதியா இருந்து என்னை கொல்றீங்க” அவர்களிடம் கத்தியவன்,

“விடுங்க, நானே பாத்துக்கறேன்..” கதவைத் திறந்துகொண்டு, ஐசியூ நோக்கி ஓடினான். அவனை அங்கே இருந்த யாரும் தடுக்கவில்லை. ஐசியூவிற்குள் புயல்போல் நுழைந்தவன், “விஸ்மையா..” கிட்டத்தட்ட கத்தினான்.

அவன் வெளியே ஓடவே, அறைக்கு வெளியே இருந்த முபாரக்கும், சுமனும் அவன் பின்னால் ஓடினார்கள்.

அவன் கத்தவே, வேகமாக அவனை நெருங்கிய மருத்துவர், “மிஸ்டர் இளமாறன், இது ஐசியூ, அவங்க பேஷன்ட்.., கொஞ்சம் பொறுமை..” அவன் தோளை அழுத்தி, சின்னக் குரலில் உரைத்தவர்,

“அவங்களுக்கு எதுவும் ஞாபகத்துக்கு வரலை.., அதான்.., கைண்ட்லி கோவாப்பரேட்” உரைத்தவர், அவன் அருகில் இருந்து விலகி, அந்த கருவியின் அருகில் சென்று நின்றார்.

“விஸ்மையா..” படுக்கையை நெருங்கியவன், அவள் இடக்கரத்தை மெதுவாக தன் கைகளுக்குள் பொதிந்துகொண்டு, அடிக்குரலில் அழைக்க, மெதுவாக கண் திறந்தாள்.

அவனையே சில நொடிகள் அசையாமல் பார்த்தவள், சோம்பலாக விழி மூடிக் கொள்ள, அவன் உயிர் உருகி கண்ணீராய் வெளியேறியது. அவனது பார்வை மருத்துவரை எதிர்பார்ப்போடு ஏறிட, தயக்கமாக மறுப்பாக தலை அசைத்தார்.

“விஸ்மையா.., என்னை..” ‘தெரியவில்லையா’ என அவனால் கேட்க முடியவில்லை. அதற்குள் சுமனும், முபாரக்கும் அவனுக்குப் பின்னால் வந்து நின்றார்கள்.

“மச்சான்.., என்ன இது..?” அவர்கள் அவனை தேற்றும் நேரத்தில், அவளது தலையில் பொருத்தியிருந்த கருவியில் சின்ன ஒளிக் கீற்று உதயமாகி மறைந்தது.

“என்னால்.., இதை தாங்க முடியலடா..” உரைத்தவன், அவள் கரத்தை மெதுவாக படுக்கையில் வைத்துவிட்டு திரும்ப முயல, “இளமாறன்.., அசையாதீங்க” டாக்டர் அவசரமாக குரல் கொடுக்கவே, வேகமாக நிமிர்ந்து பார்த்தான்.

இப்பொழுது அந்த சிறு புள்ளிகள்.., அழகான அலைவரிசையாக உருமாற, மெதுவாக கண் திறந்தவள், “இ..ளா..” காற்றாகிப் போன குரலில் அழைக்க, நண்பர்கள் இருவரும் “யாஹூ..” ஒன்றாக குரல்கொடுத்து, கைகளை தட்டிக் கொண்டார்கள்.

“டேய்..” சன்னமாக நண்பர்களை கண்டித்தவன், நீர் நிறைந்த விழிகளோடு அவளை ஏறிட்டான்.

“எங்களை யாருன்னு தெரியுதா?” முபாரக் கேட்க, இமைகளை அழுத்தமாக மூடியவள், “மு..,பா..” இதழ் துடிக்க, அவன் பெயரை சொல்ல முயல,

“அம்மாடி.., நீ பேசவே வேண்டாம்.., எங்களை எல்லாம் தெரியுதே.., அதுவே போதும்..” அவர்கள் பேசிக் கொண்டிருக்க, பரமேஸ்வரனும், மாலதியும் எதிர்பார்ப்பும் ஏக்கமும் சுமந்த விழிகளோடு அறைக்குள் வந்தார்கள்.

சுமனும், முபாரக்கும் வெளியேற, விஸ்மையாவின் கரத்தை படுக்கையில் வைக்கப் போனவனை, தன் விரல்களில் மெதுவாக அழுத்தம் கூட்ட, அவள் முகத்தைப் பார்த்தவன், மீண்டும் அவள் கரத்தை தன் கைகளுக்குள் பொதிந்து கொண்டான்.

அவர்கள் அருகில் வந்த மருத்துவர், “சார்.., ரொம்ப நல்ல சைன்.., அவங்களால் தன் நினைவுகளை ரீகால் பண்ண முடியுது. சீக்கிரமே அவங்களால் உங்களையும் அடையாளம் காண முடியும்” அவன் சொல்ல, மெதுவாக அவளை நெருங்கினார்கள்.

அவர்கள் அருகே வரவே, “விஸ்மையா.., உன் அம்மா, அப்பா..” அவன் சொல்ல, விழிகளை மட்டும் உருட்டி

அவர்களைப் பார்த்தவள், மென்மையாக இதழ் பிரித்து புன்னகைக்க முயன்றாள்.

“டாக்டர்.., அவங்க இதுக்கு மேலே ஸ்ட்ரெயின் பண்ணிக்க கூடாது” மருத்துவர் உரைக்க, மருத்துவர்களான அவர்களுக்கு அது தெரியாதா என்ன?

“அம்மாடி.., நல்லா ரெஸ்ட் எடு.., ரெண்டு நாள் கழித்து நாம எல்லாம் பேசலாம். உன்கூட நாங்க எல்லாம் இருக்கோம். நிம்மதியா இரு” அவள் தலையை வருடிய பரமேஸ்வரன் உரைக்க, அமைதியாக கேட்டுக் கொண்டாள்.

“நாம போகலாம்..” அனைவரும் வெளியே செல்ல, இளமாறனின் கரத்தை அவள் விட மறுத்தாள். பிடிவாதமாக அவள் கரத்தை விலக்கவும் அவனால் முடியவில்லை. அவன் நிலையை உணர்ந்த பரமேஸ்வரன், “அவ தூங்குற வரைக்கும் இங்கேயே இருங்க..” உரைத்தவர் வெளியேறினார்.

அடுத்த இரண்டு நாளில் விஸ்மையா என்ற சக்திக்கு அனைத்தும் நினைவுக்கு வந்து விட்டது. இரண்டு நாட்கள், அவளது நிழல் போல், அவளுடனே இருந்தான் இளமாறன்.

மூன்று வருடங்களாக கோமாவின் இருந்ததால், விஸ்மையாவுக்கு சக்தி மிகவும் குறைவாக இருந்தது. அவளால் தனியாக சட்டென எழவோ, நடக்கவோ முடியவில்லை. தன் பல் துலக்க கூட, அந்த பிரஷ்ஷை அவளால் இறுக்கமாக பிடிக்க முடியவில்லை.

முதல் ஒரு வாரம் வரைக்கும் அவளுடனே மருத்துவமனையில் இருந்தவன், அவளை பூப்போல் கவனித்துக் கொண்டாலும், அவனிடம் பெரும் ஒதுக்கம் இருந்தது என்றே சொல்லலாம். விஸ்மையா அவனிடம் பேசலாம் என்றால், அதற்கும் அவன் பிடி கொடுக்கவில்லை.

அன்று அவளிடம் வந்தவன், “விஸ்மையா, நான் ஊருக்கு போயிட்டு வர்றேன். வீட்டுக்குப் போய் ரொம்ப நாள் ஆகுது, அதான் சொல்லிட்டு போகலாம்னு வந்தேன்..” அவன் கரத்தில் இருந்த பேகைப் பார்த்தவள், அவனிடம் மறுத்து எதையும் சொல்லவில்லை.

அவன் தன்னை விட்டு விலகிச் செல்ல முயல்வது புரிய, உள்ளுக்குள் எழுந்த வேதனையை மறைத்து அவனுக்கு விடை கொடுத்தாள்.

அதன் பிறகு கிட்டத்தட்ட ஒரு மாதம்.., இளமாறன் அவளை வந்து சந்திக்கவில்லை. விஸ்மையாவுக்கு நாட்கள் நரகமாகும் உணர்வு. நிஜவாழ்க்கைக்கு திரும்பிவிட்டோம் என்ற சந்தோஷத்தை அவளால் அனுபவிக்க முடியவில்லை.

பெற்றவர்கள், தோழர்கள், சொந்தங்கள் என அனைவரும் உடன் இருந்தாலும், உள்ளுக்குள் உணரும் வெறுமையை, தனிமையை என்ன செய்ய? இளமாறனின் அலைபேசிக்கு அழைத்து பேசலாம் என்றால், ஏதோ ஒன்று அவளைத் தடுத்தது.

முபாரக்கும், சுமனும் இளமாறனிடம் எவ்வளவோ பேசியும், அவன் மனதை மாற்ற முடியவில்லை. சுமனும், முபாரக்கும் விஸ்மையாவிடம் அலைபேசியில் பேசிக் கொண்டுதான் இருந்தார்கள். அவர்களுக்கும் விஸ்மையா கேட்கும் கேள்விக்கு பதில் சொல்ல முடியவில்லை என்றே சொல்லலாம்.

இளமாறனுக்கு விஸ்மையாவை நிஜமாகவே பிடிக்கவில்லை என்றால் பரவாயில்லை. ஆனால், தகுதியை எண்ணி தயங்குபவனை என்ன செய்ய? அவன் சொல்வதில் இருக்கும் நியாயம் அவர்களுக்கும் சரியாகத் தோன்ற அமைதியாக இருப்பதை தவிர அவர்களுக்கு வேறு வழி இருக்கவில்லை.

அவளைப் பிரிந்து அவனும் சந்தோஷமாக எல்லாம் இல்லையே. வெறித்த பார்வையாக, அறைக்குள் அமர்ந்திருக்கும் அவனைப் பார்க்கையில் அவர்களுக்கும் மனதைப் பிசைகிறதே. அனைவருக்கும் என்ன செய்வது என்று தெரியாத ஒரு நிலை.

நாட்கள் கடக்க, சுமன் வெளிநாடு செல்ல வேண்டிய நாளும் வந்துவிட்டது. அவனும் எவ்வளவு நாள்தான் அங்கேயே இருக்க முடியும்? சுமன் வெளிநாடு கிளம்புகையில், அவளைக் காண வந்தான்.

“விஸ்மையா.., நான் சவுதி கிளம்பறேன்.., அதான், சொல்லிட்டு.., அப்படியே உன்னை பாத்துட்டு போகலாம்னு வந்தேன்” தன் கையில் இருந்த காபியை மெதுவாக உறிஞ்சினான். அங்கே நிலவிய மௌனத்தை கலைக்க மனமின்றி அமர்ந்திருந்தார்கள்.

“எல்லோருமே போகும்போது சொல்ல வர்றீங்க அவ்வளவுதான்..” ஒரு மாதிரி வேதனையாக உரைக்க, அவனுக்கு என்ன சொல்வது என்றே தெரியவில்லை.

முடிவெடுக்க வேண்டிய இளமாறன் ஒதுங்கிப் போகையில், அவனால் என்ன செய்ய முடியும்? “சுமன்.., நான் ஒண்ணு கேக்கவா..? இளா ஏன் இப்படி பண்றார்..? என்னை அவருக்குப் பிடிக்கலையா..?” அவனிடம் கேட்க, அவளையும் மீறி குரல் நடுங்கியது.

“நான் உருவமே இல்லாதபொழுது என்னை உருகி உருகி நேசித்தவர், இப்போ, நான் அவருக்கு முழுசா கிடைப்பேன் என்னும்போது ஏன் விலகிப் போறார்? எனக்கு புரியவே இல்லை. நான்தான் அவர் இல்லாமல் இப்படி தவிக்கறேனா? அவருக்கு அப்படி எதுவுமே இல்லையா?” பெற்றவர்களிடம் வெளிப்படையாக பேச முடியாததால், சுமனிடம் தன் மன பாரத்தை கொட்டிவிட்டாள்.

“உன்னை ரொம்ப புடிக்கும்மா.., அதுதான் பிரச்சனையே. ஒரு டாக்டருக்கும், மேனேஜருக்கும் எப்படி ஒத்து வரும்னு

கேட்டா என்ன சொல்ல? நீங்க ரெண்டுபேரும் பேசி முடிவெடுங்கன்னு சொன்னா, அதுக்கும் ஒத்துவர மாட்டேங்கறான்..” ‘நான் என்ன செய்ய?’ என்பதுபோல் பார்த்திருந்தான்.

“என்னை பார்க்கக் கூட வரலை.., என்னால் ட்ராவல் பண்ண முடியலை, இல்லன்னா” அவளால் செல்ல முடியாத வருத்தம் வார்த்தையில் தெறித்தது.

“உன்னைப் பாக்காமல் அவன் நடைபிணம் மாதிரி ஆயிட்டான். அந்த ரூமை விட்டு வெளியவே வர மாட்டேங்கறான். பார்க், பீச், ஹோட்டல் எதுவும் இல்லை. பித்து பிடிச்ச மாதிரி இருக்கான்..” அவன் சொல்ல, அவளையும் மீறி கண்ணீர் கன்னத்தில் வழிந்தது.

“இவ்வளவு தவிக்கிறவர் என்னை வந்து பாக்கலாமே” வேதனையாக கேட்க, அதன் பதில் அவனிடம் இல்லையே.

விஸ்மையா, என்னால் ஒண்ணு மட்டும் உறுதியா சொல்ல முடியும். அவன் வாழ்க்கையில் ஒரு பெண் இருந்தால் அது நீ மட்டும்தான். நீ இல்லையா? அவன் வாழ்க்கையில் எந்த பெண்ணுக்கும் இடமே கிடையாது. என்னன்னு தெரியலை, உனக்கு அவன் சரியான ஆள் இல்லைன்னு நினைக்கறான்”.

“அப்படின்னா..?” அவளுக்குப் புரியவே இல்லை.

“நீ ஒரு டாக்டர், அவன் ஒரு சாதாரண மேனேஜர், உன் உயரத்துக்கு அவன் சரியான ஆள் இல்லைன்னு..” இப்பொழுது அவள் முகத்தில் கோபம் ஏற, வார்த்தைகளை அபப்டியே நிறுத்தி விட்டான்.

“நான் ஒரு சாதாரண வீட்டு பொண்ணா இருந்திருந்தால் என்னை ஏற்றிருப்பார் அதானே.., இந்த வீட்டில் வந்து பிறந்ததுதான் நான் செய்த பாவமா? அவருக்கு என் மனசு புரியவே இல்லையா?” வேதனையாக கேட்க, சுமனால் தாங்கவே முடியவில்லை.

அப்படியே போய் இளமாறனை நாலு அடி அடித்து, இழுத்துக் கொண்டு வரும் வேகம். “விஸ்மையா, அவன் உன்னை நேரில் வந்து பார்க்காததன் காரணமே, எங்கே உன்னை விட்டுப் போக முடியாதோ என்ற பயத்தால்தான். நீ அவன் மனசில் இல்லாமல் போயிருந்தால், தைரியமா உன்னை வந்து பார்த்திருப்பானே.

“ஒரே ஒரு முறை நீ அவனைப் போய் பார்.., அதற்கு மேலே எல்லாம் விதின்னு முடிவு பண்ணிக்கலாம்” அவன் சொல்ல, அதைச் செய்ய முடிவெடுத்தாள்.

அவளது தாய், தந்தையோடு மேலும் கொஞ்ச நேரம் இருந்து பேசிவிட்டு விடை பெற்றுச் சென்றான். அவன் செல்லவே, “சக்தி, நீ எதையும் நினைச்சு டென்ஷன் ஆகக் கூடாது. உனக்கு நான் சொல்ல வேண்டியது இல்லை. ஆனாலும், ஒரு அம்மாவா இதை நான் சொல்ல வேண்டி இருக்கு” அவள் கையில் ஜூஸ் டம்ப்ளரைக் கொடுத்தார்.

அதை வாங்கியவள், “அம்மா.., இளா பத்தி நீங்க என்ன நினைக்கறீங்க?” அவரை நேரடியாகப் பார்த்து தயங்காமல் கேட்டாள்.

“ஒரு நிமிஷம் இரு, உங்க அப்பாவும் வரட்டும்.., என்னங்க..” மகளிடம் உரைத்தவர், கணவனுக்கு குரல் கொடுத்தார்.

அவர் வரவே, “என்னங்க.., உங்க பொண்ணு, இளாவை பத்தி நாம என்ன நினைக்கறோம்னு கேக்கறா” அவர் சொல்லவே, இருவரின் முகத்திலும் மென்மையும், சிறு புன்னகையும் ஒருங்கே உதயமானது.

***

# பகுதி - 21.

பெற்றவர்களின் புன்னகையே அவளுக்குத் தேவையான பதிலைக் கொடுக்க, விஸ்மையாவின் முகத்தில் ஒரு நிறைவான, சந்தோஷமான புன்னகை.

“சொல்லுங்கம்மா..” அவர்களது பதிலை, அவர்கள் வாயால் கேட்க விரும்பினாள்.

“சக்தி, உண்மையைச் சொல்லவா..? அவர் சொன்னதை எல்லாம் கேட்ட எங்களுக்கு இந்த நிமிஷம் கூட அதை நம்ப முடியலை. ஆனா, நீ எங்க கண்ணு முன்னாடி இப்படி உக்காந்து இருக்குறதை பாக்கும் போது, அவர் இல்லன்னா நீ இல்லன்னுதான் நினைக்கத் தோணுது.

“அவர் உன்னைப் பற்றி தேடாமல் விட்டிருந்தால், அதைவிட, நீ எங்கேயோ ஒரு மூலையில் உயிரோட இருக்கன்னு நம்பாமல் போயிருந்தால், எங்க பொண்ணு எங்களுக்கு இன்னைக்கு இல்லை. அந்த நன்றி எங்க மனசு முழுக்க இருக்கு” அவர் சொல்லவே,

“நன்றி மட்டும்தானா..?”.

“என் பொண்ணுக்கு மறு ஜென்மம் கொடுத்தவர், என் பொண்ணோட மனசுக்குள் இருக்குறவர், அவரை இந்த வீட்டு மருமகனாக ஆக்கிக் கொள்ளவும் எனக்கு முழு சம்மதம். அதுவும், நீ ஒரு டாக்டர், உனக்கு இவ்வளவு சொத்து இருக்குன்னு தெரிந்தும், உன்னை விட்டு விலகிப் போகும் அவரோட அந்த மனசு.

“உன்னை மட்டுமே விரும்பும் அவரது நிலை.., பணத்துக்கு ஆசைப்படாத, மகளை உயிரா விரும்புற மருமகன் எனக்கு வந்தால் நான் வேண்டாம்னா சொல்வேன்?” அவளிடம் கேட்க, உற்சாகமானாள்.

“தேங்கியு டேடி.., அவரைப் போய் பாக்கலாமா?” ஏக்கமாக கேட்க,

“இன்னைக்கே இப்போவே கூட போகலாம்..” அவர் சொல்லவே துள்ளிக் குதித்தாள்.

“அம்மாடி பாத்து..” அவர் சொல்ல, “டோன்ட் டிரீட் மீ லைக் எ பேஷன்ட் டேடி, ஐ’ம் ஓகே நவ்.., நெக்ஸ்ட் வீக் நான் ஹாஸ்பிடல் வர்றேன், அது தெரியும் தானே” அவரை சிறு கண்டிப்பாய் ஏறிட்டாள்.

“இன்னும் ஒரு மாசம் ரெஸ்ட் எடுத்துக்கோன்னு சொன்னால் நீதான் கேக்க மாட்டேங்கற” அவர் குறைபட, அவரை போலியாக முறைத்தாள்.

“இப்படி பேசிட்டே இருக்காமல் முதல்ல போய் கிளம்புங்க. நானும் ரெடியாகி வர்றேன்” அடுத்த ஒருமணி நேரத்தில் அனைவரும் கிளம்பி விட்டார்கள்.

அவன் வீட்டுக்குச் செல்லவே, அங்கே அவர்களுக்கு முன்பே, முபாரக்கும், சுமனும் இருந்தார்கள். அவர்களை வரவேற்றவர்கள், “உள்ளே வாங்க, அவன் ரூமில் இருக்கான்.., கூப்பிடவா..?” சுமன் கேட்கவே,

“டேடி.., நான் அவர்கிட்டே கொஞ்சம் தனியா பேசணும்..” அவள் உரைக்கவே, இருக்கைகளை வீட்டின் வெளியே இருந்த மரத்தின் அடியில் போட்டவன்,

“நீ அவனை உள்ளே போய் பாரும்மா.., முடிஞ்சால் என் சார்பிலும் ரெண்டு போடு..” அவன் சொல்ல மெல்லிய சிரிப்பில் இளாவை தேடிச் சென்றாள்.

சுமன், பெரியவர்களை வெளியே அமர வைக்க, முபாரக் அவர்களுக்கு சாப்பிட ஸ்நேக்ஸ், டீ எடுத்து வந்து கொடுத்தான். நண்பனைப் பற்றி அவர்கள் சொல்லத் துவங்க, அவர்கள் தாங்கள் வந்த காரணத்தை சொல்லவே, முபாரக் சந்தோஷத்தின் உச்சத்தில்,

“நிஜமாவா சொல்றீங்க..? யாஹூ.., தேங்க்ஸ் அங்கிள்..” சொன்னவன், அவர் எதிர்பாராத நேரத்தில், விஸ்மையாவின் அப்பாவை ஒரே தூக்காக தூக்கி சுற்றிவிட்டான்.

“டேய் என்னடா பண்ற..?” சுமன் பதற, விஸ்மையாவின் தாய் ஒரு நொடி அதிர்ந்து இருக்கையில் இருந்து எழுந்தே விட்டார். அவளது தந்தையோ, அவன் இப்படி செய்வான் என எதிர்பார்த்திராதவர், திக்கென அதிர்ந்துதான் போனார்.

“அவரை கீழே விடுடா..?” சுமன் கத்த,

நெஞ்சில் கை வைத்து உறைந்தவர், “தம்பி, என்னை கீழே விடுங்க” அவர் சொல்ல, அதே நேரம், அவர் கன்னத்தில் அழுத்தமாக இதழ் ஒற்றிப் பிரிந்தவன், அவரை கீழே விட்டான்.

அனைத்தும் நிமிடங்களுக்குள் நடந்திருக்க, அதன் பிறகே தன் செய்கையைக் கண்டு தடுமாறிப் போனான். “சாரி அங்கிள்..” அவன் மன்னிப்பை வேண்ட,

“அங்கிள் ஆர் யூ ஓகே..? உக்காருங்க, தண்ணி குடிங்க” சுமன் அவரைத் தேற்றினான். கூடவே, “எரும, உன் ஆர்வத்துக்கு ஒரு அளவில்ல? அங்கிள் அரண்டு ஓடப் போறார்” முபாரக்கை கடிந்தான்.

“சந்தோஷத்தில்..” அவன் செய்கையை அவனாலேயே நம்ப முடியாமல் தடுமாறி, சின்னக் குரலில் உரைக்க, பெரியவர்கள் இருவரும் புன்னகைத்துக் கொண்டார்கள்.

“இந்த கல்யாணப் பேச்சில் ஏதாவது தடங்கல் வரட்டும்..” கடித்த பற்களுக்கிடையில் அவனை அரைக்க, அப்பாவியாக விழி கொட்டிக் கொண்டு நின்றிருந்தான்.

அவர்கள் பேச்சை கேட்டவர், “தம்பி விடுங்க, சின்னப் பிள்ளையில் என் அப்பா என்னை இப்படி தூக்கி

சுத்தியிருக்கார், அதுக்குப் பிறகு இப்போதான் எனக்கு இந்த பாக்கியம் கிடைச்சிருக்கு” அவர் சொல்ல,

“இன்னொரு ரவுண்ட் வேண்ணா சுத்தவா அங்கிள்..?” முபாரக் ஆர்வமாக கேட்க, சுமன் பார்த்த பார்வையில் அப்படியே கப்பென அடங்கிப் போனான். பெரியவர்களின் சிரிப்பு அடங்க வெகு நேரமானது.

அவர்கள் வெளியே அமர்ந்து பேசவே, இளமாறனின் அறைக்கதவை திறந்துகொண்டு உள்ளே நுழைந்தாள் சக்தி என்னும் விஸ்மையா. அவள் அறைக்குள், நுழைந்தவுடன், அவள் போட்டிருந்த மல்லிகை செண்டின் மணம் அறையை நிறைக்க, பட்டென இருக்கையில் இருந்து எழுந்து அமர்ந்தான் இளமாறன்.

“விஸ்மையா..” அழைத்தவன் கண்களைச் சுழற்ற, தன் பார்வையில் விழுந்தவளை இமைக்க கூட மறந்து வெறித்தான். அவளது ரோஸ் வர்ணத்துக்கு, அவள் உடுத்தியிருந்த அந்த சிவப்பு வர்ண புடவை, ஆளை அசர வைத்தது.

கண்களில் தீற்றியிருந்த மை, இதழ்களில் மெல்லிய சிவப்புநிற உதட்டுச் சாயம், கன்னங்களில் இயற்கையாகவே ஏறியிருந்த சிவப்பு.., சங்கு கழுத்து, அதில் இருந்த ஒற்றை சங்கிலி, கண்களை மேலும் கீழே நகர்த்த, அவனுக்கு மூச்சடைத்தது. அப்படியே அவளை தாவி கட்டிக்கொள்ள எழுந்த உணர்வுகளை அப்படியே அடக்கிக் கொண்டான்.

அவன் பார்வை தன்னை அங்குலம் அங்குலமாக அலசுவதைப் பார்த்தவள் அசையாமல் நின்றாள். அவன் பார்வை இறுதியாக நிலைத்த இடம், இதயத்தை படபடக்க வைக்க, மெல்லியதாக தன் கீழுதட்டை கடித்துக் கொண்டாள்.

தன் முதுகின் பின்னால் இருந்த கதவில் சாய்ந்திருந்தவள், அடிமேல் அடி வைத்து உள்ளே வர, சட்டென கலைந்தவன்,

அவஸ்தையாக எச்சில் விழுங்கினான். இந்த அறைக்குள் அவளோடு தான் கனவில் வாழ்ந்த வாழ்க்கை..., இமைகளுக்குள் உலா போக, அவளை விட்டு விலகி நிற்கமுடியாமல் தடுமாறிப் போனான்.

“விஸ்மையா.., வா..” நொடியில் தன்னை மீட்டுக் கொண்டவன், பார்வையை அவள்மேல் இருந்து திருப்பினான்.

“ஏன் இளா என்னை அவாய்ட் பண்றீங்க..?” நேரடியாகவே கேட்டாள். அவள் இப்படி அதிரடியாக கேட்பாள் என்பதை எதிர்பாராத அவன் திகைத்துப் போனான்.

“அப்படியெல்லாம் இல்லை விஸ்மையா, சக்தி..” அவள் பெயரை வேகமாக திருத்தினான்.

“ம்ச்.., உங்களுக்கு என்னைக்கும் நான் விஸ்மையாதான்” அவனிடம் சொன்னவள், ‘என் கேள்விக்கு பதில் சொல்’ என்பதுபோல் நின்றிருந்தாள்.

அதைப் பார்த்தவன், அவள் ஒரு முடிவோடு வந்திருப்பது தெரிந்தது. ஏற்கனவே அவளைப் பற்றி, மருத்துவமனையிலும் சரி, அவளது பெற்றவர்களும் சரி, அவ்வளவு சொல்லியிருந்தார்கள்.

அவள் எவ்வளவு புத்திசாலியோ, அதே அளவு தைரியமானவளும் கூட. மனதில் ஒன்றை வைத்து, வெளியில் ஒன்றைப் பேச அவளுக்குத் தெரியாது. எதிரில் இருப்பவர் யாராக இருந்தாலும் தைரியமாக தன் வாதத்தை எடுத்து வைக்கும் தைரியம் உள்ளவள்.

அப்பொழுதே அவனுக்கு உதறல்தான்.., எனவேதான் அவளை விட்டு விலகி செல்ல முடிவெடுத்தான். அவள் நிலைக்கு, தன் நிலை ஒத்துவராது என்ற எண்ணம். அவள் மருத்துவர் என்பது அவனை சற்று பிரமிக்கச் செய்து, விலக வைத்தது என்றே சொல்லலாம்.

“விஸ்மையா.., நீ ஒரு டாக்டர்..” அவன் சொல்ல, அதற்கு இப்பொழுது என்ன கேடு வந்தது என மனதுக்குள் அவனை திட்டியவாறு அவனைப் பார்த்தாள்.

“அதுக்கு..?” அவனிடம் வெடுக்கன கேட்கவும் செய்தாள்.

“நான் ஒரு சாதாரண மேனேஜர்..” அவன் இழுக்க, கண்ணை மூடி தன் கோபத்தை கட்டுப்படுத்தினாள்.

“சரி..” அவள் சொல்ல, இதென்ன ரியாக்ஷன்? என அவளைப் பார்த்தான்.

“நீ ஒரு சாம்ராஜ்யத்துக்கே ராணி. நான்.., நான்…” அவளுக்கு தான் இணையில்லை என்று அவள் முகத்தைப் பார்த்து சொல்லும் தைரியம் அவனுக்கு அப்பொழுது இருக்கவில்லை.

“ம்.., நீங்க..?” கேட்டவள் அசையாமல் அவனைப் பார்த்தாள்.

இதற்குமேல் என்ன சொல்வது எனத் தெரியாமல் தடுமாறி அவளை ஏறிட, ‘சொல்லி முடிங்க..’ என்பதுபோல் அவனைப் பார்த்திருந்தாள்.

“மியா.., நான் சொல்ல வர்றது புரியலைன்னு மட்டும் சொல்லாதே, நீ ஒரு டாக்டர்” தன் இயலாமையில் அவன் வெடிக்க, அவளுக்கு கோபம் கொப்பளித்தது.

“மியா.., இந்த செல்லப் பேருக்கு மட்டும் குறைச்சல் இல்லை. இப்போ நான் டாக்டரா இருக்குறதுதான் உங்க பிரச்சனையா? சரி இனிமேல் நான் டாக்டர் இல்லை, இங்கே இப்படியே உங்களோடவே இருந்துடறேன் போதுமா?” அவனை பேச வைத்தே ஆகவேண்டும் என்ற நிலையில் அவள் இருந்தாள்.

“படிப்பை அப்படியெல்லாம் தூக்கிப் போட முடியாது மியா” தன் பேச்சை புரிந்துகொள்ள மறுக்கிறாளே என்று இருந்தது அவனுக்கு.

“ஓ.., உங்களை விட நான் நிறைய படிச்சிருக்கேன்னு உங்களுக்கு இன்பீரியாரிட்டி காம்ளெக்ஸ் அப்படித்தானே. நான் கூட வேற ஏதோ காரணம் இருக்கும்னு நினைத்தேன். இப்போ எனக்கு புரிஞ்சுடுச்சு” அங்கிருந்து செல்ல முயல, அவளால் அங்கே இருந்து அசைய முடியவில்லை.

“எங்கே என் கண்ணைப் பார்த்து சொல்லு.., எனக்கு இன்பீரியாரிட்டி காம்ளெக்ஸ்ன்னு..” முரட்டுத்தனமாக கேட்டவன், அவளை தன் கைகளுக்குள் சிறை செய்திருந்தான்.

“ஏன் இளா என்னை விட்டு வந்தீங்க?” சற்று தளர்ந்து போய் அவள் கேட்க, அவன் என்ன பதில் சொல்வதாம்?

“மியா..” அவள் கலங்குவது தாளாமல் இன்னுமாக இறுக்கினான்.

“என் படிப்பு, என் செல்வநிலை எல்லாம் பாத்து, என்னை விட்டு வந்தீங்க சரி. என் மனசு.., அது உங்களுக்கு புரியவே இல்லையா? அதில் உங்கள் மேலே இருக்கும் நேசம் உங்க கண்ணுக்குத் தெரியலையா?” வேதனையாக கேட்க, அவன் நெஞ்சைப் பிசைந்தது.

‘அதானே.., இதை எப்படி மறந்தான்? அவள் என்மேல் கொண்ட நேசத்தை வெகு சாதாரணமாக என்னிவிட்டேனா?’ தனக்குத் தானே கேட்டுக் கொண்டான்.

“கண் முழித்த உடனேயே என் கண் உங்களைத் தானே தேடியது. என் மூளை உங்கள் குரலைத் தானே இனம் கண்டு கொண்டது? எனக்கு உங்களை மட்டும்தானே ஞாபகம் இருந்தது. அப்படின்னா.., நான் உங்கள் மேலே எவ்வளவு உயிராக இருந்திருக்கிறேன்.

“நீங்க என்மேல் உண்மையான பாசம் வைக்கலை அதானே.., அதனால் தானே உங்களால் என்னை விட்டு ஈசியா வர முடிந்தது. பிரிய முடிந்தது, என்னை பார்க்காமல்

இருக்க முடிந்தது?” அவள் கேட்கும் ஒரு கேள்விக்கு கூட அவனால் பதில் சொல்ல முடியவில்லை.

“இந்த அறைக்குள், தினமும் உங்கள் நினைவுகளோடு கூடிக் கலந்தேனே, அதற்கு என்ன அர்த்தம்? என் அதீத காதல் தானே, உங்களை எந்த நிலையிலும் இழந்துவிடக் கூடாது என்பதால் தானே என்னால் அப்படி நடந்துகொள்ள முடிந்தது.

“ஒரு வேளை.., ஆத்மாவுக்கு எந்த உணர்வும் செண்டிமெண்டும் இல்லைன்னு நினைச்சுட்டீங்களா? ஆத்மாவுக்கு உடம்பு வேண்ணா இல்லாமல் இருக்கலாம், மனசு இருக்கு. ஒரு வேளை, உங்களோடு அப்படியெல்லாம் இருந்ததால், நான் கேவலமானவள்ன்னு நினைச்சுட்டீங்களா?” அவள் கேட்க, அவ்வளவுதான் அவனுக்கு எங்கிருந்துதான் அவ்வளவு கோபம் வந்ததோ?

“மியா.., இப்போ நீ வாயை மூடல நான் என்ன செய்வேன்னே எனக்குத் தெரியாது. வாய் இருக்குன்னா என்ன வேண்ணா பேசுவியா? என்ன சொன்ன.., உன்னை கேவலமா..? காட்.., ஏன் என்னை இப்படி உயிரோட கொல்ற?

“ஆத்மாவும், உடம்புமா பிரிந்து இப்போதான் ஒரு போராட்டத்தை முடிச்சிருக்க, அதுகூட நான் அங்கேயே இருந்து, உன்னை பெத்தவங்க, நான் யார்? என் நிலை, தகுதின்னு பேசி, உன்னை மறுபடியும் ஒரு மனப் போராட்டத்துக்கு ஆளாக்க கூடாதே என்று மனசை கல்லாக்கிட்டு பிரிந்து வந்தால்...

“என்னவெல்லாம் பேசிட்ட? உன்னை கேவலமானவன்னு சொன்னா.., உன்கூட இருந்த நான் பெரிய உத்தமனா? நீ வேணும்னு நான்தானே பலநாள் கேட்டேன். அப்போ நான்..” அவள் தோளைப் பிடித்து உலுக்க அவன் மனதை உணர்ந்தவள் திகைத்து நின்றிருந்தாள்.

“அங்கே நிலைமை எல்லாம் சரியாக இருந்தால், நிச்சயம் ஒரு நாள் என்னைத் தேடி வருவன்னு எனக்குத் தெரியாதா

மியா? அந்த நம்பிக்கையில் தாண்டி உயிரோட இருந்தேன். இந்த ஒரு மாசத்தில், நீ ஏன் வரலன்னு எவ்வளவு தவிச்சிருப்பேன்?” அவனிடம் இருந்தது முழு கோபம் மட்டுமே.

“ஒரு மூலையில், நீ ஒரு டாக்டர், நான் ஒரு சாதாரண மேனேஜர் என்பது உறுத்தாமல் இல்லை...” சொன்னவன், சிறு கோபமாக அவளை இறுக தழுவிக் கொண்டான்.

கோபமாக அணைத்த அவனது கரங்கள், தன்னவளை மொத்தமாக தழுவிக் கொண்டது. முன்னர் அவளை அணைக்கையில் சில்லென பரவும் அந்த குளிர் இன்றி, மிதமாக, தன்னைத் தீண்ட, எதற்காக அவளை அணைத்தோம் என்பதே அவனுக்கு மறந்து போனது.

அவன் கோபமும், அவன் அணைப்பும் புரிந்தாலும், கொஞ்சம் கூட அவள் அசரவே இல்லை. அவனையே வெறித்தவள், “நான் ஒரு பெண்.., நான் ஒரு ஆம்பளையை கல்யாணம் பண்ணிப்பேன். அப்படிப் பார்த்தா.., நீங்க..” ‘ஆம்பளைதானே..’ என கேட்க வந்ததை பார்வையால் கேட்க,

இளமாறனின் கண்களில் சின்னதாய் ஒரு கோபம், கூடவே, “என்னையவா ஆம்பளையான்னு கேட்ட..?” தன் மனதுக்கு நெருக்கமானவளிடம், எந்த ஆண்மகனும் கேட்க விரும்பாத கேள்வி, அவளை எலும்புகள் அனைத்தும் நொறுங்கும் அளவுக்கு இறுக அணைத்தவன்,

அவள் முந்தானையை ஒற்றைக் கையால் பற்றி இழுக்க, அதுவோ அவன் கரத்தோடு வந்தது. அடுத்த நிமிடம், அவள் சிவந்த அதரங்களை கவ்வி சுவைக்க, ஒரு சிறு எதிர்ப்பு கூட இல்லாமல் அவன் கைகளுக்குள் சிறை பட்டிருந்தாள்.

அவன் இதழ்களுக்குள் நடத்தும் ஆராச்சிக்கு வழி விட்டவள், அவன் கரங்கள் இரண்டும் அவசர ஆடை கலைப்பில் இறங்க, மேலாடையில் அவன் காட்டிய வேகத்தில், அது பரிதாபமாக தன்னை விட்டுக் கொடுத்தது.

அவன் பார்வை தன்மேல் பதிய, வெட்கம் கொண்டவள், அவன் தோளில் கை கோர்த்து, தன்னோடு இறுக்கிக் கொண்டாள்.

படுக்கையில் அவளைத் தள்ளி, அவள்மேல் படர்ந்தவனது இதழ்கள், அவள் கழுத்தின் அடியில் அழுத்தமாக புதைந்து, தன் பல்த்தடம் பதிக்க, “ஸ்.., இளா.., வலிக்குது..” அவன் சிகைக்குள் கை கோர்த்து நெரித்தவள், அவன் முகத்தை தன் மேனியில் இருந்து பிரித்தாள்.

இருவரின் கண்களும் நேருக்கு நேராக சந்தித்துக் கொள்ள, அவன் கண்களில் இருந்த யாசிப்பில் தடுமாறிப் போனாள். “மியா..” புலம்பியவன், அவள் இதழை மீண்டுமாக கவ்விக் கொள்ள, சில நிமிடங்கள் அவன் கைகளில் சிறை இருந்தாள்.

அவன் கரங்கள் இரண்டும் மெதுவாய் இடம் மாற, கொஞ்சமாய் அதை எல்லை மீற அனுமதித்தவள், அந்த உணர்வுகளை ஏற்க போராடினாள்.

***

# பகுதி - 22.

அவன் மொத்தமாக தன்மேல் கவிழ்ந்திருக்க, அவன் உணர்வுகள் அவளை பலமாய் தாக்கியது. மனித உடம்பின் அனாட்டமி அனைத்தும், அவளுக்கு பாடமாய் மனப்பாடம் என்றாலும், இந்த உணர்வுகள் அவளுக்கு முற்றிலும் புதிது.

அவன் கொடுத்த மெல்லிய காயத்தையும் மீறி, தேகம் முழுவதும் அவன் கைகளுக்குள் குழையும் விந்தை. அப்படியே அவன் தன்னை கொள்ளையிட்டால் கூட பரவாயில்லை என்னும் நிலை. அவனுக்கு மறுக்க அவளுக்கு எதுவும் இல்லைதான்.

எனவேதான் இந்த நிலையிலும் கொஞ்சம் கூட அசராமல் அவன் முகம் பார்த்திருக்கிறாள். ஆனால், வெளியே காத்திருக்கும் பெரியவர்களை நினைக்கையில், இது பெரும் அவஸ்தையான உணர்வைக் கொடுத்தது.

அவன் மீண்டுமாக அவளுக்குள் மூழ்க நினைக்க, “இளா.., வெளியே அப்பா, அம்மா எல்லாம் இருக்காங்க..” அவள் தன் சக்தியை எல்லாம் திரட்டி, அவனிடம் மெதுவாக முனக, அவ்வளவுதான், அவனது ஏறியிருந்த உணர்வுகள் அனைத்தும் சட்டென வடிந்து போனது.

வேகமாக அவளை விட்டு விலகியவன், அவள் இருந்த கோலம் கண்டு பதறி, அவள் புடவைத் தலைப்பை எடுத்து அவளை மூட முயல, வேகமாக அவன் கரத்தை தடுத்தாள்.

அவள் மேனியில் பதிந்து, மீள முடியாமல் தவித்த பார்வையை பிடிவாதமாக திருப்பிக் கொண்டவன், “சாரி விஸ்மையா..” அவன் சங்கடமாக உரைக்க, அவன் கன்னம் பற்றி தன் பக்கம் திருப்பியவள், “கலைக்க மட்டும்தான் செய்வீங்களா? யார் இதையெல்லாம் சரி பண்ணுறது?” பார்வையை தன்மேல் அலையவிட்டு அவள் கேட்க, தன்

பார்வையை இறக்கியவன், தன்னை கட்டுப்படுத்திக் கொண்டு அவள் முகம் பார்த்தான்.

“நான் நிஜமாவே இப்படியெல்லாம்…” சொல்ல வந்ததை சொல்ல முடியாமல் தயங்கி, சங்கடமாக அவள் கண்களை ஏறிட்டான்.

“ம்ச் இளா, எங்கே  என் கண்ணைப் பார்த்து சொல்லுங்க, நீங்க இப்போ நடந்துகிட்டதுக்கு நான் பேசினதுதான் காரணம்னு” அவனிடம் சவால் விட, அவனால் அப்படி சொல்லிவிட முடியுமா என்ன? அவளை மனதுக்குள் தன் மனைவியாக எண்ணி வாழ்ந்து கொண்டிருப்பவன் அவன். அப்படி இருக்கையில்..,

“என் விஸ்மையாவோட பாடி டெம்பரேச்சர் எப்படி இருக்கும்னு செக் பண்ணேன் போதுமா..?” உடனே ஒத்துக் கொண்டான்.

“இவ்வளவு காதல் என்மேல் வச்சுட்டு, பிறகு எப்படி விலகி வந்தீங்களாம்? இப்போ எனக்கு எதுவும் வேண்டாம்” அவள் செல்லமாக முறுக்கிக் கொள்ள, அவள் கன்னம் தாங்கி தன் முகம் காண வைத்தான்.

“என் விஸ்மையா என்னைத் தேடி வருவான்னு எனக்குத் தெரியும்” அழுத்திச் சொன்னவனின் கண்கள் உண்மையை உரைக்க, அதை அவளால் தவிர்க்க முடியுமா என்ன?

“உண்மையைச் சொன்னதால் உங்களை விடறேன், இல்லன்னா நடக்குற கதையே வேறையா இருந்திருக்கும்” எழுந்துகொள்ளும் எண்ணமே இல்லாமல் உரைக்க, அவன்தான் தடுமாறிப் போனான்.

“மியா, உன் அம்மா, அப்பா.., அவங்க நம்ம கல்யாணத்துக்கு சம்மதம் சொல்லிட்டாங்களா? அவங்களுக்கு எதுவும் வருத்தம் இல்லையே.., அதாவது நான்..” அவனது அந்த

நிலையை, தன் தயக்கத்தை விரட்ட முடியாமல் அவன் கேட்க, சற்று சோர்ந்து போனாள்.

“இளா, நிஜமாகவே எனக்குத் தெரிய வேண்டியது ஒண்ணே ஒண்ணுதான். உங்களோட மியா, இந்த இளா.., இவங்களை மட்டும் நினைத்து எனக்கு பதில் சொல்லுங்க. நான் டாக்டரா இருப்பது உங்கள் மனதின் ஏதாவது ஒரு மூலையிலாவது நெருடலா இருக்கா?” அவள் கேட்க, பட்டென அவள் வாயை தன் கரத்தால் மூடினான்.

“மியா, என்ன இப்படியெல்லாம் கேக்கற?” அவன் பதற,

“இல்ல இளா.., நம்ம காதலுக்காகத்தான் கேக்கறேன்” அவள் தெளிவாக கேட்க,

“என் மியாவை ஆத்மாவா இருக்கும்போதே பிரிந்திருக்க முடியாமல் தவித்தவன் நான். என் காதல் ஒரு வேளை ஈடேறாமல் போகுமோ என்ற சின்ன பயம் இருந்தபொழுதும், உன்னை நேசித்தவன், இடையில் வந்த இந்த காரணத்துக்காகவா விட்டு விடுவேன்?”

“என் தயக்கம், பயம் எல்லாம்... ஒரு டாக்டர் குடும்பத்துக்குள், சாதாரண மேனேஜரை வரவேற்பது பெரியவங்களுக்கு சங்கடமா இருக்குமோ என்ற எண்ணம்தான் காரணம்” அவன் சொல்ல, அவனையே சில நொடிகள் அசையாமல் பார்த்தாள்.

“இந்த மருத்துவ உலகமே திரண்டு எனக்காக பாடுபட்ட பொழுதும், யாராலும் என்னை திரும்ப கொண்டுவர முடியலை. நீங்க சொன்னீங்களே, ஒரு சாதாரண மேனேஜர்... நீங்கதான் என்னை மீட்டுக் கொண்டு வந்தீங்க. அப்படி இருக்கும்போது, உங்களை எப்படி அவங்க வேண்டாம்னு சொல்வாங்க?”

“உங்களுக்கு நிஜமாவே புரியலையா இளா... அவங்களுக்கு நீங்க என்ன செய்திருக்கீங்க என்பது தெரியுதா? அவங்களோட உலகமா இருந்த ஒரே

பொண்ணை அவங்களுக்கு ஊனும், உயிருமா மீட்டுக் கொடுத்திருக்கீங்க. இப்போ நீங்க வெளியே போனால், உங்க காலில் கூட விழ அவங்க தயாரா இருக்காங்க”.

“என்னை உங்க அறைக்குள் அனுப்பிட்டு அவங்க வெளியே இருப்பதிலேயே அவங்க சம்மதம் உங்களுக்குப் புரியலையா?” அவள் உணர்ச்சிவசப்பட்டு பேச அவளை மெல்லமாக இழுத்து அணைத்துக் கொண்டான்.

கூடவே, “எனக்குப் புரியுது மியா. என்னைப் பார்க்கும்போதெல்லாம் அவங்க கண்களில் வழியும் நன்றியை புரியாத அளவுக்கு நான் ஜடம் இல்லை…” உரைத்தவனுக்கு அப்பொழுதுதான் பெரியவர்கள் நினைப்பே வந்தது.

“ஹையோ.., மியா, இவ்வளவு நேரம் ஆகிடுச்சு.., முதல்ல கிளம்பி வா.., நான் வெளியே இருக்கேன்..” அவன் செல்லப் போக, வேகமாக அவன் கையைப் பிடித்து தடுத்தாள்.

அவன் என்ன என்று பார்க்க, “நான் சொன்னா சொன்னதுதான். இப்போ நீங்க கலைத்ததை, நீங்களே சரி பண்ணிட்டு போகலன்னா, நான் இப்படியே உங்களோட வருவேன்..” அவள் பிடிவாதமாக உரைக்க,  தான் கலைத்த அவள் ஆடையை தானே சரி செய்யத் துவங்கினான்.

அவன் கரங்கள் சற்று எல்லை மீறி, தன் வேலையைச் செய்ய, இமைகளை அழுத்தமாக மூடிக் கொண்டவள், இதழ் கடித்து தன் உணர்வுகளை அடக்கிக் கொண்டாள்.

தன் வேலையை ஒரு வாறாக முடித்தவன், “விஸ்மையா, இந்த ‘பின்’னை குத்தத் தெரியலை..” அவள்மேல் அழுத்தமாக படர்ந்து, அவள் காதுக்குள் உரைக்க, அவனை வேகமாக தள்ளி விட்டவள், படுக்கையில் இருந்து இறங்கி, தன் முந்தானையை பின் செய்தாள்.

மொத்தமாக ஆடை கலைந்து, சிகை கலைந்து, கண்களில் இருந்த மை கரைந்திருக்க, அவளது உதட்டுச்சாயம்

முழுவதும் அவன் இதழ்கள் கொள்ளை கொண்டிருந்தது.

“ம்ச்.., இப்படியா பண்ணுவீங்க? இப்போ நான் எப்படி வெளியே போறது? அவங்க கேள்விக்கு என்ன பதில் சொல்ல முடியும்?” வார்த்தைகளில் சிறு கோபம் கூட இல்லாமல், அவள் இதழ்களில் குறும்பு கூத்தாடியது.

“விஸ்மையா.., வந்த உடனே, அவங்க இருக்காங்கன்னு சொல்லியிருக்கலாம் தானே. நீ என்னை சீண்டுறன்னு தெரிஞ்சே பர்ப்பசா உன்னோட விளையாடி.., இப்போ..” அவன் கைகள் இரண்டும், அவள் கலைந்த தலையை தன்னால் ஆனமட்டும் சீர் செய்ய முயன்றது.

“சீண்டாமல்.., உள்ளே வந்த உடனேயே கடிச்சு முழுங்குற மாதிரி பாத்துட்டு, பிறகு என்னமோ முனிவர் மாதிரி திரும்பிகிட்டா, நாங்க சும்மா விடுவோமா?” தன் அருகே நின்றவனின் சட்டையை கொத்தாக பிடித்து தன்னோடு இழுத்துக் கொண்டாள்.

“விஸ்மையா.., போய் பேஸ் வாஷ் பண்ணிட்டு வா..” அவளை அனுப்பியவன், அவள் வெளியே வரவே, டவ்வலைக் கொடுக்க, அவள் மறுக்கவே, தானே அவள் முகம் துடைத்தான்.

“விஸ்மையா, ஹெல்த் எப்படி இருக்கு? அப்பா, அம்மா கிட்டே நம்ம விஷயத்தை சொல்லிட்டியா? அவங்க என்ன சொன்னாங்க?” அவன் கேட்க, பதில் சொல்லாமல் அவன் முகத்தை பார்த்திருந்தாள்.

“என்ன..?” அவன் கேட்க, “உங்க அம்மாகிட்டே கூட பேசிட்டோம். இன்னும் மூணு மாசத்துக்குப் பிறகு கல்யாணத்தை வச்சுக்கலாம்னு அம்மா அப்பா நினைக்கறாங்க.

“ரொம்ப நாள் கோமாவில் இருந்ததால், உடலின் இன்னர் பார்ட் எல்லாம் கொஞ்சம் சரியா பங்ஷன் ஆக நாள் ஆகும். நீங்க இருக்குற வேகத்தைப் பார்த்தால், மூணு நாள் கூட

எனக்கு ரெஸ்ட் தர மாட்டீங்க போல” கண்களில் குறும்பு கூத்தாட, அவள் சொல்ல, தன் தலையை அழுத்தமாக கோதிக் கொண்டான்.

“சாரி..” அவன் உணர்ந்து உரைக்க, அவன் வாயை தன் கரத்தால் மூடியவள், “கொஞ்சம் விட்டிருந்தா இன்டர்கோர்ஸ் பிராக்டிகல், பர்ஸ்ட் செஷனே  முடிச்சிருப்பீங்க. தியரியை விட, பிராக்டிகல் ரொம்ப நல்லா இருக்கும் போல..” கண்ணைச் சிமிட்டி உரைக்க, இப்பொழுது அவள் வாயை தன் கரத்தால் மூடினான்.

“வாயாடி..., என்ன பேச்சு பேசுற..” அவன் சொல்ல,

“நீங்க செஞ்சே காட்டினீங்க அது பரவாயில்லை, நான் சொல்லிக் காட்டினா தப்பா?” அவள் இன்னும் அவனை அருகே இழுக்க, அவள் இதழ்களை தன் இதழ்களால் அடக்கியவன், “இனிமேல் இப்படி பேசினா இதுதான் தண்டனை” தன் முன்னால் மூச்சு வாங்கப் பிரிந்தவளைப் பார்த்தவாறே சொன்னான்.

“அப்போ நிறைய பேசுவேனே..” அவள் சொல்ல, வாய்விட்டே சிரித்தான்.

“சரி, ரொம்ப நேரமாச்சு.., நாம போகலாம்..” அவள் சரியாக இருக்கிறாளா என நூறு முறை சரி பார்த்தவன், அவளை வெளியே அழைத்து வந்தான்.

யாரும் ஹாலில் இல்லாமல் போகவே, வெளியே வந்தவர்கள், அங்கே இருந்த இருக்கையில் அருகருகே அமர்ந்தார்கள்.

“என்ன தம்பி.., எங்க பொண்ணை கல்யாணம் பண்ணிக்க உங்களுக்கு சம்மதம் தானே” அவர் கேட்க,

“எனக்கு முழு சம்மதம் அங்கிள். எதுக்கும் என் அம்மா அப்பாகிட்டே ஒரு வார்த்தை கேட்டுட்டு சொல்றேன். அதே

மாதிரி கல்யாணத்தை ஒரு ஆறு மாசம் கழிச்சு வச்சுக்கலாம். எனக்கு விஸ்மையாவோட.., சாரி, எனக்கு இந்த பேர் தான் வருது.., சக்தியோட ஹெல்த் தான் முக்கியம்" அவன் சொல்லவே, பெரியவர்களின் முகத்தில் திருப்தியான ஒரு புன்னகை.

விஸ்மையா அவனை கோபமாக முறைக்க, அவளை அவன் கண்டுகொள்ளவே இல்லை.

பரமேஸ்வரனோ, "தம்பி, நீங்க அவளை அப்படியே கூப்பிடுங்க.., பேரில் என்ன இருக்கு? அவளுக்கும் அந்த பேர் தான் ரொம்ப புடிச்சிருக்கு" சொன்னவர் மேலும் தயங்கவே, அவர் முகம் பார்த்தவன், புருவம் முடிச்சிட அவரை ஏறிட்டான்.

"இன்னும் என்ன அங்கிள் சொல்லுங்க.." அவன் கேட்கவே, மனைவியையும், மகளையும் ஒரு பார்வை பார்த்தவர்,

"சொல்றேன்னு தப்பா நினைக்காதீங்க. உங்களுக்கு விருப்பம் இல்லன்னா நீங்க தாராளமா சொல்லிடலாம்.." அவர் பேச முயல, அவர் என்ன பேச வருகிறார் என்பதை உணர்ந்தவள்,

"டேடி.., நோ.." விஸ்மையா வேகமாக தடுத்தாள்.

அவளை அடக்கியவன், "நீங்க சொல்லுங்க அங்கிள்.." அவன் கேட்க, சற்று தயங்கியவர், "ஹாஸ்பிடல் அட்மின்ஸ்ட்ரேஷன் பொறுப்பை நீங்க ஏத்துக்கணும். எனக்கு என் வேலையையும் பார்த்து, அதையும் கவனிப்பது கொஞ்சம் கஷ்டமா இருக்கு.

"நிச்சயமா உங்களுக்காக சொல்றேன்னு நீங்க நினைக்க கூடாது. ஏற்கனவே நான் என் மனைவி கிட்டே டிஸ்கஸ் பண்ணிட்டு இருந்த விஷயம்தான் இது. நீங்க யோசிச்சு சொல்லுங்க" அவர் சொல்லவே, சிறு புன்னகை விரிய அவரைப் பார்த்தான்.

“கண்டிப்பா ஏத்துக்கறேன்.., ஆனா ஒரே ஒரு கண்டிஷன்.., அதுக்கு, அதாவது அந்த போஸ்ட்க்கு இவ்வளவு சேலரின்னு போட்டுக் கொடுத்துடுங்க.., அங்கே ஒரு எம்பிளாயியா நிச்சயம் வர்றேன். இதுக்கு உங்களுக்கு சம்மதம்னா மட்டும், நீங்க யோசிச்சு சொல்லுங்க..” அவன் சொல்லவே, அவனது மனம் புரிய ஏற்றுக் கொண்டார்.

மேலும் சில நிமிடங்கள் பேசிவிட்டு அவர்கள் கிளம்ப முயல, விஸ்மையா செல்லப் போகிறாள் என்பதை அவனால் ஏற்க முடியவில்லை. அவன் முகத்தைப் பார்த்தே அவன் மனதைப் படித்தவள், “டேட்.., நீங்க கிளம்புங்க, நான் பிறகு வர்றேன்” அவள் சொல்லவே, மற்றவர்கள் அனைவரும் கிளம்பினார்கள்.

அவர்கள் செல்லவே, இருவரும் வீட்டுக்குள் வர, “மியா..” அழைத்தவன், தன் கைகளை விரித்து அவளை பார்வையால் அழைக்க, அடுத்த நொடி, அவன் கைகளுக்குள் ஓடி வந்து தஞ்சம் புகுந்தாள்.

அவளை தன்னோடு மென்மையாக இறுக்கியவன், “இப்படி உன்னை உணர முடியுமா? முடியாதான்னு எத்தனை நாள் தவிச்சிருக்கேன் தெரியுமா?” அவள் தேகம் முழுவதும் கைகளால் தொட்டு உணர, அவனை விட்டு விலகும் எண்ணமின்றி அவனோடு ஒட்டிக் கொண்டாள்.

சில நிமிடங்கள் அந்த ஏகாந்தத்தை இருவரும் அனுபவித்தார்கள். அவன், அவளை தொட்டு உணர, அவன் கைகளுக்குள் இணங்கி நின்றிருந்தாள்.

“முன்னெல்லாம் இப்படி கட்டிகிட்டா, கொஞ்ச நேரத்தில், அப்படியே காற்றில் கரைந்து காணாமல் போய்டுவ தெரியுமா? அப்படி உன்னைப் போக விடாமல் இருக்கிக்கணும்னு மனசெல்லாம் தவிக்கும், ஆனா அது முடியாது” சொல்லிக்கொண்டே போனவன், அவளை சற்று இறுக்க, தானும் அவனை தழுவிக் கொண்டாள்.

“சாரி.., ரொம்ப ஏங்க விட்டுட்டேனா?” அவன் தோளில் இருந்து சற்று நிமிர்ந்து அவன் முகம் பார்த்து வினவ, அவள் நெற்றியில் மெல்லியதாக இதழ் பதித்தான்.

“ஏக்கம் என்பதை விட, ஒரு பயம்.., எங்கே நம்ம வாழ்க்கை நிழலுக்கும், நிஜத்துக்கும் நடுவில் போராடி முடிஞ்சிடுமோன்னு…” முதல் முறையாக அவன் முகத்தில் பயத்தைக் கண்டாள்.

“இளா.., இதையெல்லாம் நீங்க என்கிட்டே சொன்னதே இல்லையே?” அவன் கன்னம் வருட, அவள் கரத்தை தன் கன்னத்தோடு அழுத்திக் கொண்டான்.

“நீயே ஏற்கனவே பயத்தில் இருந்த, அப்படி இருக்கும்போது, நான் என் பயத்தை உன்கிட்டே சொல்ல முடியுமா? ஆனாலும் மனசின் ஓரம் ஒரு நம்பிக்கை இருந்தது, நிச்சயம் நீ இந்த உலகத்தில் ஏதாவது ஒரு மூலையில் உயிரோட இருப்பன்னு.

“அதான்.., அன்னைக்கு உயிரும், உடலும் தனித்தனியா பார்த்தப்போ, உடனே நீ அந்த உடலுக்குள் கலந்து விடணும் என்ற வேகம்.., உன்னை இனிமேல் ஊனும், உயிரும் கலந்த மனுஷியா பாக்க ஆசைப் பட்டுதான் எல்லாம் செய்தேன்.

“அந்த மெஷின் ஒரு நிமிஷம் நிசப்தமா ஆனப்போ.., என் உயிரே என் கையில் இல்லை. உன் அப்பா அடித்தது எல்லாம் பெருசாவே தெரியலை, நானே உன்னை கொன்னுட்டனோ என்ற பயம்.., ஆனா, அடுத்த நிமிஷமே இந்த உலகத்துக்கு நீ வந்த பார்..,

“என் வாழ்நாளிலேயே நான் பொக்கிஷமா பாதுகாக்க நினைப்பது அந்த நிமிஷத்தை தான். உன் பிறந்தநாள் எந்த நாளா வேண்ணா இருக்கட்டும், ஆனா என்னைப் பொறுத்தவரைக்கும் அந்த நாள்தான் இனிமேல் உன் பிறந்தநாள்” அவன் சொல்ல, அவனை இறுக அணைத்தவள், அவன் முகம் முழுக்க முத்தமிட்டாள்.

அடுத்த சில நொடிகள் மௌனத்தில் கடக்க, “இளா, இப்போ நீங்க ஓகேயா?” அவள் அவனை கலைத்தாள்.

“என்ன மியா சொல்லு..”.

“இளா, அத்தைகிட்டே பேசுங்க. எங்க வீட்டில் பேசினாலும், நீங்க பேசுற மாதிரி இருக்காது. அண்ணி கூட என்கிட்டே பேசினாங்க..” அவன் நெஞ்சில் முகம் புதைத்தவாறே அவள் பேச, பதில் பேசாமல் அமைதியாக நின்றிருந்தான்.

“அதெல்லாம் பேசறேன்.., இப்போ இந்த நிமிஷத்தை அனுபவிக்க விடு” அவன் சொல்ல,

பட்டென அவனை விட்டு விலகியவள், “இவ்வளவு ஆசையை மனசுக்குள் வச்சுட்டு, என்னை தவிக்க விட்டீங்கல்ல? அதுக்கு தண்டனை.., இனிமேல் என்னை கல்யாணம் முடியிற வரைக்கும் தொடவே கூடாது” சொன்னவள் அவனை விட்டு விலகி நிற்க, பரிதாபமாக விழித்தான்.

“மியா, எனக்கு எதுவுமே தெரியாமல் இருந்தால் பரவாயில்லை. இது..” அவன் சொல்ல வருவது புரிய, அவன் தங்கள் கனவு வாழ்க்கையை சொல்கிறான் எனவும், அவள் முகம் செவ்வானமாய் சிவந்து போனது. அவன் முகத்தை ஏறிட்டு பார்க்கும் தைரியம் சுத்தமாக இருக்கவில்லை.

“இளா..” சிணுங்கலாக அழைத்தவள், அவனுக்கு முதுகு காட்டி திரும்பிக் கொள்ள, அவளை நெருங்கி நின்றவன், “இப்பவும் எனக்கு தண்டனை இருக்கா?” அவள் காதுக்குள் கிசுகிசுப்பாக கேட்க,

“இளா.., இப்படியே பேசினால், பிறகு என்னை பாக்கவும் கூடாதுன்னு சொல்லிடுவேன்” காற்றாகிப் போன குரலில் அவள் உரைக்க, அவள் பேச்சுக்கு மதிப்பளித்து விலகி நின்றான்.

அதைப் பார்த்தவள், “நீங்க இவ்வளவு நல்லவர்ன்னு தெரியாமல் போச்சு” சொல்லிவிட்டு சிரிக்க, தானும் அவள் சிரிப்பில் இணைந்து கொண்டான்.

“என்ன சாப்பிடுற?” கேட்டவன் அவளுக்காக சமைக்க, “உங்களோட சமையலை டேஸ்ட் பாக்கணும்னு ரொம்ப நாளா ஆசைப்பட்டேன்” அவன் சமைத்த உணவை ரசித்து உண்டாள்.

உணவை முடித்தவுடன், அவளை அவள் வீட்டுக்கு அழைத்துச் செல்ல கால் டேக்ஸி புக் செய்ய அலைபேசியில் அழைத்தான்.

அதைப் பார்த்தவள், “இளா.., எனக்கு உங்களோட பைக்கில் போகணும்” அவள் ஏக்கமாக கேட்க,

“மியா, உன் ஹெல்த்” அவன் தயங்கினான்.

“ம்ச்.., நான் அவ்வளவு வீக்கா எல்லாம் இல்லை. நீங்க ஸ்லோவா போனால் போதும்” அவள் ஆசையை மறுக்கும் எண்ணம் இன்றி வண்டி கீயை எடுத்துக் கொண்டான்.

தன் பல்சரை அவன் ஸ்டார்ட் செய்ய, புடவை கட்டியிருந்ததால், ஒரு பக்கமாக கால் போட்டு ஏறியவள், அவன் வயிற்றில் கை கோர்த்து, அவன் முதுகோடு ஒட்டிக்கொள்ள, தன் தேகம் சிலிர்க்க, ரிவர்ஸ் கண்ணாடி வழியாக அவளைப் பார்த்தான்.

‘என்ன?’ அவள் புருவம் உயர்த்தி கேட்க, “இப்படியே போனால், பைக் இருபதை கூட தாண்டி போகாது” கண்களை சிமிட்டி, அவள் கரத்தை இழுத்து, இன்னும் அதிகமாக அவளை தன்னோடு ஒட்டிக்கொள்ள, அப்பொழுதுதான் அவன் சொல்வதற்கான அர்த்தம் புரிய, இடக்கரத்தால் அவன் முதுகில் குத்தினாள்.

“ச்சீ…” வெட்கமாய் குரல் கொடுத்தவள், தன் கரத்தை உருவிக்கொள்ள முயல, அதற்கு அவன் அனுமதிக்கவே

இல்லை. அந்த பயணம் இனிமையான பயணமாக அமைந்தது எனச் சொன்னால் மிகையில்லை.

அவர்கள் வாழ்க்கைப் பயணமும் இனிமேல் எந்தவிதமான தடங்கலும் இல்லாமல் செல்லும் என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை.

நன்றி.